தொகுதி - XVI மாசி - 2016 இதழ் - 1

# சிந்தனை

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 MAY 2017
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உசாத்துணைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி - XVI மாசி- 2016 இதழ் - 1

# சிந்தனை

பொதுசன நூலகம்
19 MAY 2017
மாநகரசபை
யாழ்ப்பாணம்

பதிப்பாசிரியர்
**பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா**

8202 (P)
PL

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University Scholars and the National scholarly community.

**Editor** Professor Selliah Krishnarajah

**Associate Editor** Dr. K.Kajavinthan

**Managing Editor** Dr. S. Santhirasegaram

**Editorial Committee Members**

Dr. K.Shriganeshan
Prof. K.Arunthavarajah
Dr. (Mrs) J. Rasanayagam
Mr. R. Rajeshkannan
Mrs. S. Arulanantham
Mrs. S. Prabaharan

**Annual Subscription** 1500/- SLR / 15US $
Price per copy 500/-SLR

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka.

**Printed by** Harikanan (Pvt) Ltd., # 681, K.K.S. Road, Jaffna.

**ISSN** **2478 - 1061**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜுலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, இந்துநாகரிகம், கிறிஸ்தவ நாகரிகம், நுண்கலைகள் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

◆ **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, தகுந்த பல்கலைக்கழக ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

◆ **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைக் கணினிப்பதிப்பாக ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தோடு இலத்திரனியல் பிரதி ஒன்றும் newcintanai2014@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

◆ **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில் ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள், நூல் எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள் அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியிட்டோர் விபரம்.

◆ **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி, மின்னஞ்சல் ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

◆ சந்தா கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு அனுப்பப்படல் வேண்டும். இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும், பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CINTANAI, REFREED JOURNAL, FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA, 2016

### PROCEDURE FOR PUBLICATION OF RESEARCH ARTICLES IN CINTANAI (IN TAMIL)

This particular Research Journal will be released thrice in a year, March July and November.

**Procedure profile.**

1. The title of article is by very short and express the main theme vividly.
2. The article with title should proceed with the research summary and the main technical terms.
3. The research article should not be exceeded more than 15 page A4 size by using BAAMINI found and TIME NEW ROMAN.
4. The concepts or ideas which borrowed from other sources should be incorporated with FOOT NOTES system with bibliographical notes
5. The finding and conclusion or suggestion of the article should be vividly inscribed at the end of the article,
6. The method adopted and materials used in the research discussion are should be spelled out at the set out of the article.
7. Photos, Graphs and Tables are will be accepted for publication but with in limited levels.
8. All permanent staff of the the Faculty board should support to purchase the volumes.
9. The members of the faculty could send more than one research article but the screening committee's decision is ultimate for publication. The acceptance for publication will be notitieded.
10. Authors should write his / her name, affilation, address, e-mail, contract telephone number in below the title of Article.

# The submission of Research Articles:

1. It is expected to the research article in both,soft and two hard copies and those unsuitable for publications will be returned to the respective authors.
2. The research articles for publication Cintanai should be written in Tamil Language but in case of Citations and Foot notes it could be used English terms too.
3. The continuation of one article under the same caption to other volumes is prohibited.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரை ஆசிரியர்கள்


1. **கலாநிதி கே. ரீ. கணேசலிங்கம்,** ph.D.
தலைவர் / அரசறிவியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Saarusharon@gmail.com

2. **பேராசிரியர் கந்தையா அருந்தவராஜா,** Ph.D.
இணைப்பேராசிரியர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
arun.msu@gmail.com

3. **திரு. வி. பி. சிவநாதன்,** M.A.
ஓய்வுநிலைப் பேராசிரியர்,
பழம்றோட்,
கந்தர்மடம்.
Vpsivanathan@gmail.com

**திருமதி ச. சுரேஜினி,** B.A (Hons)
முதுகலைமாணிப் பட்ட ஆய்வாளர்,
பொருளியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Suressan@gmail.com

4. **பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா,** M.A.
தலைவர் / வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Skrishna514@gmail.com

5. **கலாநிதி திருமதி ஜெயலக்ஷ்மி இராஜநாயகம்,** Ph.D.
முதுநிலை விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
luxmy2001@gmail.com

**திரு. ப. இராஜேஸ்வரன்** M.Ed.
விரிவுரையாளர்,
கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.
Pararajasingamrajeswaran@gmail.com

6. **பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்,** Ph.D.
தலைவர் / தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
Kvisakaruban@yahoo.com

7. **திரு. நா. பிரதீபராஜா,** M.Phil.,
சிரேஸ்ட விரிவுரையாளர் - Gr II
புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
npiratheeparajah@gmail.com

8. **திரு. சி. உதயகுமார்,** M. Phil.
சிரேஸ்ட விரிவுரையாளர்,
பொருளியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
ssuthayan@yahoo.com

9. **திரு. ச. பத்மநாபன்,** M.Phil.
தலைவர் / சமஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
padmanaban73@gmail.com

10. **திரு. ச. முகுந்தன்,** M.Phil.
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
samju25@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை

சிந்தனை ஆய்விதழ் : கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பொருளடக்கம்

பக்கம்

1. சமகால இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக் கட்சி மீள் எழுச்சிக்கான வாய்ப்புக்களும் சவால்களும். 01 - 12
   - கே. ரீ. கணேசலிங்கம்
2. வட இலங்கையில் டச்சுக்காரர் கால (1658-1796 A.D) பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் 13 - 32
   - கந்தையா அருந்தவராஜா
3. புலம்பெயர் தமிழர்களின் பரம்பலும் இலங்கையின் வெளிநாட்டு பண வருவாய்களும் - வடக்கு கிழக்குப் பற்றிய சிறப்புப் பார்வை 33 - 50
   - வி. பி. சிவநாதன் ; ச. சுரேஜினி
4. தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற் சொத்துடமை: வடகிழக்கிலங்கை கோயிற் குடியிருப்புகளின் பிரதான தளமாக தம்பலகாமம் - ஆதிக்கோணநாதேஸ்வரம் 51 - 64
   - செல்லையா கிருஷ்ணராசா
5. வட மாகாணத்தின் தமிழ்மொழிமூல மாணவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் தற்போதைய நிலைமையும் அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளும் 65 - 85
   - ஜெயலக்ஷ்மி இராசநாயகம் ; ப. இராஜேஸ்வரன்
6. கம்பனின் சொல்லாட்சித்திறன்: வகையும் வனப்பும் 86 - 95
   - கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
7. மட்டக்களப்பு மாவட்டத்தில் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு 96 - 102
   - சிதம்பரநாதன் உதயகுமார் ; கலைப்பிரியா யேசுதாஸ்
8. வட மாகாணத்தில் நுண்காலநிலை வேறுபாடுகள் 103 - 114
   - நா. பிரதீபராஜா
9. தொல்காப்பியமும் பாணினீயமும் : எழுத்தியல் பற்றிய ஓர் ஒப்பியல் ஆய்வு 115 - 121
   - ச. பத்மநாபன்
10. இந்துப் பண்பாட்டு மரபில் அறுவைச்சிகிச்சை முறைகள் : வரலாற்று நோக்கு 122 - 136
    - சயனொளிபவன் முகுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால இலங்கை அரசியலில் ஐக்கிய தேசியக்கட்சி மீள் எழுச்சிக்கான வாய்ப்புகளும் சவால்களும்

கே. ரீ. கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கை அரசியல் வரலாற்றுடன் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்ட அரசியல்கட்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சி முதன்மையானது. சுதந்திர இலங்கையின் அரசியல் திருப்புமுனையின் முன்னோடியான ஐக்கிய தேசியக்கட்சி முதல் சுதந்திர அரசாங்கத்தினை அமைத்தது. இலங்கையின் ஜனநாயக மரபினையும், முதலாளித்துவ - தாராளவாத அரசியல் சித்தாந்தத்தையும் இலங்கை மக்கள் மத்தியில் நிலைப்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தது. டி.எஸ். சேனநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சேர். ஜோன். கொத்தலாவல, ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிறேமதாஸா போன்றோரின் ஆளுமைமிக்க அரசியல் தலைமைகளையும் கொண்டிருந்த கட்சியாக விளங்கியது. தற்போது ரணில் விக்கிரமசிங்ஹாவின் தலைமைத்துவத்தின் கீழ் பல தோல்விகளைச் சந்தித்தாலும் 2002 இலும் 2015 இலும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்துள்ளது. 2010 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு தேர்தல்களைக் கருத்தில் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் சவால்களையும் வாய்ப்புக்களையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்காகும்.

**திறவுச்சொற்கள் :** இலவசக் கல்வி, திறந்த பொருளாதாரக் கொள்கை, விகிதாசாரத் தேர்தல், தேசிய அரசாங்கம், கணினி மோசடி, அதிகார முறைமை, எதிரிடையான சக்திகள், கருத்துருவாக்கம், கட்டுருவாக்கம், புவிசார் அரசியல்.

## 1. அறிமுகம்

ஐக்கிய தேசியக்கட்சி 1946 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆதரவு அரசியல் கட்சியாக உருவானது. குறிப்பாக இரண்டாம் உலக யுத்த முடிபும் உலக அரசியல் ஒழுங்கில் ஏற்பட்ட மாற்றமும் இலங்கை மட்டுமன்றி பிரித்தானிய குடியேற்ற நாடுகள் பலவும் சுதந்திரத்தினை நோக்கிய விதப்புரைகள் முன்வைப்பதற்கு வித்திட்டது. இதனால் இலங்கையின் ஆட்சியை முதலாளித்துவ சக்திகளிடம் கையளிக்க விரும்பிய பிரித்தானியர் ஐக்கிய தேசியக்கட்சியிடம் (இனி ஐ.தே.க என அழைப்போம்) அதனை கைமாற்றத் திட்டமிட்டனர். சோல்பரிப்பிரபு, மற்றும் சேர் ஐவர் ஜென்னிங்ஸ் (தமிழ்மாறன், வி.ரி., 2004: 19) ஆகியோரின் அனுசரணையுடன் டி.எஸ்.சேனநாயக்காவின் தலைமையில் ஐ.தே.க ஆரம்பிக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு ஒகஸ்ட் - செப்டெம்பர் தேர்தலுக்குப் பின்னரான முதலாவது பிரதிநிதிகள் சபை அமர்வு 1947 ஒக்டோபர் 14 ஆம் திகதியன்று நடைபெற்றது (தமிழ்மாறன், வி.ரி., 2004: 19). இத்தேர்தலில் ஐ.தே.க 751432 வாக்குகளைப் பெற்று 42 ஆசனங்களைத் தமதாக்கி ஆட்சி அமைத்தது. அன்று முதல் 2015 ஆம் ஆண்டு தேர்தல்வரை தனித்தும், கூட்டணி அமைத்தும் தேசிய அரசாங்கத்தில் பிரதான பங்காளியாகவும் செயற்பட்டுவருகிறது. எதிர்க்கட்சி ஆகவும் அரசியலில் ஆதிக்கம் பெற்ற ஐ.தே.க பல தடவை தேர்தல்களில் தோல்வியை எதிர்கொண்டாலும் அதற்கு சமமான தடவை ஆட்சி அமைத்திருக்கின்றது.


இலங்கையின் அரசியலில் இலவசக்கல்வி, இலவசப்பாடநூல், மகாபொல, ஜனசக்தி, ஜனசவிய, வீடமைப்பு, துரித மகாவலி அபிவிருத்தி, திறந்த பொருளாதாரக் கொள்கை என நலன்புரி (Welfare State)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசை அமைப்பதில் முனைப்புக் காட்டிய கட்சியாக ஐ.தே.க விளங்குகின்றது. அவ்வகை வலிமையும், தலைமையில் நீண்ட பாரம்பரியமும் கொண்ட ஐ.தே.க வினால் *1994* ஆம் ஆண்டுக்குப் பின்னர் அறுதிப் பெரும்பான்மையை எட்ட முடியாத நிலை காணப்படுவதுடன் ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெறமுடியாத நிலையிலுள்ளது. அதற்கு சரியான காரணத்தைக் கண்டறிவதும், அதன் மூலம் ஐ.தே.க வின் மறுசீரமைப்பு பற்றிய விதப்புரைகளையும் இக்கட்டுரை கொண்டுவர முயலுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிவாய்ப்பை (UPFA) உறுதிப்படுத்தியதாக அமைந்திருந்தது. இரண்டு தேர்தல்களிலும் ஐ.தே.க ஆதரவு சக்தியான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் ஜனாதிபதித் தேர்தல் தோல்வியும் பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க வின் தோல்வியும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. பாராளுமன்றத் தேர்தலின் முடிபுகளின்படி பெற்ற வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளின் விபரங்களை நோக்குவோம்.




ஆதாரம்: Daily Mirror, April 22,2010.

ஆய்வு முறையியலாக இரண்டாம் நிலைத் தகவல்களை முழுமையாகப் பின்பற்றுவதுடன் கால அடிப்படையில் கண்டறிதல் முறைமையின் ஒரு பிரிவான அவதானிப்புகள் வாயிலாக முடிபுகளை எட்ட முயலுகிறது.


**2010 ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் முடிபுகள்**

*2010* ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாக மலர்ந்திருந்தது. அதில் ஜனாதிபதித் தேர்தலும், பாராளுமன்றத் தேர்தலும் ஆளும்

விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தல் முறைமையின் கீழ் இலங்கையின் கடந்தகால அனுபவத்தின்படி சாதாரண பெரும்பான்மையை எட்டுவது மட்டுமே முடிந்ததொன்றாக அமைந்திருந்தது. அதனை முறியடித்து முதல்தடவையாக *2/3* பெரும்பான்மையை அண்மித்த முடிபுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றி *(144/150)* எட்டியுள்ளது ( Melinda Seneviratine., 2000:4). இது இலங்கையின் அண்மைய தேர்தல் பதிவுகளில் புதிய அனுபவமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. குறிப்பாக விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் 1989 இல் 125 ஆசனத்தினை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொண்டது. 1994 இல் பொது ஜன ஐக்கிய முன்னணி 105 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. 2000 ஆம் ஆண்டு பொ.ஐ.ஐ.மு 107 ஆசனங்களை பெற்றுக்கொண்டது. 2001 இல் ஐ.தே.க (UNP) 109 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. 2004 இல் ஐ.ம.சு.மு 105 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது(அரசரெத்தினம், எஸ்., 2004). இதனாலேயே 2010 தேர்தல் அதிமுக்கியம் பெற்றதொன்றாகக் காணப்படுகிறது. இதற்கான காரணமாக மக்களின் வாக்களிப்பு பிரதான கட்சிகளை நோக்கியதாக அமைந்ததுடன் அவற்றை மையப்படுத்தி வாக்குக்குவிப்பு அதிகரித்திருந்தது( Melinda Seneviratine., 2000:4). மேலும் உதிரிகளான கட்சிகளும், பிரிவுகளும் ஒரே அரசியல் கட்சிக்குள் இணைந்திருந்தமையும், ஒரே அரசியல் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டமையும் பிரதான காரணம் எனக் கருதப்படுகின்றது( Melinda Seneviratine., 2000:4). எதுவாயினும் இலங்கையின் விகிதாசாரத் தேர்தலின் அனுபவத்தில் 2010 தனித்துவமானது. ஆனால் ஐ.தே.க வுக்கு அதிர்ச்சியானது. இதுவரை நடந்த விகிதாசார பிரதிநிதித்துவத் தேர்தலில் ஐ.தே.க இவ்வகை மோசமான தோல்வியை




ஆதாரம்:- www. daily mirror . lk

**ஐ.தே.க வின் கடந்தகால தேர்தல் முடிவுகள் பற்றிய ஒப்பீடு (1989 - 2000)**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எதிர்கொள்ளவில்லை என்றே கூறலாம். இதன் அடிப்படையில் 2010 தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் முழுவிபரத்தையும் நோக்குவோம்.

மேலே தரப்பட்ட அட்டவணையின் அடிப்படையில் ஐ. தே.க இன் தேர்தல் முடிபுகளில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும் போது 2010 அதிக பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தது. அரசமைக்கும் போதும் எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தை நிரப்பீடு செய்யும் போதும் சமநிலைத் தன்மையை ஐ. தே.க பேணமுயன்றிருந்தது. ஆனால் 2010 ஜனாதிபதி தேர்தலில் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்த போது கடந்தகால கூட்டணி அமைப்புக்களிலிருந்தும் பாரிய வேறுபாட்டைக் கடைப்பிடித்தது. அதிலும் வீழ்ச்சியை எதிர்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டது. இதற்கான காரணத்தை ஆராய்வது அவசியமானது. அத் தேர்தலில் கட்சியின் தலைமையை விட பொன்சேகாவுக்கு கொடுத்த முக்கியத்துவம் ஐ. தே. க பேரில் நிலைப்பாட்டை வெளிப்படுத்துகிறது. 2010 தேர்தலில் கணினி மோசடி இடம் பெற்றதாக கூறப்படுவதை வெறும் ஊகங்களாக ஒதுக்கிவிட முடியாது. பொன்சேகா சமர்ப்பித்த தேர்தல் ஆட்சேபனை மனுவை தொழில்நுட்ப குறைபாடெனசுட்டிக்காட்டி மேல்முறையீட்டு நீதிமன்றம் அவசரமாக தள்ளுபடி செய்தமையும் திருத்திய ஆட்சேபனை மனுவை சமர்ப்பிக்க அனுமதி மறுக்கப்பட்டமையும் சர்ச்சைக்குரிய விடயமாகும். மேலும் தேர்தல் முடிபுகள் வெளிவந்து கொண்டிருக்கும் போதே தேர்தல் ஆணையாளர் அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்டமையும் தொடர்ந்து இரு நாட்கள் அவர் வதிவிடம் அறியாதவராக வாழ்ந்தமையும் சந்தேகத்தை மேலும் பலப்படுத்துகிறது.


**2015 தேர்தலில் ஐ. தே. க**

2015 தேர்தல் முன்னாள் ஜனாதிபதியை தோற்கடிக்க வேண்டுமென்ற முனைப்புடன் அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவும் மேற்கொண்ட முயற்சிகள் ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கு மேலதிக வாய்ப்புக்களை வழங்கியது. இது மட்டுமன்றி ஐ. தே. க மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து உடைந்த தரப்புகளையும் ஒன்றிணைத்துக் கொண்டுதேசிய அரசாங்கத்தை அமைப்பதிலும் எதிர்க்கட்சியை உருவாக்குவதிலும் பிராந்திய சர்வதேச சக்திகளின் பங்களிப்பு முதன்மையாக விளங்கியது. 2015 இல் அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் அனைத்து உருவாக்கத்திற்கும் செயல்பாட்டிற்கும் பின்னால் அமெரிக்க - இந்தியக் கூட்டு முனைப்பான கவனம் செலுத்திவருகிறது. இது ரணில் விக்கிரமசிங்ஹாவுக்கான வெற்றி மட்டுமல்ல இந்திய - அமெரிக்க கூட்டும் அவற்றின் நலனுக்கு விரோதமான முன்னைய அரசாங்கத்தினை வீழ்த்தும் உபாயமே ஐ. தே.க வின் வெற்றியாகும். அத்துடன் சிறுபான்மையினர் ஐ. தே.க வுக்கு ஆதரவாக செயல்பட்டமையும் வெற்றியை உறுதிப்படுத்தியது. அதனால் ரணில்விக்கிரமசிங்ஹாவின் கனவான் அரசியல் வெற்றி பெறுவதற்கான வாய் பொன்று கிடைத்தது. இதனை பேணுவதும் பாதுகாப்பதும் தற்போதைய ஆட்சியாளரின் அரசியல் பொருளாதார சமூக - பண்பாட்டுக் கொள்கைகளிலேயே தங்கியுள்ளது. இதன் மூலமே ஐ. தே.க வின் எதிர்கால இருப்பும் ஆட்சிக்கான வாய்ப்புகளும் நிர்ணயிக்கப்படும். புதிய பொருளாதார திசையை நோக்கிய நகர்வுக்கான உலக நோக்கு வளர்ந்த போதும் தற்போதைய அரசாங்கம் அதில் முனைப்புக்காட்டாமை அல்லது அதற்கான வேகம் கனதிகுறைந்து காணப்படுவது வாய்ப்புக்களை தவறவிடுவது போல் தெரிகிறது. உலகத்தினால் உருவாக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சியை பலப்படுத்த வேண்டிய பொறுப்பு தற்போதைய தேசியரசாங்கத்திற்குரியது. அதிலும் ஐ. தே. க முதன்மை பெறும் நிலையில் இருந்த போதும் நடைமுறையில் சரியாகவும் சாதுரியமாகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் - 1947 - 2015**




ஆதாரம்:தேர்தல் திணைக்களம் கொழும்பு. -2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்த கட்சி தயாராக வேண்டும். அத்தேர்தலில் கட்சிகள் பெற்ற வாக்குகளை அவதானிப்போம்.

**கட்சியின் தலைமைத்துவம்**

தற்போது ஐ. தே.க தலைமைத்துவம் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இரத்த உறவான (மருமகன்) ரணில் விக்கிரமசிங்ஹவிடம் (2015) உள்ளது. ரணில் விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர் மட்டுமன்றி பல தேர்தல்களில் தொடர்ச்சியான தோல்விகளை கட்சி சந்திக்க வேண்டிய நிலையிலும் தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொண்டவர் (M.S.M. Ayub; 2000 : 4). ஆனால் இவரது தலைமைத்துவம் மீது அதீதமான விமர்சனமும் எதிர்ப்புக்களும் வெளிவந்துள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சம். ரணில் விக்கிரமசிங்ஹவைப் பொறுத்தவரை அவரது ஆளுமையில் கவர்ச்சிகரமில்லாத (Non - Herismetic) தலைவர் என்பது வெளிப்படையாகக் கூறப்படும் குற்றச்சாட்டாகும். அவரை உடையில் காண்பதோ, விசேட அடையாளங்களை சேர்த்துக் கொள்வதையோ, சாதாரண சிங்கள மக்களுடன் கைகோர்ப்பதிலோ எந்த விதமான முக்கியத்துவத்தினையும் கொண்டிருக் காதவராகத் தென்படுகின்றார். இலங்கையின் அரசியல் சுதேச பண்பாட்டு வெளிப்பாடுகளே பண்டாரநாயக்கா முதல்(திருநாவுக்கரசு, மு., 2007: 9-10) இன்றுவரைகாணமுடிகிறது. பண்டாரநாயக்கா மேற்கு லகில் கல்விகற்றபோதும் இலங்கையின் அரசியலுக்குள் நுழைவதற்கு சுதேச ஆடையும் சுதேச அடையாளமும் அடிப்படையாக அமைந்தது. இது ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் உண்டு. பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது களனி நெல்வயலை மாட்டுக்கலப்பையால் உழவு செய்யும் காட்சி(Dissanayaka, T.D.S.A., 1977:1) அவரது சுதேச அடையாளமாக பார்க்கப்பட்டது. இவை எதையும் ரணில் விக்கிரமசிங்ஹ தனது அரசியல் வாழ்வில் கடைப்பிடித்ததாக தென்படவில்லை. ஜனநாயக அரசியல் என்பது மக்கள் சார்ந்த அரசியல். அதனை அடைவதற்கு மக்கள் பக்கம் அதிலும் கிராமிய கட்டமைப்பைக் கொண்ட இலங்கையில் அதிகம் சுதேச பண்பாட்டை சார்ந்து செயல்படுதல் வேண்டும். அவற்றுக்கு ரணில் விக்கிரமசிங்ஹ முக்கியத்துவம் கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்வதுடன் ஐ. தே.க இன் பலத்தினை கிராமிய மட்டத்தில் வலுவான சக்தியாக மாற்றமுடியாதவராக உள்ளார். ஐ. தே. கவின் கிராமிய பலத்தை உருவாக்கியதில் டி. எஸ். சேனநாயக்காவுக்கிருந்த பலத்துக்கு(Bradman Weerakoon., 2004 : 380 - 384) நிகராக ஆர். பிறேமதாஸாவுக்கும் இருந்தமையே அதன் கிராமிய வாக்கு வங்கியைப் பலப்படுத்தி ஆட்சியமைப்பதில் சாத்தியப்பாட்டை எட்டினார். இதில் பிறேமதாஸா அளவுக்கதிகமான முக்கியத்துவத்தினை நகரத்திற்கு இணையாக கிராமிய மட்ட பங்கேற்பிற்கு கொடுத்திருந்தார். ஆனால் ரணில் விக்கிரமசிங்ஹா சிறந்த ராஜதந்திரியாகவும் மதிநுட்பம் வாய்ந்த அரசியல் வாதியாகவும் சர்வதேச மட்டத்தில் மிகச் சிறந்த அரசியல் தலைவராகவும் மதிக்கப்படுகிறார்(Ilica Malkanthi Karunaratne., 2010: ). விடுதலைப்புலிகளை அரசியல் ரீதியில் எதிர்கொண்டு வெற்றி பெற்ற சிங்கள அரசியல் தலைவராக சிங்கள உயர்தர மற்றும் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் மதிக்கப்படுகிறார். ஆனால் உள்ளூர் மட்டத்தில் சாதாரண மக்கள் மத்தியில் அந்தளவு ஆதரவை அவர் பெறத்தவறினார். குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வு பெருந்தோட்டத்துறை மேம்பாடு கிராமியப் பொருளாதார மறுமலர்ச்சி சிறிய நடுத்தர கைத்தொழில்துறை வளர்ச்சி போன்றவற்றில் ரணில் விக்கிரமசிங்ஹாவின் அசமந்தப் போக்கு கிராமிய மக்களின் ஆதரவை திரட்ட முடியாமைக்கான வலுவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாகக் கொள்ளமுடியும். இவற்றில் காட்டப்படும் தூரநோக்கற்ற செயல் அவரது அரசியல் வெற்றிகளை நெருக்கடிக்கு உள்ளாக்குகின்றது. இவரது கனவான அரசியல் நிதானமானது மட்டுமன்றி ஒரு புதிய திருப்பத்தினை தரவல்லதாக அமைந்திருந்தது. அதுமட்டுமன்றி ரணில் விக்கிரமசிங்ஹாவின் தலைமைத்துவம் கட்சிக்குள்ளும் அதற்கு வெளியேயும் அதிக எதிரிடையான சக்திகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனாலும் 2015 இல் ஐ. தே. க வின் வெற்றியானது ரணில் விக்கிரமசிங்ஹாவின் கனவான் அரசியலுக்கு கிடைத்த வெற்றியாகும். விலைவாசியைக் குறைத்தமை இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை ஏற்படுத்த முன்வந்தமை என்பன அவரால் முன்னெடுக்கப்படும் புதிய விடயங் களாக உள்ளமை பொருத்தப்பாடாதாக அமைந்தாலும் சரியான முன்னெடுப்பு அவசிய மானதாகும்.

அரசியல் தலைமைகளிடம் காணப்படும் இன்னோர் இயல்பு புத்துணர்ச்சி ஊட்டும் தலைவராக செயல்படுதல். அந்தவகையில் ஐ. தே.க க்குள் அதீதமான புத்துணர்ச்சியான அரசியலை மேற்கொண்டவராக பிறேமதாஸா காணப்படுகின்றார். அவரது ஆட்சிக்காலம் முழுவதும் அக்காலப்பகுதி அரசியல் வடிவத்திற்கு புத்துணர்ச்சி ஊட்டப்படுவதாக அமைந்திருந்தது. அதனோடு ஆர். பிறேமதாஸா ஏற்படுத்திய அரசியல் புதிய நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையில் ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இலங்கை அரசியலில் நிறைவேற்று அதிகார முறைமை (Executive Presidental system) கவர்ச்சிகரமானதாகவும், ஆளுமை நிறைந்ததாகவும் அதிகாரம் பொருந்தியதாகவும் அமைந்திருந்தமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இது மேற்குமாதிரியையும் (Westminister) இலங்கையின் புராதன கால முடியாட்சி அம்சங்களையும் உள்ளடக்கியதொன்றாக அமைந்துள்ளது. ஆனால் நிறைவேற்றதிகார ஆட்சிக்கு அவற்றோடு வன்முறை அரசியல் மாதிரியையும் (Violence Political Modle) அவசியமானதென்பதை உணர்த்தியது(திருநாவுக்கரசு, மு., 2007 : 16). இதனை ஜே. ஆர். ஜெயவர்த்தனா மிக குறைந்த அளவில் பயன்படுத்தினார். ஆர். பிறேமதாஸா மிக உச்சளவில் பயன்படுத்தியதுடன் அதுவே அவரது ஆட்சிமுறைமைக்குரிய அடிப்படையாகவும் அமைந்திருந்தது. அதாவது மிதவாதமும் தீவிரவாதமும் கலந்த ஓராட்சி முறைமை அதீதமாக வளர வாய்ப்பாக நிறைவேற்றதிகார ஆட்சி இலங்கையில் அமைந்தது. இது நவீன முடியாட்சிக்குரிய இயல்பினை காண்பிக்கும் அம்சமாக உள்ளது. இதில் தேர்ச்சியும் செயல்வடிவமும் உடையவர்களே நிறைவேற்றதிகார ஆட்சியைக் கைப்பற்றவோ தக்கவைக்கவோ முடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டது. இத்தகைய ஆளுமை தற்போதைய ஐ. தே. க வின் தலைமைக்கு அவசியமானது. இது இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத அரசியல் பண்பாடாக வளர்ந்துவருகின்றது. ஆனால் 2105 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் ஆட்சியின் இயல்பானது ஏறக்குறைய கனவான் அரசியலுக்கானதே ஆகும். இத்தகைய வெற்றிக்குப் பின்னால் பல காரணிகள் இலங்கைக்கு வெளியே செல்வாக்குச் செலுத்தியிருந்தன என்பதை கவனத்தில் கொள்வதே 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை மதிப்பிடக் கூடியதாக அமையும். இதற்காக இணைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவும் கனவான் அரசியலையே இலங்கையில் கட்டிவளர்க்க முயலுகின்றார்.

**மாறியுள்ள அரசியல் பொருளாதார கட்டமைப்பு**

புதிய உலக ஒழுங்குக்குப் பிந்திய வடிவம் உலகளாவிய மட்டத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. அது சர்வதேச, பிராந்திய அரசியலை மட்டுமல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல் பொருளாதார அமைப்பிலும் மாற்றங்களை அரசியல் பொருளாதாரத்தில் செய்யத்தவறவில்லை. அந்தவகைக்குள் இலங்கையின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் உலகமயவாக்கம் கொள்கைவடிவமற்ற மனித சமுதாயத்தை உருவாக்கிவிட்டுள்ளது. இதிலிருந்து அரசியல் கட்சிகளோ அல்லது ஐ. தே. க கட்சியோ விலகியிருக்க முடியாத நிலை எழுந்துள்ளது. தற்போதைய அரசியற்கட்சிகளில் எவற்றுக்கும் தெளிவான வரையறுக்கப்பட்ட, சார்பான கொள்கையை கடைப்பிடிப்பது கடினமாகிவிட்டது. குந்தர்பிராங் குறிப்பிடுவது போல் எதிர்முரணிய வரைபிற்குள்ளேயே கட்சிகளும் கட்சிகளின் கொள்கைகளும் அமைந்திருப்பது போல் அரசுகளும் அரசுகளை இயக்கும் அரசாங்கங்களும் செயற்படுகின்றன(அந்ரே குந்தர் பிராங்., 1991 :). இவ்வகை அரசாங்கங்களை உருவாக்கிவரும் கட்சி முற்றாக நிலைகுலைக்குட்பட்ட உள்நாட்டு அரசியல், பொருளாதார சமூக கொள்கைகளை வரைவது போல் வெளிநாட்டுக் கொள்கைகளையும் வடிவமைத்து வருகின்றன. இதனால் தெளிவான வரையறைக்குட்பட்ட கொள்கை வடிவம்அரசியல் கட்சிகளிடம் அருகிப்போயுள்ளது. அமெரிக்காவையும் சீனாவையும் இந்தியாவையும் ஒரே தளத்தில் கையாளும் வெளிநாட்டு அரசியல் அமைப்பையும், முதலாளித்துவத்தையும், தாராள முதலாளித்துவத்தையும் தனியார் முதலாளித்துவத்தையும் சமவுடமை தத்துவத்தையும் கலப்புப் பொருளாதார தத்துவத்தையும் ஜனநாயக அரசியல் தத்துவத்தையும் ஒருங்கே சேரும் கொள்கைப் போக்கினைஐ. தே. க கொடுக்கத்தவறிவிட்டது என்று கூறிவிட முடியாதவகைக்குள் ஆட்சியை அமைப்பது அவசியமாகியது. அது அவ்வவ்போது தனித்துவமான தாராளப் பொருளாதாரப் போக்கினைக் கடைப்பிடித்தாலும் கலப்பு பொருளாதார பொறிமுறையை பின்பற்ற தவறவில்லை.

பொருளாதார நலனே உலக அரசுகளின் உறவிற்கும், பிரிவிற்கும் காரணம் என்பதை ஐ. தே. க வின் அரசியல் கொள்கை வகுப்பாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டிய அம்சமாகும். பொருளாதார இலாபங்களே அரசியல் இருப்புக்களை நிர்ணயம் செய்கின்றன. அந்தவகையில் இன்றைய பொருளாதாரம் சந்தைப்பொருளாதாரம். அதை நோக்கி உலகளாவிய நேரடி முதலீடுகளும் உற்பத்திகளும் ஒன்றுசேருகின்றதே அன்றி அரசியல் கொள்கைகளுக்காக ஒன்று கூடவில்லை. அதனால் அரசுகளையும் அரசுகளின் பொருளாதார முதலீடுகளையும் ஓர் இடத்தில் குவிப்பதற்கான உலக சந்தையை நோக்கி ரணில் விக்கிரமசிங்ஹ தலைமையிலான ஐ. தே. க கண்டுகொள்வது அவசியமானது. நவ - தராளவாதத்தின் குறியீடாக ரணில்விக்கிரமசிங்ஹா காணப்பட்டாலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்வதில் ஏனைய உலகத் தலைவர்களுக்கு நிகரானவராக கண்டுகொள்ள முடியவில்லை. உரிமைகளையும், ஜனநாயகத்தையும் பொருளாதார இயக்குவிதிக்காக அரககள் கைவிட்டுவிட்ட வரலாறு கடந்த பல தசாப்தங்களாக பதிவிலுள்ள அம்சமாகும். இதனை தென்கிழக்கு ஆசிய நாடுகள் பல தசாப்தங்களுக்கு முன்பே கைவிட்டுவிட்டன(கணேசலிங்கம், கே. ரீ.; திருக்குமரன், ரீ., 2006). அந்த நாடுகளின் பொருளாதார சுபீட்சத்திற்காக ஜனநாயகத்தினை முடிவிற்கு கொண்டு வந்ததுடன் தனிக்கட்சி ஆதிக்கத்தினை பின்பற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. கிழக்காசிய நாடுகளைப் போன்றுபுவிசார் அரசியல் தன்மை இலங்கைக்கு அமையாத போதும் வர்த்தகத்தை விருத்தி செய்யக்கூடிய அரசியல் கொள்கையைக் கொண்டு இயங்குவது பொருத்தமானது. காரணம் இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருப்பது அதற்கான வாய்ப்பினை மேலும் பலப்படுத்துகிறது. எனவே பொருளாதார இயங்குவிசையினையும் அரசியல் சமூகக் கொள்கைகளையும் புதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக ஒழுங்கின் மாறுதல் காலவிதிகள் உருவாகியுள்ளன. 2002 ஆம் ஆண்டில் ஐ. தே. க தலைமையிலான அரசாங்கத்தினை கலைப்பதற்கு வழிவகுத்த ஐ. தே. க வின் உள்நாட்டு வெளிநாட்டு கொள்கைகள்ஐ. தே.க தலைமையால் கருத்தில் கொள்ளப்பட்டது என்பது 2015 இல் உணரப்படவேண்டும். 2002 இல் உள்நாட்டுக் கொள்கையில் உடன்பாடும் வெளிப்படைத் தன்மையும் பிராந்திய அரசியலில் தந்திரோபாயத்தையும் கருத்தில் கொண்டிருந்தால் ஐ. தே. க தனது ஆட்சியை தக்கவைத்திருக்க முடியும்(சந்திரசேகரன், எஸ்., 2009 : 12).

**ஆயுதப்போராட்டங்களால் ஏற்பட்ட மாற்றம்**

இலங்கை அரசியல் வரலாற்றில் பெரியளவில் எழுச்சி பெற்ற ஆயுதப் போராட்டங்கள் தற்காலிகமாக முடிவிற்கு வந்துள்ளன. தென்னிலங்கையில் எழுச்சிபெற்ற ஜே. வி. பி (Janatha Vemuthi Paramuna) இன் ஆயுதப்போராட்டமும் வடகிழக்கில் எழுச்சியடைந்த தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆயுதப்போராட்டமும் முடிவிற்கு வந்துவிட்டதென்பதை அவதானிக்க முடிகின்றது. ஆனால் இவ்வகை இரண்டு ஆயுதப்போராட்டமும் ஆயுத ரீதியிலும் அரசியல் ரீதியிலும் சமூகமயமாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. ஆயுத ரீதியான வன்முறையைக்காட்டிலும்சாதாரணகிராமமிய மக்கள் மத்தியில் அரசியல் மயவாக்கத்தினால் (Politicalization) கணிசமானஅளவு கிராம மக்கள் மத்தியில்மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அவை மாக்சிஸ அரசியல் மரபுகளுடன் நெருக்கமான காரணிகளை முதன்மைப்படுத்தி அரசியல் சமுதாயமயப்படுத்தலை மேற்கொள்ள உதவியுள்ளன(Jeyadeva Uyangoda., 2004 : 8 ). இதனால் மக்கள் அரசியல் கட்சிகளையும் தலைமைகளையும் அவர்களின் அரசியல் நடத்தைகளையும் (Behavioral Politics) இலகுவாகவும், விரைவாகவும் தெரிந்து கொள்வதில் கவனமெடுக்கின்றனர். அரசியல் தலைமைகளையும் அவர்கள் முன்வைக்கும் மாற்றங்களையும் மக்கள் அரசியல் கட்சிகளினதும் நடத்தைகளை ஊன்றி அவதானிக்கின்றனர் (Jeyadeva Uyangoda., 2004 : 5-6 ).

வடக்கு கிழக்கின் ஆயுதப்போராட்டம் முடிவிற்கு வந்துள்ளனவே அன்றி அவர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை நிறைவு செய்யக்கூடிய நடவடிக்கையில் ஐ. தே. க ஈடுபடவேண்டும். அதன் தலைமை வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுவதில்லை என்ற குறைபாடு நிலவுகிறது. இதனை நீடிக்க அனுமதிப்பது பொருத்தமற்றது. காரணம் தமிழ் மக்களின் வாக்குகளினாலேயே 2015 ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் சாத்தியப்பட்டதென்பது மட்டுமன்றி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமையே ரணில் விக்கிரமசிங்ஹாவின் தோல்விக்கான காரணமாகும். எனவே ஐ. தே. க வும் அதன் தலைமையும் கடந்த கால அனுபவங்களைக் கருத்தில் கொள்வது அவசியமானது.

**பிரச்சாரம்**

அரசியல் நடிபங்கின் பிரதான சாதனமாக பிரச்சாரம் மாறிவிட்டது. குறிப்பாக மரபுசார்ந்த தொலைத்தொடர்பு சாதனங்களுடன் மின்னணுச்சாதனங்களின் வருகை இலங்கை மக்களுக்கு அரசியலை அறியும் ஆவலை அதிகரித்துள்ளது. ஆரம்பத்திலிருந்தே இத்தகைய மின்னணுச்சாதனத்தை பிரயோகிப்பவர்களாக மத்தியதர வர்க்கமும் உயர்வர்க்கமும் ஈடுபட்டுவருகின்றனர்(புலி - யானை பற்றிய உடன்படிக்கையின் பிரச்சாரத்தினை தென்னிலங்கையில் ஐக்கியதேசியக் கட்சியினால் முறியடிக்கமுடியவில்லை. இவ்வாறு பல அம்சங்கள் ஐ. கே. க வுக்கு பாதிப்புக்குரியதாகியது). இவர்களேஒவ்வொரு நாட்டின் அரசியலிலும் தீர்மானம் எடுக்கும் வலுவுடையவர்களாக விளங்குகின்றனர். உயர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய தரவர்க்கம் மின்னணுச்சாதனங்களைப் பயன்படுத்தி தமக்கிடையே தெளிவான ஒரு வலைப்பின்னலை செய்துள்ளன. தமது எண்ணப்பட்டையும் சிந்தனையையும் ஊடகங்கள் வாயிலாக பிறருக்கும் அவர்களின் மூளைகளுக்கும் உணர்த்தும் உத்தியானது மிகப்பெரிய பிரச்சாரம் ஆகிவிட்டது. இதனால் ஆளும், எதிர்த்தரப்பு என்பதற்கு அப்பால் பிரச்சாரம் எல்லோரையும் வெற்றிகண்டுவருகிறது. அரசியல் மயமாக்கப்பட்ட பிரச்சாரம் நியாயப்பாடுகளைக் கடந்து மக்கள் மத்தியில் அதீத செல்வாக்கை செலுத்திவருகிறது. இப்பிரச்சார அணுகுமுறையை அரசியலில் ஈடுபடுத்தும் பாரம்பரியக் கட்சிகள் பலவீனமடையுமாயின் கட்சி அரசியல் நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

கடந்த பல தேர்தல்களில் ஐ.தே. கவின் பிரச்சாரத்தின் பங்களிப்பு மட்டுப்படுத்தப் பட்டிருந்ததுடன் அதற்கான நிர்ப்பந்தம் தவிர்க்கமுடியாததாக இருந்தது. ஆனால் பிரச்சாரத்திற்கான உத்தியை உருவாக்குவதும் கையாள்வதிலும் பழைய மரபுசார்ந்த அம்சங்களைக் காட்டிலும் நவீனமான வழிமுறைகளைப் பயன்படுத்தும் நுட்பம் சார்ந்த அறிவினுடைய பிரிவின் பங்களிப்பு அவசியமானது(Joseph Dominick., 1994 : 556 - 557). அதனை உருவாக்குவதன் மூலமே இந்த அரசியல் சமூகத்தையும் கட்சியமைப்புகளுடன் இணைத்துக் கொள்ள முடியும். இதில் ஐ. தே. க அதிக கவனம் கொள்ளுதல் அவசியமாகும். நல்லாட்சி (Good Govenence) அரசியல் பற்றிய தேர்தல் பிரச்சார உத்திகளை முன்வைக்கும் ரணில் - மைத்திரி அரசாங்கம் நல்லாட்சியின் உட்கூறுகளைப் பேணவும் வேண்டும். பிரச்சாரம் அல்லது பிரச்சாரத்திற்கான தேர்தல் விஞ்ஞாபனம் என்பன குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் மக்களிடம் இருக்கும் என்று கூறமுடியாது. அதனை கட்சிகளோ அல்லது தலைமைகளோ அமுல்படுத்த தவறினால் அடுத்துவரும் தேர்தலில் அதற்கான பதில்களை மக்கள் வெளிப்படுத்தும் மரபை கொண்டிருப்பர் என்பது புதிய அனுபவமல்ல.

**போருக்குப் பிந்திய இலங்கை**

தென் இலங்கையின் கருத்துருவாக்கத்தின் படி போருக்கு பிந்திய இலங்கையின் கட்டுருவாக்கம் என்பது புதிய பரிணாமமாக மாறியுள்ளது. இதனால் முழுமையான கொள்கை மாற்றங்களும் விருத்திக்கான பங்குபற்றலும் சர்வதேச, பிராந்திய கட்டமைப்புகளின் பிரவேசமும் அதிகரித்துவிட்டது. இதனால் போர் வெற்றிகளைக் காட்டிய தேர்தலாக 2010 தேர்தல் அமைந்தாலும் அதனை முறியடிக்க முடியாத நிர்ப்பந்தம் ஆளும் தரப்பிற்கு சமமாக எதிர்தரப்பான ஐ. தே. க போரில் தனது பங்கினை நிலைநாட்ட முயன்றது(Melinda Seneviradne., 2000 : ). 2010 ஜனாதிபதித் தேர்தலில் சரத்பொன்சேகாவை நிறுத்தியதன் நோக்கமும் அதுவேயாகும். ஆனால் 2015 தேர்தல் அதன் விளைவுகள் அம்பலமானதைக் காணலாம். அரசியல் கட்சி வரலாற்றில் பாரிய நெருக்கடியை போருக்கு பிந்திய காலம் ஏற்படுத்திவருகிறது. எனவே ஐ. தே. க மீளுருவாக்கத்திற்கான உபாயம் போருக்கு பிந்திய இலங்கையின் மீளுருவாக்கமாக அமைதல் தவிர்க்கமுடியாத சூழலாக பரிமாணம் எடுத்துவருகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் சர்வதேசப் பொருளாதார தலையீட்டின் அரசியல் தன்மையும் கட்சி அரசியலுக்குள்ளால் சரிசெய்யப்பட வேண்டும். அவ்வகை அரசியல் பிரவேசத்திற்குள் வேகமாக செல்லும் பலமும், சித்தாந்தமும் ஐ. தே.க வுக்கு பிற அரசியல் சக்திகளைவிட அதிகமாக இருந்தபோதும் அதனை செயல்வடிவம் கொடுக்கும் தலைமை அவசியமானதாகும்.

**முடிவுரை**

இலங்கை அரசியல் தொடர்ச்சியில் இருகட்சிபாரம்பரியம் சுதந்திரத்திற்குப் பின்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்துள்ளது. இருகட்சிப் பாரம்பரியத்தினை ஆசியாவுக்குள் மிக நீண்ட காலமாக பின்பற்றிய நாடு என்ற பெருமை இலங்கைக்கு உரியது. அதனை முடிவுக்கு கொண்டுவரும் பதிவில் ஐ. தே. க வின் பங்கு அதிகரித்துவருகிறது. இதனால் ஏற்படப் போகும் அரசியல் வெற்றிடம் தவிர்க்க முடியாது. சிறுபான்மை சமூகங்களிடம் கைமாறவாய்ப்பு உண்டு. அதுமட்டுமன்றி ஒரு கட்சி அரசியல் தென்கிழக்கு, கிழக்கு ஆசியப்பாணியில் வளருமாயின் ஐ.தே. க வின் அடிப்படையே பாதிப்புக்குள்ளாகலாம். முன்வைக்கப்படவுள்ள அரசியலமைப்பில் உருவாகும் தேர்தல் விதிகள் ஐ. தே.க வுக்கு நெருக்கடியை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உண்டு. அதனால் புதிய உபாயத்தையும், தந்திரத்தையும் கையாண்டு அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுவதே இலங்கையின் எதிர்கால ஜனநாயகம் சாத்தியமாகும். அதனை நோக்கி கட்சியின் தலைமை, பாராளுமன்ற பிரதிநிதிகள், கட்சியின் பிரதிநிதிகள் பணியாற்றுவது தவிர்க்கமுடியாத அரசியல் நடவடிக்கையாக உள்ளது. 1977 ஆம் ஆண்டிலிருந்து 1994 வரை ஐ. தே.க தனித்து ஆட்சி செய்தது. அதன் பின்பு கூட்டணி அமைத்தும் எதிர்கட்சியாகவும் அதிககாலத்தை எடுத்துக் கொண்டது. அத்தகைய கருத்தை உடைத்து புதிய பாதையை அமைப்பது ஐ.தே.க வின் மீளுருவாக்க (Rebirth) நடவடிக்கையிலே தங்கியுள்ளது(Dayan Jeyatilake., 2010 :). 2015 தேர்தல் ஐ. தே. க வை நிலைப்படுத்த உதவும் காலம் என்பதைக் கருத்தில் கொள்வது பொருத்தமானதாகும்.

## References


1. வி.ரி. தமிழ்மாறன்., (ஏப்ரல் 2004) *அரசியலமைப்பாகச் சிந்தனைகள்,* மதுரிமலர் அகம் இரண்டாம் பதிப்பு பக்,19.
2. மேற்படி நூல்.,
3. Melinda, Seneviratine., 'Victory is a curse will many dimension', Daily mirror, April 22, 2000, p.4.
4. பார்க்க எஸ். அரசரெத்தினம்., (யூலை 2004) *இலங்கை அரசியல் வரலாறு,* குட்வின் அச்சகம், கல்முனை.
5. Melinda, Seneviratine., - do -
6. Melinda, Seneviratine., 'Counter democratic communalist thrust of reinventing 'ethnic conflict', www. daily mirror. lk.
7. M.S.M. Ayub., 'The Options Before the JVP after the General Election.' www.daily mirror. lk, 2000 p.4.
8. Ibid.
9. மு. திருநாவுக்கரசு., (2005), *கொழும்பு - 2007.* அறிவமுது, பக். 09 - 10.
10. T.D.S.A. Dissanayaka., '*J.R. Jayeweardene of Sri Lanka*'. Swastika press. Colombo, Sri Lanka, August. 1977, 1
11. See, Bradman Weerakoon, (2004)*Rendering Unto Caesar, A Fascinating Story of one Man*'s Tenure under nine Prime Ministers and Presidents of Sri Lanka, Vijitha Yapa, Sri Lanka, Pp330-384.
12. Ilica Malkanthi Karunaratne: 'Those unforgettable Dudley years' , Daily mirror, Colombo, Sri Lanka, April 13, 2010.
13. மு. திருநாவுக்கரசு., ப. 16.,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. அந்ரே குந்தர் பிராங், 'உலக அரசியல் பொருளாதாரத்தில் எதிர் முரண்நிலைகள்', பொருளியல் நோக்கு, இதழ் 17, 1991.
15. கே. ரீ. கணேசலிங்கம், ரீ. திருக்குமரன் (2006), சேதுக்கால்வாய்த்திட்டம் : அரசியல் பொருளாதார பாதுகாப்பு சுற்றுச்சூழல் நோக்கு, பிரம்ம வெளியீடு யாழ்ப்பாணம்.
16. எஸ். சந்திரசேகரம், 'ஜனநாயகமும் பொருளாதார அபிவிருத்தியும், ஆசியாவில் இலங்கையின் அனுபவம்', கூடம் ஜனவரி - மார்ச் 2009. ப. 12.
17. Jeyadeva, Uyangoda., 'Peace watch', Polity, March - April 2004. Vol 1.No. 06 p.08
18. Jeyadeva, Uyangoda., 'JVP Splits', Vol .4, No. 05 Pp. 5 - 6.
19. See, Joseph, Dominick., (1994), The *Dynamics of Mass Communication*. University of Georgia. Althers, Pp 556 - 557.
20. See, Melinda, Seneviratine., - do -
21. Dayan, Jeyatilleke., 'The UNP : is a rebirth Possible?' Daily mirror, Colombo, Sri Lanka, June - 02, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் டச்சுக்காரர்கால (1658 - 1796) பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்

- சில அவதானிப்புக்கள் -

கந்தையா அருந்தவராஜா

**ஆய்வுச்சுருக்கம்**

வடஇலங்கையினது பொருளாதாரத்தில் அதனது பிரதான வருமான மூலங்களிலொன்றாக புராதன காலந் தொடக்கம் ஏறத்தாழ நாடு சுதந்திரமடைந்ததன் பின்னராகவும் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் அமைந்திருந்தன. வறுமை, உணவுப் பஞ்சம் என்பன ஏற்பட்ட காலங்களில் வடஇலங்கை மக்களுக்குக் கற்பகதருவாக இருந்து அவர்களது பட்டினி வாழ்வினை அகற்றியது. நோயாளருக்கு மருந்தாகியது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும் பின்வந்த ஐரோப்பியர்களுக்கும் பிரதான வர்த்தகப் பொருட்களாக இருந்து அவர்களுக்கு வருவாயினைப் பெற்றுக் கொடுத்தது. பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கியது. உள்நாட்டில் மட்டுமன்றி அக்காலப்பகுதிகளில் அயல்நாடுகளிலும் இத்தகைய பொருட்களுக்குப் பெரும் கிராக்கியிருந்தது. அவ்வகையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தின் பின்னதாக இத்தகைய பனைமரத்தினது பெறுமதியினை உணர்ந்தவர்களில் ஐரோப்பியர்களான டச்சுக்காரர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் இலங்கையின் கரையோரப்பகுதிகளை நிர்வாகம் செய்த காலப்பகுதியில் பனை மரத்தினை வடஇலங்கையில் உருவாக்குவதில் அக்கறை உடையவர்களாக இருந்ததுடன் இவற்றிலிருந்து அதிகளவான வருவாயினைப் பெற்றனர். இவர்களது காலத்தில் வடஇலங்கையினது நிர்வாகத்தினைத் திறம்பட நடாத்துவதற்குத் தேவையான பொருளாதார பலத்தினைக் கொடுத்த காரணிகளில் பனையும் ஒன்று குறிப்பிடத்தக்கது. ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தில் பனையிலிருந்து அதனது உற்பத்தி மூலமாக அவர்கள் பயன் அடைந்தார்கள். போர்த்துக்கேயரது காலத்தில் அவர்கள் பிற வர்த்தகப் பொருட்களில் காட்டிய அக்கறையினை பனம் பொருட்களில் காட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் டச்சுக்காரரோ பனை முழுவதிலிருந்தும் ஆதாயத்தினை அடைந்தனர். அவர்களது காலத்தில் உள்நாட்டுத் தேவையினைப் பூர்த்தி செய்தது மட்டுமன்றிச் சர்வதேச சந்தைகளுக்கும் பனையும் அது சார்ந்த பொருட்களும் அனுப்பப்பட்டன. பின்வந்த ஆங்கிலேயரும் டச்சுக்காரரது பனைமரம் தொடர்பான கொள்கையினைத் தொடர்ந்து சிலகாலம் கைக்கொண்டனர். இக்காலங்கள் ஒவ்வொன்றிலும் மக்கள் பனை மரத்தின் மூலமாக நன்மை அடைந்தனர். அரசும் மக்களுடன் இணைந்து முன்னொருபோதும் இல்லாத வகையில் அதிகளவிற்குப் பனை வளத்தின் மூலம் பனை மரத்தின் மூலம்பயன் பெற்றதென்றால் அது வடஇலங்கையில் டச்சுக்காரரது காலத்திலேதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடஇலங்கையில் டச்சுக்காரரது பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக வரலாற்றாளர்களும், பொருளியலாளர்களும், அறிஞர்களும் ஓரளவு விரிவாக ஆய்வினைச் செய்தபோதும் தனித்து மேற்கூறப்பட்ட இவ்விடயமாக வரலாற்று நோக்கில் இதுவரை எவரும் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அத்துடன் அக்காலப்பகுதியில் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் பெற்றிருந்த முக்கியத்துவத்தினைத் தற்போதைய சமுகத்தவருக்கு எடுத்துக்காட்டுதல் மற்றும் இவ்விடயமாக எதிர்காலத்தில் ஆய்வினை மேற்கொள்ள விரும்புகின்றவர்களுக்கு முன்னோடியான ஆய்வாக அமைய வேண்டுமென்பதும் கட்டுரையினது பிரதான நோக்கங்களாக உள்ளது. பெருமளவிற்கு வரலாற்று அணுகுமுறையினடிப்படையில் அமைக்கப்பட்ட இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாந்தர ஆதாரங்கள் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் டச்சு ஆளுநர்களது அறிக்கைகள் பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தினைப் பெற்றுள்ளன. பிற்பட்ட காலங்களில் முதற்தர ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், பத்திரிகைகள் என்பன இரண்டாந்தர ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து நோக்குகின்ற போது அக்கால வடஇலங்கையினது பொருளாதாரத்தின் உயிர்நாடியாகப் பனையும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் விளங்கியதனை அறியலாம்.

**திறவுச் சொற்கள் :** கற்பகதரு, பனைமர ஏற்றுமதி, சுதேச வளம், ஆரியச்சக்கரவர்த்திகள், டச்சுக்காரர்.

**1. அறிமுகம்**

டச்சுக்காரரைப் பொறுத்தவரை அவர்கள் பொருளாதாரத்தில் சிக்கனத்தினைத் தமது நோக்கங்களிலொன்றாகக் கொண்டவர்கள். இதன் பொருட்டு அவர்கள் உள்நாட்டில் கிடைக்கின்ற மூலவளங்களிலிருந்து உச்சப் பயன்பாட்டினைப் பெற வேண்டுமென்ற சிந்தனையினை உள்வாங்கியிருந்தனர். இதற்கு ஏற்றவகையில் இப்பகுதிகளில் அவர்களுக்குப் பனை மரமும் அது சார்ந்த பண்டங்களும் தாராளமாகக் கிடைத்தன. அவ்வகையில் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் நீண்டகாலத்திலிருந்தே பனை மரமும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் பிரதான இடத்தினைப்பெற்று வந்துள்ளதை ஆதாரங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. அதாவது வடஇலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திற்கும் சற்று முன்னதாக ஆரம்பித்து ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலும், தொடர்ந்து வந்த ஐரோப்பியர்களது காலங்களிலும், சுதந்திரத்தின் பின்னராகவும் பல்வேறு வழிகளில் வடஇலங்கையினது பொருளாதாரத்தில் இவை செல்வாக்கினைச் செலுத்தியிருந்தன. இப்பின்னணியிலேதான் டச்சுக்காரரது காலத்திலும் வடஇலங்கையில் அவர்களது பிரதான வருமானமூலங்களிலொன்றாக இவை அமைந்திருந்தன.

இவர்கள் இவற்றினது உற்பத்தியினைப் பெருக்குவதற்கும் வருவாயினை அதிகரிக்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக அவர்களது வருவாய் அதிகரித்த அதேநேரத்தில் வடஇலங்கை மக்களும் பல்வேறு வழிகளில் இவற்றினூடாகப் பயன்களைப் பெற்றனர். அவ்வகையில் இப்பகுதி மக்கள் இவற்றினை உள்நாட்டின் பல பகுதிகளுக்கும் கடல் வழியாகவும்தரைவழியாகவும் கொண்டுசென்று விற்பனை செய்ததுடன் தமக்குத் தேவையான பண்டங்களையும் பதிலுக்குப் பெற்று வந்தனர். தென்னிந்தியத் துறைமுகங்களுக்குத் தனியாகவும் தரகர்கள் மூலமாகவும் ஏற்றுமதியினைச் செய்து, தட்டுப்பாடான காலங்களில் அரிசி, ஆடை உள்ளிட்ட சில அத்தியாவசியப் பொருட்களைத் தருவித்தனர். (Arasaratnamï S. 1988) அக்காலப்பகுதியில் இந்தியாவிலும் நாட்டின் கிழக்கு மற்றும் தென்னிலங்கை பல பகுதிகளிலும் இவற்றுக்கு நல்ல கிராக்கி இருந்தது. டச்சுக்கா ரரது ஆட்சியானது வடஇலங்கையில் செல்வாக்கினை இழந்த பின்னரும்கூட பனை மரத்தினது முக்கியத்துவமானது இப்பகுதிகளில் குறையவில்லை. அதாவது ஆங்கிலேயரது காலத்திலும் இம்மரத்துடன் தொடர்பான பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு உற்பத்திகளைச் செய்கின்ற தொழிற்சாலைகள் வட இலங்கையின் கரையோரப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் தமிழ் மக்களது வாழ்வியலோடு இணைந்துள்ள இம்மரத்தினை பஞ்சம் போக்கி எனவும் அழைப்பதில் தவறில்லை.

**தோற்றந் தொடர்பான கருத்துக்கள்**

வடஇலங்கையில் பனை மரத்தினது தோற்ற காலத்தினைச் சரியாகக் கணிப்பிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதுவிட்டாலும்கூடப் பொதுவாக இவற்றினது தோற்ற காலமானது தென்னிந்தியாவில் சங்ககாலத்திற்கும் முற்பட்டதாக எம்மால் அக்காலப்பகுதிக்குரிய இலக்கியங்களின் மூலமாக அறியமுடிகின்றது வடஇலங்கையில் இதனது தோற்றமானது பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய காலத்துடன் அடையாளங் காணப்படுகின்றது. அதாவது வடஇலங்கையில் கி.மு எட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இதனது தோற்ற காலம் இருந்திருக்க வேண்டும். பின்னர் தென்னிந்தியாவில் பல்லவரது செல்வாக்கு ஏற்பட்ட காலத்தில் தென்னிந்தியத் தொடர்பின் பின்னணியில் பனை மரத்தினதும் அது சார்ந்த பண்டங்களுக்குமான தேவையானது வடஇலங்கையில் அதிகரித்தது. சோழப் பேரரசு, விஜயநகர பேரரசு போன்ற காலகட்டங்களில் கேள்வியும் பனை மரத்தினதும் அவற்றின் கேள்வியும் உற்பத்திகளின் பயன்பாடும் அதிகரித்து வந்திருந்தமைக்கான புறச்சான்றுகளும் கிடைத்துள்ளன.

வடஇலங்கை மக்களது பரம்பரைச் சொத்தான பனை மரமானது பல்வேறு பயன்களை மக்களுக்கு வழங்குவதனால் அது கற்பகதரு எனப் பொதுவாக எல்லோராலும் அழைக்கப்படுகின்றது. பனை மரத்தினைப் போன்று வேறு எந்தவொரு தாவர இனத்தின் சகலபாகங்களும் மக்களுக்குப் பிரயோசனமாக அமைவதில்லை. எக்காலத்திலும் எவருக்கும் கைகொடுப்பது இது. பனை மரத்தின் பயன்பாடு எப்போதிருந்து முதன் முதலாக உருவாகியதென்பது சரிவரத் தெரியாவிட்டாலும்கூட இவற்றினது பரவலானது அதிகளவில் ஆசிய நாடுகளில்தான் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கை, இந்தியா, மலேசியா, கம்பூச்சியா, இந்தோனேசியா, மியன்மார், தாய்லாந்து, வியட்னாம், சீனா, மேற்கு ஆபிரிக்க நாடான கொங்கோ மற்றும் மாலி, நைஜீரியா, தன்சானியா போன்ற பகுதிகளிலும் இவை அதிகளவில் உற்பத்தியாகியுள்ளது (Blatter, E.S.J.1926). இலங்கையைப் பொறுத்தவரையில் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பகுதிகள், வன்னிப்பகுதிகள், கிழக்கிலங்கையின் சில பகுதிகள் எனத் தமிழ்மொழி பேசுகின்ற மக்கள் வாழுகின்ற பகுதிகளிலேதான் பனை மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வாறு இவை தேசத்தின் பல பகுதிகளிலும் இருப்பினும் தருகின்ற பயன்பாட்டில் சுவைகளில் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்ட இயல்புகள் கொண்டு காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

பனை மரமானது வறண்ட பிரதேசங்களில், வளரக்கூடியதொரு மரமாகும். இது மரம் போன்றதொரு அமைப்பிலே தெரிந்தாலும் கூட உண்மையில் ஒரு புல்லினத்தினைச் சார்ந்த தாவரஇனமாகவேகருதப்படுகின்றது. அதனால் இது தானாகவே வளருகின்ற இயல்பினை உடையது. இதனது சிறிய தோற்றமானது வடலி என்ற பெயரினால் அழைக்கப்படுகின்றது. ஒரு பனையானது முதிர்ச்சியடைய ஏறத்தாழ இருபது வருடங்களாவது செல்லும் (கணபதிப்பிள்ளை, க. 1962) இதனது வயதானது மனிதர்களுடைய சராசரி வயதிலும் பார்க்க அதிகமானதென்பது கவனிக்கத்தக்கது. பனை மரங்கள் குறிப்பிடத்தக்க வளைவுகள் எவையுமின்றி சுமார் 30 மீற்றர்கள் வரை வளருகின்ற இயல்பினை உடையதாகும். கிளைகள் இவற்றுக்குக் கிடையாது. உச்சிப் பகுதியில் ஏறத்தாழ 3 - 4 மீற்றர்கள் வரை விசிறி வடிவமான ஓலைகள் வட்ட வடிவத்தில் காணப்படுவது இதனது சிறப்பாகும்.

வடஇலங்கை மண் பெற்றுள்ள இயற்கைச் செல்வங்களுள் பனைச் செல்வமானது சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. அராபிய நாட்டவர்களுக்கு எப்படிப் பேரிச்சம்பழம் பயன் அளிக்கின்ற பயிராக இருக்கின்றதோ அவ்வாறே வடஇலங்கை மக்களுக்கும் பனையும் அதனோடு தொடர்புபட்ட பொருட்களும் பயனளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. பெண்ணை, தாலம், தாளி, தாளிப்புல், கற்பகதரு, ஏடகம், துருமேகம், நீலம், பாரி பத்திரம், காமபுரம், தரும விசாரன், கரும்புறம், போந்து, புல்லூதிபம், போந்தை, புற்பதி, போன்ற பல்வேறு பெயர்களினால் பனைமரம் அழைக்கப்படுகின்றது. பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற பழமொழியானது தமிழ் மக்களினால் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (குலரத்தினம், கா,சி.1977).

உணவுப் பொருட்களாகவும் சிறு கைத்தொழிற் பொருட்களாகவும் பயன் படுகின்ற அதேவேளை பனை மரத்தினது பாகங்கள் மருத்துவ குணங்கள் நிறைந்ததாகக் காணப்படுகின்றன. பனம் பழம், பனம் விதை என்பன இவற்றில் குறிப்பிடத்தக்கன. இயற்கை மருத்துவத்தில் வழங்கப்படுகின்ற மருந்து வகைகளைக் குறிப்பாக உள்ளெடுக்கின்ற மருந்துகளைப் பால், தேன், நீர், முலைப்பால், வெற்றிலைச்சாறு, பனையினது வெல்லம் போன்ற அனுமானப் பொருட்களுடன் சேர்த்து உள்ளெடுப்பது தற்காலம் வரை வடஇலங்கையில் இருந்து வருகின்றது (விசாக ரூபன், கி.2004) மேலும் சில இடங்களில் புற்றுநோய்க்கான மருந்துகளிலொன்றாகப் பனங்கற்கண்டானது ஏலக்காய், கரட் என்பவற்றினது சாற்றுடன் சேர்த்துப் பயன் படுத்தப்படுகின்றமையும் நோக்கத்தக்கது (Sankaralingam,L.1999). மேலும் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், உடல் சூட்டினைக் குறைத் தல், மலச்சிக்கலைத் தடுத்தல் போன்ற பல மருத்துவக் குணங்களும் இதற்கு உள்ளது.

இத்தகைய மகத்துவமான பனை மரத் தினது தோற்ற காலந் தொடர்பாக அறிஞர் களிடையிலே முரண்பட்ட கருத்துக் கள் காணப்படுகின்றன. இத்தகைய கருத்துக்கள் எவையும் அதனது தோற்ற காலத்தினையோ அல்லது அவை எங்கு முதலில் தோன் றின என்பது பற்றியோ உறுதியான கருத் துக்களாக அமையவில்லை. பனை மரத்தி னது வரலாற்றினை ஆராய்ந்த தாவர விய லாளர்களும் வரலாற்றாசிரியர்களும் இதனது தோற்ற காலத்தினைக் கணிப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு இம்மரத்தினை மிகவும் தொன்மையானதாக அவர்கள் கருதுகின்றனர். அவர்களில் சிலர் இம்மர மானது முதலில் ஆபிரிக்காவிலேதான் தோன்றியதாகவும் பின்னர்தான் ஆசிய நாடுகளுக்கும் பரவியதாகக் கூறுவர் (பாக்கிய நாதன், மு. 2003). ஆபிரிக்காவிலிருந்து இம்மரமானது இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டிருந்தாலும் பின்னர் அங்கிருந்துதான் இலங்கை உட்பட பிற ஆசிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம். காரணம் பண்பாட்டுப் பரவலென்பது இந்தியாவிலி ருந்துதான் இலங்கைக்கு பரவியதாக வர லாற்றில் சில கருத்துக்கள் உள்ளன. இதனை மறுப்பவர்கள் சிலரும் உளர். 1979 இல் லியூபெயிற் என்பவர் பனை யினை இந்தியாவிற்கே உரிய மூலமான தாவரமாக அடையாளங் காணுகின்றார். மகாராஸ்டிர மாநிலப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த அறிஞரான மகாபல் என்பவர் பனை மரத் தினது பாகங்களை உள்ளடக்கிய சுவடுகளை ஆய்வுசெய்து இது பல மில்லி யன் வருடங் களுக்கு முற்பட்டதாகக் குறிப்பிடுகின் றார் (சம்பந்தம்,கே., 1966).

பனை மரமானது வடஇலங்கையின் சுதேச வளங்களிலொன்றாகப் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்துடன்தான் முதன் முதலாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அக்காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாங்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களைச் சூளையிலிட்டு சுடுவதற்கு இம்மரத்தினது பாகங்களையே விறகாகப் பயன்படுத்தியதாக செ. கிருஸ்ணராசா கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்திய எரிந்த நிலையில் காணப்பட்ட அப்பாகத்தினது சுவட்டு எச்சத்தினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கிருஸ்ணராசா, செ.2004, ப.29) அதாவது கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சியின் விளைவாக பெருங்கற் காலத்திற்குரிய அடிமண்படை அடுக்கிலிருந்து புராதனை சூளை வைத்த மையம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காலத்திற்குரிய பண்பாட்டு மக்கள் சமகாலத்தில் ஆனைக் கோட்டையிலும், புத்தளம் போன்ற பகுதிகளிலும் வாழ்ந்திருப்பதனால் அப்பகுதிகளிலும் பனை மரத்ினது பயன்பாட்டினை நன்கு அறிந்திருந்தனர்எனக்கொள்ளலாம். தற்போதும் இப்பகுதி களில் பனை மரங்கள் செறிவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இம் மட்பாண்டச் சாதனங்கள் கிடைக்கின்ற நிலையம் கந்தரோடையில் புராதனை சூளை வைத்த மையம் என்பது மேலாய்வுகளின் மூலம் உறுதியாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. "இம் மட்பாண்டச் சூளைக்கு பிரதான எரிபொருளாக பனை மரமே அக் காலத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது என்பதனை அச் சூளையில் இருந்து மீட்டெடுக்கப்பட்ட கட்டியாகிப் போன பனஞ் சிராயின் சாம்பற் சுவடுகள் சான்றாதாரம் ஆகின்றது. பெருங்கற்கால யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் தமத பிரதான எரிபொருளாக பனை மரத்தினையே பயன்படுத்தி இருந்தனர் என்ற செய்தியை இந்த ஆய்வுக் கிடங்கு மூலம் கண்டறியப்பட்டது" (கிருஸ்ணராசா., 2004 : 29). இலங்கையில் இத்தகைய பெருங்கற்காலப் பண்பாடானது கி.மு. எட்டாம் நூற்றாண்டாகவும் தென்னிந்தியாவில் இக்காலமானது கி.மு. பத்தாம் நூற்றாண்டாகவும் அடையாளங் காணப்பட்டுள்ளது. இதனால் பனை மரத்தினது செல்வாக்கானது கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வடஇலங்கையில் இருந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம். அவ்வாறே பனை மரமானது தென்னிந்தியப் பண்பாட்டுப் பரவலுடன் கூடவே வட இலங்கைக்கு வந்திருக்கலாமென்ற கருத்தும் ஏற்கத்தக்கது.

இலங்கையின் வரலாற்றினை எடுத்துக் காட்டுகின்ற வரலாற்று நூல்களிலொன்றான மகாவம்சத்தில் பனை தொடர்பான குறிப்புக்கள் சில இடங்களில் காணப் படுகின்றன (மகாவம்சம், அத்.10,17, செய். 89,44). அப்படியாயின் மகாவம்சத்தினது தோற்ற காலத்திற்கு முன்னதாகவே (கி.பி. 06) பனையினைப் பற்றி ஈழத்தவர் அறிந்திருந்தமை இதிலிருந்து தெளிவாகின்றது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட குறிப்புக்கள் பனை ஓலையிலேதான் எழுதப்பட்டிருந்தன. வரலாற்று ஆராச்சி யாளர்கள் பலரும் ஓலைச்சுவடியினது பயன் பாடானது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டி லிருந்தே வழக்கிலிருந்ததாகக் கூறுவர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின்னராகக் குறிப்புக்களை எழுதுவதற்கு இந்தியாவிலிருந்து தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பனை மரத்தினை எடுத்துச் சென்றமைக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. வடஇலங்கைக்கு வெளியே சங்ககாலத் தேய தமிழ் இலக்கியங்களில் பனை தொடர்பான குறிப்புக்கள் பல இடங்களில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக புறநானூறு மற்றும் நெடுநல்வாடையினைக் குறிப்பிடலாம். இன்னும் தேவாரங்கள், சிற்றிலக்கியங்கள், காவியங்கள் என்பவற்றிலும்கூடப் பனை மரந்தொடர்பான குறிப்புக்களைக் காணலாம் (சிவலிங்கராஜா, எஸ். 2014). அவற்றின் பல இடங்களில் பாண்டிய நாடானது பனைக்குப் புகழ் பெற்றிருந்ததனை இனங்காண முடிகின்றது. மூவேந்தருள் சேர மன்னரும் வீரர்களில் பலராமரும் ஞானியருள் பீஷ்மரும் பனையினை மதித்து அற்றினை மாலையாகவும் கொடியாகவும் வைத்திருந்தமை பற்றி அக்கால இலக்கியங்கள் ஊடாக அறியலாம் (குலரத்தினம்,கா,சி. 1977). மேலும் மன்னர்களது தசாங்களில்கூட பனையானது சிறப்புடன் விளங்கியிருந்தமையினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். திருக்குறளிலும் பனை தொடர் பான குறிப்புக்கள் முப்பாலிலும் உள்ளன (குறள்கள்,104,433,1282).

பல்லவர் காலத்திலிருந்து (கி.பி. 6) பனை மரமானது தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக இருந்து வந்ததனை அவதானிக்க முடிகின்ற அதேநேரத்தில் இக்காலப்பகுதியிலிருந்துதான் மீளவும் வட இலங்கையிலும் இதனது முக்கியத்து வமானது அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பெண்கள் அணிகின்ற தோட்டினைக் காதோலை என்றழைக்கின்ற வழக்கமானது இரு தேசங்களிலும் இக் காலப் பகுதியிலிருந்துதான் புகழ்பெற ஆரம்பிக்கின்றது. பனம்பொருட்கள் இரு தேசங்களுக்கிடையிலும் பரிமாறப்பட்டி ருந்தன. தொடர்ந்துவந்த சோழருடைய காலத்திலிருந்து வடஇலங் கையிலிருந்து உற்பத்தி செய்யப் பட்டபனம் பொருட்களை தமிழகம் பெற்ற வரலாறு பற்றிய தகவலை தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட் டில் காணலாம் (நாகசாமி, இரா.ப.ஆ. 1969). சோழரது வணிககணங்கள் இவ்விடயமாக முக்கியத்துவம் பெற்றிருந்தன (Gunasinhe,P.A. 2007).

திருஞானசம்பந்தருடைய காலத்தில் பனந்தோப்புக்கள் தனித்தோட்டங்களாக மிளிர்ந்தன. திருமூலர் பத்தாம் திருமுறை யாகிய திருமந்திரத்தில் பனையின் சிறப்பி னைப் பாடியுள்ளார். பெரும்பாலான நாயன்மார்களது வாழ்வுக்காலமானது பல்லவர், சோழரது காலப்பகுதிகளுக்குள் உட்பட்டிருப் பதனாலும் அவர்களது பதிகங்களில் பனை பற்றிய குறிப்புக்கள் இருப்பதனாலும், இரு நாடுகளும் தொடர்புகள் நீண்டகாலமாக வைத்திருந்தமையின் பின்னணியிலும் இவர்களது காலங்களில் வடஇலங்கையில் பனை ஆதரிக்கப்பட்டு இவர்களால் அது போற்றப்பட்டிருக்கலாம். ஆனால் குறிப்புக்கள் இது பற்றியதாகக் கிடைக்கவில்லை. அது மட்டுமன்றிகி.பி. பன்னிரெண்டாம்நூற்றாண்ட ளவில் சோழர்களது செல்வாக்கானது தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட சமயத்தில் அங்கு பனை மரக்கலாசாரம் அவர்களினால்தான் பரப்பப்பட்டிருக்க வேண்டும். உணவுத் தேவைக்காகவும் சுவடி எழுதுவதற்காகவும் அங்கே இவை கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். விஜயநகரப் பேரரசு காலத்திலும் வடஇலங்கையிலிருந்து பனம் பொருட்கள் தென்னிந்தியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

ஆரியச்சக்கரவர்த்திகளது அரசு நிலவிய காலத்தில் உள்நாட்டவரது தேவைகளுக்கு மட்டுமன்றி நாட்டின் பிற பகுதிகளுக்கும் ஏன் தென்னிந்தியாவினுடைய தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற நோக்குடன் பனம் பண்டங்கள் வடஇலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டன. அக்காலப்பகுதியில் இவை மக்களது அன்றாட வாழ்வில் குறைந்தது ஒருநேர உணவுத் தேவையினையாவது பூர்த்தி செய்கின்ற வகையில் காணப்பட்டது. பனங்களியாகவும் பனாட்டு, பணியாரம் போன்ற உணவுப் பொருட்களாகவும் இவை மக்களது தேவையினை நிறைவு செய்தன. பனை மரமும் பனம் பொருட்களும் மக்களது வாழ்விற்கு ஆதாரமாக விளங்கியதன் பின்ன ணியில் வடஇலங்கையில் இது சார்ந்த பல கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. பனை மரத்தினது பாகங்களைப் பயன்படுத்திக் குடிசைக் கைத்தொழிலில் ஈடுபட்டுப் பலர் வருவாயினைப் பெற்றனர் (Arasaratnam, S. 1982). அத்துடன் அக்காலப்பகுதியில் பனை மரத்தினைத் துலாவாகப் பாவித்து விவசாயத்திற்குத் தேவையான நீரினை வடஇலங்கை மக்கள் பெற்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது (பத்மநாதன், சி.2011).

போர்த்துக்கேயரைப் பொறுத்தவரை அவர்கள் வடஇலங்கையில் தமது நிர்வாகத் தினை நேரடியாக ஏறத்தாழ அரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டு காலமே ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் டச்சுக்காரரது செல்வாக்கானது வட இலங்கையில் ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டுகாலம் நீடித்திருந்தது (Silva, K.M.De. 1981). ஆங்கிலேயர் அதற்கு அப்பால் சென்று நாடு முழுவதனையும் சொந்தமாக்கிச் சென்றனர். இவர்கள் மூவரதும் முக்கியமான நோக்கமானது நாட்டினது பொருளாதாரத்தினைச் சுரண்டுவதே. இவர்களில் முன்னிருவரும் பின்வந்தவரைவிட இவ்விடயமாக வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் பல பகுதிகளிலும் மக்கள் மீது மோசமான நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். போர்த்துக்கேயரைப் பொறுத்தவரைஅவர்கள் தமது காலத்தின் பெரும் பகுதியினைப் போர்களிலே செலவழிப்பவர்களாவே காணப்பட்டனர். குறிப்பாகக் கண்டியைக் கைப்பற்றுவதற்கான போர்களில் தமது காலத்தினை வீணடித்து வந்தனர். இதனால் அவர்களால் வடஇலங்கை உள்ளிட்ட இலங்கையின் கரையோரங்களில் திட்டவட்டமான பொருளாதாரக் கொள்கையொன்றினைப் பின்பற்ற முடியவில்லை. அவர்கள் கிடைத்ததனைச் சுருட்டிக் கொண்டனர். டச்சுக்காரரைப் பொறுத்தவரை அவர்கள் போரினைக் குறைத்துச் சமாதானத்தினை ஏற்படுத்துவதன் மூலமாகவே பொருளாதார பலத்தினைப் பெருக்கலாமென்ற சிந்தனையினைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

போர்த்துக்கேயரது காலத்தில் வட இலங்கையில் ஏற்கனவே நடைமுறையிலிருந்துவந்த பொருளாதாரக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க அளவில் அவர்கள் மாற்றங்கள் எவற்றினையும் ஏற்படுத்தவில்லை. அவர்களது செல்வாக்கு இப்பகுதிகளில் குறைந்தளவு காலமே காணப்பட்டதன் பின்னணியில் அப்பகுதிகளில் மாற்றங்கள் எவற்றினையும் துணிந்து மேற்கொள்ளவில்லை. இதனால் பனம் பொருட்களின் உற்பத்தியும் அவற்றினது பாவனையும் வர்த்தகமும் சுதேச மக்களது கைகளிலேதான் காணப்பட்டன. பிற விடயங்களில் குறிப்பாக முத்து வர்த்தகம் , யானை வர்த்தகம் போன்றவற்றில் தலையிட்ட இவர்கள் பனம் பொருட்களது அருமையினை உணராதவர்களாகவே காணப்பட்டனர். (சிவசாமி,வி. 2014) அதனால் அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய வருவாயினையும் பெருமளவிற்கு கவனிக்கவில்லையென்றே கூறவேண்டும். இருப்பினும் இவர்கள் தமது ஆட்சிக்காலத்தின் இறுதியில் இவற்றின் மூலமாகக்கிடைக்கக்கூடியவருவாயினைஉணரத் தவறவில்லையென்பதும் கவனிக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக அம்புறோசியோ டீ பிறிடேய்ஸ் டீ காமரா தனது காலத்தில் தமிழ் பிரதேசங்களில் கிடைக்கின்ற வருமானத்தினை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் புதிய வரிகளை அறவிடுவதற்கான முயற்சிகளில் இறங்கினார். இப்பின்னணியில் தோம்புவின் மூலமாக வடஇலங்கையிலுள்ள பனைகளது எண்ணிக்கையினைத் தெரிந்ததுடன் அவற்றுக்குப் புதிய வரிகளை விதித்ததன் ஊடாக அரசினது வருமானத்தினையும் அதிகரித்திருந்தார் (ANTT, Liv. 26.f.291/ Gunasingam,M. 2008).

**வடஇலங்கையில் டச்சுக்காரர்**

ஸ்பெயினிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்ற டச்சுக்காரர் காலப்போக்கில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறைகளில் முன்னேற்றங்கண்டனர். தொடர்ந்து பட்டேவியாவினைத் தங்களது கீழைத்தேய நாடுகளது தலைமையகமாக மாற்றிக்கொண்ட இவர்கள் நமது நாட்டில் காணப்பட்ட கறுவாவினால் கவரப்பட்டவர்களாக இலங்கை வந்தனர். தென்னிந்தியத் துறைமுகங் களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்ப தன் மூலமாகத் தங்களது ஆதிக்கச் செயற்பாடுகளை விஸ்திரிக்கலாமென்ற எண்ணமும் அவர்களிடமிருந்தது. அதுவும்கூட இலங்கையின் மீது இவர்கள் கவனத்தினைச் செலுத்துவதற்கான காரணங்களிலொன் றாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது (Pieries, P.E. 1941). அவ்வகையில் 1602 இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திய இவர்களுக்கு இரண்டாம் இராஜசிங்கனது அனுசரணை இருந்தது. தொடர்ந்து படிப்படியாக இலங்கையின் அரசியலில் தலையிட ஆரம்பித்த இவர்கள் அச்சமயத்தில் இலங்கையின் கரையோரங்களில் செல்வாக்கினைச் செலுத்திவந்த போர்த்துக் கேயரைத் தோற்கடித்துவிட்டு 1658 இல் இலங்கையின் கரையோரங்கள் முழுவதனையும் கைப்பற்றினர். இப்பின்னணியில்தான் வடஇலங்கையும் டச்சு நிர்வாகத்திடம் சென்ற தெனலாம்.

தென்னிலங்கையினைப் போன்று கறுவா போன்ற வாசனைப் பொருட்களது செல் வாக்கு வடஇலங்கையில் காணப்படாது விட்டாலும்கூட வடஇலங்கையினையும் அவர்கள் முக்கியமானதொரு பிராந்தியமாகவே கருதினர்.

"யாழ்ப்பாணமானது மிகமுக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடமாகும். கம்பனியினது நலத்திற் காக அதனைப் பாதுகாக்க வேண்டும். பிற இடங்களைப் போலன்றி இங்கு கம்பனியினது இறையுரிமையென்பது திட்டவட்டமாக ஆட்சேபத்திற்கிடமின்றி ஏற்பட்டுள்ளது."

என்பதாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடஇலங்கை முழுவதும் டச்சுக்காரரது நிலைப் பாடு காணப்பட்டது (சிவசாமி, வி.2014).

**டச்சுக்காரரது பொருளாதார நடவடிக்கைகள்**

போர்த்துக்கேயராயினும் சரி அல்லது போர்த்துக்கேயரைத் தொடர்ந்து வட இலங்கையில் செல்வாக்கினைச் செலுத்திய டச்சுக்காரர் ஆயினும் சரி இறுதியாக வந்த ஆங்கிலேயரானாலும் அவர்கள் அனை வருமே பனை மரத்தினை "சீனி மரம்" என்றே அழைத்தனர் (பாக்கியநாதன், மு. 2003). அவ்வகையில் இவர்கள் சீனியினை அடிப்படையாகக்கொண்டே பனையினைப் பற்றி அறிந்தவர்களாகக் காணப்பட்டனர். இன்றும் கம்போடிய நாட்டில் இது "சீனிபாம்" என்றே அழைக்கப்படுகின்றது. அவ்வகையில் தென்கிழக்காசியா நோக்கி நகர்ந்த வர்த்தக, அரசியல், மத நோக்கங்களைக் கொண்டவர்கள் தென்னிந்தியக் கலாசாரத்தினைப் "பனை மரக் கலாசாரம்" என்றே அழைத்தமை குறிப்பிடத் தக்கது (Lubeigt, G., 1977). வடஇலங்கையில் டச்சுக்காரரது பொருளாதார நிலைப்பாடு தொடர்பாகப் பல்வேறு வகையான தகவல் கள் கிடைக்கப்பட்டு வந்தாலும்கூட அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு அக்காலப் பகுதியில் இப்பகுதிகளில் நடைபெற்றுவந்த பனைஉற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பற்றி வரலாற்று அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட விரிவான ஆய்வாக அவை அமையவில்லையென்பதே உண்மை.

பொதுவாகவே இலங்கை முழுவதிலும் டச்சு ஆட்சியாளர்கள் தமது நிர்வாகத்தில் சிக்கனத்தினைக் கடைப்பிடித்தனர். இதற்கு வடஇலங்கையும் விதிவிலக்காக அமைய வில்லை. போர்த்துக்கேயரைப் போலவே சுயநலம்மிக்கதாக அவர்களது பொருளாதார நடவடிக்கைகள் அமைந்திருந் தன. அதே நேரத்தில் போர்த்துக்கேயரைப் போலன்றி இவர்கள் நாடு பூராகவும் திட்டவட்ட மான தொரு பொருளாதாரக் கொள்கையினைப் பின்பற்றினரென்பது குறிப்பிடத்தக்கது. அவற்றிலொன்றுதான் உள்நாட்டு மூ லவளங்களைப் பயன்படுத்தலென்பது. அவ்வ கையில் வடஇலங்கையில் அவசியமான தேவைகளாகக் கருதப்பட்ட உணவு மற்றும் ஆடை வகைகளைப் பெறுவதன் பொருட்டு உள்நாட்டில் நெல் உற்பத்தி, புகையிலை உற்பத்தி, பருத்தி உற்பத்தி, சாயவேர் உற்பத்தி, மல்பரிச்செடி, பனம் பொருட்களது உற்பத்தி ஆகியவற்றினை ஊக்குவித்தனர் (அருந்தவராஜா, க. 2014). முத்து வர்த்தகம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைவர்த்தகம், குதிரைவியாபாரம்என்பவற்றுடன் பல்வேறு வரிகளையும் இவர்கள் அறவிட்டனர்.

வருமானத்தினைத் தரக்கூடிய சில கைத்தொழில்களையும் ஆரம்பித்தனர். உள்நாட்டிலும் தேசத்திற்கு வெளியிலும் உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலும் இறங்கினர். அவர்கள் நினைத்தது போலவே வருமானமும் இவற்றின் மூலமாகக் கிடைத்தது. (அருந்தவராஜா.க. 2014) வருமானத்தின் சில பகுதிகளைத் தங்களது நலன்களைக் கருத்தில் கொண்டு தெருக்களாக மாற்றினர். இவர்கள் பெயரினை ஞாபகப்படுத்துகின்ற வகையில் டச்சு றோட்டுக்கள் என்ற பெயருடன் பல தெருக்கள் வட இலங்கையின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. இத்தகைய தெருக்களும்கூட வட இலங்கையில் அவர்களது பொருளாதார நடவடிக்கைக்குப் பக்கபலமாக இருந்தன. பொதுவாக இவர்கள் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக வட இலங்கையில் வாழ்ந்துவந்த மக்களுக்குப் பல துன்பங்கள் ஏற்பட்டாலும்கூடப் பொருளாதார பின்புலத்தில் டச்சுக்காரரி னால் ஏற்படுத்தப்பட்ட சில ஆக்கபூர்வ மான நடவடிக்கைகளை நாம் மறக்கமுடியாதென்பதும் உண்மையே.

**பனை உற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள்**

வட இலங்கையில் டச்சுக்காரர் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளில் பனைஉற்பத்தி மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் என்பன சிறப்பாகப் பேசப்படுகின்றன. பனை மரத்திற்கு அந்தளவிற்கு இவர்கள் ஏனைய ஐரோப்பியர்கள் அளிக்காத முக்கியத்துவத்தினை அளித்திருந்தனர். எடுத்துக் காட்டாக அவர்கள் வட இலங்கையினை நிர்வாகம் செய்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்குரிய சின்னமாகப் பனை மரத்தினையே அடையாளப்படுத்தியிருந்தனர். அதுமட்டுமன்றி அவர்களால் உத்தியோகபூர்வமாகப் பயன்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்திற்கான கொடியிலும்கூடப் பனை மரத்தினையே குறித்திருந்தனரெனலாம் (பாக்கியநாதன், மு. 2003). வடஇலங்கையில் உள்நாட்டு நிர்வாகத்தினை இவர்கள் திசாவைகள், முதலியார்கள், உடையார்கள், விதானைகள் என்பவர்கள் மூலமாகவே மேற்கொண்டனர். இவர்களது கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட பகுதிகளிலும்கூட இத்தகைய அதிகாரிகளது உதவியுடன் பனை மரத்தினது உற்பத்தியினைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

வடஇலங்கையில் பனை மரப் பொருட்களிலிருந்து டச்சுக்காரர் பெற்ற வருவாயானது நாட்டினது பிற பகுதிகளிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காரணம் ஏற்கனவே ஒரு இடத்தில் நாம் குறிப்பிட்டதனைப் போன்று நாட்டின் ஏனைய பகுதிகளில் இம்மரங்கள் பெருமளவில் உற்பத்தியாக்கப்படுவதில்லையென்பதே இதற்கான காரணங்களிலொன்றாகும். டச்சுக்காரரது காலத்தில் அரிசிச் சோற்றுக்குப் பதிலாக வறுமைப்பட்ட மக்களும், வசதியான சிலர் உணவுத் தட்டுப்பாடான நேரங்களிலும் பனம் பழத்தினைப் பயன்படுத்தினர். அவர்களுக்கு ஒருவேளை ஆகாரமாக இது பயன்பட்டது. இத்தகையதொரு பின்னணியிலேதான் பொருளாதாரத்தில் சிக்கனத்தினைக் கடைப்பிடித்த டச்சுக்காரரும் இதனை ஆதரித்தனர். அதுமட்டுமன்றி அவர்களது நோக்கங்களிலொன்றாக உள்நாட்டில் கிடைக்கின்ற மூல வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறுவதென்பதும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவற்றினால் அக்காலப்பகுதியில் வடஇலங்கையில் ஏற்பட்ட அரிசித்தட்டுப்பாட்டினைக் குறைக்கலாமென்பதும் அவர்களது மற்றொரு நோக்கமாக இருந்தது (Arasaratnam,S., 1964).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனம் பழத்தினை மட்டுமன்றிப் பனையிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற பல்வேறு பொருட்களையும் டச்சுக்காரர்கள் ஆதரித்தனர். பனையானது வேரிலிருந்து அதனது உச்சி வரை மனிதனுக்குப் பயன்படுகின்ற வகை சார்ந்ததாகும். அவ்வகையில் பனை மரத்தினை அழிக்காமல் பயன் பெறுவதே எமது சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகும் என்ற சிந்தனையினை அவர்கள் கொண்டிருந்தனர். கிழங்கு, ஒடியல், பணியாரம், பானம், ஊமல், கட்டடப்பொருட்கள், ஓலை, பதநீர், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, விலங்கு உணவு, பனாட்டு, வெல்லம், இனிப்பு வகை, புழுக்கொடியல், ஒடியல், மா, கள்ளு, சாராயம், ஈர்க்கு, தும்பு, நார் முடிகள், கலைப்பொருட்களின் உற்பத்தி, வெல்லம், தூரிகை, கூடைகள், கயிறு, கால் துடைப்பம், பொதி செய்யும் பெட்டிகள், பாய்கள், கடகம், பட்டை, தளர்நார், கூடைகள், இடியப்பத்தட்டு, நீத்துப்பெட்டி, விசிறிகள், விறகு, நொங்கு, கூழ் என்பனவற்றினது உற்பத்தியினையும் டச்சுக்காரர் ஊக்குவித்தனர் (Arasaratnam,S., 1964). இவற்றில் சிலவற்றினைத் தாமே பணங்கொடுத்து உள்ளூர்வாசிகளிடமிருந்து பெற்ற டச்சு அரசாங்கம் அவற்றினைத் தமது தாய் நாட்டுக்கு அனுப்பிவைத்தது. இவற்றில் உணவுப் பண்டங்களும் சிறு கைத்தொழிற் பொருட்களும் உள்ளடங்கியிருந்தன. தனிப்பட்டது டச்சு உத்தியோகஸ்தர்களும் தனிப்பட்ட ரீதியில் இவற்றினைப் பெற்றுத் தமது உறவினர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

பனை மரத்திலிருந்து பெறப்படுகின்ற பண்டங்கள் விசேட வைபவங்கள் தமிழரது இல்லங்களில் நடைபெறுகின்ற தருணங்களில் பரிமாறப்படுகின்ற பலகாரங்களில் பிரதான இடத்தினை ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்தே பெற்றிருந்தன. அதுமட்டுமன்றி மணவறையில் ஆலாத்துகின்ற தட்டுகளில்கூட இவை சில கிராமங்களில் தற்போதும் வைத்து ஆலாத்தப்படுவது வழமையாக உள்ளது. உறவினர்கள், நண்பர்களது வீடுகளுக்குச் செல்லுகின்ற போதும் இவற்றிலிருந்து பெறப்பட்ட ஒரு உணவுப் பொருட்களைக் கொண்டு செல்வது வழக்கமான செயலாகக் காணப்பட்டது. இத்தகைய வழமையானது போர்த்துக்கேயரது காலத்திலும் தொடர்ந்துவந்த டச்சுக்காரரது காலத்திலும் காணப்பட்டது (அருந்தவராஜா,க. 2016). இத்தகைய பொருட்களில் பனாட்டு, ஒடியல், ஒடியல் மா, கிழங்கு, கைப்பணிப் பொருட்கள் போன்றன பிரதான இடத்தினைப் பெற்றன.

மருத்துவ குணங்கள் ஏராளமாகப் பனம் பொருட்களில் இருப்பதன் காரணமாவும் கூட டச்சுக்காரர் இதனை ஆதரித்திருக்க வேண்டும். காரணம் இரத்த அழுத்தம், நீரிழிவு, மலச்சிக்கலைத் தவிர்த்தல், சூட்டினைத் தணித்தல் என்பவற்றுக் கெல்லாம் இது ஆதாரமாக இருப்பதனைத் தற்போதும் அறியலாம். அவ்வகையில் அக்கால மக்களின் உணவுப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்கு இப்பொருட்களைப் பயன்படுத்துமாறு டச்சுக்காரரினால் வடஇலங்கையருக்கு கோரிக்கை விடப்பட்டதுடன் அதே நேரத்தில் இவ்விடயமாக அக்கால மக்கள் சோம்பேறிகளாக இருப்பது பற்றியும் டச்சுக்காரர் எடுத்துக்காட்டத் தவறவில்லை (Memoir of Hendrich Zwaadecroon). மேலும் அக்காலத்தில் காணப்பட்ட உணவுப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்கின்ற நோக்குடன் நிலங்களை அளவிட்டு மக்களைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுமாறு தூண்டினர். பயிர் செய்யப்படாவிட்டாலும்கூட நிலங்கள் அனைத்தும் மேற்பார்வை செய்யப்பட வேண்டுமென்ற சட்டம் காணப்பட்டது. இத்தகைய சட்டத்தின் ஓர் அம்சமாக அப்பகுதிகளில் உள்ளடங்கிய பனைகள் காக்கப்பட வேண்டுமென்ற நியதியும்கூட நிலவியது.

பனை மரத்திலிருந்து உணவுப் பண்டங்களைப் பெற்றது மட்டுமன்றிக் கட்டடங்கள் கட்டுவதற்கான வளை, கப்பு, கைமரம் போன்றவையும் டச்சுக்காரர் காலத்தில் செய்யப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கணபதிப் பிள்ளை, க. 2006). மேலும் இவர்களது காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர் பல்வேறு தேவைகளின் நிமித்தமாகக்கொண்டு வரப்பட்டிருந்தனர். குறிப்பாகச் சோழமண்டலக் கரையிலிருந்து வந்தவர்கள் வட இலங்கையில் ஆடை நெய்தல், சாயம் போடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர். இவர்களது வருகையினால் வட இலங்கையில் ஆடை உற்பத்தி அதிகரித்ததாகத் தகவல்கள் உள்ளன. இவ்வாறு வந்த தொழிலாளர்களில் பலர் பனம் பொருட்களின் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் ஈடுபட்டமைக்கான குறிப்புக்கள் உள்ளன. இதனூடாகத் தமது உணவுத் தேவையினை அவர்கள் பூர்த்தி செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

வட இலங்கையில் பனை மரங்கள் அடர்த்தியாக உள்ள பகுதிகளில் பதநீர் எடுக்கின்ற பழக்கம் டச்சுக்காரரது காலத்தில் அதிகரித்துக் காணப்பட்டது. இத்தகைய பதநீர் பற்றி சங்ககால இலக்கியங்களில் குறிப்புக்கள் இருப்பதனைப் பற்றி ஏற்கனவே ஒரு இடத்தில் பார்த்துள்ளோம். இருப்பினும் இக்கைத்தொழிலானது வட இலங்கையில் ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்தின் பின்னராக டச்சுக்காரரது காலத்திலேதான் சிறப்பாக ஆதரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாக உள்ளது (பாக்கியநாதன்,மு. 2003).

டச்சு நிர்வாகத்தில் பதநீரிலிருந்து பனை வெல்லம்தயாரிக்கப்பட்டது. இதன்பொருட்டு வடமராட்சியில் டச்சுக்காரர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனை வெல்லக்கட்டித் தொழிற்சாலை ஆங்கிலேயராட்சிக்காலம்வரை தொடர்ந்து இயங்கியது. கேரளாவிலிருந்து கொண்டுவரப்பட்ட ஈழவர்கள் மூலமாகவே பனையிலிருந்து பதநீர் சேகரிக்கப்பட்டது. அப்பகுதியில் இருந்த சிலரும் இதன் மூலமாகத் தொழில் வாய்ப்பினைப் பெற்றனர். இதனால் இவர்களது காலத்தில் பனங்கள்ளினது விலையும் அதிகரித்ததெனலாம். தற்போது வரை இத்தொழிற்சாலையின் எச்சங்கள் அப்பகுதிகளில் காணப்படுகின்றன. முறைக் கருப்பநீர் என்ற சொற் பிரயோகமானது இற்றைவரைக்கும் வடமராட்சிப் பிரதேசத்தில் வழக்கிலிருந்து வருவதாக செ. கிருஸ்ணராசா குறிப்பிடுகின்றார் (கிருஸ்ணராசா, செ. 2000). இதனது கருத்து யாதெனில் பனங் காணியினுடைய சொந்தக்காரனும், பதநீர் வடிக்கின்ற தொழிற்சாலையினை வைத்திருப்பவனும் பெற்றுக்கொள்ளுகின்ற பதநீரினை ஒன்றுவிட்ட நாட்களில் பெற்றுக் கொள்வதனை குறிப்பதாக அமைகின்றது. இதன்பொருட்டுக்கடற்கரையில்சுண்ணாம்புச் சூழையினை வைத்து சுண்ணாம்புப் பொடி தயாரிக்கும் தொழிற்திறனைக்கூட டச்சுக்காரர் வட இலங்கை மக்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

டச்சுக்காரர்கள் பனையினது தண்டிலிருந்து புதிய உற்பத்திகளைஉருவாக்குகின்றமுயற்சியில் ஈடுபட்டனர். அதனது வெளிப்பாகமானது நீண்டகாலமாகவே இவர்களால் உலர வைக்கப்பட்டு எரிபொருட்களாக மாற்றப் பட்டன. அதுமட்டுமன்றி அதற்குப் புதிய பண்பாட்டினையும் இவர்கள் கொடுக்க விரும்பினர். இவர்கள்பனைமரப்பொருட்களில் அக்கறை கொண்டவர்களுக்கு பனை மரத்தினது தண்டானது நார்களைப் பிரித்தெடுப்பதற்கு எவ்வாறு அவை அடிக்கப்பட வேண்டுமென்பதனையும், பிரித்தெடுக்கப்படுகின்ற கறுப்பு வெள்ளை நார்களையும் அவற்றினது பெறுமதியினையும் புரிய வைத்தனர். இது இலகுவானதொரு முறையாக இருந்ததுடன் தென்னை மரத்திலிருந்து நாரினைப் பிரித்தெடுப்பது போன்று இது கடினமாக இருக்கவில்லை எனவும் விளங்கப்படுத்தினர் (Martyn,H., 1923).

இவர்களது காலத்தில் வடஇலங்கையின் பிரசித்திபெற்ற தீவுகளிலொன்றாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்ட நெடுந்தீவானது டெல்வ்ற் என அழைக்கப்பட்டது. பொதுவாக தீவுப்பகுதிகளில் உள்ள தீவுகளுக்குத் தாம் நினைத்த பெயரினையே சூட்டி அவற்றினை அழைத்தமை அவர்களது பொதுவான பண்பாகக்காணப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. தற்போதும் நெடுந்தீவிற்கு இப்பெயரே பாவனையில் இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு டச்சுக்காரரது காலத்திலும் பின்வந்த ஆங்கிலேயரது காலத்திலும் பனை மர உற்பத்தியானது திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக இதனது பரப்பளவாகக்காணப்பட்ட **11500** ஏக்கர் நிலப்பகுதியில் **1100** ஏக்கர்கள் பனை மர வளர்ப்பின் பொருட்டுப் பயன்படுத் தப்பட்டது. இங்கிருந்து டச்சுக்காரரது காலத்தில் பெருமளவிலான பனம் பொருட்கள் பெறப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாய்கள், பனாட்டு, கிழங்கு, ஒடியல், பனங்கொட்டைகள் போன்றன இவற்றில் குறிப்பிடத்தக்கன (Martyn,H., 1923). புவியியல் அடிப்படையில் தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் இப்பகுதி அமைந்திருந்தமையின் காரணமாக ஏராளமான பனம் பொருட்கள் காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவிற்கு அனுப்பப்பட்டன.

டச்சுக்காரரது காலத்தில் இலங்கை மக்களது மரபுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக்கொண்டு தேசவழமை உருவாக்கப்பட்டது. இது **1707** இல் அரசாங்கத்தினால் சட்ட மாகப் பிரகடனப்படுத்தப்பட்டு வெளியிடப்பட் டமையும் குறிப்பிடத்தக்கது. அதில் ஒரு இடத்தில் வடஇலங்கைப் பனை மரங்கள் தொடர்பான ஆட்சி பற்றி விபரிக்கப் பட்டுள்ளது. அது வருமாறு,

"காணி ஒருவனுடையதாக இருக்க அதில் நிற் கின்ற முதுபனைகள் வேறொருவனுக்கு உடையதுகளாயிருந் தாலும் கீழ்ப்பட்ட வடலிகள் நிலக் காரனுக்கேயன்றி அம் முதுபனைக்காரனுக்காக மாட்டாது. இது காரியத்துக்கு அராலியென்கிற குறிச்சி மாத்திரம் புறநீங்கல். அவ் விடத்திலே ஒரு பழைய வழமை நடந்துவருகிறது. அதென்னவென்றால் அந்த முதுபனைக்குடையவர்களாய் இருக்கிறவர்கள் அவைகளின் கீழ்ப்பட்ட வடலிகளையும் பிடித்து ஆண்டு வருவார்கள். அந்த ஊரிலே வடலி வெகுத்த மில்லாததற்கு நியாயமிதுவே. ஏனென்றால் விழுபனங்காய் எடாமல் விட்டிருந்த இடங்களிலே முளைத்த வடலியுண்டான காலத்திலும் அந்தக் காணிக்குடையவன் காணி செய்கிற போகத்திற்கு வந்து நிலத்தை உழுது புரட்டி அந்த முளைகளைப் பாழாக்கி விடுவான். அதென்னவென்றால் தன்னுடைய நிலத்திலே மறுபேருடைய பனை உண்டாகாத படியால்த்தான். தென்மராட்சிப் பகுதியிலும் பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும் நடந்துவருகின்ற வழமையாவது நிலம் நீங்கலாகப் பனைமரங்கள் மாத்திரம் கொம்பனி யாரின் தோம்பிலே எழுதப்பட்டிருந் தமையினால் அந்த முதுபனை மரக்காரனுக்கேகீழ்வடலிகளும் உடையவைகளாம். ஆனால் நிலமும் முதுபனைகளும் தோம்பிலே எழுதப்பட்டு அவைகளுக்காகக் கடமை இறுத்தவந்தால் அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் வடலிகள் நிலக்காரனுக்கு உடையவைகள்" (பத்மநாதன். சி, 2002).

வட இலங்கைத் தமிழ் மக்களது வாழ்வியலில் பனை மரமும் அது சார்ந்த உற்பத்திப் பொருட்களும் மங்கலப் பொருட்களாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அமங்கல நிகழ்வுகளுக்கு இவை பயன்படுத் தப்படுவதில்லை. சங்ககால இலக்கியங்களிலொன்றான புறநானூற்றில் இவை பற்றிய குறிப்புக்கள் உள்ளன. படை வீரர்கள் போருக்குச் செல்லுகின்ற சமயங்களில் இதனது பழங்களையும் கிழங்கினையும் சுவைத்துச் சென்றதாகக் குறிப்புக்கள் உள்ளன. வட இலங்கையில் டச்சுக்காரர் காலத்தில் மட்டுமன்றித்தற்காலங்களிலும் இவை மங்கலப் பொருட்களாகவே பயன்படுத்தப்படுகின்றன. பனை மரத்தினை எல்லையாகக் குறிப்பிட்டுச் சொல்லுகின்ற வழக்கமானது பண்டு தொட்டு வடஇலங்கையரிடம் இருந்து வந்தாலும் கூட டச்சுக்காரரது காலத்திலேதான் இப்பழக்கமானது முக்கியத்துவப்படுத்தப்பட் டதனை அவதானிக்க முடிகின்றது. அரசு நிலங்களைப் பயிர்ச்செய்கையின் பொருட்டு அளவிடுகின்ற சந்தர்ப்பங்களில் பனை மரங்கள் அதனது எல்லைகளாக பயன்படுத்தப்பட்டன. எச். மாட்டின் என்பவர் டச்சுக்காரர் காலத்து நெடுந்தீவினது எல்லையினைப் பற்றி விபரிக்கின்றபோது பின்வருமாறு விவரிப்பதனை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

"இது சரி தட்டையான பவளத் தீவாகும். இதனது வடபாகம் பனைகளையும் தென்பாகமானது கற்பாறைகளையும் கொண்டதாகவும் புற்களாலும் சூழப்பட்ட சூரிய மரங்களையும் கொண்டுள்ளது" (Martyn,H., 1923).

ஆரியச்சக்கரவர்த்திகளது காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டுவந்த சில ஊர்களது பெயர்களை டச்சுப் பெயர்களாக மாற்றிய இவர்கள் பனை மரத்துடன் தொடர்பான ஊர்களது பெயர்களை மாற்றாமல் அப்படியே பயன்படுத்தி வந்தமையானது சிலவேளைகளில் அவர்கள் பனை மரத்தினது முக்கியத்துவத்தினை உணர்ந்தமையின் பின்னணியில்கூட இருக்கலாம். உதாரணமாக பனங்காமம், வடலியடைப்பு, பனை மரவடி, வடலியடி, கருகம்பனை, பன்னாலை, பனங்கொட்டில் போன்ற இடங்களது பெயர்களைக் குறிப்பிடலாம். வட இலங்கை மக்கள் பனையிலிருந்து ஊமல், கரி போன்றனவற்றினையும் பெற்றனர். இவர்கள் டச்சுக்கிழக்கிந்தியக் கம்பனியின் பணியாளர்களுக்குக் கோழி, செம்மறியாடு, பால், தயிர், வாழைப்பழம், வெற்றிலை போன்றவற்றினையும் விற்பனை செய்து இலாபம் பெற்றனர். இதனால் டச்சுக்காரர்களது காலத்தில் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவாய் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் வடஇலங்கை மக்களுக்குக் கிட்டியதெனலாம்.

வடஇலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பனைசார் உற்பத்திகளுக்கு உள்நாட்டில் தென்னிலங்கை, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் பெரும் கிராக்கியிருந்தது. உள்நாட்டுப் போக்குவரத்திற்கு ஏற்ற துறைமுகமாக கொழும்புத்துறை, கச்சாய் போன்ற துறைமுகங்கள்காணப்பட்டன. இத்துறைமுகங்களின் ஊடாக டச்சு நிர்வாகத்தில் பனம் பொருட்கள் மேற்கூறப்பட்ட பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன. குறிப்பாகத் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் இவற்றினை விற்பனை செய்வதன் மூலமாக வடஇலங்கையருக்கு அதிகளவான வருவாய் கிடைத்தது. இப்பகுதிகளில் வட இலங்கையிலிருந்து கொண்டுவரப் படுகின்ற பனம் பொருட்களை விற்பனை செய்வதன் பொருட்டு அங்காடிகள் சில இருந்துள்ளன. அதுமட்டுமன்றி இத்தகைய பொருட்களைப் படகுகளிலிருந்து இறக்கி அவற்றினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுக்குள் நடைபயணமாகச் சென்று வடஇலங்கையர்கள் விற்பனை செய்தமை தொடர்பான குறிப்புக்களும் உள்ளன. இவ்வாறே கொழும்பிலும், காலியிலும் இத்தகைய பனம் பண்டங்கள் விரும்பி நுகரப்பட்டன (Arasaratnam,S. 1958). பின்னர் அங்கிருந்து அரிசி போன்ற உணவுப் பொருட்களை தாம் கொண்டு சென்ற படகுகளில் மீளவும் ஏற்றிவந்தனர் (சிவசாமி,வி. 2014).

உற்பத்தி செய்யப்படுகின்ற பனை மரங்களில் ஒரு பகுதியினை அப்படியே மரமாகவே இவர்கள் பெற்று அவற்றினைப் பல்வேறு தேவைகளின் நிமித்தமாகக் கொழும்பிற்கு அனுப்பினர். அதாவது தென்னிந்தியாவில் நாகப்பட்டினத்திலும் கொழும்பிலும் அரசாங்கத்திற்குத் தேவைப் பட்ட பனை மரங்கள் குறிக்கப்பட்ட பணத்தினைச் செலுத்துவதன் மூலமாக வடஇலங்கையிலேயே பெறப்பட்டன. அரசாங்கத்திற்கு எப்போதெல்லாம் பனை மரங்கள் தேவைப்படுகின்றனவோ அப்போதெல்லாம் அரசாங்கத்திற்கு இப்பகுதி மக்கள் பனை மரங்களை ஒப்படைத்தல் அவசியமாக இருந்தது. இதனைவிட டச்சு உத்தியோகஸ்தர்கள் சிலரும்கூட அரசாங்கத்தின் பெயரினைச் சொல்லித் தமது சொந்தத் தேவையின் பொருட்டுப் பனைகளைக் கொள்வனவு செய்த சம்பவங்களும் உண்டு. அதுமட்டுமல்ல தறித்த பனைகளைத் தமது செலவிலேயே பனை மரங்களின் உடமையாளர்கள் துறைமுகங்கள்வரை கொண்டு சென்று ஒப்படைக்க வேண்டியுமிருந்தது. இத்தகைய பனை மரங்கள் வைரமானவைகளாகக் காணப் பட்டதனால் பாதுகாப்பின் பொருட் டுத் தென்னிலங்கையில் பாதுகாப்பு அரண்களுக் காக உபயோகப்படுத்தப்பட்டன. டச்சுக்காரர் இல்லங்கள் அமைக்கவும் படகுகளைக் கட்டுவதற்கும் இவற்றினை வடஇலங்கையில் அமைந்துள்ள துறைமுகங்களின் ஊடாகத் தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கும் எடுத்துச்சென்றனர்.

டச்சுக்காரரது காலத்தில் அவர்களும் போர்த்துக்கேயரைப் போன்றே துறைமுகங்கள் ஒவ்வொன்றிற்கும் அண்மையில் கோட்டை களை அமைத்திருந்தனர். இவை போர்த் துக் கேயரிடமிருந்து கைப்பற்றப்பட் டவைகளாகவே அதிகளவில் இருந்தன. இவற்றில் சிலவற்றினை டச்சுக்காரர் தமது நடவடிக்கைகளுக்கும் அடையாளத்திற்கும் ஏற்றவகையில் மாற்றியிருந்தனர். அவற் றில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, கொழும்புத்துறை, கச்சாய், பூநகரி, அரிப்பு, யாழ்ப்பாணம், இலுப்பைக்கடவை என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் ஊர்காவற்றுறை மற்றும் பருத்தித்துறையில் அமைந்துள்ள துறைமுகங்கள் பெரிதாக இருந்தமை யினால் அங்கிருந்த கோட்டைகளில் வைத்தே தென்னிந்தியாவிற்குப் பயணம் செய்வோருக்கான நுழைவுச் சீட்டுக்கள் கொடுக்கப்பட்டன. கொழும்புத்துறை மற்றும் கச்சாய் துறைமுகங்கள் அதிகளவிற்கு வன்னிக்கான போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதெனலாம். பருத்தித்து றையில் உள்ள கோட்டையே சோழமண்டலம் மற்றும் திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்தில் பிரதான பங்கினை வகித்திருந்தன (Dairy of Jan Schreuder, 535). பருத்தித்துறையில் அமைந்திருந்த கோட்டைக்குப் பொறுப்பான காலாற்படைத் தலைவனே இப்பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பனை மரங்கள் தொடர்பான விபரங்களைக் கண்காணிப்பவராக விளங்கினார் (கணபதிப்பிள்ளை, க. 2006).

டச்சுக்காரர் காலத்தில் வட இலங்கை யிலிருந்த முக்கியமான துறைமுகங் களின் மூலமாக சர்வதேச அளவில் வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன. குறிப்பாக இத்தகைய வர்த்தக நடவடிக்கைகள் பருத்தித்துறை, காரைநகர், மாதோட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறைதுறைமுகங்களின் மூலமாகவே அதிகளவில் நடைபெற்றன. இத்தகைய சர்வதேச வர்த்தகத்தில் வடஇலங்கையுடன் இணைந்த பிரதான நாடாக இந்தியாவினைக் குறிப்பிடலாம். அதிலும் இவ்விடயமாகக் தென்னிந்திய நிலப்பகுதிகளுக்குச் சிறப்பிட முண்டு.

அமைவிடம் காரணமாக வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ரீதியிலான உறவுகள் இரு நாடுகளுக்கு இடையிலும் இருந்து வந்தமையினை ஆதாரங்கள் மூலமாக அறியமுடியும். அத்தகைய உறவினது தொடர்ச்சியே வடஇலங்கையினை டச்சுக்காரர் தமது நிர்வாகத்தில் வைத்திருந்த சமயங்களில் ஏற்பட்டது. இத்தகைய உறவில் வர்த்தகமே பிரதான இடத்தினை வகித்திருந்தது. இவர்கள் வடஇலங்கையில் முத்து வர்த்தகம், யானை வர்த்தகம் போன்றவற்றில் ஏகபோக உரிமையினை நிலைநாட்டியது போன்று பனை மரம் சார்ந்த வர்த்தக நடவடிக்கைகளில் செய்யவில்லை. இதனால் அரசுடன் தனியாரும்கூட இவற்றில் ஈடுபட்டு வந்தனர். இருப்பினும் தனியார் அரசிற்கு தீர்வையினைச் செலுத்தியே தமது நடவடிக்கைகளைத் தொடர வேண்டியவர்களாகக் காணப்பட்டனர். வடஇலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆட்சியாளர்களுக்கு கோழி, தயிர், செம்மறியாடு, பால், பழவகைகளை வழங்கி அவற்றின் மூலமாக ஆதாயத்தினைப் பெற்றனர். இதனால் இவர்களது காலத் தில் வடஇலங்கை மக்கள் தொழில் வாய்ப்புக் களையும் பல்வேறு வடிவங்களிலும் பெற்றமை அவதானிக்கத்தக்கது. அதாவது சிறிய பனை வளர்ப்பாளர்களும் நார் சேகரிக்கின்ற வறிய தொழிலாளர்களும், நடுத்தர வர்க்கத்தவர்களும் அதிகளவிலான நன்மையடைந்தனர். பேராசையால் அடுத் தவரது நிலங்களில் உள்ள பனைகளும் களவாகத் தறிக்கப்பட்ட வரலாறும் உண்டு. நாரினைப் பிரித்தெடுக்கின்ற நோக்கத்தில் சிறிய பனைகளும் தறிக்கப்பட்டன. இப்பின்னணியில் டச்சு அரசிற்கு இது தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகளும் கிடைத்தன. ஆனால் அது பற்றி அரசு அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. டச்சு நிர்வாகத்தில் புகையிலையும் பனை வளமும் அவர்களுக்கு பிரதான வருமான மூலங்களிலொன்றாக வடஇலங்கையில் அமைந்திருந்ததாக மு.குணசிங்கம் குறிப்பிடுகின்றார் (Gunasingam,M. 2008).

வடஇலங்கையிலிருந்து பனை மரத்தினது பண்டங்கள் மலபார், மதுரை, கொறமண்டல் ஆகிய பகுதிகளுக்கு ஏற்றுமதியாயின. வட இலங்கையின் பனம் பண்டங்களுக்கு நல்ல மதிப்புக் காணப்பட்டதன் பின்னணியில் அதிகளவான வருமானம் கிடைத்தது. குறிப்பாகப் பனாட்டு, கிழங்கு, ஒடியல் போன்றவற்றினைக் குறிப்பிட லாம் (Arasaratnam, S. 1988). இவற்றுடன் கூடவே தேங்காய் எண்ணை, வேம்பு என்பனவற்றி னையும் எடுத்துச் சென்றனர். சில சந்தர்ப்பங் களில் ஏராளமான இஸ்லாமிய வியாபாரிகளும் கேரளாவிலிருந்து ஊர்காவற்றுறை துறை முகத்தினை வந்தடைந்து இவற்றினைப் பெற்றும் சென்றுள்ளனர்.

பொதுவாக இத்தகைய வர்த்தகமானது வட இலங்கை மற்றும் தென்னிந்தியத் தரகர்களது கைகளிலேதான் காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் இத்தகைய பனம் பண்டங்களினை ஏற்றுமதி செய்து குறிப்பாக வடஇலங்கையில் தட்டுப்பாடான பொருட்களை அப்பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்தனர். அரிசி, மாடுகள், ஆடை வகைகள், சீனி, அபின், பட்டு என்பன இறக்குமதி செய்யப்பட்டன. பொன், வெள்ளி. வெண்கலம், இரும்பு, செம்பு, போன்ற உலோகங்களையும்கூட இவர்கள் அங்கிருந்தே பெற்றனர். இங்கிருந்த பள்ளிவாசல்களைத் திருத்தவும் புதிதாக அமைக்கவும் கேரளா விலிருந்து பாலை, முதிரை போன்ற வைர மரங்களும் இஸ்லாமியர்களினால் இறக்கு மதி செய்யப்பட்டன. நயினாதீவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்ட பள்ளிவாசலில் இவ்வாறு டச்சுக்காரர் காலத்தில் கொண்டுவரப்பட்ட வைர மரங்கள் காணப்படுவதனை அவ தானிக்க முடிகின்றது. வங்காளம், கோல் கொண்டா ஆகிய இடங்களிலிருந்து வருகை தருகின்ற இஸ்லாமிய வியாபாரிகள் பெருமளவிலான அரிசியினைக் கொண்டு வந்தனர். டச்சுக்காரரது அறிக்கையொன்று 1680 அளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பல் வேறு வகையான பனம் பொருட்கள் 256 படகுகளில் இந்தியாவிற்கும் கொழும்பிற்கும் அனுப்பப்பட்டதாகக் கூறுகின்றது (HagueArch.V.O.C,Inv. 1322/Gunasingam,M. 2008).

பனம் பண்டங்கள் ஒருபுறமிருக்க டச்சு நிர்வாகத்தில் பனைமரங்களாகவும் பலகைகளா கவும் பனை மரங்கள் தென்னிந்தியப் பகு திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. மல பாருக்கும், மதுரைக்குமே இவை அதிகளவில் ஏற்றுமதியாயின. இங்கிருந்து அங்கு அனுப்பப்படுகின்ற இவற்றுக்கு அதிகளவான பணம் கிடைத்தது. இதனால் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பகுதிகளில் அதிகளவான பனைகள் தறித்தெடுக்கப்பட்டன. ஆங்கிலே யரது காலத்தில் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புக் காரணமாக பனை மரங்களைத் தறிப்பதனைத் தடுப்பதற்குச் சட்டங்கள் பல பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Martyn,H. 1923).

இவ்வாறு கொண்டு செல்லப்படுகின்ற பனை மரப்பலகைகள் கட்டடங்கள் அமைப்பதற்கும், கதவுகள், சாளரங்கள், நாற்காலிகள், மேசைகள் உட்பட அழ கான மரச்செதுக்கல் வேலைகளுக்கும் மேற்கூறப்பட்ட தென்னிந்தியப் பிராந் தியங்களில் பயன்படுத்தப்பட்டன. தற்காலத் திலும்கூட கேரளப் பகுதிகளில் குறிப்பாக எர்ணாக்குளம், திருவாங்கூரின் சில பகுதி களில் வடஇலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்ட பனை மரப் பலகைகளில் செதுக்கப்பட்ட சிற்பவேலைப்பாடுகளின் எச்சங்களை அவதானிக்க முடியும். அக் காலப்பகுதியில் தென்னிந்தியப் பகுதிகளிலுள்ள பனை மரங்களைத் தறித்துப் பலகைகளாக மாற்றுவதற்கு ஏற்படுகின்ற செலவினைவிட வடஇலங்கையிலிருந்த பனை மரங்களைத் தறித்து அவற்றினைப் பலகைகளாக மாற்றிப் படகுகளில் கொண்டுசெல்லுவதற்கு ஏற்படுகின்ற செலவுகுறைவாகக் காணப்பட் டமையே இத்தகைய நிலைக்கு முக்கியமான காரணங்களிலொன்றாகும். பனை மரங்களாக அனுப்பப்படுகின்றபோது அவை கடலிலே மிதக்கவிடுவதன் மூலமாகக் கொண்டு செல்லப்படுவது வழக்கமானதாகக் காணப்பட் டது.

வடஇலங்கையில் டச்சு நிர்வாகத்தில் பனை மரங்கள் மட்டுமன்றிப் பலாமரம், வேப்பமரம், வன்னிக் காடுகளில் காணப்பட்ட பிற வைரமரங்கள் சிலவும் வர்த்தக நடவடிக் கைகளில் பிரதான இடத்தினைப் பெற்றன. இவை கூலி கொடுத்தோ அல்லது இறக்குமதி செயற்பட்டுத் தொழிலாளர்கள் மற்றும் அடிமைகள் மூலமாகவோ வெட்டிக் கப்பல்கள் ஊடாகத் தங்களது நாட்டிற்கு அனுப்பினர். நகர் புறங்களில் உள்ள சுதேசிகள் சிலரும் இவற்றினை டச்சுக்காரரிடமிருந்து பெற்றுத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்தினர்.

டச்சுக்காரரது காலத்தில் அத்திவார மிடப்பட்ட பனை நாரினது ஏற்றுமதியானது ஆங்கிலேயரது காலத்தின் நடுப்பகுதியளவில் யாழ்ப்பாணம், தீவுப்பகுதிகள், வன்னி என்பனவற்றிலும் வளர்ச்சி கண்டன. மேலும் ஆங்கிலேயரது காலத்தில் Vavaseur & Co என்ற நிறுவனமானது தரகர்களின் மூலமாகப் பனை மரசார் ஏற்றுமதிகளை ஆரம்பித்தது. ஆங்கிலேயரது காலத்தில்தான் அதிகளவான பனை நார்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இக்காலகட்டத்தில் முதலாளி ஒருவர் பவுணொன்றுக்கு 9 சதங்களை வருமானமாகப் பெற்றார். இஸ்லாமிய மக்களது உதவியுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வருமானத்தினை ஆங்கிலேயர் அதிகரித்தனர். 1916களில் Ceylon Sugar Refinery Company ஊடாக வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலையின் மூலமாக வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது (Martyn,H. 1923).

ஆங்கிலேயரது காலத்தில் சோமசுந்தரப் புலவர் போன்ற புலவர்களும், ஆர்வலர்கள் பலரும் சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த உதயதாரகை, ஈழகேசரி போன்ற பத்திரிகைகளும் பனையினது மகத்துவத்தினை அக்கால மக்களுக்கு உணரச் செய்தன. முதலாம், இரண்டாம் உலகமகாயுத்த காலப்பகுதிகளில் உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் தடைப்பட்ட நிலையில் வடஇலங்கையருக்குப் பிரதான உணவாகக் காணப்பட்டது பனையினது உணவுப் பொருட்களே. அச்சமயத்தில் வேலைவாய்ப்புக்களை வழங்கியது அதனது பாகங்களே. இருப்பினும் ஆங்கிலேயரது காலத்தின் இறுதியளவில் பனையுடன் தொடர்பான தொழில்களை மேற்கொள்பவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தினைச் சேர்ந்தவர்களென்ற எண்ணம் பலருக்கு இருந்துவந்தமையின் பின்னணியில்தான் இத்தொழிலில் வசதிகள் பல இருந்தும் துணிந்து மக்களில் பலர் ஈடுபடவில்லையெனலாம். இது தற்போதும் தொடர்கதையாக உள்ளது.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னராக மகாத்மா காந்தியினது ஒவ்வொரு பிறந்த நாளையும் இலங்கைப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையானது பனை மகோற்சவமாகக் கொண்டாடுகின்ற வழக்கத் தினை வடஇலங்கையில் கொண்டிருந்தது அதன் போது பனை இனங்களைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் இச்சபையினால் முன்னெடுக்கப்பட்டன. அதிலொன்றாகவே 10000 பனம் விதைகள் மக்களுக்கு வழங்கப்பட்டது (ஈழகேசரி,1953.09.20). மேலும் ஒவ்வொருவரும் 10 பனம் விதைகளையாவது நாட்ட வேண்டுமெனவும் பனை மரத்தினது உணவுகளைச் சேர்த்தும் தனித்தும் உண்ணுதல் வேண்டும் எனவும் பனைகளைத் தறிக்கக்கூடாதெனவும் பல தீர்மானங்கள் அச்சபையினால் எடுக்கப்பட்டன. பனைமகோற்ச நாளன்று பனைதொடர்பானபொது அறிவுப் போட்டிகள் நடைபெற்றன (ஈழகேசரி,1956.11.18). அக்காலப்பகுதியில் பனம் பொருட்களுக்கான பொருட்காட்சிகள்கூட இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

1950களில் கல்லோயாப் பகுதிகளில் வீடுகளை அமைப்பதற்குத் தேவைப்பட்ட பனம் மரங்கள் வடஇலங்கையிலிருந்தே தறித்தெடுத்துக் கொண்டு செல்லப்பட்டன. இதனைக் கண்டிக்கின்ற ஆய்வாளர்களும் பனை மரங்களின் அவசியத்தினை அவ்வப்போது மக்களுக்கு எடுத்துக்கூறி வந்தனர் (ஈழகேசரி,1951.09.02) இம்முயற்சியானது தற்காலத்திலும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. மிக அண்மையில் 24000 பனைகள் வடஇலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் சட்டரீதியாகத் தறிக்கப்பட்டதாக அரச அதிபரது செய்திக் குறிப்பில் காணப்படுகின்றது (உதயன், 2016.10.20).

உண்மையில் இந்தியாவில் பனை மரங்களின் தொகையானது வடஇலங்கையில் காணப்பட்ட பனைமரங்களது எண்ணிக்கையிலும் அதிகமாக இருந்தபோதிலும் அந்நாட்டவர்களினால் வடஇலங்கையிலிருந்த பனைகளும் பனம் பண்டங்களுமே விரும்பி வாங்கப்பட்டமை அவதானிக்கத்தக்கது. பொதுவாக உள்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் பனையும் அது சார்ந்த பொருட்களது வர்த்தக நடவடிக்கைகளும் சிறப்பாக நடைபெற்றமைக்கு ஒரு காரணம் டச்சுக்காரால் வடஇலங்கையின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட தெருக்களே. அவர்களால் அமைக்கப்பட்ட பெரிய தெருக்கள் குறிப்பிட்ட அகலத்திற்கு அமைக்கப்பட்டு அவற்றினை சுதேசிகளே பராமரித்தல் வேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப் பகுதிகளில் அக்காலப்பகுதியில் அறிவுறுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கது (சிவசாமி,வி. 2014).

### நிறைவுரை

பொதுப்படப் பார்த்தால் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரான காலப் பகுதியில்பனைமரமானதுவட இலங்கையினது பொருளாதாரத்தினது உயிர்நாடியாக இருந்த தென்பதில் சந்தேகமில்லை. பனை மரமானது வட இலங்கை மக்களுக்கு இறைவனால் இயற்கையாகக் கொடுக்கப்பட்டதொரு வாழ்வாதார வளமாகும். ஆரியச்சக்கரவர்த்தி களின்பின்னராக இதற்கு முக்கியத்துவத்தினைக் கொடுத்து இவ்வளத்தின் பெருமையினை உலகறியச் செய்தவர்கள் டச்சுக்காரரே. பல்லவர்காலத்திற்குப்பின்னதாகப்பனையினது முக்கியத்துவமானது தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் அதிகரிக்க ஆரம்பித்த காலம் டச்சுக்காரரது காலமே. பனை உற்பத்திகளை ஊக்குவித்த இவர்கள் அதனூடாகத் தமது வருமானத்தினைப் பெருக்கிய அதேநேரத்தில் சுதேசிகளும் பயனடைகின்ற வகையில் செயற்பட்டனர். இவர்களால் இதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவமானது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை தொடர்ந்தது. தற்காலத்தில் இதனது அவசியத்தினை உணர்ந்த அரசு பல்வேறு திட்டங்களையும் சட்டங்களையும் அறிமுகப்படுத்துவதன் மூலமாக இவற்றினது பெறுமதியினை மக்களுக்கு உணர வைத்து வருகின்றது. பனை அபிவிருத்திச்சபையானது பனையினை நம்பி வாழுகின்ற சமூகத்தின் அபிவிருத்தியினை நோக்கமாகக் கொண்டு மூலதன நீதி மூலமும் அமைச்சின் வாழ்வாதார நிதி மூலமும் பல அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. கண்காட்சி மற்றும் ஆய்வரங்குகளையும் இவ்விடயமாக நடாத்தி வருகின்றது. வழிகாட்டும் விளம்பரங்களையும் வெளியிடுகின்றன. சுயஉதவி கோருவோருக்கும் அரசாங்கத்தினால் உதவிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மிகவும் பண்டைக்காலம் தொடக்கம் வட இலங்கை மக்களிடம் செல்வாக்குப் பெற்று வந்த பனை வளத்தினை நாம் பேணுவதன் ஊடாக எமது பகுதியினர் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப முடியும். நோய்களைத் தடுக்க முடியும். வேலைவாய்ப்புக்களை அவதானிக்க முடியும். எமக்கு கிடைத்துள்ள அரிய பொக்கிசத்தின் மதிப்பினை நாம் உணர வேண்டும். அவ்வகையில்எமதுமுன்னோர்களது தேசிய உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்த பனை வளத்தினது உணவுகளை நிராகரித்து நவீன உணவுமுறையினை நாடியதன் விளைவே தற்கால சமுதாயத்தவர்கள் எதிர்நோக்கிவருகின்ற புதிய நோய்களாகும்.

### உசாத்துணை நூல்கள்

#### தமிழ்


01. அருந்தவராஜா,க.(2014) "ஒல்லாந்தர் காலத்தேய யாழ்ப்பாணத்தின் பொருளாதாரநிலை", இலங்கை வரலாறு (கி.பி. 1505 - 1796), (ப. ஆ. அருந்தவராஜா,க.), அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

02. ஏகநாயகவல்லி,சி. (2003) ஈழவரலாற்றுப் பதிவுகள், அரோவெப் வெளியீடு, கனடா.

03. கணபதிப்பிள்ளை,க.(1962) ஈழத்து வாழ்வும் வளமும், பாரதி புத்தக வெளியீடு, யாழ்ப்பாணம்.

04. (2006) "யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்", யாழ்ப்பாணம் - மொழியும் வாழ்வும், (மனோன்மணி,ச. இரகுநாதன்,ம.), கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

05. கிருஸ்ணராசா,செ. (2000) இலங்கை வரலாறு, பாகம் - II, பிறைநிலா வெளியீட்டகம். யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. குலரத்தினம்,கா.சி (1977) பனைவளம், மில்க்வைற், யாழ்ப்பாணம்.
07. சங்கரன். (1986) மகாவம்சம் (தமிழ் மொழி பெயர்ப்பு), கொழும்பு.
08. சம்பந்தம், கே. (1966) இனிக்கும் பதநீர், சென்னை மாநிலப் பனை வெல்லச் சம்மேளனம், சென்னை.
09. சிவசாமி,வி. (1990) தீவகம் - ஒரு வரலாற்று நோக்கு, பதிப்பு உரிமை ஆசிரியர், யாழ்ப்பாணம்.
10. சிவசாமி, வி. (2014) "போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஈழத்தில் பின்பற்றிய பொருளாதாரக் கொள்கை", இலங்கை வரலாறு (1505 - 1796) கட்டுரைகளின் தொகுப்பு, (ப.ஆ.அருந்தவராஜா.க), அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.
11. சிவலிங்கராஜா,எஸ். (2014 ஒக்ரோபர்) "தமிழ் மக்களது வாழ்வியலிற் பனை", கலைக்கேசரி, வீரகேசரி எக்ஸ்பிரஸ் வெளியீடு, கொழும்பு.
12. நாகசாமி,இரா. (1969) தஞ்சைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்கள், பாகம். 2, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு.
13. பத்மநாதன்,சி. (2002) இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
14. பத்மநாதன்,சி. (2011) யாழ்ப்பாண இராச்சியம் - ஒரு சுருக்க வரலாறு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
15. பாக்கியநாதன்,மு. (2003) பனையியல், (ப. உ. தவமலர்) யாழ்ப்பாணம்.
16. விசாகருபன்,கி. (2004) நாட்டார் வழக்காற்றியல், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

## English

01. Arasaratnam,S. (1958) 'Dutch Sovereignty in Ceylon A Historical Survey of its Problems in Ceylon', Journal of Historical and Social studies. University of Peradeniya, Peradeniya.
02.__________ (1964) The Administration of the Dutch East India Company, New Jersey.
03.__________ (1982) 'Historical foundation of the Colony of the Tamils of North Sri Lanka', Thanthai Chelva Memorial Lecture, Jaffna.
04.__________ (1988) Dutch Power in Ceylon, Navarang, New Delhi.
05. Blatter,E.S.J. (1926) Palms of British India & Ceylon, Oxford University press.
06. Ferguson, Donald. (1998) The Earliest Dutch visits to Ceylon, Asian Educational Services. New Delhi.
07. Gunasinghe,P.A. (2007) The Tamils of Sri Lanka, Cave & Co. Ltd, Colombo.
08. Gunasingam,M. (2008) Tamils in Sri Lanka, M.V.Publications, Sydney.
09. Lubeigt,G. (1977) Le Palmier a sucre, Borassus flaberllifer I.ses different products et la technologic associee en Birmanie J. Agric Trad & Bot.
10. Martyn,H. (1923) Notes of Jaffna, American Ceylon Mission Press, Tellippalai.
11. Pieris,P.E. (1995) Ceylon and the Hollanders, (1658 - 1796),Navrang, Colombo.
12. Sankaralingam,L. (1999) Management of Tuber root in Palmyrah palm, Journal of Mycology and Plant Pathology, TNAU, Tamil Nadu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Report**

Dairy of Jan Schreuder, Governor of Ceylon, (1760 July18),Hooge Regeering Van Batavia, 535.

**பத்திரிகைகள்**

*01.* ஈழகேசரி வெளியீடுகள், *(1930 - 58)* திருமகள் அழுத்தகம்,சுன்னாகம்.

*02.* உதயன் வெளியீடு, *(1985 - தற்போதுவரை)* உதயன் பப்ளிகேசன் பிறைவேற் லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

*03.* வீரகேசரி வாரமலர்; *29.02.2004, ப.29*

வழுக்கியாற்று வடிநிலம் வழங்கும் வரிவடிவங்கள் செ. கிருஷ்ணராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழர்களின் பரம்பலும் இலங்கையின் வெளிநாட்டு பண வருவாய்களும் : வடக்கு - கிழக்கு பற்றிய சிறப்பு பார்வை

வி . பி. சிவநாதன் ; ச. சுரேஜினி

**ஆய்வுச் சுருக்கம்**

உலக மயமாக்கத்தின் பல விளைவுகளில் ஒன்று நாடுகளுக்கு இடையில் மூலதனம் மட்டுமன்றி ஊழியமும் குறிப்பிடக்கூடிய அளவில் இடம்பெயர்ந்து அன்னிய செல வணியை தாய்நாட்டிற்கு ஈட்டிக்கொடுக்கின்றது. இந்த வகையில் இக்கட்டுரையானது இலங்கையின் மனிதவளம் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் ஈட்டுகின்ற அன்னியச் செலவாணியை எடுத்துக் கூறுகின்றது. இந்த ஆய்வுப்பரப்பில் இலங்கை தொடர்பாக பலர் ஆய்வுகளை செய்தபோதும், வடக்கு - கிழக்கு மக்களை குறிப்பாக தமிழர்களை மையப்படுத்திச் செய்யப்பட்ட ஆய்வுகள் குறைவாகவே உள்ளன. வெளிநாட்டு பண அனுப்புதல்கள் இலங்கையின் வெளிநாட்டு வருவாயில் முதல் நிலைகளில் பிரதான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இச்சம்பாத்தியத்தில் இலங்கையின் புலம்பெயர் தமிழ் மக்கள் ஈட்டுகின்ற அன்னிய செலவாணி அதிகமாக காணப்படுகின்றது. ஏறத்தாழ இரண்டு மில்லியன் இலங்கையர்கள் இதில் ஒரு மில்லியன் இலங்கைத் தமிழர்கள் வெளிநாடுகளில் வாழ்வதாக மதிக்கப்படுகின்றது. இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்வதற்கு பணம் சம்பாதித்தல், உள்நாட்டு இனமுரண்பாடுகள் மற்றும் யுத்தம், கல்வி, தொழில் எதிர்பார்க்கைகள், சாதிவேறுபாடுகள், சமுதாய ஒடுக்க முறைகள், வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டதால் ஏற்பட்ட வறுமை, கல்வியில் தரப்படுத்தல் மற்றும் கோட்டா முறைமை வேலையற்ற நிலை, மீன்பிடி பாதிக்கப்பட்ட மை, வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டமை, குடிமனைகள் அழிக்கப்பட்ட மை, அச்சுறுத்தல்கள், பாதுகாப்பின்மை மற்றும் குடியேற்ற பின்னணிகள் போன்றன கார ணமாக அமைந்துள்ளன. இவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பும் நிதியானது நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் சராசரியாக ஏழு வீதம் என்பதோடு இது நாட்டின் தொடர்ச்சியான நிலை யான வருமான அதிகரிப்பாகவும் ஏனைய வெளிநாட்டு வருமான மூலங்களைவிட அதிகமாக வும் காணப்படுகின்றது. இது பொருளாதார வளர்ச்சிக்கு உள்ளது. வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் அதிகளில்வ கனடாவில் வாழ்கின்றனர். வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் வருவாயை வீடுகட்டுதல், சீதனம் கொடுத்தல், தங்கநகை செய்தல், காணி கட்டிடங்களை வாங்குதல், மோட்டார் சைக்கில்கள் வாங்குதல், விலையுயர்ந்த தொலைபேசிகள் வாங்குதல், கோயில்களுக்கு செலவு செய்தல், வீட்டின் பங்களிப்பதாகவும் நன்மை தீமைகளுக்கு செலவு செய்தல், சிறு தொழில் முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் வங்கிகளில் நிலையான வைப்புக்களில் இடுதல் போன்ற நுகர்வு செலவுகளையும் முதலீட்டு செலவுகளையும் செய்கின்றார்கள். இலங்கைத் தமிழர்களுக்கு யுத்தம் ஏற்படுத்திய இந்த நிதியியல் பலத்தை பொருளாதார திட்டமிடலாளர்கள் பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும்.

**திறவுச் சொற்கள் :** வெளிநாட்டு பண வருவாய்கள், புலம்பெயர் தமிழர்கள், புலம்பெயர் இலங்கையர்கள், புலம்பெயர் குடிப்பரம்பல்

## 1. அறிமுகம்

இலங்கையிலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் ஏராளமானவர்கள் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்வதும் நிரந்தரமாக குடி பெயர்ந்து செல்வதம் இன்று ஒரு சாதாரண காட்சியாக உள்ளது. இதனால் மூளைசாலிகள் வெளியேற்றம் ( Brain Drain ) என்று சொல்லக் கூடிய அளவிற்கு வளரும் நாடுகளின் சிறந்த மனித வளங்களும் குடி பெயர்ந்து சென்று கொண்டிருக்கின் றன. மனிதர்கள் நாடு விட்டு நாடு செல்வதன் நோக்கம் அவர்கள் இருக்கின்ற நிலைமையை விட மேன்மையான நிலை ஒன்றை அடையலாம் என்ற எண்ணமாகும். வெளிநாட்டிற்குச் சென்றவர்கள் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக முன்னேறி வாழ்கிறார்கள் எனின் அது அவர்களின தாய் நாட்டு வளர்ச்சி அல்ல, தாய் நாட்டு மக்களின் முன்னேற்றமும் அல்ல அது அவர்கள் வசிக்கும் நாட்டின் வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு ஆகும். வெளிநாட்டில் வசிப்பவர் பணத்தை தாய் நாட்டிற்கு அனுப்பினால் அல்லது தாய் நாட்டில் முதலிட்டாலேயே சொந்த நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சி அடைகிறது. இவ் ஆய்வு கட்டுரையானது உலகத்தில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பரம் பலை எடுத்து வருவதோடு இலங்கைக்கு கிடைக்கும் வெளிநாட்டு வருவாய்களை எடுத்துக் காட்டுகின்றது.

## 2. புலம்பெயர் பின்னணிகள்

"திரை கடல் ஓடியும் திரவியம் தேடு" என்னும் முதுமொழிக்கமைய உலகெல் லாம் பரந்து வாழும் வடகிழக்கு குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் வாழ்க்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. அதாவது வெளிநாட் டிற்குச் சென்று பணிபுரி தல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட பாரம்பரியம் கொண் டது. இது 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி மற்றும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே தோன்றியி ருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்ட மிகையான மனிதவளம் மற்றும் தமது கல்வியை பொருளாதார மேம்பாட்டிற்கான ஒரு கருவியாகத் தொடர்ந்து கையாள வேண்டியிரு ந்ததன் காரணமாக இவர்கள் தமது கல்வி மற்றும் தொழில் எதிர்பார்க்கைகளை பூர்த்தி செய்வதற்கு இலங்கைத் தீவிற்கு அப்பாலும் தற்காலிகமாக செல்ல வேண்டியிருந்த ( Cheran, 2003) அதேவேளை ஆங்கிலேயர் களாலம் இலங்கைத் தளமிழர்களில் யாழ்ப்பாணத் தமிழர்களே வெளிநாடுகளில் குடியேற்றப்பட்டனர். இந்த வகையில் வண்ணார் பண்ணை, சுழிபுரம், வட்டுக் கோட்டை, வயாவிளான், புலோலி போன்ற பிரதேசங்களிலிருந்து பெருமளவான யாழ்ப்பாணத்தவர்கள் பொருளாதாரக் காரணி களின் பின்னணியில் பிரித்ததானிய காலனித்துவ ஆட்சியின் கீழான மலாயா, சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிற்குச் சென்று ஆரம்பத்தில் தபால், கச்சேரி, கல்வி, போக்குவரத்து மற்றும் மருத்துவம் போன்ற அரசாங்க சேவைகளில இடைநிலை ஊழியர்ளாகப்(எழுதுனர்களாக) பணியாற்றத் தொடங்கியதிலிருந்து இன்றுவரை வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் வசிப்பவர்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும் பணம் இங்குள்ள மக்கள் வருவாயில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர் முப்பது வருடங்களுக்கு மேலான முரண்பாடுகள் மற்றும் யுத்தம் பல அழிவுகளை வடபகுதியில் ஏற்படுத்தியிருந்தபோதும் அது சில அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக இனப்பிரச்சனை காரணமாக இங்கிருந்த தமிழ் சிறுபான்மை மக்கள் வேலைக்காகவும் அகதிகளாகவும் தங்களை முன்னேற்றுவதற்கான வசதிவாய்ப்புகளுக்காகவும் உலகின் பல பாகங்களுக்கும் அதிகளவில் சென்றனர். இவ்வாறு வெளிநாடகளில் குடியேறியவர்கள் தாய் நாட்டுக்கு (வடக்கு கிழக்குக்கு) அனுப்புட் பணம் இப்பிரதேச மக்களின் வாழ்க்கைதர நிர்ணயத்தில் பிரதான பங்கினை வகிக்கின்றது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதி மக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணியாளர்களாக அதிகம் செல்ல, வடக்கு கிழக்கு மக்கள் இவ்வாறல்லாது வளர்ந்த நாடுகளில் அதிகளவில் தஞ்சம் மற்றும் குடியுரிமை எனவும் மத்திய கிழக்கு உட்பட ஏனைய நாடுகளில் குறைந்தளவிலும் என வளர்ந்த உலகின் நிரந்தர அங்கமாகும் போக்கு காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. இலங்கைத் தமிழர்களின் வெளிநாட்டுப் புலம்பெயர்வுக்கான காரணிகள்

வெளிநாடுகள் நோக்கிய புலம்பெயர்வுக்கு பொருள் தேடல், அரசியல் சிக்கல்கள் அரசியல் முரண்பாடுகள், இன முரண்பாடுகள் மற்றும் யுத்தம் என்பன அடிப்படையாக அமைந்தன. அதாவது இது வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டதால் ஏற்பட்ட வறுமை, கல்வியில் தரப்படுத்தல் மற்றும் கோட்டா முறைமை, வேலையற்ற நிலை, மீன்பிடி பாதிக் கப்பட்டமை, வாழ்விடங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக மாற்றப்பட்டமை, குடிமனைகள் அழிக்கப்பட்டமை, அச்சுறுத்தல்கள் , பாதுகாப்பின்மை மற்றும் சமூகப் பிரிவினைகள் ( சாதி அடையாளம்) என்பவற்றால் இப் புலப்பெயர்வு நிகழ்ந்தது. அதேநரத்தில் விடுதலை இயக்கங்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள், வடபகுதி மத்திய வர்க்கத்திற் குள் வெளிநாட்டுக் கனவுடன் இருந்தவர்கள் மற்றும் வெளிநாடு ஒரு பணம் காய்க்கும் மரம் எனத் தெரிந்து பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமென்று எண்ணியவர்களும் நாட்டு நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு ஐரோப்பிய மற்றும் ஏனைய நாடுகளுக்குச் சென்றனர். வெளிநாடு செல்வதற்கான காரணமும் நியாயப்படுத்தலும் வாய்ப்புக்களும் யாழ்ப்பாண மக்களுக்கு மிக அதிகமாயிருந்தன.

*1983* கலவரத்திற்குப் பின்னர் ஏறத் தாழ *7000, 000* க்கம் மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்திருக்கலாம் என்று கணிப்பிடப் படுகின்றது. இவர்கள் பெரு; மபான்மையினர் இந்தியா, ஐரோப்பா, மற்றும் கனடா ஆகிய இடங்களில் வசிக்கிறார்கள். ( Cheran, 2003, Fuglerut, 1999). *1980-1990* க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் *256, 307* இலங்கைத் தமிழர்கள் ஐரோப்பாவில் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்திருந்ததோடு, இவர்கள் புகலிடம் தேடும் முதல் பத்து குழுக்களில் ஒன்றாகக் காணப்பட்டனர் ( UNHCR, 2001). இலங்கைத் தமிழரில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்கினர் இலங்கையைவிட்டு வெளியேறி அதாவது *800, 000* க்கு மேற்பட்டவர்கள் பிற நாடுகளில் வாழ்கின்றனர். அனைத்துலகமெங்கும் வசிக்கம் இலங்கைத் தமிழர்களில் *65%* கும் அதிகமானவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள். இலங்கைத் தமிழர் சனத்தொகையில் *32*ரு மானவர்கள் வெளிநாடுகளில் வசிப்பதானது உலக சராசரியின் *(3. 1%) 10* மடங்கிலும் அதிகமானதென்பதோடு இவர்களின் பொருளாதாரப் பலம் பெரியது.

### 4. வெளிநாட்டுப் பணவருவாய்கள் தொடர்பான தேசிய ஆய்வுகள்

இப்பகுதியானது வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் தொடர்பாக இலங்கையில் செய்யப்பட்ட ஆய்வுகளை எடுத்து விளக்ககிகன்றது. யாழ் பபாண மக்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மூலமான வெளிநாட்டுப் பண வருவாயை மிக அதிகமாகப் பெற்றுக் கொள்கிறார்கள் எனும் தூண்டுதல்தான் வங்கித்துனைறயானது அதிகளவு கிளைகளை யாழ்ப்பாணத்தில் திறப்பதை விரைபுபடுத்தியது ( W. M) கருணாரட்ண, *2011*).

இலங்கைத் தமிழர்கள் கொண்டுள்ள கூட்டுவாழ்வு மற்றும் கடும்ப ரீதியான உதவுதல் எனும் வழக்கம் அல்லது மரபு காரணமாக வெளிநாடுகளிலிருந்து ஒரு குறிப்பிடத்ததக்க பண அனுப்புதல்கள் வெளிநாடு செல்லல், மருத்துவச் செலவுகள், திருமணம் மற்றும் மரணச் செலவுகள், வீடு கட்டுதல், தொழிக்லவாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றிற்கம் மற்றும் பொதுத் தேவைகளுக்கம் அனுப்பப்பட்டுக்கொண்டிருந் தாலும் அனுப்புதல்களின் வெளிநாடு செல்லல் மற்றும் சகோதரிகளுக்கான சீதனம் என்பவை மிக முக்கியத்துவம் பெறுகின்றது (Fuglerud 1999). அனேக தமிழர்கள் வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகைப் பணத்தை சகோதரிகளின் சீதனத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பியிருக்கிறார்கள். வெளிநாட்டில் வசித்தாலும் வசிக்காவிட்டாலும் சகோதரிகளுக்கு திருமணம் செய்து கொடுப்பது என்பது தமிழ் சகோதரர்களின் கடப்பாடு என்ற வகையில் அதிக பணம் அனுப்பப்படுகிறது (Tharmaliingam . S 2011; Santhirasegaram 2014). யாழ்ப்பாணத்தில் வரணிக் கிராமத்தில் செய்யப்பட்ட ஆய்வில் வெளிநாட்டில் வாழும் சகோதர சகோதரர்களின் எண்ணிக்கைக்கும் சகோதரிக்காக கொடுக்கும் சீதனத்தின் மொத்தப் பெறுமதிக்கம் இடையில் நேக்ர்க் கணியத் தொடர்பினை எடுத்தக் காட்டுகிறார். அதிகளவான சீதனத்துடன் குடும்ப வாழ்க்கையில் புகுகின்ற பெண்கள் குடம்பத்தில் அதிக அதிகார வலுவினைக் கொண்டிருப்பதையும் சந்திரசேகரம் (2013) எடுத்துக் காட்டுகின்றது. எனவே வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் யாழ்ப்பாணத்தில் பெண்களின் வலுவூட்டலுக்கும் பயன்படுகின்றது.

இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர் படையின் பெரும் பகுதியினர் மத்திய கிழக்கு நாடுகளிலேயே வாழ்ந்து வருவதோடு இவர்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 700, 000 என மதிப்பிடப்படுகின்றது. (மத்திய வங்கி அறிக்கை) இலங்கையின் இவ் அனுப்புதல்கள் தற்போ,து வரை தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்வதுடன் இது 2012 இல் USS6. 1 பில்லியனாகவும் 2013 இல் USS7 பில்லியனாகவும் GDP யில் 10 % மும் ஆகும். இது தனியொருதுறையின் மிகப் பெரிய வெளிநாட்டு வருமானப் பங்களிப்பாகும். இதை 2020 இல் USS10 பில்லியனாக அதிகரிப்பதே வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் இலக்காகும் (டிலான் பெரேரா, Daily News, 23. 08. 2013).

உலகளவான இலங்கைத் தமிழ் சனத் தொகையில் ஏறக்குறைய கால்பங்கினர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர் ( Kuo, 1995, Noh et al, 2008). கனடாவில் 1983 இல் 150 இலும் குறைவாக இருந்த இலங்கைத் தமிழர் 1991 இல் மிகப்பெரிய சிறுபான்மைக் குழுவாக ரொரன்றோவுக்குள் காணப்பட்டனர் (Mason et al. 2008). இது 1990 இல் விண்ணப்பித்தவர்களில் 80% மானவர்களக்கு தஞ்சமளித்ததன் காரணமாகும். இன்று இலங்கைக்கு அடுத்து இலங்கைத் தமிழர்கள் பெருமளவில் வாழும் பகுதியாக ரொரன்றோவும் அடுத்து இந்தியாவும் உள்ளது (Beiser et al, 2003).

36 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் இப்பண அனுப்புதல்கள் பொருளாதார வளர்ச்சி மீது சிறிய தாக்கத்தைக் கொண்டிருப்பதும் ( Pradham at el, 2008), இவை நுகர்வு மீது செலவு செய்யப்படுவதால் குறுங்காலத்தில் மொத்தக் கேள்வியைத் தூண்டுவதாகவும் இது முதலீடு, வேலைவாய்ப்பை அதிகரிப்பதில்லை என்பதோடு பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யாது என Rahman at el, (2006) குறிப்பிடுகின்றார். RalÇ Chami at el, (2003) இல் 113 நாடுகளில் மேற்கொண்ட ஆய்வில் வெளிநாட்டு பண அனுப்புதல்கள் பொருளாதார வளர்ச்சி மீது எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதாவது குறைந்த ஊழியத்தில் வளமான மனிதவளம் இடம் பெயர்வதால் ஏற்படும் நன்மையைக் காட்டிலும் மனிதவள இழப்பால் ஏற்படும் வெளியீட்டு இழப்பு அதிகமாகும் எனப்படுகிறது.

## 5. வெளிநாட்டுப் பணவருவாய் தொடர்பான பிரதேச ஆய்வுகள்

இப்பகுதியானது வெளிநாட்டுப் பண அனுப்புதல்களின் தொடர்பாக இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்பட்ட ஆண்வுகளை எடுத்து விளக்குகின்றது. வி. நித்தியானந்தம், (2003) கருத்துப்படி ஈழத்தமிழர் சமூகம் தமது சீவனோபாயம் என்ற வகையில் வேலைவாய்ப்புக்களை முக்கியமாக அரசதுறையில் எதிர்பார்த்திருந்தவிடத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இவர்கள் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விரிவடைந்து கொண்டு செல்ல வில்லை. மட்டுப்படுத்தப்பட்ட நிரம்பல்நெகிழ்ச்சிதான் காணப்பட்டது. இத்தருணத்தில் தான் மலாயாவிலும் சிங்கப்பூரிலும் அரசாங்கப் பணியொன்றைக் கட்டியெழுப்புவதிற் பிரித்தானியர் ஈடுபட்டிருந்தனர். ஈழத்தமிழர் இந்த வாய்ப்புக்களை நன்கு பயன்கபடுத்திக் கொள்ள முடிந்தது. மலாயா, சிங்கப்பூர் மற்றம் நீரிணைக் குடியேற்றங்கள் போன்னற இலங்கைக்கு வெளியேயிருந்த பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாத்திரம் 1911ஆம் ஆண்டு ரூபா 602, 878 க்கும் 1920 ஆம் ஆண்டு ரூபா 2, 120, 000 க்கும் காசுக் கட்டளைகள் அனுப்பப்பட்டதாகவும் மதிப்பிடப்படுகின்றது ( வி. நித்தியானந்தன், 2003). காசுக்கட்டளைகளுக்குப்புறம்பாக இதர வடிவங்களில் அனுப்பப்பட்ட தொகையைச் சேர்க்கும்போது இது கணிசமா னளவு உயர்வாகவே இருந்திருக்கும் ( வி. நித்தியானந்தன், 2003). 2013 இல் உலகளவில் 89 ஆவதும் தென்கிழக்காசியாவில் இரண்டாவதும் பணக்காரரான மலேசியாவில் வசிக்கும் பெற்றோலிய தொலைத் தொடர்புத்துறைத் தொழிலதிபர் தற்பரானந்தம் ஆனந்தகிருஷ்ணன் மேற்கூறியவாறு இலங்கையிலிருந்து சென்ற தமிழ் பெற்றோருக்குப் பிறந்தவராவார்.

குடா நாட்டினர் தம் பொருளாதார வாய்ப்புக்கள் தேடி வெளிநாடுகளுக்கச் சென்றாலும் ஆரம்ப காலங்களில் பிரதான உழைப்பாளி மட்டும் செல்வதாகவும் ஏனைய குடும்ப அங்கத்தவர்கள் இங்கு வசித்தாலும் பண அனுப்புதஇல்கள் உறுதியாகவும் உயர்வாகவும் காணப்பட்டது. அதாவது உழைப்பில் செலவு போக மிகுதி தாய்நாட்டிற்கென்றாவது ( வி. நித்தியானந்தம், 2003: 136). ஆனால் தற்போது சில நாடுகளுக்கு ஆரம்பத்திலேயே குடும்பமாக அல்லது வெளிநாட்டில் வசிக்கம் குடும்ப அங்கத்தவர் ஏனைய அங்கத்தவர்களையும் அழைக்கும் நிலையும் காணப்படுகிறது.

ஓரளவுக்குக் குறிப்பிடத்தக்களவான பங்கு யாழ்ப்பாண மக்கள் - மற்றவர்கள் குறிப்பிடுவது போன்ற 30% வரை - வெளிநாட்டில் வசிப்பதோடு அவர்கள் வெளிநாட்டில் முறையான தொழில் மற்றும் வருமானம் அற்ற நிலையிலும் தமக்குக்கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதியைத் தம் குடும்பத்தைத் தாங்கிப் பிடிப்பதற்காக அனுப்புதலால் யாழ் நகரப் பொருளாதாரம் பெருமளவில் வெளிநாட்டுப் பண அனுப்புதல்களைச் சுற்றிச் சுழல்வதாகவே உள்ளது ( 25. 07. 2001- Asia Times- atimes.com).

பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம், வெளிநாட்டு அனுப்புதல்களால் உருவாக்கப்பட்ட குமிழ்களால் வாழ்கிறது. அங்கு பணத்திற்குப் பஞ்சம் இல்லை என்பதோடு செலவழிப்பதற்கான வாய்ப்புக்கள் மட்டுமே உள்ளது. வெளிநாட்டில் அங்கத்தவரைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு குடும்பமும் மாதாந்தம் ரூ. 25, 000 - 30, 000 வரை அனுப்புதல்களைப் பெறுவதோடு ஒவ்வொரு குடும்பமும் ஒருவரை வெளிநாட்டில் வைத்திருக்க முயற்சிக்கின்றன ( Ashok Mehta, 2000).

இலங்கைப் பொருளாதாரத்தைக் கருத்திற் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கை திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுவிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் 45% மான குடும்பங்கள் தம் தொழிலிலிருந்தான வருமானத்தை விட ஏனைய மூலங்களில் முக்கியமாக வெளிநாட்டு வருவாயில் மற்றும் நன்கொடைகள் ஓய்வூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியம் சமூகநலக் கொடுப்பனவுகளிலும் தங்கியிருக்கின்றனர். இந்த வீதமானது தேசிய சராசரியின் நான்கு மடங்காகும் ( ILO, 2006).

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் பாரிய எண்ணிக்கையைக் கொண்ட தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கை முதலீடுகள் மூலம் மீளக் கட்டியெழுப்ப வேண்டும். (மகிந்த ராஜபக்ஷ, 2011). யாழ்ப்பாணத்தில் சீதனத்திற்கான திரண்ட சேமிப்பின் பிரதான வருமான மூலமாக இருப்பது குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருந்தான பண அனுப்புதல்களே. சீதனத் தொகைக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளில் இருக்கும் குடும்ப உறவினர்களுக்குமான இணைவுக் குணகம் 67% ஆகும். இங்கு கொடுக்கப்படும் சீதனமானது காணிக் கொள்வனவு, வீடு கட்டல், நகைகள், வங்கி வைப்புக்கள் என முதலிட / சேமிக்கப்படுகின்றது ( செ. சந்திரசேகரம், 2013).

தற்போது யாழ்ப்பாணத்தில் 50 % மான மக்கள் வெளிநாட்டில் வாழும் உறவினர்களிட மிருந்து பண ஆதரவைப் பெறுகிறார்கள் (அகிலன் கதிர்காமர், 2010) என்பதுடன் இங்கு ஒப்பீட்டு வறுமையே காணப்படுகின்றது. அதிகமான குடும்பங்கள் வெளிநாட்டு வருவாயைப் பெறுவதால் இங்கு முழுமையான வறுமை மிகக் குறைவாக இருக்கிறது.( மு. சர்வானந்தன், 2011) இவ்வருவாய்கள் அதிகரித்துள்ளதால் யாழ்ப்பாணத்தில் பல தனியார் பணப்பரிமாற்ற முகவர்கள் அதிகரித்துள்ளதோடு, இவர்கள் தம் சர்வதேச வலைப்பின்னல் முகவர்ள் ஊடாக சட்டத்தால் அனுமதிக்கப்படாத " உண்டியல்" என்பதன் மூலம் நாளாந்தம் யாழ்ப்பாணத்திற்குள் வரும் 40 மில்லியன் ரூபாவில் 30 மில்லியன் ரூபாவைப் பரிமாற்றுகிறார்கள் ( சுரேன் ஞானராஜ், 2003).

" உண்டியல்" என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் பணத்தை அனுப்ப தெற்காசியர்கள் பயன்படுத்தும் ஒருமுறை ஆகும். குறிப்பாக தமிழர்கள் தம் தாயகப் பகுதிகளுக்குப் பணம் அனுப்பும் முறையை இது சிறப்பாகக் குறிப்பிடுகிறது. இம்முறையில் பணம் வங்கிகளிலும் பார்க்க வேகமாகவும் குறைந்த செலவிலும் உரிய வருக்கு அனுப்பப்படும். தமிழ் மக்கள் பெரும்பாலும் உழவையும் மீன்பிடித்தலையும் பிரதானமாகக் கொண்டாலும் தற்போது வெளிநாட்டு மக்கள் அனுப்பும் பணமும் தமிழர் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமாகின்றது.

அதிகமானவர்கள் அதாவது அரைப்பங்கினர் பண அனுப்புதல்களைப் பெறுவ தாலும் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒரு வகையில் வெளிநாட்டுத் தொடர்பைக் கொண்டிருப்பதாலும் யாழ்ப்பாணத்தில் பணம் தாராளமான தடைப்படாத பாய்ச்சலாகவுள்ளது. எனினும் அனேக குடும்பங்கள் தமது வெளிநாட்டு நிதிக்கு குறைந்தளவான வட்டியை வங்கிகளிலிருந்து பெறுவதனாலும் இதனை நுகர்விற்கு செலவழிப்பதானாலும் மீண்டும் தங்கி வாழ்பவர்களாகவே மாறுகின்றனர். சேமிப்பு, அடைவு மற்றும் குத்தகையால் உயர் இலாபம் கிடைப்பதன் காரணமாக புதிய வங்கிகள் யாழ்ப்பாணத்திற்குள் வந்து கொண்டிருக்கின்றன. இவ் வங்கிகள் அனுபவமற்றவர்களின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குவதில் உதவுவதில்லை (The Asia Foundation 2011).

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பண வருவாயைப் பெறும் குடும்பங் களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பத்தகாத அளவில் தங்கி வாழ்வோர் மட்டம் உருவாகு வதோடு இவ்வருவாய் உள்ளூர்ப் பொருளா தாரத்தைச் செழுமையாக்கும் வகையில் பயன்படுத் தப்படுவதில்லை ( Michael Calavan, 2011). புதிய பாதை வலையமைப்பானது வடமா காணத்திற்கானது எனக் கூறப்பட்டாலும் இது இருமுனைக் குமான நன்மைகளை அதாவது தமிழர்களுக்கு போக்குவரத்தை சுலபமாக்கியதாகவும் தென்னிலங்கை மக்கள் தம் பொருட்களை வடக்கிற்கு அனுப்பவும் வடக்கின் பொருட்களை அது வடக்கிற்கே பற்றாக் குறையாக இருப்பினும் தென்னிலங் கைக்கு கொண்டு செல்லவும் உதவுவதால் பாதையானது சிங்களவருக்கு அதிக நன்மை யளிக்கிறதோ என்பதான ஒரு சந்தேக மனப் பாங்கு தமிழர்களிடம் உள்ளது ( Yarlpanam Today, 05.08.2014).

யுத்தமிருந்திருக்காவிடில் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் போல இந்திருக்கும். சேவைத்து றைசார் புலம் பெயர் மக்களை அதிகம் கொண்டுள்ளதால் ஒரு சர்வதேசத் தளமாக யாழ்ப்பாணம் வரமுடியும். இவர்கள் யாழ்ப் பாணம் மீது அக்கறை கொண்டுள் ளார்கள். ஆனால் செயல்வடிவம் தான் அதிகள வில்லை ( The Asia Foundation, 2011).

வெளிநாட்டில் வாழ்பவர்கள் தாய்நாட்டின் நிறுவனங்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் மனித ஆற்றல்களைத் திறந்தொழில் நிறுவனங்களினூ டாக வழங்கல், தம் ஆற்றல்களை தற்காலிகமாக தனிமுறைப்பணியாக தாய்நாட்டிற்கு வழங்கல், வேண்டப்பட்ட திறன்களோடு திரும்பி வந்து பணிபுரிதல் ஊடாகவும் உதவுகிறார்கள். உதாரணமாகஐக்கிய இராச்சியத்திலுள்ளகானா மருத்துவர், பல் மருத்துவர் சங்கம் மாதாந்தம் 200 யூரோ அனுப்புதலே ஒரு குடும்பத்திற்கு மிக வசதியான வாழ்க்கையை கொடுக்கிறது.

ஆனால் இது இளையோரைத் தங்கி வாழ்பவ ராகவும் வேலைக்குச் செல்வதில் மிகச் சோம்பலுடையவராகவுமாக்குகிறது. இவர்கள் கல்விக்கு மிக முன்னுரிமையளிக்கிறார்கள். கல்விதான் யாழ்ப்பாணத்தின் செல்வம் (The Asia Foundation, 2011).

வடக்கு கிழக்கில் பொதுவாக இவ்வருமான வழியூடாக ஒவ்வொரு குடும்பமும் மற்ற வருடன் போட்டியிட்டு தமது மேம்பாட்டை அடைய முற்பட்டதான ஒரு உட்சுருளும் தன்மை கொண்ட பொருளாதாரப் போட்டி விரிவாக்கம் காணப்பட்டது. (வி. நித்தியானந் தம், *138*). அதாவது வாழ்வாதாரம், பின்னர் குடும்ப உயர்வசதிகளில் நுகர்வு மற்றும் சேமிப்பு என்பதாகவும் பின்பு தம் சமூகம் சார்ந்த கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், என்பதாகக் காணப்படுகிறது.

இலங்கையில் உள்நாட்டுப் போரினால் பெற்றவர்களை இழந்த ஏழைத் தமிழ் மாணவர் களின் கல்வி வளர்ச்சிக்கு நிதியுதவிகளை 1989ஆம் ஆண்டு முதல் 2014 வரையான 25 வருடங்களாக அவுஸ்திரேலியா உட்பட பல வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் ஆதரவுடன் இலங்கை மாணவர் கல்வி நிதியம் வழங்கி வருகிறது. இவ்வுதவித் திட்டத்தினால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனும் பலனும் அடைந்துள்ளனர்.

வெளிநாட்டு வாழ் தமிழர்களால் வடக்கின் அபிவிருத்தி, உட்கட்டுமானம், வாழ்வாதாரம், ஊனமுற்றவர்களுக்கான உதவி எனப் பல வடிவங்களில் வழங்கப்பட்ட நிதியில் 3% நிதி கூட வடக்கிற்குப் பயன்படவில்லை என்பதோடு சேகரிக்கப்பட்ட நிதி வடக்கிற்கு வந்திருந்தால் இப்பிரதேசம் அபிவிருத்தியில் பின்தங்கியிருக்காது என்பதுடன் இன்று பாரிய அபிவிருத்தியைக் கொண்டதும் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்திற்கும் வேலைவாய்ப்பிற்கும் முன்னுதாரணமாக வடக்கு மிளிர்ந்திருக்கும் ( வாசுதேவன் இராசையா 12.02.2014 தினக்குரல்).

யாழ்ப்பாணத்தில் கோயில்களின் அபிவிருத்தி அதாவது மீளத் திருத்தி அமைத்துக் கொள்ளல், இடித்துக் கட்டுதல் அல்லது ஒழுங்காக உள்ள கோயில்களுக்கு திரும்பத் திரும்ப வர்ணம் அடித்து மினுக்குதல் எனும் பணிகள் பல இடங்களில் மிகத் துரித கதியில் நடைபெறுகின்றது. இதற்குத் தேவையான பணத்தின்பெரும்பகுதி மேற்கத்தையநாடுகளில் உள்ள தமிழர்களால் வழங்கப்படுகிறது. அதேநேரம் பல கிராமங்களில் பாடசாலைப் பிள்ளைகள் பாதணிகள், புத்தகப் பைகள் இல்லாது பாடசாலைக்குப் போகிறார்கள்.

## 6. இலங்கையில் வெளிநாட்டு சம்பாத்தியங்களின் போக்கு

இலங்கையைப் பொறுத்தவரை வளர்ச்சியடைந்து வரும் நாடு என்றவகையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது என்பதோடு பிரதான வருளவாயைத் தந்த பெருந்தோட்ட ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் தற்போது இலங்கையின் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மற்றும் தொழில் நோக்குக்காகவோ அல்லது பல்வேறு காரணங்களினால் இலங்கையில் இருந்து பிற நாடுகளுக்குச் சென்று அங்கே தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் நாட்டுக்கான பெறுமதியான ஏற்றுமதியாகக் கொள்ளப்படுவதோடு இவர்கள் தமது வீடுகளுக்கு அனுப்பும் நிதியானது நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தில் சராசரியாக 7 % என்பதோடு இது நாட்டின் தொடர்ச்சியான நிலையான வருமான அதிகரிப்பாகவும் ஏனைய வெளிநாட்டு வருமான மூலங்களைவிட அதிகமாகவும் காணப்படுகிறது. இது பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பதாகவும் உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் இதில் அதிகமாகத் தங்கியுள்ளதாகவும் உள்ளது.

**இலங்கையின் ஏற்றுமதி வருமானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புதல் ஒப்பீடு 2007:2014**
**அட்டவணை 1.2**

| துறை | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| வெ.பண அனுப்புதல் | **276,728** | **316,118** | **382,801** | **465,372** | **569,103** | **763,980** | 806,400 |
| ஆடைத் தொழில் | **369,173** | **376,990** | **374,645** | **379,185** | **463,509** | **508,607** | **478,800** |
| உ.பயணம் | 42,571 | 37,094 | 40,133 | 65,018 | 91,926 | 132,427 | **226,800** |
| தேயிலை | 113,565 | 137,606 | 136,194 | 162,793 | 164,869 | 180,429 | **194,040** |
| வெ.நே.முதலீடு | | | | | | | **126,000** |

*Source* : Central Bank of Sri Lanka, 2013


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்றவர்-கற்காதவர்இ தொழில் புரிபவர்-புரியாதவர் மற்றும் ஆண்-பெண் பாலார் என சகலரும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததும் உள்நாட்டில் வேலையின்மைஇ வேலைவாய்ப்பின் ஊடாக போதிய வருமானத்தை உழைக்க முடியாமைஇ முரண்பாடுள்ள கல்வித்திட்டங்களால் மனிதவள முன்னேற்றத்தில் காணப்படும் சமநிலையற்ற முன்னேற்றம் மற்றும் விலைவாசி அதிகரிப்பு என்பன இலங்கையர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கான பிரதான காரணங்களாகும். இவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணியாளர்களாகப் பணியாற்றுகின்றனர் என்பதோடு வெளிநாட்டு வருவாயில் இவர்களின் பங்கு 55%- 60% ஆகும். நாளாந்தம் 800பேர் வெளிநாட்டு வேலை நிமித்தம் இலங்கையைவிட்டு வெளியேறுகிறார்கள் (Dr. P.B.Jayasundera,2014). அரசாங்கமும் வெளிநாடுகளுக்கு சென்று பணிபுரிவதன் ஊடாகக் கிட்டும் வருவாயைக் கவனத்தில் கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவித்து பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகிறது. இவ்வருமானம் ஏற்றுமதியின் வீதமாக 2012, 2013களில் முறையே 48.7%, 43.9% ஆகும்.

அட்டவணை 1.3 வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்-2013

(Rs.million)

| நாடு | இலங்கையர் | இலங்கைத் தமிழர் |
|---|---|---|
| சவூதி அரேபியா | 600,000 | |
| ஐக்கிய இராச்சியம் | 500,000 | 220,000 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 300,000 | |
| குவைத் | 300,000 | |
| கனடா | 300,000 | 250,000 |
| இந்தியா | 200,000 | 100,000 |
| பிரான்ஸ் | 150,000 | 50,000 |
| கட்டார் | 100,000 | |
| அவுஸ்ரேலியா | 100,000 | 53,000 |
| லெபனான் | 100,000 | |
| ஜேர்மனி | 60,000 | 60, 000 |
| சுவிஸ்லாந்து | 55,000 | 50,000 |
| இத்தாலி | 50,000 | |
| தென்கொரியா | 20,000 | |
| ஜப்பான் | 20,000 | |
| நோர்வே | 13,772 | 10,000 |
| டென்மார்க் | 13,396 | 9,000 |
| நெதலாந்து | 25,000 | 20,000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இஸ்ரேல் | 7,500 | |
| நியூசிலாந்து | 7,257 | |
| சுவீடன் | 6,733 | |
| மலேசியா | | 24,436 |
| ஏனையவை | | |
| மொத்தம்(மதிப்படிப்பட்டது) | 3,000,000 | 887,000 |

மூலம்: Central Bank of Sri Lanka 2014,

இவர்கள் தாய் நாட்டிலுள்ள தம் உறவுகளுக்கான அடிப்படைத் தேவைகளுக்கும் ஆடம்பரங்களுக்கும் பெருமளவு நிதியை அனுப்பியிருக்கிறார்கள். தற்போதும் அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் எண்ணிக்கை மற்றும் இவர்கள் அனுப்பும் பணம்இ பொருள் என்பன அதிகரித்தும் செல்கின்றன. இதனால் இவர்களின் அநேக குடும்பங்கள் செல்வம்இமதிப்புஇ சமூக அங்கீகாரம் மற்றும் அதிகாரம் என்பவற்றைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதாவது இங்கு வெளிநாட்டுப் பணவருவாயானது இதனைப் பெறும் குடும்பங்களுக்கும் ஏனைய குடும்பங்களுக்கும் இடையில் சமூகப் பொருளாதார நிலைகளில் பல்பரிமாணம் கொண்ட இடைவெளியினை உருவாக்கியுள்ளது. இவ்அனுப்புதல்களில் 90% உணவுஇ உடைஇ வசிப்பிடம்இ சுகாதாரம் மற்றும் கல்விக்கு செலவிடப்படுகின்றது.

அட்டவணை 1.4

**US dollars million**

| பிராந்தியம் | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்தியகிழக்கு | 868 | 1089 | 1234 | 1451 | 1745 | 1995 | 2474 | 3030 | 3358 | 3562 |
| ஐரோப்பிய யுனியன் | 286 | 355 | 411 | 500 | 525 | 603 | 724 | 885 | 1071 | 1160 |
| தூரகிழக்கு ஆசியா | 76 | 86 | 110 | 135 | 175 | 203 | 247 | 401 | 509 | 557 |
| ஏனைய ஐரோப்பா | 129 | 135 | 143 | 135 | 128 | 148 | 177 | 232 | 275 | 308 |
| வடஅமெரிக்கா | 105 | 125 | 119 | 105 | 114 | 127 | 140 | 154 | 174 | 186 |
| தெ.கி.ஆசியா | 32 | 38 | 52 | 75 | 90 | 100 | 144 | 206 | 263 | 288 |
| அவுஸ்ரேலியா நியுசிலாந்து | 23 | 29 | 28 | 33 | 55 | 57 | 82 | 103 | 132 | 147 |
| தென் ஆசியா | 13 | 19 | 22 | 25 | 32 | 40 | 58 | 51 | 90 | 83 |
| தென் மத்திய அமெரிக்கா | 15 | 19 | 22 | 20 | 23 | 28 | 35 | 41 | 48 | 58 |
| ஏனையவை | 18 | 24 | 22 | 23 | 29 | 30 | 35 | 41 | 66 | 58 |
| மொத்தம் | 1564 | 1919 | 2161 | 2502 | 2918 | 3330 | 4116 | 5145 | 5985 | 6407 |

*Source* : Central Bank of Sri Lanka 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு சம்பாத்தியங்களின் போக்கு

இலங்கையின் வடக்கில், பெரும் பான்மையாக தமிழர்கள் வாழும் யாழ்ப்பாணமானது, ஐந்து மாவட்டங் களையும் 8,884.11 ச.கி.மீ பரப்பளவையும் கொண்ட வட மாகாணத்தில் 1,025.2 ச.கி.மீ அளவில் சிறியதாகவும் 583,378 என மக்கள் தொகையில் பெரியதாகவும், 15 பிரதேசச் செயலகங்கள் மற்றும் 435 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டிருப்பதோடு (புள்ளிவிபரத் திணைக்களம்,2014) முன்னர் இரண்டாவது பெரிய நகரமாகவும் பொருளாதார மையமாகவும் காணப்பட்டது. இலங்கையில் தமிழர்கள் வடக்கு, கிழக்கு, மலையகம், தென்னிலங்கை என பரந்து வாழ்ந்து வருகின்றனர் எனினும் இலங்கை மக்கள் மத்தியில் முதலாளித்துவ, அரசியல் உறவுகள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்திலிருந்து யாழ்ப்பாண சமூகமே முழுத்தமிழ் சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்வதான ஒரு தோற்றப்பாட்டினைக் கொண்டிருந்தது (சிவத்தம்பி,1995). இதற்கு வன்னி மற்றும் கிழக்குப் பிரதேச மக்கள் விவசாயத்திலும் கடற்தொழிலிலும் தமது முழுக்கவனத்தைச் செலுத்தியிருந்த காலத்தில் கல்வியை மட்டும் நம்பியிருந்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மாவட்டமாக யாழ்ப்பாணம் திகழ்ந்ததுடன் பொருளாதாரத் துறைகளில் ஏனைய தமிழ் பிரதேசங்களைவிட உயர்ந்திருந்ததும் அரசியல் தலைவர்களும்சரி விடுதலைப் போராட்டத் தலைவர்களும்சரி யாழ்ப்பாண மண்ணிலிருந்தே அறியப்பட்டதும் சில காரணங்களாகும்.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்றிருந்த யாழ்ப்பாணம் அரசியல் தந்திரோபாயங்கள், பேதப்படுத்தலுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் உள்நாட்டுப் போர் காரணமாகப் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டு உரிய வளர்ச்சியைப் பெறவில்லையென்பதோடு இம்மக்களது பொருளாதார, சமூகஇ மதக் கட்டமைப்புக்கள் சிதைவுற்றுள்ளன. போர் என்றால் முதலில் பாதிக்கக்கூடியது பொருளாதாரம் என்றவகையில் போரின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் இப்பிரதேச சமூகத்தின் கட்டமைப்பு, நிறுவனங்கள், பொருண்மிய ஆளுமை, மூலதனவாக்கம், தொழிற்திறன், தொழிற்துறை, வளங்களைக் கட்டுப்படுத்தும் உரித்தாளுமை ஆகிய பரிமாணங்களில் மிகமோசமான பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தம் முடிவடைந்து ஆறு வருட ங்கள் கடந்த, போரின் பின்னர் வடக்கு வளர்ச்சியடைகிறது எனக் கூறப்பட்டுவரும் மற்றும் பல் வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் வடக்குப் பிரதேசத்தில் முன்னெடுக்கப் பட்ட நிலையிலும் பொருளாதார வளர்ச்சி மீட்சி பெறவில்லை என்பதோடு இன்றும் தொழிற்துறைகுறைந்தபட்சவளர்ச்சிஇலக்குகளைக்கூட அடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு வாழ் மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்தி எதிர்பார்த்த அளவில் அதிகரிக்கவில்லை என்பதும், வடமாகாண அபிவிருத்தி தேசிய அபிவிருத்தியில் இருந்து ஓரம் கட்டப்பட்டிருக்கிறது என்பதும் இன்று பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். மூன்று தசாப்த ஆயுதப் போராட்டத்தை காரணம் காட்டி வடக்கு அபிவிருத்தி விடயங்களுக்கு ஒதுக்கியளிக்கப்பட வேண்டிய மூலவளங்கள் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு வினைத்திறனற்ற மூலவள ஒதுக்கீடுகளாக பயன்படுத்தப்பட்டதுடன் உற்பத்தி ஆற்றல் அளவுக்குக் குறைவாகவும் காணப்பட்ட வடபகுதி அபிவிருத்திமீது தற்போதும் சிறப்பான கவனம் செலுத்தப் படவில்லை.

போரின் பின்னர் அரசு பிரதான மாக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதிலேயே அதிகளவு சிரத்தை காட்டி வருகின்றது. சமூக அரசியல் பிரச்சனைகள் குறித்து அரசு உரிய கவனம் செலுத்தவில்லை. இங்கு கொள்கை நடைமுறையாக்கத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மல்காந்தி விக்கிரமசிங்க, 2014). அரசினால் மேற்கொள்ளப்படும் உட்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகள் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிசெய்யும் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் பெருமளவில் வடபகுதியில் கட்டுமானப் பணிகளில் மட்டும் ஏற்படுத்தப்படும் அபிவிருத்தியானது எதிர்காலத்தில் முறையான பயனைத்தரும் என்பது சந்தேகமான ஒன்றாகும். முன்னெடுக்கப்படும் துரித கட்டுமான அபிவிருத்தியானது, ஏனைய போரின்பின் மீண்டெழும் நாடுகளைவிட மேலானது எனக் காண்பிக்கின்றபோதிலும், இப்பிரதேச பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மந்தகதியிலேயே உள்ளன. காரணம் இக்கட்டுமான திட்டமிடுதல்கள் மக்கள் நலன்களுக்காக மட்டும் செயற்படுத்தப் படுவது இல்லை என்பதுதான்.

போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தை வேகமாக அபிவிருத்தியடையச் செய்வதற்குப் போதுமான நிதியினை இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. அதாவது பற்றாக்குறையான வளங்களை பல்வேறு துறைகளுக்கிடையே பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது. இந்தவகையில் செழுமையான விவசாய நிலங்கள், பழங்கள், மரக்கறிவகைகள், கால்நடைகள், மீன்பிடி, பனம்பொருட் கைத்தொழில்கள், முருகைக் கற்பாறைப் படிமங்கள், கனிமங்கள், கவர்ச்சியான கடற்கரைகள் என பல மூலவளங்களைக் கொண்டிருந்தும் தற்போதும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வடமாகாணத்தின் பங்கு மிகக் குறைவாக அதாவது இறுதி நிலையில் உள்ளதுடன் இதனால் இலங்கையில் ஆகக் குறைந்த தலா வருமானம் பெறும் மாகாணமாக வடமாகாணம் காணப்படுகிறது. இது நாடொன்றினுள்ளான பிரதேச வளங்கள் அனைத்தும் அந்நாட்டு அரசின் சமபார்வைக்குட்படாது ஏற்றத்தாழ்வுடைய வகையில் அதன் அக்கறைக்குட்படுமாயின் பொருளாதாரம் பிரதேசத்திற்கு பிரதேசம் மாறுபடுவதற்குரிய சாத்தியக்கூறுகள் அதிகமாகின்றன (வி. நித்தியானந்தம், 2 ) என்பதைக் காட்டுகின்றது.

2012ம் ஆண்டு 3,292 பில்லியன் ரூபா பெறுமதியான உள்ளூர் உற்பத்திகள் மேல் மாகாணத்தில் இடம் பெற்றிருக்க வடமாகாணத்தில் 305 பில்லியன் ரூபா பெறுமதியான உள்ளூர் உற்பத்திகளே இடம் பெற்றுள்ளது. அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 45.8 மூ பங்கினை மேல்மாகாணம் வழங்க, வடமாகாணம் 4% என பின்தங்கிய மாகாணங்களில் முதல் மாகாணமாக அதாவது இறுதி நிலையில் காணப்படுகிறது. இவ் 4% எனும் உயர் வளர்ச்சிகூட வடமாகாணத்தில் வங்கிச் சேவைகளை விரிவாக்கியவகையில் அதாவது 2012இல் 25 புதிய வங்கிக் கிளைகளை நிறுவியமை சேவைத்துறையூடாக பெரும்பங்கை வகித்தமை மற்றும் கைத்தொழில்துறையினாலேயாகும். மாகாணங்கள் 2013இல் பெற்றுக் கொண்ட தலைக்குரிய வருமானங்களின் அடிப்படையில், மேல் மாகாணம் (ரூ.430,000), தென்மாகாணம் (ரூ.241,000), வடமேல் மாகாணம் (ரூ.225,000) என முன்னிலை வகிக்கையில் வடமாகாணம் பின்தங்கிய நிலையில் (ரூ.161,000) என காணப்படுகிறது (மத்திய வங்கி 2014 ).

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டமே தொழிற்படையில் பங்காற்றுவோர் வீதம் (37.1%) மற்றும் பால்நிலையடிப்படையில், தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு (16.7%) குறைந்த மாவட்டமாக உள்ளது. அதாவது இலங்கையில் பௌதீக வளங்களை முழுமையாகப் பயன்படுத்தாது தங்கிவாழ்வோர் அதிகமாக உள்ள மாவட்டம் யாழ்ப்பாணமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.5 மாகாண மொ.உ.உற்பத்திப் பங்கு (வீதம்)

| மாகாணம் | 1995 | 1997 | 1999 | 2001 | 2003 | 2005 | 2007 | 2009 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மத்திய | 11.7 | 10.5 | 9.2 | 9.4 | 9.8 | 8.5 | 9.6 | 9.8 | 9.8 | 9.8 |
| கிழக்கு | 4.6 | 5.0 | 5.0 | 5.0 | 5.5 | 4.9 | 5.2 | 5.8 | 5.7 | 6.3 |
| வடமத்திய | 63 | 4.0 | 4.1 | 3.7 | 3.9 | 4.3 | 4.0 | 4.6 | 4.6 | 4.7 |
| வடக்கு | 3.1 | 2.8 | 2.5 | 2.4 | 2.7 | 3.1 | 2.9 | 3.2 | 3.7 | 4.0 |
| வடமேல் | 9.6 | 12.1 | 10.4 | 10.7 | 9.5 | 9.0 | 9.9 | 9.6 | 10.6 | 9.6 |
| சப்பிரகமுவ | 7.7 | 7.6 | 6.4 | 6.4 | 6.1 | 6.4 | 6.4 | 6.1 | 6.2 | 6.2 |
| தென் | 9.5 | 8.8 | 9.6 | 9.7 | 9.3 | 9.0 | 10.5 | 10.5 | 11.1 | 11.5 |
| ஊவா | 7.7 | 5.0 | 4.1 | 4.6 | 4.4 | 4.5 | 4.9 | 4.5 | 4.5 | 4.5 |
| மேல் | 42.3 | 44.3 | 48.7 | 48.3 | 49.7 | 50.4 | 46.5 | 45.8 | 44.4 | 43.4 |
| இலங்கை | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

*Source* : Central Bank of Sri Lanka 2013

1980கள் வரையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 15% பங்களிப்பினை வடகிழக்கு மாகாணங்கள் இணைந்து வழங்கியிருந்ததுடன் மேல்மாகாணத்திற்கு அடுத்தடுத்த நிலைகளில் காணப்பட்டிருந்தது. 1983இல் வடபகுதியின் அதிஉச்ச மீன்பிடி காரணமாக நாட்டின் 40 சதவீதத்திற்கும் அதிகமான மீன் உணவுத் தேவையை வடபகுதியின்15 சதவீத மீனவர்களே பூர்த்தி செய்தனர் என்பதும் நாட்டின் வெங்காய மற்றும் மிளகாய் பயிர்ச்செய்கைப் பரப்பில் முறையே 55.5, 22.1சதவீதத்தை கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது (குடிசனஇ புள்ளிவிபரவியல் திணைக்களம் 1983).

1983க்கு முன்னர் அரிசி, காய்கறி, வெங்காயம், உருளைக்கிழங்கு, மாம்பழம், புகையிலை என்பவற்றில் யாழ்ப்பாணம் கொண்டிருந்த செழிப்பால் இவை தெற்கிற்கும் அனுப்பப்பட்டுக் கொண்டிருந்ததோடு கைத்தொழில்களும் சேர்ந்ததான யாழ்ப்பாணப் பொருளாதாரம் இலங்கையின் GDP யில் ஒரு பிரதான பங்களிப்பைக் கொண்டிருந்தது. எனினும் சீமெந்து, மின்தறி ஆலைகள், எரிசோடா(Caustic soda)இகண்ணாடி, அலுமினிய, ஐஸ் உட்பட ஏனைய சிறிய நடுத்தர கைத்தொழில்களும் போரால் அழிந்து போயின ( Kandiah Kularatnam, 2001).

வெளிநாட்டில் வசிப்பவர்களின் தாய் நாட்டிற்கான மிகப்பெரும் பங்களிப்பு பண அனுப்புதல்களே என்ற வகையில் பண அனுப்புதல்கள் வடக்கு சமூகம் நிலைத்திருப்பதற்கு முக்கியமானதொன்றாகியது (Cheran,2010). வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்பப்பட்டிருக்காவிட்டால் தமிழர்களில் பெரும்பான்மையினர் வறுமைக்குள் தள்ளப்பட்டிருப்பர். இந்தவகையில் பல தசாப்தங்களாக வெளிநாட்டுப் பணம் யாழ்ப்பாணத்தவர்களின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதை அவதானிக்க முடிகிறது. இன்று யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதாகச் சொல்லப் படும் போதிலும் பொதுவாக யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களிடத்தே தாங்களும் வெளிநாடு போயிருந்திருக்க வேண்டும் என்ற எண்ணமும் தாம் வெளிநாடுகளுக்கு போய்விட வேண்டும் என்ற விருப்பமும் மேலோங்கியுள்ளதால் பலரும் பல்வேறு காரணங்களால் தற்போதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடு செல்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதற்கு வெளிநாட்டிலுள்ள குடும்ப உறுப்பினர் மேலும் ஒரு உறுப்பினரை வரவழைத்துக் கொள்ளும் பொறுப்பை எடுத்துக் கொள்ளும் சங்கிலி முறை இயக்கமும் காரணமாகிறது.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயம் தமிழர்களில் பெருந்தொகையினர் நாட்டில் யுத்தம் தொடங்கியிருக்காவிட்டால் நிச்சய மாக வெளியேறியிருக்கமாட்டார்கள் என்ப தாகும். யுத்தகால பொருளாதாரச் சீரழிவில் யாழ்ப்பாணம் ஓரளவில் தப்பித்ததற்கு பெரும் காரணம் உள்ளூரிலேயே சுழன்ற பொருளாதாரம், சேமிப்பு, சேமித்ததில் செலவு செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு மற்றும் பண அனுப்புதல்களுமே. தற்போது அனைத்து வர்க்கத்திடமும் சேமிப்பதில் உள்ள ஆர்வம் குறைய ஆரம்பித்துள்ளது. நாளைய வருமானத்தை இன்றைக்கே செலவு செய்யும் ஆடம்பர வாழ்க்கைக்குள் சென்று கொண்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டுப்பண அனுப்புதல்களால் வடபகுதி மக்களிடம் பணப் புழக்கம் அதிகரித்துள்ளது. எனினும் இவ்வருமானம் பெறும் அனைவரதும் பொருளாதாரம் அடிப்படையில் ஏற்றம் கண்டுள்ளது எனக் கூறிவிட முடியாது. வெளிநாட்டில் எப்படி அதிகம் சம்பாதிப்பது என்பதில் அதிக கவனம் எடுத்துக் கொள்ளும் உழைப்பாளர்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருமானம் பெறும் அல்லது அதிகம் எதிர்பார்க்கும் பயனாளிகள் இவ்வருமானத்தை பயன்தரக்கூடிய வழிகளில் செலவீடு செய்வதில் அக்கறை கொள்வதில்லை.

ஒருகாலத்தில்கடினஉழைப்பாளிகளாகவும், கல்வியில் உயர்நிலையிலும் இருந்த யாழ்ப்பாண மக்கள் இன்று வெளிநாடுகளில் உள்ள உறவினர்கள் அனுப்பும் பணத்தைப் பெற்று ஆடம்பர வாழ்க்கை வாழ்வதில் நாட்டம் கொண்டுள்ளனர். மக்களிடையே எதிர்பார்ப்பும் தங்கியிருக்கின்ற நிலைமையும் அதிகம் வளர்ந்திருக்கின்றது. மிகவும் ஆடம்பரமானவை எனப்பட்ட பலவிடயங்கள் இன்று மிகவும் அத்தியாவசியம் என்பதாக மாறியுள்ளதை கிராமம், நகரம் இரண்டிலும் காணலாம். இதனால் இங்கு வெளிநாட்டுப் பணத்தைக் கொண்ட முதலீடுகளைவிட நுகர்வுக் கலாச்சாரமே அதிகரித்துள்ளதுடன் பலரின் உழைப்பின் அவசியத்தையும் இது இல்லாததாக்கிவிட்டது. மில்லியன் கணக்கான பணம் செலவிடப்படுகின்றது. இதனால் ஏனைய பிரதேசங்களின் வர்த்தக விரிவாக்கத்தினை தாங்கிப் பிடிக்கும் நுகர்வுச் சந்தையாக வடக்கு மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

காலனியாதிக்கத்தில் இலங்கையின் சொத்து பிற நாடுகளுக்குச் சென்றதுபோல் தற்போது யாழ்மாவட்டத்தின் வருமானம் பிறநாட்டு மற்றும் ஏனைய மாகாணப் பொருட்கள், சேவைகளை அதிகம் நுகர்வதால் வெளிநோக்கிச் செல்கிறது. வங்கிகளின் தலைமையலுவலகங்கள் மற்றும் பங்குதாரர்கள் மேல்மாகாணத்தினரே. இந்தவகையில் வங்கி வருமானம், இலாபம், முதல் பெருக்கம் மற்றும் முதலீடு என அனைத்தும் மேல்நோக்கிச் செல்கிறது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் கிளையை நிறுவியிருக்கும் வெளிநாட்டு வங்கியொன்று வைப்பாக ஒரு பில்லியன் ரூபாவைத் திரட்டியிருந்தபோதும் ஒரு கடனைக்கூட வடக்கிற்கு வழங்காது, அதற்குப் பதிலாக, கட்டாயப்படுத்தல் காரணமாக அப்பணத்தை கொழும்பிற்கு மாற்றம் செய்தது இவ்வங்கி CEOக்கு ஒரு குற்ற உணர்வைக் கொடுத்திருந்தது (Dheerasinghe, 2014).

பிற நாடுகளில் தேய்ந்துவரும் பொருளா தார நிலையும், உள்நாட்டு அரசியல் பொருளாதாரச் சிக்கல்கள், வெளிநாட்டில் குடும்பமாக நிரந்தரமாகக் குடியேறல், பணம் அனுப்புபவர்களின் இரண்டாவது மூன்றாவது சந்ததிகளின் மனப்பாங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வதியும் நாட்டு அரசியல்-பொருளாதார-கலாச்சாரத்தில் இரண்டறக் கலந்து தேசியமாகிவிடல், காலப்போக்கில் நிரந்தர வெளிநாடுவாழ் - யாழ்ப்பாண உறவுத் தொடர்புகள் மெதுவாக, முற்றாக அற்றுப் போவதற்கான வாய்ப்புகள் காரணமாக பண அனுப்புதல்கள் குறைவடையும் சாத்தியங்கள் உள்ளன.

பண அனுப்புதல் குடும்ப மற்றும் சமூகத்திற்கான கடமை எனப் பார்க்கப் பட்டாலும் இது முதலீட்டிலிருந்தான வருவாய் என்றும் பார்க்கப்பட்டிருக்க வேண்டும்/ பார்க்கப் படலாம். பல குடும்பங்கள் தம் சேமிப்பு, சொத்துக்களை வைத்து அல்லது கடன்பட்டே ஒருவரை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளன. எனவே இது ஒரு முதலீடு. இவ்முதலீட்டை திரும்பப் பெற முடியாத நிலையில் முதலீட்டு வலுமானத்தை தக்கவழியில் செலவிட வேண்டும். அகதிகளாக உலகெங்கும் பரவி வாழ்ந்த யூதர்கள் பொருளாதாரத்துறை மூலம் வசித்த நாடுகளில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டதோடு தாய் நாட்டுக்கான பங்களிப்பையும் திட்டமிட்ட செயற்பாடுகள்மூலம் தவறாது செய்ததால்தான் இன்று உலகப் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள்.

எனவே தற்போதைய யுத்தமற்ற சூழலில் வடக்கைப் பொறுத்தவரை பிரதானமாகத் தெரியும் அரசியலுக்கு அப்பால், கிடைக்கப் பெறும் வெளிநாட்டு நிதி மூலங்கள், இவ்வாறான நிதி மூலங்களை இப்பிரதேசத்தின் பொருளாதார நன்மை கருதி பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் அவ்வாறாயின் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை ஆய்விற்குட்படுத்துவது அவசியமாவதால் இவ்ஆய்வு இதனை நிறுவ முற்படுகின்றது.

### 8. தொகுப்புரை

நிதிநிலையில் இலங்கை வெளிநாட்டில் தங்கியிருப்பதுபோல் யாழ்ப்பாணம் வெளிநாட்டுப்பண அனுப்புதல்களில் தங்கியுள்ளது. யாழ்ப்பாணப் பொருளாதா ரத்திற்கு வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் தேவை. இவை இங்குள்ள மக்களின் அபிவிருத்தி அதாவது புனர்வாழ்வு புனரமைப்புக்கும் விவசாயம், கடற்தொழில், கைத்தொழில், சேவைத்துறைகள், கல்வி வேலைவாய்ப்பு உருவாக்கம், சுகாதாரம் போன்ற துறைகளை மேம்படுத்துவதற்கும் ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியமாகும். யாழ்ப்பாண மக்கள் மற்றும் இவர்களின் வெளிநாடுவாழ் உறவுகள் தமது முன்னுரிமைப் பட்டியலை ஆராய்ந்து பூரணமாக மாற்றியமைக்க வேண்டும். மனிதவளம் சிறப்பாக உள்ள மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதாரப் பங்களிப்பு பின்னிலையில் இருப்பது முரண்பாடான நிலையாகும். இலங்கைப் பொருளாதாரத்தை சீர்செய்யவும் வடபுலத்தை மீளக் கட்டியெழுப்பவும் வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிக்கப்படுவதுதான் மாற்றுவழி என அரசும் கணிப்பிடுகிறது.

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பணத்தைக் கொண்ட முதலீடுகளைவிட நுகர்வுக் கலாச்சாரமே அதிகரித்துள்ளதுடன் பலரின் உழைப்பின் அவசியத்தையும் இது இல்லாததாக்கி விட்டது. இப்போது அனேகமானவர்கள் கூலி வேலைக்குச் செல்வதற்கு தயாராக இல்லை. வெளிநாட்டுப் பணம் உள்ளூர் தொழிலை நம்பியிருக்க வேண்டிய அவசியத்தைக் குறைக்கிறது. அதேநேரம் வசதியான இருப்பிடம் முக்கியமாகின்றது. தேவைக்கு அதிகமாக அல்லது என்ன தேவைக்கு என்று தெரிந்து கொள்ளாமலும் பணம் அனுப்பப்படுவதால் வாழ்வாதாரத்திற்கு மேலாகக் கிடைக்கும் வெளிநாட்டு வருமானத்தில் பெரும் பகுதி விலையுயர்ந்த ஆடைகள், தங்க நகைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகட்டுதல் அல்லது திருத்துதல் அல்லது தேவையற்ற விஸ்தரிப்புக்கள் மற்றும் அலங்காரங்கள், ஆடம்பர களியாட்ட வீட்டுநிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள், கோவில் புனருத்தாரனம், மோட்டார் சைக்கிள்கள், தேவையற்ற இலத்திரனியல் பொருட்களின் கொள்வனவு, இணைய மற்றும் கைத்தொலைபேசிகள் பாவனை என அளவுக்கு மீறிய ஆசை, வருவாய்க்கு மீறிய செலவு என்பதாக நியாயமற்ற ஆடம்பர வாழ்வில் செலவு செய்யப்படுகின்றது.

தற்போது நடுத்தர வர்க்கத்திடமும் சேமிப்பதில் இருக்கும் முனைப்பு குறைய ஆரம்பித்துள்ளது. நாளைய வருமானத்தை இன்றைக்கே செலவு செய்யும் ஆடம்பர வாழ்க்கைக்குள் வாழ்வதாகத் தெரிகிறது. கடந்த கால பொருளாதாரச் சீரழிவில் இருந்து யாழ்ப்பாண மக்கள் தப்பித்ததற்கு பெரும் காரணம், உள்நாட்டிலேயே சுழன்ற பொருளாதாரமும்,சேமித்ததில் செலவு செய்ய வேண்டும் என்ற மனப்பாங்கும். இங்கு மூலதனத் திரட்டலை உந்திவிடக்கூடிய செயற்பாடுகள் மூலம் சேர்க்கப்பட்டிருக்கக்கூடிய அளவிற்கு வெளிநாட்டுப் பணவருகை இருந்தும், பெரும் பகுதி நுகர்வுக்குப் போக மிகுதி பாரம்பரிய பாதுகாப்பான முதலீட்டுத் திட்டங்களான நிலையான வைப்பு, காணி, வீடு, தங்க முதலீடுகள் என பணம் முடக்கப்பட்டதே தவிர வேறு முதலீட்டுத் திட்டங்களில் ஈடுபாடு குறைவானதாகவே உள்ளது. குடா நாட்டில் துரிதகதியில் கடைவிரித்திருக்கும் நிதி நிறுவனங்களின் குறியும் இங்கு குவிந்திருக்கும் மக்களது பணத்திலும் தங்க நகைகளிடத்திலும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.

வெளிநாட்டில் எவ்வாறு அதிகம் சம்பாதிப்பது என்பதிலும் வெளிநாட்டிலிருந்து அதிக வருமானம் பெறுவதிலும் அதிக கவனம் கொள்பவர்கள் தம் வருமானத்தை எவ்வாறு பன்மடங்காக்குவது அல்லது வாழ்வாதாரதைத் வளமாக்கும்வகையில் செலவீடு செய்வதில் அதிக அக்கறை கொள்வதில்லை அல்லது சரியான அறிவும் திறமையும் கொண்டு செயற்படாது வங்கிகளில் நிலையான சேமிப்பு வைப்புகளில் இட்டு தம் உழைப்பை வங்கி மூலம் தமக்குத் தெரியாத பலருக்கு கடன் கொடுத்து அவர்கள் முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்து பலரை பணக் காரர்களாக்குகிறார்களேயொழிய தாம் பன்மடங்கு இலாபம்தரக்கூடிய வழிகளில்முதலீடு செய்யும் வழிகளை ஆராய்வதில்லை. இலங்கைப் பொருளாதாரத்தை சீர்செய்யவும் வடபுலத்தை மீளக் கட்டியெழுப்பவும் நேரடி முதலீடு அதிகரிக்கப்படுவதுதான் மாற்றுவழி என அரசும் கணிப்பிடுகிறது.

எனவே போருக்குப் பின்னரான வடபகுதிக்கான பொருளாதார மீள்கட்டு மானம், முதலீடு, வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி போன்றவற்றிற்கு வெளி நாட்டுப் பண அனுப்புதல்கள் போதியளவு பங்களிப்புச் செய்யவில்லை. யாழ்ப்பாண மாவட்டம் கொண்டுள்ள சிறந்த கல்வித்திறன் கொண்ட மக்கள், இப்பிரதேசம் கொண்டுள்ள பொருளாதார வளங்கள் மற்றும் வெளிநாட்டு நிதிவளம் என்பவற்றை திட்டமிட்டமுறையில் முறையாகப் பயன்படுத்தினால் விவசாய மும் கைத்தொழிலும் பெருமளவு அபிவிருத்தியடையும் என்பதோடு அதற்குரிய வாய்ப்புக்களும் உள்ளன. மக்கள் தம் பிரதேச அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டு உழைப்பார்களேயானால் இப்பிரதேசத்தை மிக விரைவாக சுயநிறைவுப் பொருளாதார வளம் கொண்ட பகுதியாக மாற்றிட முடியும். இதற்கு வெளிநாட்டுவாழ் தமிழர்கள் மற்றும் இங்கிருந்து சிபாரிசு மற்றும் ஆலோசனைகளை வழங்குவோர் தம் முன்னுரிமைப் பட்டியலை ஆராய்ந்து பூரணமாக மாற்றியமைக்க வேண்டும். எனது பாடசாலை, எமது கோவில், எனது கிராமம் எனும் குறுகிய வட்டத்தில் ஏற்றத் தாழ்வுகளை உண்டாக்கும் உதவிகளை வரையறுத்துக் கொள்ளாது ஒருங்கிணைந்த வேலைத் திட்டங்களை உருவாக்கிச் செயற்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வடபகுதி ஏற்படுத்தியிருந்த பயம் காரண மாக பொதுமுயற்சியில் அக்கறையின்மை, சமூகத் தில் விருப்பமின்மை, சுயமுயற்சியின்மை போன்ற விடயங்களிலிருந்து மக்கள் வெளிவர வேண்டும். இவற்றிற்கு வெளிநாட்டுவாழ் தமிழர்கள்தாம் வசிக்கும் நாடுகளின் வாழ்வியல் அனுபவங்கள்இ புதிய சிந்தனை முறைகள், தொழில் அனுபவங்கள், புகுத்தப்படக்கூடிய நல்ல செயற்திறன் கொண்ட வழிவகைகள் என்பவற்றை இங்குள்ளவர்களுக்கு மாற்றீடு செய்தல் மற்றும் அறிமுகப்படுத்தல் மூலம் போர்க்கால இடைவெளி மற்றும் பாதிப்பைக் குறைத்து ஒரு பாய்ச்சலை ஏற்படுத்த முடியும். யாழ்ப்பாணம் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் தீர்க்கக் கூடியவை. ஆனால் அதற்கான முயற் சிகள் அரசால் எடுக்கப்படுகிறதா என்பதுதான் இப்போதைய பிரச்சனை. உழைப்பினால் மனிதர்கள் உயர்வர் இந்நாடும் உயரமுடியும் என்று காட்டிய உன்னத நகரம் டோக்கியோ. யாழ்ப்பாணத்தின் எதிர்காலம் யாழ்ப் பாணத்தவர்களின் கைகளில்தான் உள்ளது.


1. உசாத்துணை நூல்கள்

2. Asia Foundation.,(2011) National Values survey Sri Lanka, 2011, Colombo.
3. Ashok, Mehta., (2000) Sri Lanka ethnic conflict, how eelam war won, centre for land warfare studies, New Delhi, ndia.
4. Ahilan Kadirkamar., (2010) Classes, states and politics of Tamil Diaspora, Economic and political weekly, vol 45 issue No 31 July, 2010.
5. Ahilan Kadirkamar., (2010) Role of Diaspora in homeland conflicts, conflict resolution post- war reconstruction: the case of Tamil Diaspora and Sri Lanka,
6. Cheran R .,( 2003), Diaspora circulation and transnationalism as agents for change in the post conflict zones of Sri Lanka*, p.8
7. Central Bank of Sri Lanka., (2013) Annual report 2013.
8. Dheerasinghe K.G.D.D., (2014), Sunday leader, 22.08.2014.
9. Fuglerut,O., (1999), Life on the outside, The Tamil Diaspora and Long -Distance Nationalism, London Pluto Press.
10. Luxshi ,Vimalarajah., and R. Cheran., (2010) Empowering Diasporas The Dynamics of Post-war Transnational Tamil Politics, Berghof Occasional Paper No. 31, Berghof Conflict Research Altensteinstraße 48a D–14195 Berlin, Germany.
11. Kandiah, Kularatnam., (2001) Where hope fights to live, Sundaytimes, 22.July, 2001
12. Karunaratne, W.M.,(2011) Daily news, 22/01/2001. Central Bank Assistant Governor. Sri Lanka
13. Mason, R., Hyman, I., Berman, H., Guruge, S., Kanagarathnam, P., and Manuel ,. L (2008)" Violence is international Language " Tamil women's perception of intimate partner violence, violence against women, Vol 14, 1397-1412.
14. Michal, Calavan., (2011) A brief report on the business environment of Bandarawela town, political -economy profiles, Asian foundation, Colombo.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. Ralph, Chami., Connel Fullenkamp and Samir Jahah., (2011) Are immigrant remittance flows a source for development, working paper, No Wp/03/189, IMF
16. Santhirasegaram, S., (2012) A study on financial capacity of rural Jaffna from dowry system for economic development, Jaffna University International Research Conference, July 20-21, 2012, Proceedings of abstract, p.248, Sri Lanka
17. Santhirasegaram, S., (2013) Dowry and Women's Empowerment in Rural Jaffna of Sri Lanka, 3rd International Conference on Education and Information Management (ICEIM): Potential for Business Innovation, held at Hotel Grand Continental, Langkawi, Malaysia on 15-16 June 2013, pp.219-224,
18. Tharmalingam, S., (2011) Homeland Orientation of war -torn diasporas: Remittance and cultural practices of Tamils and Somalis in Norway, Series of dissertations, submitted to the faculty of social sciences, University of Oslo No 277.
19. *கார்த்திகேசு, சிவத்தம்பி., (1995) யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு - ஓர் இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டம்., சுதந்திர இலக்கிய விழா அமைப்பு குழு, கொழும்பு*
20. *விசாகசுந்தரம், நித்தியானந்தன்., (2003) இலங்கையின் பொருளாதார வரலாறு, வடக்கு கிழக்கு பரிமாணம், உயர் கல்வி சேவை நிலையம், யாழ்ப்பாணம்.*
21. UNHR (2001) Global Report 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோம்புப் பதிவுகள் வெளிப்படுத்தும் கோயிற்சொத்துடமை: வடகிழக்கிலங்கை கோயிற்குடியிருப்புக்களின் பிரதான தளமாக தம்பலகாமம் - ஆதிக்கோணநாதேஸ்வரம்

செல்லையா கிருஷ்ணராசா

**ஆய்வுச்சுருக்கம்**

தென்னாசியாவில் கோவில்கள் மனித வாழ்வின் உயிரோட்டமான மையங்களாகத் திகழ்ந்து வந்திருக்கின்றன. அவை காலங்களினூடே அவ்வவ் பிரதேச மக்களது வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இத்தொழிற்பாடானது தென்னாசியப் பிராந்தியத்தில் மனித நாகரிக வாழ்வின் ஆரம்பம் முதற்தொட்டே நிலைத்து வந்தமையையும் காணமுடிகின்றது. இப்பின்னணியில் தென்னாசியாவின் தென்கோடியில் விரவிக் காணப்படும் தொன்மை வாய்ந்த இந்துக்கோவில்களின் பங்களிப்புக்கள் பன்மொழி பேசும் மக்களது வாழ்வியலின் ஜீவனோபாய அடிப்படைகளை உருவாக்கிக் கொண்டிருந்தமையை இவ்வாய்வில் இடம்பெற்றுள்ள தோம்புக் குறிப்புக்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகின்றது. ஈழத்தின் வடகீழ்த்திசையில் இசைமரபோடு இறையுணர்வினைப் பரப்பிக் கொண்டிருக்கும் திருக்கோணாதமலை கோணநாதேஸ்வரப் பதியின் பண்பாட்டுப் பதிவுச் சுவடுகள் இந்து மரபோடு இணையப்பெற்ற ஒரு பன்மைப் பண்பாட்டுச் சூழ்நிலையினை உருவாக்கி வைத்திருந்த முறையினை வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக சோழர் காலப்பரப்பிலிருந்து பின்பற்றப்பட்ட கோயில் வழமைகள், காரியங்கள் யாழ்ப்பாண இராச்சிய காலத்திலும் பின்பற்றப்பட்டு, அதுவே பின்னர் ஒல்லாந்தர் காலத்திலிருந்து பதியப்பட்டுக் கிடைத்த தோம்பு ஆவணங்களாகவும் அவையே பின்னர் ஆங்கிலேயர் காலத்து கோயிற் பதிவேடுகளாவும் மாற்றுவிக்கப்பட்ட நிலையில் இன்று எமக்குக் கிடைத்துள்ளன. வடமராட்சி வியாபாரி மூலையில் வாழ்ந்து, மறைந்த அமரர் சி.நா. சொக்கநாதபிள்ளையிடமிருந்து எம்மால் பெற்றுக்கொள்ளப்பட்ட அத்தகைய தோம்புச் சுவடிகள் ஊடாகவே திருகோணாதமலை கோணநாதேஸ்வரர் திருக்கோயிலின் கோயிற்காரியங்கள் மற்றும் அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பின்பற்றப்பட்ட ஆய்வு முறையானது வரலாற்று மூலங்களூடான விபரண ஆய்வு முறையியலாக அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள் :** திரிலோகண பல்லவ வம்சம், சிலப்பதிகாரம், மணிபல்லவம், மண்டலாய், முக்கந்தர், தோம்பு, தொண்டு - தொழும்பு, பராமரிப்புக்காரர்கள், பற்றுச்சீட்டு, இருபாகை முதன்மை, திருவாசி, நேர்க்கடன்.

## 1. அறிமுகம்

இத்தீவின் பண்பாட்டுப் பரப்பிலும் நாகரிக வாழ்விலும் ஆதிக்கோண நாதேஷ்வரப் பதியின் சுவடுகள் காலத்தினாலும் அழிக்கப் பட முடியாதவனாக உள்ளன. இதற்கான அடிப்படையானது காலத்தின் வளர்ச்சிக் கட்டங்களூடாக அம் மையம் சிறப்பாகப் பெற்றிருந்த உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிபச் சூழலே ஆகும். (சரவணபவன்,க., 2003,ப.12). பல இனத்தவர்களும், பன்மதத் தவர்களும், பல்வேறு நாட்டினரும் ஒருங்கே ஈர்க்கப்பட்டு வந்த மையமாதலால் கோணநாதஸ்வரப் பதியின் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் அம் மையம் ஒரு சர்வதேசப் பண்பாட்டு வயப்பாட்டின் மரபின் வளர்ச்சிப் போக்கினைப் பெற்றுக் கொள்ளக் காரணமாயிற்று. உள்நாட்டு மாறுதல்களுடன் இவ்வளர்ச்சிப் போக்கும் இணைந்து ராஜீய நிர்வாக உருவாக்கத்தின் களமாகவும் அம்மையம் வளர்ச்சி பெறக் காரணமாயிற்று. அப்பின்புலத்தில் கோணநாதேஸ்வரப் பதியையும், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சி நிலைகளையும் சர்வதேச சமூக மட்டத்திற்கு எட்ட வைத்த நிகழ்வுகளும் நடந்தேறின. (சரவணபவன், க., 2003, ப.13). அந்நிகழ்வுகள் உள்ளிட்ட வளர்ச்சி நிலைகளின் வெளிப்பாடானது பண்பாட்டு அலைகளாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மக்களால் உள்வாங்கப்பட்டு நிலைநிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. அவ்வாறு நிலைநிறுத்தி வைக்கப்பட்டனவற்றுள் இன்று எமக்குக் கிடைப்பவை அத் தலத்தைப் பற்றிய மான்மிய இலக்கியங்கள், தேவாரப்பதிகங்கள், கல்வெட்டுக்கள், விக்கிரகங்கள், தோம்புப் பதிவுகள், வெளிநாட்டுப் பயணிகளின் பிரயாணக் குறிப்புக்கள் என்பனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு கோணநாதேஸ்வரப்பதியின் தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் சொத்துக்கள், வருமான நிர்வாகப் பகிர்வு முறைகள் போன்றவற்றை ஆராயமுடிகின்றது. இக்குறிப் பிட்ட கோவிலினது தொண்டர்கள், சொத்துடமை, கோயிற் திருக்காரியங்கள் போன்றவற்றை அவதானிக்கும்போது பல்லவர், சோழர்கால இந்துக்கோயில் நிர்வாக முறைகள் திருக்கோணேஸ்வரத்தினை மையப்படுத்திய வகையில் ஆங்கிலேயர் காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்திருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றது. அவ்வகையில் ஈழத்துப் புராதன இந்துப் பண்பாட்டுச் சூழலின் பின்னணியில் (குணசிங்கம், செ., கோணேஸ்வரம்., 1973, ப.12, 115-122) ஆ. வேலுப்பிள்ளை, திருவுடையாள், 2013, வடகிழக்கிலங்கையின் பாரம்பரியத் தேடலில் கோணநாதேஸ்வரப் பதியின் சுவடுகள் உள்நாட்டில் மாத்திரமன்றி, சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்டு பண்பாட்டுப் பொக்கிசமாகக் காணப்படுவது என்பது இன்றைய காலகட்டத்தில் எடுத்தாராயத்தக்க ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

**தென்னிந்திய மரபில் ஆதிக்கோண நாதேஸ்வரம்**

ஈழத்து நில வரம்பிற்குள் உட்பட்ட இடப்பெயர் - பெயர்த்தோற்றம் பற்றிய ஆய்வுகள் பெருமளவிற்கு இன்று பாளி-சிங்கள, வடமொழிவழிவந்த உருத்தோற்ற அடிப்படையிலேயே மேற்கொள்ளப் படுகின்றன. அதேநேரத்தில் ஈழத்திற்கு மிகவும் அண்மித்த பெருநிலப் பரப்பான தமிழகத்தின் அல்லது தென்னிந்தியக் குடியமைவின் பண்புகளும் மொழிப்பிரயோகப் பின்னணியில் வரலாற்றுக் காலத்திலிருந்தே வடகிழக்கிலங்கையின் குடியமைவின் போக்கினை நிர்ணயித்து வந்துள்ளன என்பதனையும் மறந்துவிடலாகாது. வடக்கு மற்றும் வடகிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்ற தொல்லியல் ஆய்வுகள் அவ்வுண்மையை தெளிவுபடுத்தியுள்ளன (குணசிங்கம், செ., 1973, ப.). தென்னிந்தியக் குலங்குடிகளின் தன்மைகள் - ராஜீய - வாணிக முறைமைகள் ஈழத்தை நன்கு பாதித்து சென்றுள்ளன என்பதனை ஆய்வறிக்கைகள் நிரைப்படுத்தியுள்ளன. திருக்கோணேஸ்வரப் பதியின் பெயர்த்தோற்றம் பற்றிய ஆய்வும் இப்பின்னணியிலேயே நோக்கப்படுதல் வேண்டும். கொகர்ண, கோக்கண்ண, கோகர்ண, கோகணம், கோனாமலை, கொட்டியாரம் போன்ற இடப்பெயர் குறித்த பதங்கள் திருக்கோணாதமலையையே குறித்து நின்ற சொற்றொடர்களாகும்.

**திரிலோகண பல்லவ வம்சமும் கோணேஸ்வரப் பதியும்**

இதுவரையில் திருக்கோணேஸ்வரம் என்ற பெயர்த்தோற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்படாத ஓர் அம்சத்தினை இங்கு தருவது பொருத்தமாகின்றது. இராமச்சந்திர தீட்சிதர் சிலப்பதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு வரைந்த தனது அறிமுகவு ரையில் திரிலோகண பல்லவ வம்சத்தினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். (Ramachandra Dikshitar, V.R., 1939:10). கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இருந்த திரிலோகண பல்லவ வம்சத்தின் இடம் தாயகம், தலைநகர், அதிகார வரம்பு பற்றிய எந்த விடயங்களும் இன்னும் தென்னிந்திய வரலாற்று வெளிச்சத்திற்குள் அகப்படவில்லை எனக்குறிப்பிட்டுள்ள தீட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதர் சங்க காலத்து சோழ இளவரசனான கரிகால்வளவனது ஆட்சிக்குச்சற்றுப் பிற்பட்டதாக இவ்வம்சம் வாழ்ந்திருக்க வேண்டும் என முடிவு கொள்கிறார். அவருடைய இத்தகைய ஓர் அனுமானமானது ஆதிப் பல்லவ வம்சம் ஒன்றினது ஈழத்தொடர்பின் பின்னணியில் திருக்கோணேஸ்வரத்தின் பெயர்த் தோற்றத்திற்கான ஊற்றினைக் கண்டுகொள்ள வழிவகை செய்கின்றது (Ramachandra Dikshitar, V.R., 1939:15). திருக் கோணேஸ்வரப் பிராந்தியத்தில் இருந்து அதிக எண்ணிக்கையில் பெற்றுக் கொள்ளப் பட்ட பல்லவர் காலத்திற்குரிய வடமொழி மற்றும் பல்லவ - கிரந்தக் கல் வெட்டுச் சான்றுகள், மற்றும் தொல்லியல் சான்றுகள் எமக்குத் திரிலோகண பல்லவ வம்சத்துடன் திருக்கோணேஸ்வரத்தினைத் தொடர்புபடுத்தி பார்ப்பதற்கு உதவுகின்றன (Ramachandra Dikshitar, V.R., 1939:30 ).

திரிலோகண பல்லவ வம்சமானது சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகால் வளவனது ஆட்சிக்குப் பிற்பட்டது என்பது இராமச்சந்திர தீட்சிதருடைய கருத்தமைவாகும். சிலப்பதிகாரத்தின் தோற்ற காலமும் ஈழத்து திரிலோகண பல்லவ வம்ச காலமும் ஏறக்குறைய சமகாலமாகலாம். செ. இராசநாயக முதலியார் முன்வைத்துள்ள “மணிபல்லவம் - பல்லவ வம்சத்தின் தாயகம்” என்ற கோட்பாடும் ஓரளவிற்கு இராமச்சந்திர தீட்சிதருடைய திரிலோகண பல்லவ வம்ச காலத்தினை எட்டியதாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது. மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ள குறிப்பொன்றின்படி, சோழநாட்டிலிருந்து படையெடுத்துவந்த இளவரசன் ஒருவன் *36000* இளைஞர்களைப் பிடித்துச் சென்றான் என்ற செய்தி கரிகாலன் என்ற சோழ இளவரசன் காவிரிக்குக் குறுக்கே கல்லணை கட்டுவதற்காக இலங்கையிலிருந்து நீர்ப்பாசனத் தொழில்நுட்ப வல்லுநர்களை (சிங்கள இளைஞர்களை) பிடித்துச் சென்ற சம்பவத்தினைக் குறிப்பதாகும் என்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். இக்காலத்தில் திருகோணமலை வணிக நடவடிக்கைகளில் மிகவும் முக்கியம் பெற்றிருந்த துறைமுகநகராக விளங்கி, பின்னர் திரிலோகண பல்லவ வம்ச காலத்தில் கோணேஸ்வரப் பதியின் கீர்த்தி மேலோங்கிய நிலையில் இத்துறைமுகம் பாடல் பெறுவதற்கும் காரணமாக விளங்கியது.

**திரிலோகணம் : ஆதிபல்லவ வம்சத்தின் துறைமுக நகர்**

செ. இராசநாயகம் முன்வைத்த ‘‘மணி பல்லவம் : பல்லவரது தாயகம்’’ என்ற கோட்பாடானது படிப்படியாகத் தொல்லியற் சான்றுகள் வாயிலாக ஈழத்தில் வலுவடைந்து கொண்டுவரும் இக்கட்டத்தில் “திரிலோகண பல்லவர்” பற்றிக் கிடைத்த தகவலானது ஈழத்து வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாக அமையும். பல்லவப் பண்பாட்டின் வெளிப்பாட்டிற்குரிய சின்னங்களாக நாகதீப கலசங்கள் இம்பர்சிட்டி - வியாபாரிமூலையில் இருந்து அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டன. வியாபாரி மூலைக்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. புலோலி - பல்லப்பைக் கிராமத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்லவர் பாணிக்குரிய போதி மாதவனின் சிரசு கிடைத்திருப்பது இப்பிராந்தியத்தில் பல்லவர் கலை மரபின் செறிவினைக் காட்ட உதவுகின்றது எனலாம் (கிருஸ்ணராசா, செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும் , *2015.,* ப.*236*).

வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோரக் கிராமமான அம்பன் என்ற பெயர் உடைய குறிச்சிப் பிரிவு தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான யாவாத் தீவினது மையப் பகுதியில் காணப்படுகின்றது. வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியை அடுத்துக் காணப்படும் மண்டலாய்ப் பிள்ளையார் கோவில் மத்திய யாவாவிலுள்ள பௌத்தப் பாரம்பரிய வணக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளுடன் தொடர்புபட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் பல்லவப் பண்பாட்டின் கடல் கடந்த செல்வாக் கினடியாகவே ஈழத்திலும் நிலை பெற்றிருந்தன. இவற்றுக்கெல்லாம் தொடர்புகளைஏற்படுத்தித் தந்த வட கிழக்குக் கரையோரத்துறை முகங்கள் யாவும் பல்லவ வம்சத்தின் மேலாதிக்கத்தின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் வட கிழக்குக் கரையோரத்துறைமுகங்களுள் திருக் கோணேஸ்வரம் வணிகர்களினால் மிகவும் விரும்பப்பட்டதாகவும் இருந்து வந்துள்ளது. அவ்வகையில்திரிலோகணபல்லவவம்சத்துடன் தனது வளர்ச்சியையும் செல்வாக்கினையும் இணைத்து ஒரு சிறந்த துறைமுக நகராகவும் அதே நேரத்தில் புனித ஸ்தலமாகவும் மாறியிருந்த திருக்கோணேஸ்வரம் இலங்கை மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கினைப் பெற்றுக் கொண்டதில் வியப்பேதும் இருக்க முடியாது *(பல்வராச சேகரன், 2007., ப. 53)*

**ஈழத்துப் பல்லவ வம்சத்தின் தளமாக தம்பலகாமம்**

தமிழகத்தில் களப்பிரரின் மேலாதிக்கம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் ஈழத்தின் கிழக்குக் கரையில் திரிலோகணம் எனப்பெயர் பெற்றிருந் திருக்கோணேஸ்வரம் ஒருதுறைமுக நகராகப் பொலிவுற்றுச் சிறப்படைந்திருக்க வேண்டும். களப்பிரரின் தாக்கத்திலிருந்து ஆதி பல்லவ வம்சம் தம்மைப் பாதுகாத்து வளர்த்தெடுத்துக் கொண்ட ஒரு மையமாகவும் அமைந்திருக்க வேண்டும். பல்லவங்க, பல்லவபொக்கு, பல்லவராயன்கட்டு போன்ற மையங்கள் திருக்கோணேஸ்வரத் திருப்பதியின் அண்மித்த குடியிருப்புக்களாகும். இவை யாவும் பல்லவர் காலத்து வாணிப மையங்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. இவ்மையங்கள் யாவும் முக்கந்தர் என்ற உயர் தலைமையின் கீழ் பெரு வாணிப நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருந்தன என்பதனை இலக்கியச் சான்றுகளினூடாகக் கண்டுகொள்ள முடிகின்றது. *(மோசஸ் பொன்னையா, நாடார் வரலாறு., 1978, ப. 58)*

முதற்பெயரான "திரிலோகணம்" என்பதில் உள்ள ''கணம்'' பெயரீறு வணிகக் கணத்தினைச் சுட்டுவது எனக்கொண்டால் அதனை விசேடித்து நிற்கும் ''திரிலோ'' என்பது திரைலோக்கிய என்ற பதத்தின் மருவுப் பெயராகவோ அமையும் எனலாம். இப் பெயர் பொதுவாக அரச வம்சத்தைச் சேர்ந்த பெண்களின் பெயராகவோ அன்றி ஓர் இனப்பெயராகவோ குறிக்கப்படுதலையும் காணலாம். ''திரைகடல் ஓங்கி நித்திலங் கொழிக்கும் கோணமாமலை" யின் பெயர்த் தொடக்கம் திரைலோக்கிய கணமாகிப் பின்னர் திரிலோகணம் என மருவிற்று என்று கொள்வதே பொருத்தமானதாகத் தோன்றுகின்றது.

அவ்வகையில் ''திரிலோகணம்'' என்ற பெயர் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் நன்கு நின்று நிலைபெற்ற ஒன்று எனக் கொள்வது இவ்வாய்வுக்குப் பொருத்தமாகின்றது. இப்பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பற்றிய பிற்பட்ட காலவரலாற்றினையும் கிடைத்த தோம்பு ஆவணங்களூடாகவும் ஆராய முடிகின்றது. திருக்கோணேஸ்வரப் பதியும் முக்கந்தர் என்ற வாணிபத் தலைவர்களினால் நிர்வகிக்கப்பட்ட செய்தியை பல்லவர் கால சமூக வரலாறு உறுதிப்படுத்துவதனையும் மோஸஸ் பொன்னையா தனது நடார் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (தம்பசிட்டி - வியாபாரிமூலையில் வாழ்ந்து அமரத்துவமடைந்த கந்தயினார் என்ற நிலப்பிரபு பல்லவ வம்சத் தொடர்பு வழிவந்த முக்கந்தர் பரம்பரையைச் சேர்ந்தவர் என்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. கந்தயினாருக்கு உரிய ஆதனமாகக் காணப்பட்ட மிகப் பழமை வாய்ந்த தம்பசிட்டத்துறைமுகத்தின் மருங்கில் உள்ள பிள்ளையார் கோயில் மடமொன்றில் பல்லவர் கால பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது *(கிருஸ்ணராசா, செ., தொல்லியலும் வடமராட்சியின் பண்பாட்டுத் தொன்மையும், 2015, ப.268).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தோம்பு ஆவணமும் தம்பலகாமப் பதியின் சொத்துக்களும்**

திருகோணமலை கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலின் 'தொண்டு' - 'தொழும்பு' பற்றிய பல விபரங்களைக் கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியச் சான்றுகளில் விபரமாக எடுத்துக் குறிப்பிடப்பட்டிருந்தும், போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப் பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலைப் பற்றிய தகவல்கள் குறிப்பாக தம்பலகாமம் சிவன் கோவிலைப் பற்றியதும் அதற்குரிய தேவஸ்தான வயல் நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவேடுகளாக முத்திரைகள் குத்திப் பாதுகாக்கப்பட்டுள்ளன. பின்னர் அத் தோம்புச் செய்திகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கோயிற் பதிவுப் புத்தகங்களில் நிரைப்படுத்தப்பட்டு கோவைப் படுத்தப்பட்டன. கி.பி. 1800ஆம் ஆண்டளவில் கோயிற்புத்தகங்கள் (Temple Register) கச்சேரி ரீதியாக இத்தகைய பாவனைக்காக இடப்பட்டுள்ளன.

இந்த வகையில் ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளாகவும் அவை பின்னர் படியெடுக்கப்பட்டு இருந்த ஆவணப்படிவங்களாகவும் (உறுதிகளாகவும்) நீண்ட காலமாக தம்பசிட்டி - வியாபாரிமூலை யிலுள்ள அமரர் சொக்கநாதம்பிள்ளை அவர்களின் வீட்டில் பாதுகாக்கப்பட்டிருந்தன. (அவரது இல்லம் முழுவதுமே ஓர் ஆவணகாப்பக மையமாக விளங்கியிருந்தது. அவரது அமரத்துவத்தின் பின்னர் அந்நிலையானது முற்றாகவே சீர் குலைந்து விட்டது. அந்த வகையில் நாம் ஏற்கனவே அவருடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் அடிப்படையிலே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணப்பிரதிகளைப் பார்த்து படியெடுப்பதற்கு வாய்ப்பாக இருந்தது.) இவ்வாறு சேகரிக்கப்பட்ட வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தம்பலகாமம் ஆதிக் கோணநாதேஸ்வரர் கோயில் நிர்வாகம் தொடர்பான குறிப்புக்களை விபரண ரீதியாக இங்கு தரமுடிகின்றது. அவற்றை வரலாற்று மூலம் என்ற வேரடிப்படையில் ஈழத்தமிழரது பண்பாட்டு எழுத்தியலுக்கு உதவும் ஆதாரமாகக் கொள்வதற்கும் வாய்ப்பாகின்றது.

**தோம்புப் பதிவின் தொடக்கவுரை**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோயில் தொடர்பான சாதனங்கள் யாவற்றிலும் வரலாற்றுப் பெறுமதிமிக்க தொடக்கவுரையாக இத்தோம்பின் ஆரம்பம் இடம்பெற்றமையை அவதானிக்க முடிகின்றது. திருகோணமலையைப் பற்றிய வரலாற்றாய்வுக்கு அப்பகுதி பெருமளவிற்கு உதவுவதாகவுள்ளது. இப்பகுதி பின்வருமாறு:-

*1.* "திருக்கோணாதமலையைச் சேர்ந்த தம்பலகமக் கோயிற் குடியிருப்பில் சைவ சமய பிரபல்யமாய் விளங்கும் கோண நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு ...

*2.* சூரிய - சந்திர - அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழமஹாராசன் மரபிலுதித்த கஜவாகுமஹாராசாவின் தெக்ஷணகைலாயம் கோணநாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு...

இவ்வாறு பதியப்பட்டுள்ள முகப்புரை பாரம்பரியமாகவே உள்வாங்கப்பட்டு வந்த வரலாற்று மரபினைத் தோம்புகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. கந்தளாயில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களில் குளக் கோட்டனைப்பற்றியதும் கஜவாகு மன்னனான இரண்டாம் கஜவாகு பற்றியதுமான செய்திகளில் இத்தோம்பில் இடம்பெற்றுள்ள சில செய்திகள் இடம்பெற்றிருப்பது மேலே கூறப்பட்டவற்றுடன் ஒப்புநோக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஆராயத்தக்கதாகும். தோம்பிலும் உரிமைச்சாசன பட்டயமொன்றிலும் பதியப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகள் பின்வருமாறு தொகுத்து வகுத்துத் தரப்படுகின்றது. அவை பின்வருமாறு :

''......எப்பொழுதும் பூசகராகவும், முதன்மையாகவும் ''இராசகுலகுரு'' என்னும் சகல பொருட்களையும் அதிகாரமாக நின்று நடப்பித்து அவ்வாதனங்களின் வருமானத்தில் பத்திலிரண்டு பங்கும் பிரயோஜனம் தங்களுபயோகங்களுக்கென்றும் எம்முன்னோர் சாதனம் எழுதிக் கொடுக்கப்பெற்றவர் ஆகையாலும் அவ்வுரித்தின் பிரகாரம் கோணநாதேஷ்வரப் பெருமானின் கல்வெட்டிலும் புராணத்திலும் சொல்லிய...''

''...குறித்த கோவிலுக்கும், கோவிலின் கல்வெட்டிலும், புராணத்திலும் சொல்லிய இருபாகை முதன்மைக்கும் செய்ய வேண்டிய பணிவிடைகளைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருப்பவர்களாகிய கனக சுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப் புக்காரர்கள், கரணம், அடப்பற் தாளத்தார், வரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி முதலிய பரிசாரகர்களைக் கொண்டு குறித்த கோவிலின் கல்வெட்டிலும், வேதம், ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லிய படியும் வழமைப்படியும், மேற்குறித்த ...''

''... குறித்த கோவிலின் ... மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து அக்கோயிலில் நடக்க வேண்டிய பூசை, திருவிழா முதலியவற்றையும், கந்தளாய்க் குளத்திலும், மாகாமத்திலும், காலத்துக்குக் காலம் நடக்க வேண்டிய வேள்விகள், கிராம சாந்திகள் முதலியவற்றையும் திருக்கோணாதமலை கொட்டியாரப்பற்றில் கங்குவேலி சிவன் கோவில், மேற்படிப்பற்றில் வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோவில் ஆகிய அவைகளின் பூசை திருவிழாக்களையும் ஆடி அமாவாசைத் தீர்த்தங்களுக்குரிய கீர்த்தியங்களையும் மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து செய்தும் செய்வித்தும் வருபவர்களுக்கும் வேதம், ஆகமம், புராணம், கல்வெட்டில் சொல்லிய பிரகாரமும் வழமைப்பிரகாரமும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்விப்பதற்காக'' *(33 ஊர்களில் உள்ள 33 பேர்களை)* ''பராமரிப்புக்காரர்களாக நியமிக்கத் தீர்மானித்து மேற் சொல்லப்பட்ட பேர்வழிக்காரர்களை பின்னால் சொல்லப்படும் காரியங்களை நடத்துவதற்காக ... இத்தால் பெயர் குறித்து நியமித்து ஏற்படுத்தி அதிகாரம் கொடுக்கின்றேன்''

**தம்பலகாமப் பதியின் தொண்டு - தொழும்பாலளர்களது அதிகாரங்கள்**

அ) குறித்த கோவிலுக்குத் தொழும் பாளராகிய கனகசுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர், கங்காணம், அடப்பன் தாளத்தார், பாரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி முதலிய பரிசாரர்களாகிய இவர்கள் குறித்த கோண நாதேஷ்வர சுவாமி கோயிலுக்கும், இருபாகை முதன்மையாகிய ......பின் சந்ததியாருக்கும் குறித்த வேதம், ஆகமம் புராணப் பிரகாரமும் கோயிலின் கல்வெட்டுப் பிரகாரமும் வழமைப் பிரகாரமும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களைக் கொண்டு விதிப்படியும் முறைப்படியும் செய்விக்க.

ஆ) குறித்த கோணாதேஸ்வர சுவாமி கோவிலினதும் கங்குவேலிச் சிவன் கோவிலினதும் வெருகல் சித்திர வேலாயு தசு வாமி கோயிலினதும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவற்ற ஆதனங்களையும் ... குத்தகை கொடுக்கவும் குத்தகைப் பணங்களை அறவிடவும் பற்றுச் சீட்டுக் கொடுக்கவும் அந்தந்தக் கோவில்களின் வருமானங்களிலிருந்து அந்த(ந்த)க் கோவில் களின் பூசைகள் ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள், கிராம சாந்திகள், வேள்விகள் இன்னும் அநேக வேதாகாரச் சடங்குகளையும் குறித்த கோவிலின் திருப்பணிகளையும் வேதம் - ஆகமம் - புராணம் - கல்வெட்டு வழமையாகிய இவைகளுக்கு அமையச் செய்விக்கவும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ) குறித்த கோவில்களின் தொகுப்பாளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால் அவர்களை... நட்டம் அல்லது நட்டங்களை அறவிடவும், அவர்களைக் கொண்டு குறித்த கருமங்களை விதிப்படி செய்விக்கவும் மன இணக்கமாய் செப்பம் பண்ணி வைக்கவும், அப்படிக் குற்றம் செய்தவர் களை நீக்கி அவர் அல்லது அவர்களின் இடத்துக்குப் பதிலாக அக்குடும்பத்திலே பதிலாளிகளைத் தெரிவு செய்து நியமிக்கவும் அவ்வண்ணம் நீக்கப்பட்டவருக்குக் கோவி லால் விடப்பட்டிருக்கும் காணிகளை அல்லது வருமானங்களை அவர்களிலிருந்து எடுத்துப் பதிலாக வைக்கப்பட்டவர்களுக்கு ஒப்புக் கொடுக்கவும்.

ஈ) இருபாகை முதன்மையாகிய ...... ..... பின் சந்ததி அல்லது சந்தானங்களுக்கு உதவி தேவை என விரும்பிய காலங்களில் உதவிக்காக வந்திருக்கும் பூசகர், குருமார்கள், சாதகாசாரியார், அலங்கிரு தாசாரியார், போதகாசிரியார் முதலிய இவர் கள் இருபாகை முதன்மைக்குத் தேவையான உதவிகளைச் செப்பமாய்ச் செய்ய வேண்டும். அவ்வண்ணம் செய்யாமலிருந்தால் அல்லது குறித்த கோவிலினுடைய பத்திலெட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது பத்திலிரண் பங்கு ஆதனத்திலிருந்து கொடுபட்டால் இருபாகை முதன்மையாகிய ஆதனங்களைக் குறித்த தத்துவக்காரர் அவர்களிருந்தெடுத்து செய்யத் தவறினால் இருபான்மை முதன்மையாகிய அவர்களுடைய மூன்றில் இரண்டு பங்கால் அல்லது ........... பின் எனது பிற்சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பத்திலெட்டுப்பங்கு ஆதனத்திலிருந்து கொடுக்கப்பட்டால் குறித்த கோவிலுக்கும் சேரும்படி செய்ய வேண்டும்.

உ) குறித்த கோயில்களுக்குரிய ஆதனங் களைப் பற்றிய நீர்ப்பாய்ச்சல் வட்ட விதானையிடம் இருக்குமிடாப்பில் சொந்தக் காரன் என்ற பந்தியில் முதன்மையாகிய நானே குறித்த கோயில்களின் வகைக்காக கையொப்பமிட வேண்டியிருப்பதனால் குறித்த பந்தியில் மேற்சொல்லிய அவர்களில் எவராவது ஒருவர் அல்லது இருவர் குறித்த முதன்மையின் வகைக்காக கையொப்பமிடுவதாக...

ஊ) ...மன இணக்கமாகக் குறித்த கருமங்களை நடப்பிக்கத் தவறினால் அல்லது அவர்களுக்கிடையில் ஏதும் வாக்குவாதம் வந்தால் எவராவது இறக்கச் சம்பவித்தால் அல்லது வேறெவ்வகையாகவேனும் ஒருமித்து அல்லது அவர்களிலாதிக்கத்திலிருப்போர்... அவர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து குறித்த கருமங்களை அல்லது அவைகளின் எப்பகு தியையேனும் செய்விக்க... இவர்களுக்கு அதிகாரமுண்டு...

எ) குறித்த கோவில்களினூடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்ட - சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினடமாக வைக்க வேண்டியது. குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது... ஒருமித்து நியமிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்க்கடனுக்காக வரும் ஆடு, மாடு கோழி முதலியவைகளை இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றைச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஏ) குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டுவஷ்திரங்கள், திருவாசி முதலிய சகலமும் மற்றும் தட்டுமுட்டுச் சாமான்கள் சகலமும் கோவிலின் இருப்பு வீட்டில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ) குறித்த கோவில்களின் வருமானங்களைப் பற்றிய வரவு - செலவுக் கணக்குகளை வெளிப் படுத்தும்படி கேட்கும் காலம் இவர்கள் அக்கணக்குகளை வெளிப்படுத்தவும் கணக்குக் கொடுக்கவும் இருபாகை முதன்மையாகிய ................ சந்ததி அல்லது சந்தானத் துக்கும் பாத்திரவாளிகளாயிருத்தல் வேண்டும்.

ஒ) குறித்த... கோவில்களினூடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்டு - சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று - இரு பாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது ...ஒருமித்து நியமிக்கு மொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியவைகளை இன்னும் வேற சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக்கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஓ) தம்பலகாம பதிக்குரிய ஆதனங்களின் எல்லைகள்

1. திருகோணமலை தம்பலகாமப் பற்று தம்பலகாமம் கோணநாதேஷ்வரசுவாமி கோவிலாதனமாய் அக்கோயிலின் ஏக பூசகரும் இருபான்மை முதன்மையும் என்னும் அதிகார முறைப்படி எனது உரிமையாட்சியின் காணி கீழ்மாகாணம் திருக்கோணாத மலை டிஸ்திரிக் தம்பலகாமப் பற்றுமாக்கை வெளியிலிருக்கும். பெத்தராசி வயல் எனும் ஒரு துண்டு நிலம் - இதற்கு எல்லை வடக்கும் கிழக்கும் மாக்கைத்திடல் தெற்கு குடமிருட்டி யாறு மேற்கு ஆறு இவ்வெல்லை பூண்டு காணியின் சொரியலாய் ஆறிலொரு பங்கு
2. தம்பலகாமம்மாக்கைவெளியிலிருக்கும் பெரிய ஆண்டி வெட்டுவன் என்னும் ஒரு துண்டு வயல் நிலம், எல்லை கிழக்கும் வடக்கும் வெட்டுக்காடு மேற்கு ஆறுதெற்கு வீரக்குட்டிக்கும் கணவதிப்பிள்ளைக்கும் உடைய வயல்.
3. தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் சின்னாண்டி வெட்டுவன் என்னுமொரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் கீத்து மேற்கு கோணநாயகர் கோவில் பிற்பாகைக்குரிய முதலியார் வயல், தெற்கு முத்துக்குமார சுவாமி வயல்.
4. தம்பலகாமம்மாக்கைவெளியிலிருக்கும் காட்டுக்கும்பியன் வயல் என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் தெற்கும் கோணநாயகர் கோயில் வயலும் மறுபேருடைய வயலும் மேற்கு வாய்க்கால் வடக்கு பச்சன் பவரை.
5. தம்பலகாமம்மாக்கைவெளியிலிருக்கும் பெரிய வெட்டுக்காடு என்னுமொரு துண்டு வயல் நிலம் மேற்கு முடிக்குரிய தரையும் உதுமாலெவ்வை காஜியாரின் தரையும் வடக்கு பச்சன்பவரை தெற்கும் கிழக்கும் வெறுவயல்.
6. தம்பலகாமம் பற்ற வெளியிலிருக்கும் ஓலுக்குனி என்னும் ஒரு வயல் நிலம் கிழக்கு வீரக்குட்டியின் சுவாத்தியர் வரை வடக்கு ஆறு மேற்கு அப்புக்குட்டி மரிக்காரருக்கும் வேகன் கணபதிப்பிள்ளைக்குமுடைய வயல் தெற்கு பக்கீர்த்தம்பியின் கரையான் வயல்.
7. தம்பலகாமம் பற்றவெளியிலிருக்கும் கரையான் வெட்டுக்காடு என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு கோணநாயக்கர் கோயில் பிறப்பாகைக்குரிய மந்தணடைக்கீத்து வடக்கும் மேற்கும் ஆறு தெற்கு சபாபதிப் பிள்ளையின் தரை. தம்பலகாமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனைப்பகுதி என்னும் ஒரு துண்டு வயல் நிலம் கிழக்கும் தெற்கும் ஆறு மேற்கு கோணநாயக்கர் கோயிலுக்குரிய அட்மயோடைப்பகுதி வயல் வடக்கு கோயிற் பிறப்பாகைக்குரிய மணற் பகுதி வயல்.

8. தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும் பிரமணன் கீத்து என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை வடக்கு கட்டை வயல் கிழக்கு வல்லிபுரத்தின் தரை தெற்கு கோணநாயகர் கோயில் வயல் மேற்கு வாய்க்கால்.

9. *10)* தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் உப்புக்குழி என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை வடக்கு சிறுபயனி ஆறு மேற்கு பொன்னுச்சாமி குருக்களின் தரை தெற்கு கோயில் வீதி கிழக்கு கோயிலுக்குரிய தரை.

10. தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் மாந்தோட்டடியான வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரிய தௌவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் சின்ன அணை வெட்டுவான்வயல். வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப் பள்ளம் வடக்குக் கோயிலுக்குரிய தௌவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் தெற்கு சின்ன அணை வெட்டுவான் வயல்.

11. தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும் சின்ன அணை வெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் என்றழைக்கப்படும். ஒரு துண்டு வயல் எல்லை கிழக்குக் கோயில் வயலும் ஆறும் வடக்கு மாந்தோட்டியான் வயலும் காதர் தாமோதரம் பிள்ளையின் வயலும் தெற்கு ஆறும் பழனியப்பரின் தரையம் மேற்கு கோயில் பிரம்பருங்காட்டுக் கீத்து.

12. தம்பலகமம் சம்பந்துறையில் பிராமணன் கீத்து என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு வெட்டுக்காட்டு தரை மேற்கு கட்டை வயல் வடக்கு மூக்கறுத்தலைவரை தெற்கு பண்டாரியாக் கீத்து

13. தம்பலகமம் பண்டார வெளியில் பெரிய பகுதி மணற்பகுதி என்றழைக்கப்படும் ஒரு துண்டு தரை வயல் தரை எல்லை வடக்கு கட்டாடிக் கீத்து என்றழைக்கப்படும் வயல் தெற்கு கொட்டுமுகப்பகுதி வயல் கிழக்கு சிறு பயனி ஆறு மேற்கு களத்துத்தரை.

14. தம்பலகமம் பற்றவெளியில் உள்ள மந்தண்டைக்கீத்து என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு இதரம் பள்ளம் என்றழைக்கப்படும் கோயில் வயல் தெற்கு சிறுபயனி கிழக்கு கோயில் சூகர வேட்டை (சூரசங் கார வேட்டை) த்தரை ஆமற்கு கரையான் வெட்டுக்காடு.

15. தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் இதரமள்ளி என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை கிழக்கு இலந்தையடி வயல் என்னும் கோயில் வயல் தெற்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல் மேற்கு கோயிலாறு வடக்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல்.

16. தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் மூத்தார் என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு சின்னவிக்கும் மறு பேருக்குமரிய தோட்டம் கிழக்கு விளங்கண் குடா என்னும் வயல் தெற்கு ஆறு மேற்கு சுவாந்தி அலவரையும் ஆறும்.

17. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் உள்ள ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. தம்பலகமம் கோயில் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும்.
19. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும் எல்லை வடக்கு பிறப்பாகைத் தரை கிழக்கு ஒழுங்கை மேற்கு ஆறு.
20. தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டுத்தரையும் அதிலிருக்கும் தென்னம் மரங்கள் முதலியவான பயிர்களும்.
21. தம்பலகமம் பண்டாரவெளியிலிருக்கும் ஒரு துண்டு தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் எல்லை வடக்குவழி தெற்கு மணல் பகுதி பெரிய பகுதி மேற்கு ஆறு கிழக்கு பிறபாகை வயலும் கட்டாடிக் கீத்தும்.

(மேலே சொல்லப்பட்டிருக்கின்ற தோம்புப் பதிவுகளின் படி திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் கோயிலுக்கு 6600 ஏக்கர் வயல் விளை நிலமும் 181 x 215 பாகம் தென்னந்தோட்டமும் தேவதானமாக இருந்து வந்தமையை அண்ணளவாக கணக்கீடு செய்து கொள்ள முடிகின்றது. இவற்றுள் பெருமளவிலான நிலப்பரப்பிற்கு கந்தளாய்க் குளத்தின் நீர்ப்பாசன வலைப்பின்னலுக்குட்பட்ட பாசனக் கால்வாய் களூடாகவே அதாவது குளக் கோட்டன் நிர்மாணித்த நீர்ப்பாசனவியல் நுட்பத்தின் பிரகாரமே பாசனம் பெற்றது என்பதும் ஆய்வாளர் முடிவாகும்.

தோம்புப் பதிவில் இடம்பெற்றுள்ள திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில இடப்பெயர்கள்

1. தம்பலகாமம் நாய்மார்திடல்
2. தம்பலகாமம் கரைச்சித்திடல்
3. தம்பலகாமம் கூட்டாம்புள்ளி
4. தம்பலகாமம் பட்டிமேடு கோணமலை
5. தம்பலகாமம் கள்ளிமேடு காறிக்குடி
6. தம்பலகாமம் குச்சியம்படுதிடல்
7. தம்பலகாமம் வண்ணாமேட்டுத்திடல்
8. கொட்டியாரப் பற்றுக்குச் சேர்ந்த கீச்சிலம் பற்றை
9. கோறளைப் பற்றுக் கதிரவெளி
10. திருக்கொட்டியாரப்பற்று மல்லிகைத் தீவு
11. கொட்டியாரப்பற்று கங்குவேலி
12. கொட்டியாரப் பற்று சம்பூர்

**பேரரசப் பல்லவர் காலத்துத் திருக்கோணேஸ்வரம்**

பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி உட்பட பல வரலாற்று ஆசிரியர்களால் பல்லவர் காலப் பக்தி இயக்கப் பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு ஆராயப் பட்டுள்ளது. செல்லத்துரை குணசிங்கம் தனது கோணேஸ்வரம் என்ற நூலில் பல்லவர் காலத் தொடர்புகளை நன்கு ஆராய்ந்துள்ளனர். இருப்பினும் பல்லவர் காலச் சமூக பொருளாதார உருவாக்கப் பின்னணியில் காஞ்சி (கச்சி) ஆராயப்பட்டது போன்று திரு கோணமலை இன்னும்ஆராயப்படவில்லை என்றே கூறவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் எண்ணிக்கையில் அதிக மாகக் காணப்படும் பத்திரகாளி அல்லது மகிஜமர்த்தினி கோவில்கள், அவற்றோடு இணைந்திருக்கும் பல்லவ சோழ கல் வெட்டுக்கள் போன்றன அக்காலச் சமூக பொருளாதார உறவுகளை அறிவதற்குரிய சான்றாதாரங்களாகின்றன. ஈழத்தில் வெளிப்படுத்தப்பட்ட பெருமளவிலான பல்லவ கிரந்தக் கல்வெட்டுக்களும், வடமொழிக் கல்வெட்டுக்களும் திரு கோணமலை மாவட்டத்தில் இருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டவையாகும். இது பல்லவ வம்சத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற் கும் இடையே இருந்திருக்கக்கூடிய மிக நெருக்கமான பண்பாட்டு அரசியல் தொடர்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையே இனங்காட்டுவதாகக் கொள்ள வைக்கின்றது. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற தலச்சிறப்புக்களின் பின்னணியில் வாணிபப் பண்டங்களின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மையை நோக்கும்போது அங்கு சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டுச் செல்வாக்கினை நாம் அவதானிக்க முடிகின்றது. இதன் நிமித்தம் அவை பெரு மளவுக்கு கடற்கரைக் கோயில்களாக அமை வதற்கும் காரணமாயிற்று. தம்பலகாமம் கோணநாதேஸ்வரப் பதியம் இத்தன்மைக்கு விதி விலக்கல்ல.

**பல்லவர், சோழப் பேரரசர் காலத்தின் பின் திருக்கோணேஸ்வரத்தில் கருமம் ஆற்றிய கோவில் நிர்வாகிகள்**

''... கோயிற் பூசை, உற்சவம் திருப்பணி போன்ற சகல காரியங்களுக்கென்றும் எம்முன்னோர் சாசனம் எழுதிக் கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் குறித்த கோவிலின் கல்வெட்டிலும் வேதம், ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லியபடியும் வழமைப்படியும் கோவிலின் ''தொண்டு தொழும்பு'' செய்த நிர்வாகிகளின் பெயர் கடமை விபரங்கள் போன்றவற்றை தோம்புப் பதிவுகள் இன்று தந்துதவுகின்றன. போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப்பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோயிலைப் பற்றிய அரிய தகவல்கள் குறிப்பாக தம்பலகமம் சிவன் கோயிலைப் பற்றியதும் தேவஸ்தான வயல்நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஓலைச்சுவடிகள் பலவ ற்றில் எழுதிப்பாதுகாக்கப்பட்டிருந்தன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவுகளாக முத்திரை குத்திப் பாதுகாக்கப் பட்டிருந்தன. இவற்றில் இடம் பெற்றுள்ள சொற்பதங்கள் அதிகாரிகளின் பெயர்கள் ஆவணத்தின் உள்ளடக்கம் போன்றன பல்லவ - சோழ அரசர்களின் தேவஸ்தானக் கொடைகளில் இடம்பெற்றுள்ளவாறு அதே வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மை மேலும் ஆய்வுக்குரிய பொருளாகின்றது.

''திருக்கோணாத மலையைச் சேர்ந்த தம்பலகாமக் கோயிற் குடியிருப்பில் சைவசமயப் பிரபல்யமாய் விளங்கும் கோணநா தேஷ்வர சுவாமி கோவிலுக்கு சூரிய - சந்திர - அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழ மஹாராசன் மரபிலுதித்த வரராம தேவராசாவின் புத்திரன் குளக்கோட்டு மஹாராசன் மரபிலுதித்த கயவாகு மஹாராசாவினால் ...'' செப்பேட்டு சாசனம் வரையப்பட்டு இக்கோவிலின் நிர்வாக ஒழுங்கு முறைகள் பொறுப்புக்கள் வரையறுக் கப்பட்டன. இவ்வாறு தாமிரசாசனம் செய்து வைக்கப்பட்டதன் பிரகாரம் கோயிற் பணிகளும், பணியாளனர் நியமனமும், பொறுப்புக்களும் இக்கோவிலின் பிரதான நிர்வாகியான "இருபாகை முதன்மை" யினால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கோவிலின் நிர்வாகிகளுள் "இருபாகை முதன்மை'' என்ற பதவி மிகவும் அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது. பொதுவாக ''இராசகுலகுரு'' என்ற ஸ்தானத்தினை வகிப்பவரே இக்கோவிலின் இருபாகை முதன் மையாக விளங்குவார். பல்லவ சோழக்கோயிற் கல்வெட்டுக்களில் இப்பதப் பிரயோகம் பொதுமையானதாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. கரணம், அமபற்தானந்தர், வரப்பத்தார், சங்கமம். சிந்துநாடு போன்ற நிர்வாக நிலைகளாகும். இத்தோடு சேர்ந்த இன்னொரு நிர்வாக நிலை "கட்டுக்குளப்பகுதி" என அழைக்கப்பட்டது. கோவிற் பலிசாளர் களுள் கட்டுக்குளப்பகுதி என்னும் நிர்வாகத் துறையானது சோழர் காலத்து ஏரிவாரியப் பெருமக்களது பணியைப் போன்று தொழிற்பட் டது எனக் குறிப்பிடலாம்.

கோவிலின் முதன்மை நிர்வாகியான "இருபாகை முதன்மை" தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காகத் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ்க்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமித்தும் அதிகாரங் களை வழங்கியும் அவ்வடிப்படையில் தேவஸ்தானத்திற்குரிய ஆதனங்களை வழங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அ தொழிற்பட்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது.

அவ்வாறு தொழிற்பட்ட உத்தியோகத்தர்களுள் சிலர் பூசகர், போதகாசாரியார், சாதகாசபரியார், அலங்கிருதாசாரியார், குருமார், பண்டாரம், ஓதுவார் எனக் குறிக்கப்பட்டுள்ளன. மேலே கூறப்பட்ட கோயில் உத்தியோகத்தர் ''இருபாகை முதன்மைக்கு'' தேவையான உதவிகளையும் கடமைகளையும் செப்பமாகச் செய்யாவிடில் அவ்வாறு இருபாகை முதன்மை முடிவு செய்யும் பட்சத்தில் கோவிலின் இருபாகை முதன்மை என்ற நிலையில் மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்குரிய பத்தில் இரண்டு பங்கால், அல்லது குறித்த கோவிலினுடைய பத்தில் எட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களை அவர்களிடமிருந்து மீள எடுத்துக்கொள்வதற்கு உரிமை யுடையவராவார்.

இக்கோவிலின் நிர்வாகம் தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ள இன்னொரு முக்கிய அம்சம் ''இருப்பு வீடுகள்'' ஆகும். குறித்த கோவில்களிடமாக "இருப்பு வீடுகள்" கட்டி அந்தந்தக் கோவில்களின் சகல சம்பத்துக்களையும் அந்தந்த கோவில் களுக்குரிய சாசனங்கள் தாமிரப் பட்டயங்கள் உறுதிகள் போன்றவற்றை அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது. குறித்த வீடுகளுக்குள்ள இரண்டு திறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையிடமும் மற்றது ஒருமித்து நியமிக்கும் ஒருவரிடமும் இருக்க வேண்டியது குறித்த கோவில்களின் நேர்க்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியனவைகளும் இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோயிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு வேண்டியவற்றுக்காகச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டு வஷ்திரங்கள், திருவாசி முதலியன சகலமும் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் சகலமும் கோயிலின் இருப்பு வீட்டில் வைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வாறு இருப்பு வீட்டின் முக்கியத்துவம் கோயில் நிர்வாக முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு செயன் முறையை மத்திய காலத்து வழமைப் பிரகாரம் அண்மைக்காலம் வரைக்கும் பின்பற்றப்பட்டு வந்திருந்தமையைக் காண்கின் றோம்.

**நிலம், சொத்துக்கள், அசைவற்ற ஆதனங் கள்**

பின்னாற் சொல்லப்படும் ஆதனங்கள் திருக்கோணதமலை தம்பலகமப்பற்று, தம்பலகமம் திருக்கோணநாதேஸ்வரர் சுவாமி கோவிலாதனமாக அக்கோவிலின் ஏகபூசகரும், இருபான்மையும் என்னும் அதிகார முறைப்படி உரிமை மாட்சி பெற்ற ஆதனங்களாகும். அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

தம்பலகமப்பற்று மாக்கை வெளியிலிருக்கும் பெத்தராசிவயல், பெரியஆண்டிவெட்டுவன் வயல், சின்னண்டிவெட்டுவான்வயல், காட்டுக் குடும்பியன் வயல், பெரிய வெட்டுக்காட்டு வயல், முதலியார் வயல், தம்பலகமப்பற்று பெற்ற வெளியிலிருக்கும் ஒலுக்குணி வயல். கரையான் வெட்டுக்காட்டு வயல், சுவாந்தியார் வயல், மந்தணடைக் கீத்து வயல், கரையான் வயல், தம்பலகமப் பற்றுபண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனை வயல், பிராமணன் கீத்து வயல், உப்புக்குழி வயல், மூத்தார் வயல், மாதோட்டியான் வயல், சின்ன அணைவெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் வயல், பிரம்மபரு காட்டுக்கீத்து வயல், தௌவில் வெட்டுவான் வயல், தம்பலகமப்பற்று சம்பாந்துறையில் உள்ள பெருந்தரையும் அதில் உள்ள தென்னை மரங்கள், தென்னம்பிள்ளைகள் முதலிய வான்பயிர்கள், தம்பலகமப்பற்று பண்டார வெளியிலிருக்கும் ஒரு துண்டுத் தரையும் அதற்குச்சேர்மானமானசகலஉரித்துக்களும்ஆக ஏறத்தாழ 6600 ஏக்கர் நெல் வயல் விளைநிலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*181 x 215* பாகம் பரப்புடைய தென்னந் தோட்டமும் தேவதானமாக ஆங்கிலேயர் காலம் வரைக்கும் இருந்து வந்தமையை தோம்புகளினூடாக அறிகின்றோம். இவை யாவும் கந்தளாய்க் குளத்தின் நேரடியான பாசனமுறைக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் கோணநாதேஸ்வரப் பதிக்கும் பெரும் நீர்ப்பாசன நிறுவனங்களின் மீதான சொத்துடமை இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தளாய்க் குளத்திலும், மகாமகக் குளத்திலும் காலத்திற்குக் காலம் நடைபெற்ற வேள்விகள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்களின் மூலமும் அங்கு நடைபெற்ற யாகங்கள் மூலமும் கிராமசாந்திகள் மூலமும் பெருந்தொகையான வருமானம் கிடைத்தமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். ஆலடிப்பத்தினியம்மன் கோவிலின் வேள்விகள் மூலம் பெற்றவருமானமும் கோணநாதேஸ்வரப் பதிக்கே சென்றடைந்தது. திருகோணாதமலை கொட்டியாரப் பற்றில் உள்ள கங்குவேலி சிவன்கோவில் , வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் ஆகியவற்றின் பூசை, திருவிழாக்கள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள் அதற்குரிய கிருத்தியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானமும் கோணேஸ் வரப் பதியையே சென்றடைந்தது. மேலும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவுள்ள - அசைவற்ற ஆதனங்களின் வருமானமும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**கோயிற் குடியிருப்புக்கள்**

தம்பலகாமப் பற்றைச் சேர்ந்த நாய்மார் திடல், கரைச்சித்திடல், கூட்டாம்புளியடி, பட்டுமேடு, கோணமலை, கள்ளிமேடு - காறிக்குடி, குச்சியம் படுதிடல், வண்ணா மேட்டுத்திடல் , கொட்டியாரப் பற்றைச் சொந்த கீச்சிலம் பற்றை, கங்குவேலி, சம்பூர், கோறளைப் பற்றைச் சேர்ந்த கதிரவெளி திருக்கொட்டியாரப் பற்றைச் சேர்ந்த மல்லிகைத்தீவு ஆகியன அதிக்கோண நாதேஸ்வரா கோவிலுக்குரிய பிரதான கோயிற் குடியிருப்புக்களாக விளங்கின. இக்கோயிற் குடியிருப்புக்களுக்குரிய தொழுப்பாளர்களாக ஈரங்கொல்லி (திருக்குளக்கட்டாடி) பரியாரி, பண்டாரம், கந்தியடப்பன், மதிரிப்பணிக்கள், சங்கமம், தோம்புதோர், ஆகியோர் சேவை புரிந்தனர். ஆதிக்கோண நாதேஸ்வரர் திருக்கோவிலின்திருப்பட்டாடை உற்பத்தியை கந்தியடப்பர் அல்லது செங்குந்தர் (சேணியர்) என்ற குல மக்களே மேற்கொண்டிருந்தனர்.

**முடிவுரை**

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவிலின் தோற்றம் வளர்ச்சி, நிலம், சொத்துக்கள், வருமானம், பரிபாலன முறைகள் தொடர்பான சில அடிப்படை ஆய்வுக் குறிப்புக்களை ஆதிப்பல்லவ வம்ச மரபு ஒன்றுடன் இணைத்த வகையில் இங்கு நிரைப்படுத்த முடிந்தது. தோம்புக் குறிப்புக்களில் இக்கோவிலைப் பற்றிய மேலதிக விபரங்கள் இன்னும் காணப்படுகின்றன. இக்கோவிலைப் பராமரிப்பதற்காக ஒரு சபை உருவாக்கப்பட்டிருந்தது. அச்சபையில் *33* ஊர்களைச் சேர்ந்த *33* உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களது விபரங்கள், கடமைகள்கூட தோம்பில்பதிவுசெய்யப்பட்டுக் காணப்படுகிறது. இவை மாத்திரமன்றி, திருகோணாதமலை கோணநாதேஸ்வரப் பெருமானின் பட்டித்தொகுதியில் வளர்க்கப்பட்டு வந்த மாடுகளின் இனம், பெயர்கள், குறியீடுகள் போன்றனவும் விபரமாகக் கொடுக்கப்பட்டுள்ளமையும் நன்கு ஆராயத்தக்கது. இச்சிறு ஆய்வுக் கட்டுரையின் கண் அவற்றை விபரமாகக் கொடுக்க முடியாதிருக்கின்றது. ஏற்கனவே சோழர் காலத்தில் இந்த இந்துக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செ. குணசிங்கம் மிகவும் விபரமாக ஆராய்ந்துள்ளார். இங்கே சொல்லப்பட்ட தகவல்கள் ஆய்வாளர்களுக்கு இப்பொழுது தான் முதன்முறையாகக் கிடைக்கின்றது எனலாம். இவ்வகையில் இக்கட்டுரையின் நோக்கம் இக்கோவிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய தோற்றம் தொடர்பாக எதிர்கால ஆய்விற்கு ஆய்வாளர்களை வழிநடத்திச் செல்வதே எனலாம். திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவில் பற்றிய அரிய தகவல்கள் இன்னும் தம்பசிட்டி வியாபாரி மூலையில் மறைந்து காணப் படுகின்றன. வியாபாரி மூலைக்கும் தம்பலகாமம் ஆதிக்கோணநாதேஸ்வரர் கோவிலுக்குமிடையே காணப்பட்டிருக்கக் கூடிய ஆதிப்பல்லவ வம்சத் தொடர்புகளை உரியமுறையில் ஆராய்ந்து, அவற்றையும் சேகரித்துப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் கோணநாதேஸ்வரர் கோவிலின் வரலாற்றை முழுமையாக வரைந்து கொள்வதற்கு வாய்ப் புக்கள் கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. Ramachchandra Dikshitar, V.R (Trand) **The Silappadikaram**, Introduction: pp 01 - 74 : Oxford Uni. Press, 1939
2. Devakunjari, D., **Madurai through the ages**, pub.by SHAER, Madras, 1979.
3. Draniyagala, S.U., **The prehistory of Sri Lanka, Part I**, Pub by the department of Archacological Sruvey of Sri Lanka, Part I, Pub by the depatment of Archacological Survey of Sri Lanka, Colombo - 1992
4. Gunasingam,S,. **The Tamils and Trincomalee**, Peradeniya, 1979
5. Xavier, J.T., The land of leteer, Trincomalee, 1977
6. Navaratnam, C.S., **Tamils and Ceylon**, Jaffna, 1958
7. தோம்புக் கட்டுத் தொகுதி: வியாபாரிமூலையில் வாழ்ந்த அமரர் சி.நா.சொக்கநாதபிள்ளை அவர்களின் சேகரிப்புக்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுத் தகவல்கள்.
8. மோஸஸ் பொன்னையா., நாடார் வரலாறு, சீயோன் பதிப்பகம், மதுரை, 1978.
9. பல்லவராசசேகரன், பல்லவராச்சியம், ஈழத்து இலக்கியச்சோலை, திருகோணமலை, 2007
10. கிருஸ்ணராசா, செ, தொல்லியலும் வடமராட்சியும் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு, கோண்டாவில், 2015.
11. குணசிங்கம், செ., கோணேஸ்வரம், பேராதனை, 1973.
12. வேலுப்பிள்ளை, ஆ., திருகோமலைத் தமிழ் மந்திரமாலை திருவுடையாள், பிரதேசமலர் - 04, பிரதேச செயலகம், வடமராட்சி - தெற்கு - மேற்கு, கரவெட்டி, 2013.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தமிழ் மொழி மூல மாணவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் தற்போதைய நிலைமையும், அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளும்

**இ. ஜெயலக்ஷ்மி ; ப. இராசேஸ்வரன்**

**ஆய்வுச்சுருக்கம்**

தேசியமட்டத்தில் பொதுக்கல்வி (தரம் 1 - 12) செயற்பாடுகளை மதிப்பீடு செய்கின்ற பொதுப் பரீட்சைகளாக தரம் 5 புலமைப் பரீட்சை, க.பொ.த சாதாரணப் பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை ஆகியன காணப்படுகின்றன. பொதுக்கல்வி தொடர்பில் மாணவர்களின் அடைவுமட்டத்தை அளவீடு செய்வதற்கு இப் பொதுப் பரீட்சைகள் அடிப்படையாக அமைகின்றன. மேலும் பாடசாலை அனுமதிகளுக்கும், உதவித்தொகை வழங்குவதற்கும், உயர்தரக் கல்வியை தொடர்வதற்கும், பல்கலைக்கழக அனுமதியை பெறுவதற்குமான வரிசைப்படுத்தல்களை, தரப்படுத்தல்களை, தெரிவுகளை மேற்கொள்வதற்கும் இப்பரீட்சைகள் முதன்மை பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இப்பரீட்சைகளினால் கல்விச் செயன்முறையில் போட்டி, வியாபாரப்போக்கு, தனியார் மயத்தன்மை, ஏற்றத்தாழ்வு போன்றன அதிகரித்துள்ளமையையும் உணரக்கூடியதாக உள்ளன. வடமாகாணத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் தற்போதைய நிலைமையை ஆராய்வதாகவும் அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளை விதந்துரைக்கும் பிரதான நோக்கத்தைக் கொண்டதாக இவ் ஆய்வுக் கட்டுரை அமைகிறது. வடமாகாண பாடசாலைகளின் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை பிரதான தரவு சேகரிப்புக் கருவியாக பயன்படுத்தப்பட்டது. அளவைநிலை ஆய்வு அணுகுமுறை ஊடாக அறிக்கையின் புள்ளிவிபரங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. ஆய்வின் பெறுபேறாக ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகின்ற போது பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் வடமாகாணம் பின்னடைவான நிலையில் உள்ளமை கண்டறியப்பட்டது.இறுதியில் ஆய்வின் பெறுபேற்றுக்கு ஏற்ப வடமாகாணத்தின் பொதுப்பரீட்சைகளின் அடைவுமட்டத்தை உயர்த்து வதற்கான பரிகார நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** பொதுக்கல்வி, பொதுப்பரீட்சைகள், அடைவுமட்டம்

**அறிமுகம்**

பொதுக்கல்வி அடைவுமட்டத்தை அறிகைசார் அடிப்படையில் மதிப்பிடுகின்ற கருவிகளாக பொதுப்பரீட்சைகளான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியன காணப்படுகின்றன. இலங்கை கல்வி வரலாற்று காலப் பகுப்பின் அடிப்படையில் இலங்கையின் சுதந்திரத்திற்கு முன்னரான காலக் கல்வியின் (1931 - 1947) அதாவது கன்னங்கரா காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட சீர்திருத்தங்களில் ஒன்றாக தேசிய பரீட்சைகள் முறைமை ஆரம்பிக்கப்பட்டது. மேலும் தேசிய பரீட்சை முறைமைகள் தொடர்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்யப்பட்ட 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை சட்டம், பொதுப்பரீட்சைகள் தொடர்பான 1976 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச் சட்டம் பொதுப் பரீட்சைகள் தொடர்பில் பல்வேறு நடைமுறைகளை அறிமுகம் செய் ததை கல்விச் சட்டங்கள் மூலம் உறுதிப் படுத்தக்கூடியதாக உள்ளது. காலத் திற்கு காலம் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சட்டங்களின் நடைமுறைகளுக்கு ஏற்ப பொதுப் பரீட்சைகள் நடைமுறைகளும் பல பரிமாணங்களைப் பெற்று இன்றைய நிலை வரை வளர்ச்சியடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பொதுப்பரீட்சைகள் மூலம் மாணவர்கள் வகுப்பறைகளில் பொதுக் கலைத்திட்டத்தின் ஊடாக கற்றுக்கொண்ட அறிகைசார் விடயப்பரப்புக்களை எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும், செய்முறை மூல மும் பிரயோகித்து தேசியமட்டத்தில் தயாரிக்கப் பட்ட புள்ளித்திட்டத்திற்கு அமைவாக பரீட்சித்து புள்ளிகளை (அளவீடு மூலம்) மதிப்பிட்டுக் கொள்ள முடிகின்றது. பின் னர் மாணவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர், பாடசாலை, வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற அடிப் படையில் வரிசைப்படுத்தல், ஒப்பீடு செய்தல் இடம் பெற்று உதவிவழங்குதல், தெரிவு செய்தல், ஊக்கமளித்தல் என பல்வேறு நோக்கங்களுக்கும் தேவைகளுக்கும் பயன் படுத்தப்படுகின்றது.

1997 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சிமைய கலைத்திட்டம் அறிகைசார், எழுச்சிசார் உளஇயக்கம்சார் ஆட்சிகளை முதன்மைப்படுத்தியிருந்தாலும் இன்றுவரை அறிகைசார் பரப்பை மட்டும் மதிப்பீடு செய்கின்ற பொதுப்பரீட்சைகளின் முதன் மைத்தன்மை இழந்துவிடவில்லை என்பது நிதர்சனம். இத்தகைய பின்னணியில் வடக்கு மாகாணத்தில் தமிழ் மொழிமூல மாணவர்களின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணப் பரீட்சை, க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் தற்போதைய நிலைமையும், அவற்றுக்கான பரிகார நடவடிக்கைகளும் எனும் ஆய்வு ஆய் வாளரினால் மேற்கொள்ளப்பட்டது.

**பின்னணி**

வடமாகாணம் கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்த சூழலினால் பாதிக் கப்பட்ட பிரதேசமாகும். யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அவற்றின் வடுக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பிரதிபலித்துக் கொண்டுள்ளன. சிதைந்த குடும்பச் சூழல், வசதிகள் இன்றி இயங்கும் பாடசாலைச் சூழல்கள், பொருளாதாரப் பலவீனங்கள், விசேட தேவையுள்ளோரின் அதிகரிப்புக்கள், இழப்புக்கள், அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்படாமை, இடப் பெயர்வுகளின் நீட்சித்தன்மை, முகாம் வாழ்க்கை நிலைமைகள், வன்முறை கலாசார பரவல், நவீன ஊடகங்களின் அதிகரித்த பாவனை, போதைப்பொருள் பயன்பாடுகள், கலாசார திணிப்புக்கள் என வடமாகாண சமூக சூழலமைவின் களநிலைமையை உயரக் கூடிய தாக உள்ளன.

மேற்படி களநிலைமைகள் கல்வி செயன் முறையில் நேரடியான, மறைமுகமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருவதை மறு க்கமுடியாது. பாடசாலைகள் சமூகத்தின் உபகூறு. சமூக சூழமைவின் பின்னணிகள் பாடசாலையின் செயற்பாடுகளையும், அடைவு மட்டத்தையும் தீர்மானிக்கும் பிரதான வலுவாக அமைகின்றது.

இவ்வாறான பின்னணியில் வடமாகா ணத்தின் பொதுப்பரீட்சைகள் தொடர்பிலான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவுமட்ட நிலைமைகள் அவற்றுக்கான பரிகார நடவடிக்கை பற்றிய ஆய்வும், கருத்தாடல்களும் அவசியமானதாகின்றது.

### ஆய்வு நோக்கம்

- வடக்கு மாகாணத்தின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் நிலைமை தொடர்பிலான தகவலைப் பெறுதல்.
- வடக்கு மாகாணத்தின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் தற்போதைய வீழ்ச்சிக்கான காரணிகளை இனங்காணுதல்.
- பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் மேம்பாட்டிற்கான பரிகார நடவடிக்கை களை விதந்துரைத்தல்.

### ஆய்வு வினாக்கள்

- வடக்கு மாகாணத்தின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் தற்போதைய நிலைமை எந்தளவு மட்டத்தில் உள்ளது?
- வடக்கு மாகாணத்தின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னடைவுக்கான காரணிகள் யாவை?
- வடமாகாணத்தின் பெறுபேறுகளின் பின்னடைவு நிலையை மேம்படுத்துவதற்கான பரிகார நடவடிக்கைகள் யாவை?

### ஆய்வு வரையறை

- இவ் ஆய்வு வடமாகாணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டது.
- இவ் ஆய்வில் ஆய்வுக் குடித்தொகையாக பாடசாலைமட்ட பரீட்சாத்திகளின் 2012 - 2015 வரையான பெறுபேறுகளின் புள்ளிவிபர தரவுகள் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### ஆய்வுக் குடித்தொகை

வடமாகாணத்தின் கடந்த ஐந்து வருடங்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரணப் பரீட்சை, க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றிய பாடசாலை மாணவர்கள் ஆய்வுக் குடித்தொகையாகக் கொள்ளப் பட்டனர். தேசிய பரீட்சை திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கை ஊடாக மேற்படி ஆய்வுக் குடித்தொகையினரின் பெறுபேறுகள் பெறப்பட்டன.

**அட்டவணை 01 ஆய்வுக் குடித்தொகை (வடமாகாணம்)**

| ஆண்டு | 2015 | | | 2014 | | | 2013 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தரம்5 | O/L | A/L | தரம்5 | O/L | A/L | தரம்5 | O/L | A/L | தரம்5 | O/L | A/L |
| தோற்றியோர் | 18871 | 177521 | 12684 | 18520 | 15266 | 12330 | 17591 | 15280 | 12052 | 17452 | 15720 | 10865 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2015, 2014, 2013, 2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரவு சேகரிப்பும் பகுப்பாய்வும்**

அளவைநிலை ஆய்வுமுறையூடாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள பொதுப் பரீட்சைகள் தொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கைகள் பிரதான தரவு சேகரிப்பு கருவியாக பயன்படுத் தப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. நூற்று வீத அடிப்படையில் அட்டவணைகளா கவும், வரைபுகளாகவும் அறிக்கையில் உள்ள தரவுகள் ஆய்வாளரினால் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**அட்டவணை ii - தரம் 5 பரீட்சைப் பெறுபேறுகளின் நிலைமை**

Grade 5 Scholarship Examinations - *2011 - 2015* Distribution of Number of Candidates Who obtained Marks Above Distrist Cut off by Province & Year

| மாகாணம் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No | % | No | % | No | % | No | % | No | % |
| மேல் | 8711 | 10.89 | 8869 | 11.21 | 8133 | 9097 | 8425 | 10.58 | 8251 | 9.86 |
| மத்திய | 3050 | 7.34 | 3228 | 7.75 | 2947 | 6082 | 3014 | 6091 | 2834 | 6.59 |
| தென் | 4309 | 11.03 | 4585 | 11.76 | 4702 | 11.67 | 4649 | 11.36 | 4337 | 10.42 |
| வடக்கு | 1772 | 9.62 | 1651 | 9.46 | 1938 | 11.02 | 2064 | 11.00 | 2148 | 11.38 |
| கிழக்கு | 2716 | 10.32 | 2762 | 10.41 | 2687 | 9.66 | 2380 | 8.52 | 2500 | 7.99 |
| வடமேல் | 4267 | 11.62 | 4406 | 12.15 | 4262 | 11.30 | 4389 | 11.37 | 4149 | 10.51 |
| வடமத்திய | 2162 | 10.24 | 2282 | 11.05 | 2213 | 10.18 | 2134 | 9.72 | 2197 | 9.69 |
| ஊவா | 2147 | 10.30 | 2201 | 10.54 | 2229 | 10.05 | 2050 | 9.14 | 2172 | 9.72 |
| சப்பிரமுவா | 3299 | 11.57 | 3399 | 11.81 | 3506 | 11.55 | 3630 | 11.84 | 3265 | 10.64 |
| மொத்தம் | 32433 | 10.38 | 33383 | 10.76 | 32617 | 10.12 | 32735 | 9.99 | 31853 | 9.55 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2011 - 2015)

**அட்டவணை iii**

Grade 5 Scholarship Examinations - *2012 - 2015* Obtained Marks Above 70 by Province & Year

| மாகாணம் | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | No | % | No | % | No | % | No | % |
| வடக்கு | 9781 | 56.05 | 10897 | 62.62 | 13240 | 70.57 | 12999 | 68.88 |
| மத்திய | 24872 | 59.70 | 27973 | 65.30 | 33330 | 76.45 | 31462 | 73.16 |
| தெற்கு | 26884 | 68.98 | 30109 | 74.64 | 34000 | 83.10 | 33960 | 81.16 |
| மேல் | 52804 | 66.71 | 58446 | 71.74 | 66888 | 80.80 | 65917 | 78.77 |
| கிழக்கு | 14603 | 55.05 | 16052 | 57.52 | 19010 | 68.05 | 19723 | 63.01 |
| வடமேல் | 25534 | 70.42 | 28641 | 75.70 | 32297 | 83.65 | 32083 | 81.30 |
| வடமத்திய | 13080 | 63.36 | 14913 | 67.11 | 17690 | 80.57 | 17592 | 77.59 |
| ஊவா | 12687 | 60.77 | 14825 | 66.95 | 17257 | 76.96 | 16648 | 74.48 |
| சப்பிரமுவா | 19564 | 67.97 | 22052 | 72.08 | 24988 | 81.48 | 24306 | 79.20 |
| தீவு | 199809 | 64.39 | 223908 | 69.44 | 258700 | 78.96 | 254690 | 76.33 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம், - 2012-2013.2014,2015)

மேற்படி அட்டவணை 70 புள்ளிகளுக்கு மேல் வடமாகாணம் பெற்றுக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையும் அதன் வீதத்தையும் காட்டுவதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை iv

Grade 5 Scholarship Examinations - 2011 - 2015 Distribation of Number of Candidates Who Obtained Marks Above Distrist Cut off by Province & Year.

| மாவட்டம் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No | % | No | % | No | % | No | % | No | % |
| கொழும்பு | 3175 | 10.06 | 3052 | 9.86 | 2944 | 9.12 | 3052 | 9.22 | 3049 | 9.17 |
| கம்பஹா | 3436 | 11.41 | 3571 | 11.88 | 3335 | 10.90 | 3388 | 11.00 | 3309 | 10.63 |
| களுத்துறை | 2100 | 11.46 | 2246 | 12.37 | 1857 | 9.92 | 1986 | 10.52 | 1893 | 9.82 |
| கண்டி | 1663 | 7.71 | 1748 | 8.01 | 1637 | 7.38 | 1655 | 7.32 | 1519 | 6.86 |
| மாத்தளை | 584 | 7.48 | 667 | 8.62 | 545 | 6.73 | 616 | 7.44 | 528 | 6.63 |
| நுவரேலியா | 803 | 6.61 | 813 | 6.73 | 765 | 5.92 | 743 | 5.84 | 787 | 6.11 |
| காலி | 1715 | 10.21 | 1840 | 11.08 | 1837 | 10.69 | 1876 | 10.73 | 1666 | 9.55 |
| மாத்தர | 1308 | 10.38 | 1414 | 11.19 | 1438 | 11.20 | 1422 | 11.06 | 1402 | 10.40 |
| அம்பாந்தோட்டை | 1286 | 13.21 | 1331 | 13.68 | 1427 | 13.89 | 1351 | 12.78 | 1269 | 11.84 |
| யாழ்ப்பாணம் | 1090 | 11.44 | 1027 | 11.50 | 1120 | 13.39 | 1196 | 12.69 | 1261 | 13.41 |
| கிளிநொச்சி | 131 | 5.38 | 110 | 4.93 | 159 | 6.84 | 167 | 6.70 | 194 | 8.05 |
| மன்னார் | 140 | 7.34 | 124 | 6.81 | 171 | 9.42 | 182 | 8.55 | 160 | 7.57 |
| வவுனியா | 332 | 11.30 | 297 | 10.49 | 357 | 13.10 | 332 | 11.78 | 331 | 11.69 |
| முல்லைத்தீவு | 79 | 4.91 | 93 | 5.67 | 131 | 7.79 | 187 | 9.86 | 202 | 9.57 |
| மட்டக்களப்பு | 931 | 10.85 | 943 | 10.63 | 887 | 9.73 | 887 | 9.43 | 879 | 8.25 |
| அம்பாறை | 1265 | 11.45 | 1311 | 11.93 | 1267 | 10.93 | 1042 | 9.04 | 1058 | 8.17 |
| திருகோணமலை | 520 | 7.75 | 508 | 7.62 | 533 | 7.50 | 451 | 6.43 | 563 | 7.32 |
| குருநாகல் | 3191 | 12.72 | 3291 | 13.36 | 3211 | 12.43 | 3224 | 12.62 | 3057 | 11.34 |
| புத்தளம் | 1076 | 9.24 | 1115 | 9.59 | 1051 | 8.85 | 1065 | 8.68 | 1092 | 8.73 |
| அனுராதபுரம் | 1429 | 9.92 | 1475 | 10.30 | 1483 | 9.86 | 1502 | 9.91 | 1514 | 9.79 |
| பொலநறுவை | 733 | 10.91 | 807 | 12.76 | 730 | 10.91 | 632 | 9.28 | 683 | 9.48 |
| பதுளை | 1454 | 10.66 | 1453 | 10.69 | 1565 | 10.85 | 1401 | 9.68 | 1457 | 10.07 |
| மொனராகல | 693 | 7.62 | 748 | 10.28 | 664 | 8.54 | 649 | 8.16 | 715 | 9.06 |
| இரத்தினபுரி | 1874 | 11.89 | 1901 | 11.93 | 2116 | 12.32 | 2081 | 12.07 | 1904 | 11.07 |
| கேகாலை | 1425 | 11.17 | 1498 | 11.65 | 1390 | 10.56 | 1549 | 11.54 | 1361 | 10.09 |
| தீவு | 32433 | 10.38 | 33383 | 10.76 | 32617 | 10.12 | 32735 | 9.99 | 31853 | 9.55 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2011,2012,2013,2014,2015)

மேற்படி அட்டவணை மாவட்ட அடிப்படையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் அடைவைப் பெற்ற மாணவர் எண்ணிக்கையையும் அதன் வீதத்தையும் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை V**

Grade 5 Scholarship Examinations - 2011 - 2015 Distribation of Candidates Who Sat The Examinations Above Cut Off and Above 70 by Education Zone Northern Province.

| வலயம் | 2012 | | 2013 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | வெட்டுப்புள்ளி | 70 க்கு மேல் | வெட்டுப்புள்ளி | 70 க்கு மேல் | வெட்டுப்புள்ளி | 70 க்கு மேல் |
| யாழ்ப்பாணம் | 15.83 | 66.51 | 15.47 | 69.87 | 18.19 | 77.69 |
| தீவகம் | 5.54 | 48.52 | 7.09 | 55.19 | 5.22 | 61.45 |
| தென்மராட்சி | 8.63 | 55.96 | 8.87 | 59.19 | 11.94 | 75.29 |
| வலிகாமம் | 9.83 | 58.53 | 10.29 | 59.89 | 9.48 | 66.80 |
| வடமராட்சி | 11.13 | 63.17 | 14.79 | 69.32 | 16.34 | 74.79 |
| கிளிநொச்சி | 4.93 | 43.90 | 6.84 | 52.34 | 8.05 | 60.27 |
| மன்னார் | 7.92 | 57.92 | 9.68 | 62.88 | 8.71 | 67.69 |
| மடு | 2.66 | 40.96 | 8.40 | 65.90 | 2.37 | 54.74 |
| வவுனியா தெற்கு | 11.35 | 61.45 | 14.68 | 69.39 | 12.20 | 72.44 |
| வவுனியா வடக்கு | 6.01 | 44.64 | 4.18 | 53.56 | 9.29 | 65.45 |
| முல்லைத்தீவு | 7.51 | 48.00 | 8.46 | 54.15 | 11.67 | 67.65 |
| துணுக்காய் | 2.40 | 37.05 | 6.30 | 48.09 | 4.42 | 56.96 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் 2012,2013,2015)

மேற்படி அட்டவணை வடமாகாணக் கல்வி வலயங்களில் 70 புள்ளிகளுக்கு மேல், வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் மாணவர்கள் பெற்ற அடைவுமட்டத்தின் வீதத்தைக் காட்டுகிறது. (2014 க்குரிய புள்ளிவிபரத்தகவல் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படவில்லை.)

**தற்போதைய நிலைமை பற்றிய கண்டறிதல்கள்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு தொடர்பாக,

- தேசிய மட்டத்தில் வடமாகாணம் 2015 இல் 18.19% வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- வடமாகாணம் 70 புள்ளிகளுக்கு மேல் மாணவர் அடைவுமட்டத்தில் 2012 - 56.05%, 2013 - 62.62%, 2014 - 70.57%, 2015 - 68.88%, என்ற வீதத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் தொடர்ந்து 8 ஆவது நிலையில் காணப்படுகின்றது.
- 2015 இல் தேசியமட்டத்தில் யாழ் மாவட்டம் 13.41 வீதம் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் மாணவர் அடைவு மட்டத்தைப் பெற்று முதலிடத்தையும், யாழ் கல்வி வலயம் 18.19 வீத வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று தேசியமட்டத்தில் முதலிடத்தில் இருப்பதையும் காணமுடிகிறது.
- 2015இல் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் உயர்புள்ளி வீதத்தைப் பெற்று தேசியமட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ் மாவட்டம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற புள்ளிகளின் வீதத்தில் 17 ஆவது இடத்திலும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற புள்ளிகளின் வீதத்தில் 16 ஆவது இடத்தில் உள்ளதை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடியதாக உள்ளது.
- தேசிய மட்டத்தில் 2015 இல் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் உயர்வீதத்தைப் பெற்று முதலிடம் பெற்ற யாழ் கல்வி வலயம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற வீத வரிசையில் 38 ஆவது வலயமாகவும், 100 புள்ளிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் பெற்ற வீத வரிசையில் 29 ஆவது வலயமாகவும் காணப்படுகின்றது.

- வடமாகாணத்தின் 5 மாவட்டங்களும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது பொதுவாக 70 புள்ளிகளுக்கு மேல், 100 புள்ளிகளுக்கு மேல் அடைவைப் பெறும் வீதத்தில் பின்னடைவாக இருப்பதை தரவுகள் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.
- 2015 இல் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற அடைவில் வடமாகாணத்தின் 5 மாவட்டங்களும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகின்ற போது உயர்வான நிலையில் காணப்படுகின்றது.



அட்டவணை vi

## G.C.E (O/L) Examinations - 2011 - 2015 Qualitied for A/L by Province Level.

| மாகாணம் | 2011 | | | 2012 | | | 2013 | | | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Qualitied for A/L | | | Qualitied for A/L | | | Qualitied for A/L | | | Qualitied for A/L | | | Qualitied for A/L | |
| | Stu.No | No | % | Stu.No | No | % | Stu.No | No | % | Stu.No | No | % | Stu.No | No | % |
| மேல் | 69614 | 46337 | 66.56 | 70871 | 48923 | 69.03 | 71357 | 49521 | 69.40 | 68093 | 49003 | 71.96 | 73017 | 53062 | 72.67 |
| மத்திய | 35265 | 20309 | 57.59 | 34868 | 21442 | 61.49 | 34455 | 21878 | 63.50 | 34085 | 22481 | 65.96 | 34652 | 23209 | 66.98 |
| தென் | 34908 | 21444 | 62.86 | 35139 | 23297 | 66.30 | 33692 | 22591 | 67.05 | 33145 | 24223 | 73.08 | 34801 | 26173 | 75.21 |
| வடக்கு | 18021 | 9778 | 54.26 | 15720 | 9430 | 59.99 | 15280 | 9982 | 65.33 | 15266 | 9800 | 64.19 | 17752 | 10719 | 60.38 |
| கிழக்கு | 20848 | 11755 | 56.38 | 20701 | 12875 | 62.20 | 20525 | 13430 | 65.45 | 20164 | 13451 | 66.71 | 21693 | 13784 | 63.54 |
| வடமேல் | 30689 | 19237 | 62.68 | 30924 | 20659 | 66.81 | 30775 | 21209 | 68.92 | 29734 | 20938 | 70.42 | 31733 | 22104 | 69.66 |
| வடமத்திய | 16897 | 9422 | 56.04 | 16768 | 10128 | 60.40 | 16726 | 10548 | 63.06 | 16304 | 10638 | 65.25 | 16560 | 11030 | 66.61 |
| ஊவா | 18637 | 10147 | 54.45 | 19012 | 11336 | 59.63 | 18003 | 11419 | 63.43 | 17065 | 11061 | 64.82 | 18231 | 12005 | 65.85 |
| சப்பிரகமுவா | 25253 | 15262 | 60.44 | 24992 | 16070 | 64.30 | 23959 | 15956 | 66.60 | 23466 | 16071 | 68.26 | 24785 | 17342 | 69.97 |
| தீவு | 270032 | 164191 | 60.80 | 268995 | 174160 | 64.74 | 264772 | 176534 | 66.67 | 257322 | 177612 | 69.02 | 273224 | 189428 | 69.33 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2011, 2012, 2013, 2014, 2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை vii

G.C.E (O/L) Examinations - (2014 -2015) Failed in A/L Subjects by Province Level.

| மாகாணம் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | No | % | No | % | No | % | No | % | No | % |
| மேல் | 2692 | 3.87 | 2670 | 3.77 | 2653 | 3.72 | 2089 | 3.07 | 2232 | 3.06 |
| வடமேல் | 1104 | 3.60 | 876 | 2.83 | 770 | 2.50 | 696 | 2.34 | 849 | 2.68 |
| தென் | 1891 | 5.42 | 1573 | 4.48 | 1309 | 3.89 | 793 | 2.39 | 722 | 2.07 |
| சப்பிரமுவா | 1325 | 5.25 | 1262 | 5.05 | 928 | 3.87 | 950 | 4.05 | 869 | 3.51 |
| கிழக்கு | 792 | 3.80 | 589 | 2.85 | 463 | 2.26 | 457 | 2.27 | 641 | 2.95 |
| மத்திய | 1930 | 5.47 | 1627 | 4.67 | 365 | 2.39 | 1255 | 3.68 | 1133 | 3.27 |
| வடமத்திய | 1086 | 6.47 | 917 | 5.47 | 1361 | 3.95 | 615 | 3.77 | 706 | 4.26 |
| வடக்கு | 646 | 3.58 | 437 | 2.78 | 769 | 4.27 | 572 | 3.75 | 805 | 4.53 |
| ஊவா | 1329 | 7.13 | 1149 | 6.04 | 826 | 4.94 | 720 | 4.22 | 741 | 4.06 |
| தீவு | 12795 | 4.74 | 11100 | 4.13 | 9444 | 3.57 | 8147 | 3.17 | 8698 | 3.18 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2011, 2012, 2013, 2014, 2015)

மேற்படி அட்டவணை 2011 - 2015 வரை மாகாண அடிப்படையில் முழுப்பாடங்களில் சித்தியடையாதோர் எண்ணிக்கையையும், வீதத்தையும் காட்டுவதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## G.C.E (O/L) Examinations 2011 - 2015 Qualitied for A/L and failed in A/L Subjects by District.

| மாவட்டம் | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed |
| கொழும்பு | 71.62 | 2.94 | 73.28 | 3.31 | 73.38 | 3.03 | 76.30 | 2.61 | 76.08 | 2.69 |
| மன்னார் | 62.72 | 0.89 | 64.86 | 0.68 | 70.47 | 0.40 | 75.45 | 0.54 | 75.97 | 1.77 |
| மாத்தர | 64.67 | 4.56 | 66.31 | 4.07 | 69.03 | 3.40 | 73.63 | 2.26 | 75.29 | 2.05 |
| காலி | 62.66 | 5.98 | 67.19 | 5.00 | 66.21 | 4.26 | 73.58 | 2.55 | 74.38 | 2.32 |
| குருணாகல் | 65.15 | 3.54 | 68.31 | 2.99 | 70.78 | 2.58 | 72.03 | 2.49 | 72.42 | 3.17 |
| அம்பாந்தோட்டை | 60.90 | 5.54 | 64.75 | 4.10 | 65.97 | 3.83 | 71.40 | 2.28 | 72.38 | 2.69 |
| வவுனியா | 59.76 | 2.46 | 65.63 | 1.09 | 70.70 | 1.29 | 70.49 | 1.67 | 70.52 | 2.82 |
| கேகாலை | 63.75 | 4.38 | 67.18 | 3.83 | 68.58 | 3.49 | 70.56 | 3.41 | 70.31 | 3.26 |
| அம்பாறை | 59.66 | 3.33 | 63.02 | 2.86 | 66.21 | 2.03 | 69.00 | 2.21 | 70.05 | 3.38 |
| கண்டி | 61.19 | 5.26 | 65.16 | 4.46 | 55.40 | 3.64 | 68.93 | 3.35 | 68.26 | 0.73 |
| கம்பஹா | 62.43 | 4.53 | 65.57 | 4.24 | 66.31 | 4.34 | 68.76 | 3.46 | 68.01 | 3.77 |
| களுத்துறை | 63.32 | 4.63 | 66.25 | 3.88 | 66.45 | 4.07 | 68.72 | 3.32 | 67.90 | 3.74 |
| புத்தளம் | 56.95 | 3.73 | 63.36 | 2.47 | 64.81 | 2.34 | 66.85 | 2.00 | 67.59 | 2.62 |
| இரத்தினபுரி | 57.99 | 5.88 | 62.10 | 5.98 | 65.03 | 4.18 | 66.45 | 4.55 | 67.02 | 3.30 |
| மட்டக்களப்பு | 57.96 | 2.86 | 64.79 | 2.08 | 66.82 | 1.90 | 66.31 | 2.14 | 65.63 | 3.91 |
| பதுளை | 57.08 | 5.14 | 62.37 | 4.40 | 65.10 | 3.31 | 66.29 | 3.36 | 64.07 | 1.66 |
| அனுராதபுரம் | 56.91 | 6.15 | 61.71 | 4.98 | 64.10 | 4.84 | 65.48 | 3.69 | 64.01 | 2.38 |
| பொலநறுவை | 54.31 | 7.15 | 57.37 | 6.59 | 60.68 | 5.16 | 64.21 | 3.97 | 63.73 | 2.64 |
| மாத்தளை | 51.10 | 6.63 | 61.33 | 5.15 | 62.46 | 5.13 | 64.43 | 4.90 | 63.63 | 5.46 |
| யாழ்ப்பாணம் | 57.23 | 3.14 | 62.17 | 2.17 | 66.57 | 2.35 | 64.43 | 3.95 | 63.57 | 5.56 |
| திருகோணமலை | 48.79 | 5.78 | 57.52 | 3.78 | 62.28 | 3.11 | 63.18 | 2.54 | 62.54 | 4.96 |
| மொனராகலை | 49.62 | 10.78 | 54.38 | 9.18 | 60.16 | 6.16 | 61.83 | 5.96 | 60.83 | 3.74 |
| நுவரேலியா | 49.99 | 5.14 | 53.89 | 4.75 | 58.19 | 3.79 | 60.91 | 3.52 | 56.59 | 4.21 |
| முல்லைத்தீவு | 40.16 | 5.61 | 46.44 | 7.75 | 56.68 | 4.10 | 55.73 | 5.23 | 51.98 | 4.82 |
| கிளிநொச்சி | 35.39 | 8.05 | 47.23 | 6.18 | 52.51 | 4.84 | 52.21 | 6.79 | 46.44 | 8.64 |
| தீவு | 6088 | 4.74 | 64.74 | 4.13 | 66.67 | 3.57 | 69.02 | 3.17 | 69.44 | 3.18 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை viii மாவட்ட அடிப்படையில் உயர்தரத்திற்கு தகைமையடைந்தோர், முழுப்பாடங்களில் சித்தியடையாதோர் வீதத்தை காட்டுவதாக உள்ளது.

**அட்டவணை ix**

**G.C.E (O/L) Examination Performance of School Candidates by** Education Zone - Northern Province.

| வலயம் | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|
| | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed | Qualitied For A/L | Failed |
| யாழ்ப்பாணம் | 71.91 | 1.27 | 71.67 | 2.27 | 70.61 | 3.21 |
| தீவகம் | 49.09 | 4.46 | 46.35 | 8.33 | 44.94 | 10.81 |
| தென்மராட்சி | 64.67 | 3.16 | 64.31 | 6.84 | 57.37 | 6.37 |
| வலிகாமம் | 62.82 | 2.68 | 58.23 | 4.08 | 58.33 | 5.13 |
| வடமராட்சி | 67.88 | 2.96 | 66.71 | 3.90 | 63.81 | 5.01 |
| கிளிநொச்சி | 52.51 | 4.84 | 52.21 | 6.79 | 46.44 | 8.64 |
| மன்னார் | 72.71 | 0.24 | 78.26 | 0.20 | 69.69 | 0.45 |
| மடு | 60.15 | 1.11 | 65.38 | 1.92 | 63.78 | 1.92 |
| வவுனியா தெற்கு | 72.79 | 1.24 | 74.61 | 0.91 | 65.89 | 1.70 |
| வவுனியா வடக்கு | 61.75 | 1.50 | 52.70 | 5.15 | 55.46 | 1.44 |
| முல்லைத்தீவு | 59.10 | 4.71 | 58.14 | 3.97 | 53.21 | 4.90 |
| துணுக்காய் | 51.23 | 2.71 | 50.46 | 7.99 | 49.19 | 4.64 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2013, 2014, 2015)

மேற்படி அட்டவணை வலய அடிப் படையில் வட மாகாணம் பெற்றுக் கொண்ட அடைவுமட்டத்தை காட்டுவதாக அமை கின்றது.

**க.பொ.த சாதாரணப் பரீட்சை**

- மாகாண அடிப்படையில் க.பொ.த உயர்தரப் பிரிவுக்கு தகைமை பெற் றோர் வீதம் 2011 - 54.26%, 2012 - 59.99%, 2013 - 65.33%, 2014 - 64.19%, 2015 - 60.38%, என்றவாறு அமைந்து 2013 ஆண்டுகளுக்குப் பின்னர் வீழ்ச்சியடைந்து செல்வதைக் காண முடிகிறது.
- 2011 - 54.26 வீதத்தில் ஒன்பதாவதாகவும், 2012 - 59.99 வீதத்தில் எட்டாவதாகவும், 2014 - 64.19 வீதத்தில் ஒன்பதாவதாகவும், 2015 - 60.38 வீதத்தில் ஒன்பதாவதாகவும், மாகாண அடிப்படையில் க.பொ.த உயர்தகைமைக்கு தகைமை பெற்றோர் வீதம் காணப்படுகின்றமை க.பொ.த பரீட்சையில் வடமாகாணம் மிகவும் பின்னடைந்த பெறுபேற்றை பெற்றுள்ளதைக் காட்டுவதாக உள்ளது.
- 2011, 2012 ஆண்டுகளை விட 2013, 2014, 2015 ஆண்டுகளில் வடமா காணத்தில் முழுப்பாடங்களில் சித்தியின்மை யடைந்தோர் வீதம் படிப்படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்து வருவதை புள்ளி விபர அறிக்கைகள் விளக்குகின்றன.

- மாவட்ட அடிப்படையில் நோக்குகின்ற போது ஒப்பீட்டு ரீதியில் 15 ஆவது மாவட்ட நிலைக்குப் பின்னர் பெறு பேறு மட்டத்தை வடமாகாண மாவட்டங்கள் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. யாழ்ப்பாணம் 2015 - 18 ஆவது இடத்திலும், 2014 - 20 ஆவது இடத்திலும், 2015 - 21 ஆவது இடத்திலும் உள்ளதைப் புள்ளிவிபர அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.
- வடமாகாணத்தின் வலயரீதியான அடைவுமட்ட விகிதம் 2013 இன் பின்னர் வீழ்ச்சி அடைந்து வருவதைக் காணமுடிகிறது. அதனுடன் முழுப் பாடங்களில் சித்தியடையாதோர் விகிதம் 2014, 2015 ஆண்டுகளில் அதிகரித்து வருகின்ற நிலைமைகளையும் அவதானிக்கமுடிகிறது.
- தேசியமட்டத்தில் யாழ்வலயம் - 27, மன்னார் - 35, வவுனியா - 51, வடமராட்சி - 60, மடு - 61, தென்மராட்சி - 85, வவுனியாவடக்கு - 90, முல்லைத்தீவு - 93, துணுக்காய் - 94, கிளிநொச்சி - 96, தீவகம் - 97 என 98 கல்வி வலயங்களின் வடமாகாண கல்வி வலயங்களின் வரிசை நிலை காணப்படுகின்றது.
- வடமாகாணத்தில் 9A பெற்ற மாகாணங்களின் சித்தி வீதம் 2013 - 6.31%, 2014 - 6.45%, 2015 - 6.81% என்ற நிலைமையில் அதிகரித்து வருவதைக் காணலாம்.
- தேசியமட்டத்தில் உயர் பெறு பேறுகளைப் பெற்ற 61 பாடசாலைகளில் வடமாகாணத்தின் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 32 ஆவது இடத்திலும், தேசியமட்ட நிலையில் 25 ஆவது இடத்திலும் காணப்படுகின்றது.
- 2012 - 64.74%, 2013 - 66.67%, 2014 - 69.00%, 2015 - 69.33% என்ற அடிப்படையில் வடமாகாணமட்டம் க.பொ.த உயர்தரத்திற்கு தகைமையடைவோர் வீத நிலைமை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை x

G.C.E (O/L) Examination Performance of School Candidates by Province 2012 - 2015

| மாகாணம் | 2012 | | | 2013 | | | 2014 | | | 2015 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Pass In All Subjects | Failed in All | 3A | Pass In All Subjects | Failed in All | 3A | Pass In All Subjects | Failed in All | 3A | Pass In All Subjects | Failed in All | 3A |
| சப்பிரமுவா | 65.68 | 7.32 | 4.64 | 61.18 | 10.94 | 2.63 | 64.63 | 7.36 | 2.52 | 64.88 | 7.48 | 3.08 |
| ஊவா | 64.77 | 6.20 | 3.39 | 59.19 | 10.91 | 1.55 | 61.65 | 7.77 | 1.72 | 62.81 | 8.31 | 2.15 |
| தென் | 64.38 | 8.86 | 4.93 | 59.82 | 12.60 | 2.72 | 62.91 | 8.88 | 1.39 | 62.34 | 9.89 | 3.22 |
| வடமத்தி | 62.88 | 7.25 | 3.23 | 56.01 | 11.69 | 1.48 | 59.23 | 7.96 | 1.71 | 59.56 | 9.64 | 2.54 |
| வடக்கு | 62.84 | 7.84 | 1.83 | 63.88 | 10.63 | 0.97 | 61.71 | 8.69 | 1.39 | 65.23 | 7.98 | 1.69 |
| வடமேல் | 62.84 | 7.49 | 3.34 | 56.50 | 11.11 | 1.80 | 59.74 | 7.86 | 1.87 | 60.15 | 8.98 | 2.17 |
| மேற்கு | 62.67 | 8.45 | 6.25 | 57.34 | 12.65 | 3.28 | 59.00 | 8.70 | 3.35 | 62.84 | 8.71 | 4.15 |
| மத்தி | 61.74 | 6.67 | 3.11 | 56.74 | 11.44 | 1.59 | 58.94 | 7.51 | 1.78 | 61.30 | 8.11 | 1.87 |
| கிழக்கு | 60.96 | 6.50 | 1.84 | 60.72 | 9.01 | 0.84 | 57.31 | 8.61 | 1.04 | 61.69 | 7.95 | 1.35 |
| தீவு | 63.15 | 7.68 | 4.27 | 58.56 | 11.59 | 2.22 | 60.43 | 8.24 | 2.36 | 62.35 | 8.64 | 2.83 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2012, 2013, 2014, 2015)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை x க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாகாணங்களின் 2012 -2015 வரை பெற்ற 3A, மூன்று பாடங்களின் சித்தி, மூன்று பாடங்களின் சித்தியின்மை வீதத்தைக் காட்டுவதாக உள்ளது.

**அட்டவணை xi**

**G.C.E (O/L) Examination Performance of School Candidates** by Province 2012 - 2015.

| மாகாணம் | உயிரியல் விஞ்ஞானம் | பிரயோக உயிரியல் | வர்த்தகம் | கலை | பொறியியல் தொழில்நுட்பம் | உயிரியல் தொழில்நுட்பம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 58.80 | 50.15 | 71.45 | 64.55 | 54.05 | 65.69 | 35.77 |
| வடக்கு | 55.61 | 53.64 | 69.57 | 71.03 | 54.69 | 59.53 | 50.47 |
| கிழக்கு | 51.33 | 46.88 | 67.41 | 67.79 | 39.89 | 50.18 | 55.29 |
| தென் | 51.29 | 50.04 | 72.00 | 70.07 | 53.42 | 56.20 | 30.98 |
| மத்தி | 50.90 | 46.85 | 67.71 | 67.74 | 46.53 | 55.98 | 46.61 |
| சப்பிரமுவா | 49.44 | 46.67 | 73.98 | 72.25 | 52.43 | 70.00 | 45.25 |
| வடமேல் | 46.45 | 41.48 | 69.40 | 67.85 | 45.61 | 63.19 | 37.20 |
| ஊவா | 44.02 | 45.50 | 66.98 | 72.54 | 52.99 | 62.26 | 39.77 |
| வடமத்தி | 42.01 | 39.98 | 68.25 | 69.32 | 44.24 | 58.20 | 44.70 |
| | 51.65 | 48.03 | 70.38 | 68.65 | 50.09 | 60.66 | 39.71 |

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2015)

அட்டவணை xi க.பொ.த உயர்தரப் பாடத்தில் மாணவர்கள் பாடத்துறையில் பெற்ற அடைவுமட்ட வீதத்தைக் காட்டுவதாக உள்ளது.

**அட்டவணை xii**

**G.C.E (O/L) Examinations 2013 -2015 Qualified For A/L and failed in A/L Subjects by District.**

| மாவட்டம் | 2015 | | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|---|---|
| | பல்கலைக் கழக தகுதி | முழுப் பாடங்களிலும் சித்தியின்மை | பல்கலைக் கழக தகுதி | முழுப் பாடங்களிலும் சித்தியின்மை | பல்கலைக் கழக தகுதி | முழுப் பாடங்களிலும் சித்தியின்மை |
| யாழ்ப்பாணம் | 66.32 | 7.64 | 62.95 | 11.05 | 63.29 | 8.40 |
| இரத்தினபுரி | 65.61 | 7.45 | 61.43 | 11.05 | 65.10 | 7.84 |
| மன்னார் | 65.40 | 7.53 | 64.57 | 10.09 | 63.61 | 7.01 |
| மட்டக்களப்பு | 64.42 | 7.39 | 62.52 | 7.44 | 65.22 | 5.72 |
| கிளிநொச்சி | 64.07 | 7.87 | 69.75 | 10.02 | 69.03 | 6.45 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாத்தர | 64.03 | 9.14 | 59.98 | 11.74 | 63.04 | 8.46 |
| கேகாலை | 63.98 | 7.51 | 60.88 | 10.81 | 64.70 | 6.95 |
| வவுனியா | 63.91 | 7.34 | 64.20 | 7.84 | 65.49 | 5.60 |
| மொனராகல | 63.80 | 7.55 | 60.11 | 10.46 | 63.78 | 7.27 |
| கொழும்பு | 63.68 | 7.99 | 58.98 | 12.04 | 61.29 | 7.48 |
| புத்தளம் | 63.13 | 8.13 | 59.36 | 9.47 | 63.01 | 6.85 |
| அம்பாந்தோட்டை | 62.82 | 8.90 | 57.38 | 13.05 | 660.38 | 8.17 |
| திருகோணமலை | 62.77 | 7.63 | 60.01 | 10.45 | 58.28 | 8.22 |
| கம்பஹா | 62.49 | 9.23 | 55.18 | 13.35 | 58.19 | 8.76 |
| நுவரேலியா | 62.48 | 8.76 | 56.90 | 12.02 | 60.24 | 7.93 |
| பதுளை | 62.34 | 8.67 | 58.72 | 11.13 | 61.00 | 8.28 |
| களுத்துறை | 61.50 | 9.46 | 57.33 | 12.80 | 61.08 | 8.93 |
| மாத்தளை | 61.43 | 8.42 | 56.98 | 11.50 | 60.12 | 7.33 |
| முல்லைத்தீவு | 61.04 | 12.02 | 63.23 | 13.55 | 63.76 | 9.99 |
| கண்டி | 60.82 | 7.77 | 56.60 | 11.18 | 59.63 | 6.83 |
| காலி | 60.74 | 11.05 | 61.10 | 13.06 | 63.05 | 9.47 |
| அனுராதபுரம் | 60.71 | 9.53 | 56.99 | 11.33 | 60.38 | 8.17 |
| குருணாகல் | 59.14 | 9.27 | 55.55 | 11.65 | 58.63 | 8.15 |
| அம்பாறை | 59.13 | 8.55 | 59.92 | 9.27 | 61.32 | 8.09 |
| பொலநறுவை | 59.76 | 9.90 | 53.72 | 12.51 | 56.04 | 8.36 |
| தீவு | 62.35 | 8.64 | 58.56 | 11.59 | 61.25 | 8.01 |

மேற்படி அட்டவணை மாவட்ட அடிப்படையில் பெற்றுக்கொண்ட பல்கலைக்கழக தகுதி, மூன்று பாடங்களில் சித்தியின்மை வீதத்தை விளக்குவதாக உள்ளது.

**அட்டவணை xiii**

G.C.E. (A/L) Examination Streamwise Performance of School Candidates by District - Northern Province Qualitied for University Entrance.

| மாகாணம் | உயிரியல் விஞ்ஞானம் | பிரயோக உயிரியல் | வர்த்தகம் | கலை | பொறியியல் தொழில் நுட்பட்ம் | உயிரியல் தொழில் நுட்பம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 61.36 | 58.34 | 68.64 | 71.17 | 58.44 | 65.09 | 43.48 |
| வவுனியா | 56.18 | 47.90 | 75.45 | 67.95 | 44.74 | 41.86 | 68.00 |
| கிளிநொச்சி | 47.76 | 48.11 | 70.82 | 69.91 | 44.44 | 47.83 | 33.33 |
| மன்னார் | 45.45 | 43.62 | 69.40 | 72.64 | 46.15 | 81.58 | 71.43 |
| முல்லைத்தீவு | 35.90 | 32.58 | 65.66 | 74.57 | 41.18 | 60.47 | 0.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மூலம் - தேசிய பரீட்சைத் திணைக்களம் - 2015)

மேற்படி அட்டவணை பாடத்துறை ரீதியில் வடமாகாணத்தின் மாவட்டங்கள் தேசிய ரீதியில் பெற்றுக்கொண்ட அடைவின் விகித நிலைமையை காட்டுவதாக அமைகிறது.

**அட்டவணை xiv**

G.C.E. (A/L) Examination - 2015 Science Subjects - Fifty Three High Performance School in The Northern Province.

| பாடசாலை | தேசிய மட்ட வரிசை நிலை |
|---|---|
| யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி | 3 |
| யா/ நெல்லியடி மத்திய கல்லூரி | 3 |
| யா/ ஹாட்லி கல்லூரி | 6 |
| யா/ மெதடிஸ் பெண்கள் கல்லூரி | 8 |
| யா/ இந்துக் கல்லூரி | 10 |
| யா/ வேம்படி பெண்கள் உயர் கல்லூரி | 16 |
| யா/ சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி | 24 |
| யா/ உடுப்பிட்டி அமெரிக்க மிஸன் கல்லூரி | 43 |
| யா/ வடமராட்சி மத்திய பெண்கள் கல்லூரி | 43 |

மேற்படி அட்டவணை விஞ்ஞானத்துறை பாடங்களான இரசாயனம், பௌதிகவியல், உயிரியல், இணைந்த கணிதம், விவசாயம் ஆகியவற்றில் தேசியமட்டத்தில் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட உயர் அடைவு நிலைகளின் வரிசைநிலையில் வடமாகாணத்தின் பாடசாலை பெற்றுக்கொண்ட வரிசை நிலைகளை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

**அட்டவணை xv**

G.C.E (A/L) Examination - 2015 Non Science Subjects - Fifty Five High Performance School in The Northern Province.

| பாடசாலை | தேசிய மட்ட வரிசை நிலை |
|---|---|
| யா/ வேம்படி பெண்கள் உயர் கல்லூரி | 35 |
| யா/ சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி | 35 |
| யா/ செஞ். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை | 35 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி அட்டவணை விஞ்ஞானத்துறை சாராத சமூக விஞ்ஞான பாடங்களில் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட உயர் அடைவு மட்டங்களின் வரிசைநிலையில் வடமாகாணப் பாடசாலைகள் பெற்றுக்கொண்ட வரிசை நிலையைக் காட்டுவதாக உள்ளது.

**க.பொ.த உயர்தரப் பரீட்சை**

- தேசிய மட்டத்தில் பல்கலைக்கழக தகுதி அடைவுமட்டத்தில் 2015 இல் யாழ்ப்பாண மாவட்டம் 66.32 வீதத்தில் முதலாவது இடத்திலும், மன்னார் மாவட்டம் 65.40 வீதத்தில் மூன்றாவது இடத்திலும், கிளிநொச்சி மாவட்டம் 64.07 வீதத்தில் ஐந்தாவது இடத்திலும், வவுனியா மாவட்டம் 63.91 வீதத்தில் எட்டாவது இடத்திலும் முல்லைத்தீவு மாவட்டம் 61.04 வீதத்தில் பத்தொன்பதாவது இடத்திலும் உள்ளதைக் காணலாம்.
- தேசிய ரீதியில் பல்கலைக்கழக தகுதி பெற்றோர் விகிதாசாரத்தில் மாவட்ட நிலையிலான அடைவுமட்டத்தை பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் 2015 - 5 ஆவது, 2013 - 9 ஆவது, 2015 - 1 ஆவது இடத்திற்கும், மன்னார் 2013 - 2 ஆவது, 2014 - 8 ஆவது, 2015 - 3 ஆவது இடத்திற்கும், கிளிநொச்சி 2013 - 1 ஆவது, 2014 - 1 ஆவது, 2015 - 5 ஆவது இடத்திற்கும், வவுனியா 2013 - 3 ஆவது, 2014 - 2 ஆவது, 2015 - 8 ஆவது இடத்திற்கும், முல்லைத்தீவு 2013 - 4 ஆவது, 2014 - 7 ஆவது, 2015 - 19 ஆவது இடத்திற்கும் நகர்ந்துள்ளதை ஒப்பீட்டு அவதானிக்க முடிகிறது.
- 2015இல்தேசியரீதியில்வடமாகாணத்தின் மாவட்டங்கள் பாடத்துறைரீதியில் பெற்றுக்கொண்ட அடைவுநிலையைப் பொறுத்தமட்டில் யாழ்மாவட்டம் உயிரியல் விஞ்ஞானம் 61.36% - 2 ஆவது, பிரயோக விஞ்ஞானம் 58.34% - 1ஆவது, பொறியியல் தொழில்நுட்பத்தில் 65.09% - 1ஆவது, வர்த்தகம் 75.45% - 1 ஆவது, ஏனையவை 68.00% - 2 ஆவது இடத்திலும் மன்னார் உயிரியல் தொழில்நுட்பம் 81.5% - 1 ஆவது, ஏனையவை 71.43% - 1 ஆவது இடத்திலும், முல்லைத்தீவு கலைப்பிரிவில் 74.57% - 1 ஆவது இடத்திலும் உள்ளதைக் காணலாம்.
- க.பொ,த உயர்தரப் பரீட்சையில் அனைத்துப்பாடங்களிலும் சித்தியடைந்த வீதம் 2012 - 62.8%, 2013 - 63.88%, 2014 - 61.72%, 2015 - 65.23% என்ற நிலையில் கடந்த வருடத்தில் இருந்து 2015 இல் உயர்வடைந்த நிலையை அடைந்துள்ளதையும், 3A அடைவு நிலைகளில் 2014 - 1.39%, இருந்து 2015 - 1.69%, ஆக அதிகரித்த நிலையையும், அனைத்துப் பாடங்களிலும் சித்தியின்மை வீதம் 2013 - 10.63%, இருந்து 2014 - 8.69%, ஆகவும், 2015 - 7.78% ஆகவும் குறைவடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.
- 2015 இல் பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெற்றோர் வீதம் அடிப்படையில் தேசிய மட்டத்தில் 65.23 வீதத்தைப் பெற்று வடமாகாணம் முதலிடத்தில் உள்ளது. 2014 அடைவு நிலையில் 64.15 வீதத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் இரண்டாம் நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.
- 2015 இன் அடைவுமட்டத்தில் 3A சித்தி பெற்றவர்களில் 1.69% பெற்று எட்டாவது மாகாணமாக வடமாகாணம் காணப்படுகின்றது. 2014 இல் ஒப்பிடுகின்ற போது உயர்வடைந்த போக்கான அடைவுமட்டமாகவும் காணப்படுகின்றது.
- தேசியமட்டத்தில் 2015 இன் பாடத்துறை ரீதியான அடைவுமட்டத்தில் வடமாகாணம் உயிரியல் விஞ்ஞானத்தில் 55.61% - 2 ஆவது, பிரயோக விஞ்ஞானம் 53.64% - 1 ஆவது, வர்த்தகம் 69.47% - 4 ஆவது, உயிரியல் தொழில்நுட்பம் 59.53% - 5 ஆவது, ஏனையவை 50.47% - 2 ஆவது இடத்திலும் உள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தேசிய ரீதியில் 2015 இல் வரிசைப் படுத்தப்பட்ட முதன்மையான 55 பாடசாலைகளில் விஞ்ஞானத்துறை பாடங்களின் அடைவுமட்டத்தில் வடமாகாணத்தின் ஒன்பது பாடசாலைகள் 3 ஆவது, 6 ஆவது, 8 ஆவது, 10 ஆவது, 16 ஆவது, 24 ஆவது, 43 ஆவது இடங்களைப் பெற்று ள்ளது. அவை யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளாகவும், யாழ் கல்வி வலயத்தில் - 4 பாடசாலைகளையும், வடமராட்சி கல்வி வலயத்தில் 5 பாடசாலைகளையும் உள்ளடக்கி இருப்பதைக் காணமுடிகிறது.
- விஞ்ஞானத்துறை சாராத சமூகவிஞ்ஞான பாடங்களின் 2015 இன்அடைவு மட்டத்தில் வடமாகாணத்தின், யாழ்ப்பாணமாவட்டத்தின், யாழ்கல்வி வலயத்தின் மூன்று பாடசாலைகள் 35 ஆவதாக தேசியமட்ட வரிசையில் உள்ளதைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**ஆய்வின் முடிவுகள்**

- பரீட்சைத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களின் பிரகாரம் வடமா காணம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலான அடைவில் முதலிடத்திலும், 70 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெறுகின்ற அடைவில் 8 ஆவது நிலையி லும் உள்ளது.
- க.பொ.த சாதாரணப் பரீட்சையின் அடைவுமட்டத்தில் வடமாகாணம் வரிசைநிலையில் கடைசி மாகாணமாகக் காணப்படுகின்றது.
- க.பொ.த உயர்தரப்பரீட்சையில்பல்கலைக் கழக அனுமதி பெற்றோர் அடைவில் வடமாகாணம் தேசியமட்டத்தில் முதலிடத்தில் உள்ளது. அதேவேளை 3A பெற்றோர் அடைவுநிலையில் 8 ஆவது மாகாணமாகக் காணப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் சமூக விஞ்ஞான பாடங்களின் அடைவுமட்டத்தில் தேசிய ரீதியில் பின்னடைவான நிலையில் காணப் படுகின்றது.

**பரிகார நடவடிக்கைகள்**

- பொதுப் பரீட்சைகளின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான பரி கார நடவடிக்கைகளில் மாணவர், ஆசிரியர், பெற்றோர், அதிபர், கல்வித்திணைக் களம், கல்விஅமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்கள் சமூக நிறுவனங்கள் வெகுசன ஊடகங்கள் போன்றன நேரடியாகவும், மறை முகமாகவும் தொடர்புபட்டு அமை கின்றன. அத்துடன் பரிகார நடவடிக்கைகள் உடனடியானவை, நீண்ட காலத்திற்குரியவை என்ற அடிப்படையில் முன்னெடுக்கலாம்.
- Mike Schomoker தனது Resultes எனும் நூலில் பாடசாலை மாணவர்களின் அடைவுமட்டத்தை முன்னேற்றுவதற்கான திறவுகோள்களாக,
    - அர்த்தமுடைய அணியாக செயற் படல்
    - தெளிவானதும் அளக்கக் கூடியது மான இலக்குகள்
    - தொடர்ச்சியான செயலாற்றுகை தொடர்பான தரவுசேகரிப்பும் பகுப்பாய்வும்

  ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகின்றார். இதன் பிரகாரம் அதிபர் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களை அணியாக இயக்குதல், தெளிவான இலக்குகளை வரையறுத்து அவற்றை எய்துவதை உறுதிப்படுத்திக் கொள்ளல், பாடசாலை அடைவு, செயற்பாடு பற்றிய தரவுகளைச் சேகரித்தலும், பகுப்பாய்வு செய்து நிலைமைகளை அறிந்து எதிர்கால மேம்பாட்டு செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- வடமாகாணத்தின் போருக்குப் பின்னரான சமூக பின்னணியின் நேர், எதிர் தாக்கங்களைக் கவனத்தில் கொண்டு மாணவர்களுடன் ஆசிரியர் நிலைமாற்று வகிபாகத்தின் அடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர்கள் தமது நடத்தைகளை சுயமாக ஏற்று, சுயமதிப்பீட்டுக்கு உட்படுத்தக் கூடிய வகையில் தூண்டல்களை வழங்கு வதன் ஊடாக சுயகற்றல் ஆர்வத் தை அதிகரிக்கச் செய்தல்.
- மாணவர்களின் உணர்வுகளை, மனவெழுச்சிகளை பரிவுடன் அணுகி கற்றல் அனுபவங்களை ஆரோக்கியமான வகையில் வழங்குதல்.
- கற்கவேண்டிய பாடவிடயங்களை சிறுசிறு பகுதிகளாக்கியும், எளிது - கடினம் என்ற வகையில் ஒழுங்குபடுத்தி வழங்குவதுடன் ஒவ்வொரு பாடப்பகுதி நிறைவடைந்தவுடன் சுயமாக மீளவலியுறுத்தலுக்கு உட்படுத்த ஆசிரியர் வாய்ப்புக்களை வழங்குதல்.
- வகுப்பறை மட்ட முகாமைத்துவச் செயன்முறையை வினைத்திறன் உள்ள வகையில் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- மாணவர்களின் துலங்கல் வெளிப் பாடுகளுக்கும், அடைவு நிலைகளுக்கும் பெற்றோர், ஆசிரியர்கள், பொருத்தமான ஊக்கல்களை வழங்குதல்.
- பெற்றோர் - மாணவர் - ஆசிரியருக் கிடையில் ஆரோக்கியமான நேரான இடைத்தொடர்பை கட்டியெழுப்புதல்.
- பாடசாலை மட்ட தலைமைத்துவம் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கும், வளங்களைப் பயன்படுத்தவும், முழுமையான பங்களிப்பு வழங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.
- பாடசாலை மாணவர்களின் அடைவு மட்டம் தொடர்பிலான திறந்த கலந்து ரையாடல் முறைமையை ஆய்வுச் கலா சார பரிமாணத்தின் அடிப் படையில் இடம்பெறச் செய்வதன் ஊடாக பின்னடைவுகளை இனங்கண்டு எதிர் காலச் செயற்பாடுகளை மேம்படுத்த சாத்தியமான வழிமுறைகளை அனைவரதும் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொள்ள முடியும்.
- பாடசாலை மட்டத்தில் தரவட்டச் செயற்பாடுகள், ஆசிரியர் மட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள், மாணவர் மட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள், தரஉள்ளீட்டுப் பயன்பாடுகள் ஆகியவற்றை பயனுறுதிமிக்க வகையில் நடைமுறைப்படுத்துதல்.
- பின்னடைவான அடைவுநிலையைக் கொண்ட மாணவர்களை இனங்கண்டு ஆசிரியர்களுடன் ஆரோக்கியமான கலந்துரையாடல் ஊடாகவும், ஊக்குவிப்பை வழங்குவதன் ஊடாகவும் மேலதிக கற்றல் கற்பித்தல் வாய்ப்புக்களை அதிபர் ஒழுங்கு செய்தல். ஊக்குவிப்பை வழங்குவதற்கு அதிபர் சமூகநிறுவனங்கள், பழையமாணவர்கள் போன்றோர்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.
- தனியார் கல்வி நிறுவனங்கள் மீத்திறன் மிக்க மாணவர்களுக்கு கற்பித்து மேலும் அவர்களின் அடைவை உயர்த்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். ஆனால் பாடசாலைகள் அவ்வாறில்லை. எல்லாத்தரமாணவர்களும்குறைந்தபட்சம் சித்தியடைய வைக்கும் நோக்குடனே செயலாற்றுகின்றன. மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதிலேயே முனைப்புக் காட்டுகின்றனர். இதுதொடர்பில் உண்மைநிலை உணரப்பட்டு மாணவர் பெற்றோர் மத்தியில் பாடசாலை தொடர்பிலான எண்ணப்பாங்கு, விழிப்புணர்வு, சமூ கமுக்கியத்துவம் மனப்பாங்கு ரீதியில் ஊட்டப்படவேண்டும்.
- ஊடகவிளங்கறிவு (media literacy) எண்ணக்கருவை அது தொடர்பிலான விழிப்புணர்வை மாணவர் - பெற்றோர் - சமூகமட்டத்தில் கட்டியெழுப்புவதன் ஊடாக வெகுசன ஊடக கலாசாரத்தின் ஆதிக்கத்தில் இருந்து ஆரோக்கியமான ஊடக பயன்பாட்டையும், சுயஒழுங்கு படுத்தல்களையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வீட்டுச் சூழலில் கணனி, தொலைபேசி, தொலைக்காட்சி பயன்பாடு தொடர்பில் பெற்றோர் மத்தியில் கலந்துரையாடல்கள், அறிவூட்டல்கள், விழிப்புணர்வுகள் வழங்கப்படுகின்ற போது மாணவர்களின் வீட்டுச் சூழல் கற்றல் வாய்ப்புக்கு சாதக மாக அமைவதுடன் அதனூடாக அடைவு மட்டத்திலும் தாக்கம் செலுத் தும்.
- பின்தங்கிய, கஸ்டப் பிரதேசங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான வசதிகள் உறுதிப்படுத்தப்படுதல், ஊக்குவிப்புக்கள் இடம்பெறுகின்றபோது சுயபணி ஊக்கம் மேம்பட்டு பயனாளிகளான மாணவர்களின் அடைவில் மேம்பாடுகள் ஏற்படும்.
- பாடசாலைக்கு தாமதமாக வரும் மாணவர்கள், இடைவிலகலுக்கு உட் படுகின்ற மாணவர்கள் தொடர்பில் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக் கான மாற்று நடவடிக்கைகளை இனங் கண்டு பாடசாலை - பெற்றோர் - சமூகம் இணைந்து ஆரோக்கியமான வகையில் முன்னெடுத்தல்.
- பெற்றோர் - பிள்ளை இடைத்தொடர்பு, வழிகாட்டல் ஆலோசனை செயன் முறைகளில் ஆரோக்கியமான, நேர்மயமான நிலைமைகள் உருவாக் கப்பட வேண்டும். பிள்ளைகளின் செயற்பாடுகள் மீது அக்கறை, கவனம், கண்காணிப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் கற்றல் சூழல், தவறான நடத்தையில் ஈடுபடுதல் நிலைமைகளை அவதானிக்க வாய்ப்பு ஏற்படும்.
- தனியார் கல்வி நிறுவனங்களின் செயற் பாடுகள் தொடர்பில் தேசியரீதியிலான கொள்கைகள் உருவாக்கப்படுவதன் ஊடாக பாடசாலைகளுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் இடையில் இணக்கப்பாடான நிலைமைகள் உருவாக்கப்பட்டு மாணவர் பெற்றோர் மத்தியில் நேர்த்தியான கற்றல் சூழல் கட்டியெழுப்பப்படும்.
- பொதுப் பரீட்சைகள் தொடர்பில் வெளிவருகின்ற தனியார் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்கள், புத்தகங்கள் போன்றவற்றின் உள்ளடக்கம், நேர்த்தி, தரஉறுதிப்பாடு சீர்செய்யப்பட்டு கலைத்திட்ட உள்ளடக்கத்திற்கும், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிக்கும் இணங்க தயாரிக்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.
- தேர்ச்சி மைய கலைத்திட்ட அறிமுகம் கணிப்பீட்டு முறைக்கு முக்கியத் துவமளிப்பதனால் வகுப்பறைமட்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் பொதுப் பரீட்சைகளுக்கும் இடையில் துருவ நிலைப்பாடுகள் உருவாகியுள்ளன. இவற்றுக்கிடையில் இடைவெளி நீக்கப்பட்டு ஒத்தநிலைமை உருவாக் கப்பட வேண்டும். அதனூடாக மாணவர்களுக்கு முரண்பாடற்ற கற்றல் முறைமை கட்டியெழுப்பப்பட்டு சீரான அடைவுமட்டம் உருவாக வாய்ப்பு ஏற்படும்.
- கல்வித்துறை அடைவை மேம்படுத்து வதற்கு மேற்கு உலக நாடுகள் ஆய்வுரீதியில் நுட்பரீதியாக பிரயோகித்த பரிகார நடவடிக்கைகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.
    - பரீட்சைமுறைகளில் புதிய மாற்றங்கள்
    - கற்பித்தல் முறைகளின் நுட்பம்
    - ஆசிரியர் தரமேம்பாடு
    - அணுகுமுறைகளின் நுட்பம்
    - மதிப்பீட்டு முறைகளின் புதிய முறைமைகள்
    - ஒப்பீட்டு ரீதியான நோக்கு
    - பாடசாலை - மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் இடைவினை உறவு

  இதன் பிரகாரம் எமது பிரதேசத்தின் கல்வி அடைவுமட்டத்தை மேம்படுத்துவதற்கு இவ்வாறான பரிகார நடவடிக்கைகளை பின்பற்ற முடியும்.
- அடைவுமட்டத்தை உயர்த்துவதற்கு அலகுரீதியான பரீட்சை, கூட்டல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகுரீதியான பரீட்சை, முன்னோடிப் பரீட்சை என்ற அடிப்படையில் எழுத்து மூலம், வாய்மொழிமூலம், திறந்த நூல்மூலம், குழுமூலம் போன்ற முறைகள் ஊடாக காலஒழுங்கிலும், எழுந்தமானதாகவும் நடாத்தி பயிற்சி, தயார்படுத்தல்களை வழங்குதல்.

- பாடத்துறையின் கடினம், தேவைப் பாடுகள், பின்னடைவுகளை இனங் கண்டு வளவாளர்களைக் கொண்டு விசேட வகுப்புக்கள், மேலதிக வகுப்புக்களை நடாத்துதல்.
- கருத்தரங்குகளை மாணவர்களின் தேவை களைக் கேட்டறிதல், மாணவர்களை சுதந்திரமாக உரையாடவிட்டு ஐயப்பாடுகளை நீக்குதல், பயிற்சிகளை வழங்குதல், குறிப்புக்கள், வினாவிடைகள், கையேடுகள் வழங்குவதன் ஊடாக நடாத்துதல்.
- பாடரீதியான, அலகுரீதியான வினாக் களைத் தொகுத்து வினாவங்கியை உரு வாக்கி மையநிலையங்கள் ஊடாக அல்லது பாடசாலை மட்டத்தின் ஊடாக மாணவர்களுக்கு வழங்கி முன்னாயத்தம் செய்தல்.
- பாடசாலை மட்ட மேற்பார்வையை ஆரோக்கியமான வகையிலும், நேர் மயமான இடைத்தொடர்பினை வலுப் படுத்தும் வகையிலும் கல்வி அதிகாரிகள் ஆக்கபூர்வமாக முன்னெடுத்தல்.
- தரமான ஆசிரியர்களை உருவாக்கு வதற்கான வலுவூட்டல் பயிற்சிகள், பாடஉள்ளடக்கம் தொடர்பிலான அறிவூட்டல்களை வழங்குவதன் மூலம் பயனாளிகளான மாணவர்களின் அடைவின் விளைதிறனை அதிகரிக்கும்.
- பாடசாலைகளின் வேறுபாடுகளை சமநிலைப்படுத்துதல். அதாவது கிராம - நகர, சிறிய - பெரிய, மாகாணம் - தேசியம் போன்ற அடிப்படையிலான வேறுபட்ட உட்கட்டமைப்பு மேம்பாடுகள், வசதிகள், ஒதுக்கீடுகள் சீர்செய்யப்படுகின்ற போது சமநிலையான கற்றல் சூழல் - அடைவுநிலை பெறப்படும்.
- பெற்றோர் - ஆசிரியர்கள் மாணவர் களின் தனிப்பட்ட நடத்தை, சகபாடிகளின் சேர்க்கை, பொழுது போக்கு செயற் பாடுகள் தொடர்பில் கண்காணிப்பும், வழிப்படுத்தல்களும் வழங்குதல்.
- நலிவுற்ற பாடசாலைகளின் அடைவை மேம்படுத்துவதற்கான செயல்திட் டங்களை முன்னெடுப்பதற்கு புலம் பெயர்ந்து வாழும் பழைய மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சமூ கக்கொடை வழங்குநர்கள் போன்றவர் களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- ஆசிரியர் நியமனம், இடமாற்றம் தொடர்பில் அரசியல் தலையீடு அற்ற, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு உட்படாத நடைமுறைகளை பின்பற்று வதைக் கல்வி நிர்வாக மட்டம் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.
- பாடசாலைத் தலைமைத்துவத்திற்கும் ஆசிரியருக்குமிடையில் முரண்பாடற்ற ஆரோக்கியமான, இணக்கப்பாடான இடைவினை உறவு கட்டியெழுப்பப்பட வேண்டும். இதன்மூலம்பாடசாலைமட்ட அடைவு வலுப்படுத்தப்படும்.
- அடிப்படை கணிதத்திறன்கள், மொழித்திறன்கள், அவை தொடர்பிலான எண்ணக்கருக்கள் மாணவர்களிடம் விருத்தி செய்யப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- மொழிரீதியான அடிப்படைத்திறன் விருத்தியில் பின்னடைவான மாணவர் களை இனங்கண்டு மேம்படுத் துவதற் கான விசேட செயல்திட்டங்களை அமுல் படுத்துதல்.
- பாடசாலைமட்டத்தில்திட்டமிடப்பட்ட பொருத்தமான பரிகார கற்பித்தல் நடைமுறைகளை அமுல்படுத்துதல்.
- பரீட்சை தொடர்பிலான போட்டித் தன்மை, அழுத்தங்கள் குறைக்கப்பட்டு அனைத்து மாணவர்களும் சித்தி வீதத்தை அடையும் வரையிலான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு முன்னுரிமை வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாடத்தெரிவு செயற்பாட்டில் பெற்றோர், ஆசிரியர் திணிப்பு இன்றி அவர்களின் வழிப்படுத்தலுடன் கூடிய மாணவர்கள் சுயமாக சிந்தித்து தெரிவுகளை மேற் கொள்ள வாய்ப்பளித்தல்.
- பாடசாலை மாணவர்கள் தமது ஆற் றல்களுக்கு ஏற்ப பாடங்களைத் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பங்களை வழங்குதல் அல்லது மாற்று வழிமுறைகள், வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- ஆசிரிய வளப்பரம்பலின் சமநிலை, எண்ணிக்கை, பாடரீதியிலான பொருத் தப்பாடு, உரிய நேரத்திற்கு வருகை, நேர்த்தியான வரவு போன்றன தொடர்பில் கல்வி நிர்வாக மட்டம் வினைத்திறன் மிக்க மனிதவள பிரயோக களநிலைகளை உறுதிப்படுத்தலும், சீர்செய்தலும்.

**ஆய்வின் முடிவுகள்**

**5ஆம் அண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான மதிப்பீடு**

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் வட மாகாணம் 2015இல் 18.19% வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளது. இது ஒரு பெரிய வெற்றியாகும். ஆனால் அதே வேளை வட மாகாணத்தில் 70 புள்ளிகளுக்கு மேல் ஆனால் வெட்டுப் புள்ளிகளுக்கு கீர் எடுத்த மாணவர்கள் 2015 இல் 68.88% வீதமாக இருந்தது. ஆயினம் 2014இல் 70.57% மாக இருந்தது. ஆயினும் 2014 இல் கூடுதலாக இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதாவது 2015 இல் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற யாழ் கல்வி வலயம் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற வீத வரிசையில் 38ஆவத இடமாக இருப்பத அவதானிக்கப்பட்டுள்ளது.

**க.பொ.த சாதாரண தரப் பரீட்சை தொடர்பான மதிப்பீடு**

க. பொ. சாதாரண தரப் பரீட்சையில் க.பொ. த உயர் தரத்திற்கு தகுதி பெற்றோர் 2011 இல் 54.26% மாக இருந்தது. ஆனால் 2015 இல் 60.38%மாக உயர்வடைந்தது. ஆனால் க. பொ.த உயர் தரத்திற்கு தகைமை பெற்ற மாணவர்களின் எண்ணிக் மாவட்ட அடிப்படையில் நோக்கும் போது ஒன்பதாவத இடத்தில் இருப்பது வட மாகாணத்தின் கல்விப் பின்னடைவைக் காட்டுகின்றது.

**க.பொ.த உயர்தரப் பரீட்சை தொடர்பான மதிப்பீடு**

இப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் 2015 இல் பல்கலைகழகத் தகுதி அடைவு மட்டத்தில் யாழ் மாவட்டம் 66.32 வீதத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது. அத்துடன் இப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்றோர் 2012 இல் 62.8% மாக இருந்தது. 2015இல் 62.23% என்ற நிலக்கு முன்னேறியது. அத்துடன் 3A பெற்றோர் 2014 இல் 1.39%மாக இருந்தது. 2015இல் 1.69% மாக அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் எல்லாப் பாடங்களிலும் சித்தியின்மை வீதமும் 2013இல் 10.63% மாக இருந்தது. 2015இல் 7.78%மாக குறைவடைந்து வருகின்றமை வடகரு மகாகாணக் கல்வி நிலையில் முன்னேற்றத்தைக் காட்டி நிற்கின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. புள்ளி விபர அறிக்கைகள், தேசிய பரீட்சைத் திணைக்களம், கொழும்பு - 2011

- 2012

- 2013

- 2014

- 2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனின் சொல்ஆட்சித்திறன்

கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்க்காவிய இலக்கிய வரிசையில் கம்பராமாயணத்திற்குத் தனித்துவமானதோர் இடமுண்டு. 'காவியம்' என்ற இலக்கிய வடிவம் அவாவி நிற்கின்ற அத்தனை ஆக்கக்கூறுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை இக்காவியத்தின் சிறப்பம்சமாகும். கம்பராமாயணம் குறித்த புலமைச் சிரத்தைகள் பெரிதும் அதனது பாடுபொருள்மீதே அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளன. கம்பனது மொழிநடை, அந்த மொழிநடையினைக் கட்டமைக்கும் ஆக்கக்கூறுகள் தொடர்பான ஆய்வுகள் பெரிதும் முனைப்படையாச் சூழல் ஆய்வுலகில் காணப்படுகின்றது. மொழிக்கையாட்சியில் கம்பனுக்கு நிகரான கவிஞர்களைக் காண்பது அரிதாகும். காவியப்படைப்பொன்றில் மொழிநடைக்கு இருக்கக்கூடிய முக்கியத்துவத்தினை முற்றிலும் உணர்ந்த ஒரு நிலையில் தனது செய்யுட்களைக் கம்பன் படைத்துள்ளான். கம்பனின் மொழிநடையைச் சிறப்பிப்பவை அவனுடைய சொல்வளம், சொல்தேர்வு, சொற்கையாட்சி முதலானவை. இக்கட்டுரையானது கம்பனது சொற்கையாட்சித் திறனைத் தேர்ந்தெடுத்த கம்பராமாயணச் செய்யுட்கள் சிலவற்றினைத் துணைக்கொண்டு இனங்கண்டு சுட்டமுனைகிறது.

**திறவுச்சொற்கள் :** கம்பன், கம்பன் சொல் ஆட்சித்திறன், கம்பனின் மொழிநடை ஆக்கக்கூறுகள், கம்பன் கவிதை.

## 1.0 முன்னுரை

தமிழ்க் காவியவரலாறு நீண்ட ஒரு பாரம் பரியத்தைக்கொண்டது. கம்பராமாயணத்திற்கு முன்பே தமிழில் காவியம் படைக்கும் முயற்சிகள் காணப்பட்டிருந்தாலும் 'காவியம்' என்ற இலக்கிய வடிவத்தின் முதிர்ச்சியையும் அதன் வனப்பையும் கம்பராமாயணத்தில் தான் தரிசிக்க முடிகிறது. சங்க இலக்கியங்களிலும் நாயன்மார் மற்றும் ஆழ்வார் பாசுரங்களிலும் இராமகாதையின் வகைமைக் கூறுகள் பலவும் பயின்றுவந்த ஒரு சூழலில் கம்பராமாயணம் தோற்றம் பெற்றது. வடமொழியிலமைந்த வான்மீகி இராமாயணத்தை மூலநூலாகக் கொண்டு இராமகாதையினைப் பாடமுனைந்த கம்பன், தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப அதனைப் படைத்தளிப்பதில் பெரிதும் கரிசனை கொண்டிருந்தான். இப்பின்புலத்தில் மூலநூலிலிருந்து சிறிது விடுபட்டு, பாத்திரங்களின் பேச்சுக்கள், நிகழ்ச்சிகள் முதலானவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி 'இறவாப்புகழுடைய' காவியமாகக் கம்பராமாயணத்தைப் படைத்தான். 'கவிச்சக்கரவர்த்தி' என்ற விருதால் சிறப்பிக்கப்பட்ட கம்பனின் 'படைப்புமேதாவிலாசம்' ஆராய்ச்சி யாளர்களுக்கு வியப்பையும், விருந்தையும்ஒருசேர அளிப்பதாக உள்ளது. கம்பராமாயணம் உருவாகும் காலம் வரையிலான தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார, அரசியற் சூழல்கள், இலக்கியப் படைப்பாக்க முயற்சிகள், கல்விச்சூழல்கள், காலந்தோறும் தமிழ்மொழி அடைந்துவந்த பரிணாமவளர்ச்சி (மொழிக்குழைவுத் தன்மை) முதலான பல்வேறு காரணங்கள் கம்பனின் படைப்பு மேதாவிலாசத்துக்குப் பின்புலங்களாக அமைந்திருந்தாலும்கூட, அவற்றிற்கும் மேலாகக் கம்பனுக்கு இருக்கக்கூடிய பேரறிவு, கவித்துவ ஆற்றல் பன்மொழிஅறிவு, கற்பனைவளம் முதலான வற்றையும் கருத்திற்கொண்டே கம்பனது கவிமேதாவிலாசத்தைக் கண்டுகொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையானது காவியப்படைப்பின் நுட்பங்களில் ஒன்றாக அமைந்து அதன் மொழி நடையினைப் பெரிதும் கட்டமைக்கின்ற கம்பனது சொல்ஆட்சித்திறனை இனங் கண்டு அதனை வகைப்படுத்துவதுடன் அதன் வனப்பையும் எடுத்துக்காட்ட முனைகிறது.

**1.1 காப்பியத்தில் சொற்கையாட்சியின் முக்கியத்துவம்**

காப்பியம் ஒன்றுக்கு வனப்புச் சேர்ப்பதில் மொழிநடைக்குப் பிரதான பங்குண்டு. காப்பியத்திற்கு ஏற்றவகையில் அதன் மொழிநடை அமைதல் வேண்டும். இந்த மொழிநடை பல்வேறு அடிப்படைக் கூறுகளில் தங்கியிருக்கும். மொழிக்கூறுகளின் அமைப்பு, வெளியீட்டுமுறை, ஒலிக்கூறுகளைப் பயன்படுத்தும்திறன், சொல்தேர்வு, அணிநயங்களைத் திறம்படக் கையாளுதல், பல்பொருள் தரும்நிலையிற் செய்யுட்களை அமைத்துக்கொள்ளல் முதலானவை இவற்றுள் பிரதான கூறுகளாகும்.

மேலே குறிப்பிட்ட அடிப்படைக் கூறுகளில் 'சொல்தேர்வுநிலை' என்பது மிகவும் அடிப்படையானதாகும். சிறந்த கருத்துருவாக்கத்திறன், உணர்ச்சி வெளிப்பாடு, வாசகரிடத்து உருக்காட்சியை வெளிப்படுத்தும் வன்மை முதலான விடயங்கள் பெரிதும் சொல்தேர்விலேயே தங்கியுள்ளன. காப்பியப் புலவன் தான் வாழ்ந்த காலத்தில் புழக்கத்திலுள்ள சொற்களைப் பொருத்தமுறச் செய்யுள்களில் அமைப்பான். அதற்கும் அப்பால் புழக்கத்தில் இல்லாத சொற்களையும் வருவித்துக்கொள்வான். புழக்கத்தில் இல்லாத சொற்களுக்குள் அருகிப்போன சொற்களும் புலவரால் உருவாக்கப்படும் புதிய சொற்களும் அமைந்துகொள்ளும். 'காப்பியம்' உருவாகும் மொழியிலுள்ள சொற்கள் மீதான ஆட்சி காப்பியப்புலவருக்கு மிகவும் வேண்டப்படுவதாகும். கம்பனுக்குத் தமிழ்ச்சொற்கள் மீதான ஆட்சி நிறையவே இருந்துள்ளதனைக் கம்பராமாயணம் காட்டி நிற்கிறது.

கம்பராமாயணம் சொல்தேர்வு, சொல்வளம், சொற்கையாட்சி என்பவற்றின் உச்சமாகப் பார்க்கப்படும் ஒரு காப்பியமாகும். செய்யுளின் பொருட்புலப்பாட்டுக்கு ஏற்றவகையில் சொற்கையாட்சியினை மேற்கொண்டமை கம்பனின் தனிச்சிறப்புக்களிலே தலையானதாகும்.

**1.2 கம்பன் சொற்களைக் கையாண்டவிதம்.**

கவிதைக்கு வனப்புச் சேர்ப்பது அதன் சொல்வளமாகும். கவிதைப்போக்குக்கு ஏற்ப, அதன் வேகத்திற்கு ஏற்ப எந்தவொரு தடங்கலுமின்றிச் சொற்கள் வந்து அமைவது என்பது எல்லாக் கவிஞர்களுக்கும் சாத்தியப்படும் ஒரு விடயமல்ல. கம்பன் இதற்கு விதிவிலக்கானவன் என்பதனைக் கம்பராமாயணத்தின் பல்வேறு செய்யுள்களும் எடுத்தியம்பி நிற்கின்றன. 'செவ்விய மதுரம் சேர்ந்த நற் பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல்.....' (கம்பராமாயணம், பாலகாண்டம், 93) என்ற தொடரினாலே செய்யுளிற் பயின்றுவரும் சொற்கள், செம்மை, இனிமை, நற்பொருள், சிறப்பு, நுட்பம் முதலான பண்புகளையுடையனவாக இருத்தல் வேண்டும் என்பது கம்பனது கவிதைக் கொள்கையாக இருந்துள்ளமை புலனாகிறது.

கம்பனின் சொற்கையாட்சித் திறனை வருமாறு பகுத்து நோக்கலாம். ஒரேசொற்களைத் திரும்பத்திரும்பக் கையாளுதல், சொற்றொடர் அமைப்பினை முன்பின்னாக மாற்றுதல், எண்ணுப்பெயர்களைக் கையாளுதல், விளிச் சொற்களைக்கையாளுதல், திசைச்சொற்களைக் கையாளுதல், வடமொழிச்சொற்களைக்கையாளுதல், புதிய சொல்லாக்க முயற்சி, சொற்களை வேண்டியவாறு திரித்தல், சிலேடைகளை அமைத்தல் முதலான வகைகளில் கம்பனின் சொற்கையாட்சித்திறனை இனங் கண்டு கொள்ளமுடிகிறது. இவை குறித்து இவ்விடத்தில் விரிவாக நோக்குவது பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 1.2.1 ஒரே சொற்களைத் திரும்பத் திரும்பக் கையாளுதல்

கம்பன், தனது செய்யுட்களில் ஒரே சொற்களைப் பல்வேறு காரணங்கள் கருதித் திரும்பத்திரும்ப அமைத்துச் செல்வதனைக் காணமுடிகிறது. ஒலிநயம், பொருள் இயக்கம், உணர்ச்சிப்புலப்பாடு, அடுக்கான தொடர்நிகழ்வைக் கையாளுதல், பேச்சுச் சந்தப்புலப்படுத்துகை, மயங்கிய நிலையைப் புலப்படுத்துதல், படிமஉருவாக்கம், பாத்திரப்பண்பை உணர்த்துதல் முதலான பல்வேறு நோக்கங்களுக்காக இச்சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை இவ்விடத்தில் நோக்குதல் பொருத்தமாகும்.

கோசல நாட்டிற் காணப்படும் சோலைகள், காடுகள், பொய்கைகள், தடாகங்கள், வயல்கள் முதலானவை சரயு ஆற்றின் நீர்ப்பெருக்கால் செழிப்புறுவதைக் கம்பன் பின் வருமாறு காட்டுகிறான்.

தாது உகு சோலைதோறும், சண்பகக் காடுதோறும்,
போது அவிழ் பொய்கைதோறும்,
புது மணல் - தடங்கள்தோறும்,
மாதவி வேலிப் பூக வனம்தோறும்,
வயல்கள்தோறும்
ஓதிய உடம்புதோறும் உயிர் என,
உலாயது அன்றே,
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 20)

மேற்படி பாடலில் 'தோறும்' என்ற துணைச்சொல் ஏழுமுறை மீண் டும் மீண்டும் ஒலிநயம் கருதிப் பயன் படுத்தப் பட்டுள்ளதனைக் காணமுடிகிறது.

தாடகை மீது இராமன் தொடுத்த அம்பின் செயற்பாட்டினை கூறவிழைந்த கம்பன்,

அலை உருவக் கடல் உருவத்து ஆண்தகைதன்
நீண்டு உயர்ந்த
நிலை உருவப் புய வலியை நீ உருவ நோக்கு
ஐயா!
உலை உருவக் கனல் உமிழ்க் கண் தாடகைதன்
உரம் உருவி,
மலை உருவி, மரம் உருவி, மண் உருவிற்று,
ஒருவாளி!
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 26)

என 'உருவ, உருவி' என்ற சொற்களை மீண்டும் மீண்டும் செய்யுளில் வருவிப்பதன் மூலம் இராமனின் அம்பு பலவற்றையும் உருவிக் கொண்டு செல்கின்ற அதன் இயக்கத்தை அழகுறக் குறிப்பிடுகிறார்.

இராமன், சனகமன்னனது திருமண வில்லை இலாவகமாக எடுத்து அதிலே நாண் ஏற்றியதையும் வில் உடைந்ததையும் அந்த உடைவுச்சம்பவம் ஏற்படுத்திய பேரொலியால் மிதிலைநகர் வாசிகள் அடைந்த உணர்ச்சி நிலையினையும் புலப்படுத்த வந்த கம்பன்,

தயரதன் புதல்வன் என்பார்; தாமரைக் கண்ணன்
என்பார்;
புயல் இவன் மேனி, என்பார்; பூவையே
பொருவும் என்பார்;
மயல் உடைத்து உலகம் என்பார்; மானிடன்
அல்லன் என்பார்;
கயல் பொரு கடலுள் வைகும் கடவுளே காணும்
என்பார்;
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 42)

என 'என்பார்' என்ற சொல்லைச் செய்யுளில் மீண்டும் மீண்டும் வருவித்து அந்த உணர்ச்சி நிலையைத் தத்ரூபமாகச் சித்திரித்துள் ளமையினை நோக்கமுடிகிறது.

அடுக்கடுக்கான தொடர்நிகழ்வுகள் சிலவற்றைக் காட்டுதற்கும் சொற்களை மீண்டும் மீண்டும் கையாளும் உத்தியைக் கம்பன் கையாண்டுள்ளான்.

இராமனின் திருமணச்சடங்கின் நிறைவில் சீதையின் கரங்களைப் பற்றியவண்ணம் திருமாளிகையினுள்நுழைந்த போது பல்வேறு வகையான மங்கலவாத்தியங்களும் ஒருசேர முழங்கியமையை;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்தன பேரிகள்; ஆர்த்தன சங்கம்;
ஆர்த்தன நான்மறை; ஆர்த்தன வானோர்;
ஆர்த்தன பல்கலை; ஆர்த்தன பல்லாண்டு;
ஆர்த்தன வண்டு இனம்; ஆர்த்தனர் வேலை;
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 93)

என்று குறிப்பிடுகின்றனர். பிறிதொரு செய்யுளில் இராமனைக் கண்ணுற்ற சீதை அவன் மீதான காதலால் மயங்கிய நிலையை 'பூச', 'வீச' என்ற சொற்களை ஒன்றுடன் ஒன்று அடுக்கிக் குறிப்பிடுவதனூடே மிக அழகாககப் பின்வருமாறு கம்பன் சித்திரிக்கின்றான்.

வாச மென் கலவைக் களி வாரி, மேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச வெதும்பினள், மென் முலை;
ஆசை நோய்க்கு மருந்தும் உண்டாம்கொலோ?
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 80)

கம்பன், 'படிமங்கள்' சிலவற்றை உருவாக்கும் பொருட்டும் சொற்கள் சிலவற்றைத் திரும்பத் திரும்பக் கையாண்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

பல்வேறு நிலைகளிலும் புகழின் உச்சியிலிருந்த இராவணன் பிறன்மனை நயத்ததால் அழிந்தமையினை;

போர்மகளை, கலைமகளை, புகழ்மகளை,
தழுவிய கை பொறாமை கூர,
சீர்மகளை, திருமகளை, தேவர்க்கும்
தெரிவு அரிய தெய்வக் கற்பின்
போர்மகளை, தழுவுவான் உயிர் கொடுத்துப்
பழி கொண்ட பித்தா! பின்னைப்
பார்மகளைத் தழுவினையோ, திசையானைப்
பணை இறுத்த பணைத்த மார்பால்?
(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 224)

என 'மகளை' என்ற சொல்லை மீண்டும் மீண்டும் செய்யுளில் வருவித்து பல்வேறு சிறப்புக்களுக்கும் உரித்தான இராவணன், தேவர்க்கும் தெளிவுஅரிய தெய்வக் கற்பினளாகிய சீதையைத் தழுவநினைத்ததால் பார்மகளைத் தழுவவேண்டிவந்தது என்பதைக் கம்பன், வீடணனின் வார்த்தைகளாக அழகாகச் சித்தரித்துள்ள திறம் சிறப்பானதாகும்.

### 1.1.2. சொற்றொடர் அமைப்பினை முன்பின்னாக மாற்றுதல்

செய்யுளின் பொருளின் தெளிவு மற்றும் சிறப்பினை வலியுறுத்த வேண்டி, தொடரின் இறுதியில் அமைய வேண்டிய வினைமுற்றுச் சொல்லைத் தொடரின் முதலில் அமைத்துச் சொல்வதனைக் கம்பன் ஒருவகை உத்தியாகக் கையாண்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

இராவணனால் சிறைப்பிடிக்கப்பட்ட சீதையைக் கண்டுவர வேண்டி இலங்கை சென்று மீண்ட அனுமன், இலங்கையில் சீதையைக் கண்டமை குறித்து குறிப்பிடும் கம்பன்,

கண்டனென் கற்பினுக்கு அணியை, கண்களால்,
தெண் திரை அலை கடல் இலங்கைத் தென் நகர்;
அண்டர் நாயக! இனி, துறத்தி, ஐயமும்
பண்டு உள துயரும் என்று, உனுமன் பன்னுவான்;
(கம்பராமாயணம், சுந்தரகாண்டம் : 25)

என 'கண்டனன்' என்ற வினைமுற்றுச் சொல்லைத் தொடரில் முதலில் கையாளுவதனைக் காணமுடிகிறது.

இலக்குவனுக்கும் இராவணனுக்குமான கடுமையான போரினை வர்ணிக்கும் கம்பன், போர்க்களத்தில் இலக்குவனின் செயற்பாட்டைப் பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகிறான்.

அறுத்தனன், அரக்கர் எய்த எறிந்தன , அறுத்து, அறாத
பொறுத்தனன், பகழிமாரி பொழிந்தனன், உயிரின் போகம்
வெறுத்தனன், நமனும்; வேலை உதிரத்தின் வெள்ளம் மீள
மறித்தன, மறிந்த எங்கும், பிணங்கள் மாமலைகள் மான.
(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 145)

மேற்படி செய்யுளிலும் 'அறுத்தனன்',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொறுத்தனன்', 'வெறுத்தனன்' என்ற வினைமுற்றுச் சொற்களைத் தொடரில் முதலில் கையாண்டுள்ளதனைக் காணலாம். இவ்வாறான தொடரமைப்புக்களைக் காப்பியத்தின் பல்வேறு இடங்களிலும் கம்பன் பரவலாகக் கையாண்டுள்ளமை கருதத்தக்கதாகும்.

**1.2.3. எண்ணுப்பெயர்களைக் கையாளுதல்**

காவிய மாந்தர் சிலரின் செயல்களை விவரிக்கும் இடங்களில் ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம், கோடி முதலான எண்ணுப் பெயர்களைச் செய்யுட்களில் அமைத்துப் பேசுவதும் ஒருவகைச் சொற்கையாட்சித் திறனாக அமைந்து காணப்படுகிறது.

இராமன், சீதையை மணம் செய்தபோது கைகேயி முதலானோர் சீதைக்குப் பொன் முதலிய திரவியங்களை வழங்கியதைக் கம்பன் வருணிக்கும் போது,

எண் இல கோடி பொன், எல்லை இல் கோடி
வண்ண அருங் கலம் மங்கையர் வெள்ளம்,
கண் அகல் நாடு, உயர் காசொடு தூசும்
பெண்ணின் அணங்கு அனையாள் பெறுக!
என்றார்
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 97)

என 'கோடி' என்ற எண்ணுப்பெயரைப் பயன்படுத்துவதனை அவதானிக்கமுடிகிறது. பிறிதோரிடத்தில் இந்திரசித்திற்கும் இலக்குவனுக்கும் இடையே நடைபெற்ற விற்போரினை வருணிக்கும் போது,

ஆயிர கோடி பல்லம் அயில் எயிற்று அரக்கன்
எய்தான்;
ஆயிர கோடி பல்லத்து அவை துணித்து
அறுத்தான், ஐயன்;
ஆயிர கோடி நாகக் கணை தொடுத்து, அரக்கன்
எய்தான்;
ஆயிர கோடி நாகக் கணைகளால் அறுத்தான்,
அண்ணல்
(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 107.01)

என 'ஆயிரம்கோடி' என்ற எண்ணுப் பெயரைப் பயன்படுத்துவதனைக் காணமுடிகிறது.

**1.2.4. விளிச்சொற்களைக் கையாளுதல்**

செய்யுளின் போக்கில் அதன் பொருள் சிறக்க வேண்டி விளிச்சொற்களை அமைத்துச் செல்வதும் ஒருவகைச் சொற்கை யாட்சித் திறனாக அமைந்துள்ளது.

இந்திரஜித்தின் அம்பினால் தாக்குண்டு வீழ்ந்துகிடக்கும் இலக்குவனின் நிலையைக் கண்டு இராமன் கலங்குவதைக் காட்டும் கம்பன்,

தாயோ நீயே; தந்தையும் நீயே; தவம் நீயே;
சேயோ நீயே; தம்பியும் நீயே; திரு நீயே;
போயோ நின்றாய்; என்னை இகந்தாய்;
புகழ் பாராய்
நீயோ; யானோ, நின்னினும் நெஞ்சம் வலியேனோ?
(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 207)

என விளித்து சொல்வதனூடே குறித்த உணர்வுச் சூழலைக் கண்முன்னே கொண்டு வந்து சேர்ப்பதனைக் காணமுடிகிறது.

சீதையை இராவணன் சூழ்ச்சிசெய்து கவர்ந்து சென்றபோது சீதை தன்மன் எதிர்ப்பட்ட இயற்கைப் பொருட்களை நோக்கி இரங்கிப்பாடும் செய்யுள் வருமாறு அமைகிறது.

மலையே! மரனே! மயிலே! குயிலே!
கலையே! பிணையே! களிறே! பிடியே!
நிலையா! உயிரே! நிலைநேடி! னிர்போய்!
உலையா! வலியா! நுழைநீர்! உரையீர்!
(கம்பராமாயணம், ஆரணியகாண்டம் : 75)

மேற்படி செய்யுளில் சீதை தனது மனத்துயரத்தை மலை, மரம், மயில், குயில், கலை, பிணை, களிறு முதலானவற்றிடம் எடுத்துச்சொல்லும் வகையில் விளித்துப் பேசுவதாகக் கம்பன் காட்டுவது இலக்கியச் சிறப்புடையதாக அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிவதைப்படலத்தில் இராமனின் அம்பினால் வதைப்பட்டு உழன்ற வாலி; இராமன் தன்மீது அம்பெய்தியமைக்கான மொழிகேட்டு, மனம்மாறி அவனைத் துதிப்பதாக வரும் செய்யுள் வருமாறு,

**ஏவுகூர் வாளியால் எய்து நாய் அடியனேன்**
**ஆவிபோம் வேலைவாய் அறிவுதந்து அருளினாய்**
**மூவர் நீ! முதல்வன் நீ! முற்றும் நீ! மற்றும் நீ!**
**பாவம் நீ! தருமம் நீ! பகையும் நீ! உறவும் நீ!**
**(கம்பராமாயணம், கிட்கிந்தாகாண்டம் : 129)**

என 'நீ' என்ற சொல்லை எட்டுமுறை தொடர்ந்து விளித்துக்கூறுவதனூடே வாலியின் மனமாற்றத்தின் உண்மைத்தன்மையினையும் பக்குவத்தினையும் கம்பன் எடுத்துக் காட்டியுள்ளான்.

**1.2.5. திசைச் சொற்களைக் கையாளுதல்**

கம்பராமாயணத்தின் செய்யுட்கள் பலவற்றிலும் பல்வேறு வகையான திசைச் சொற்களைக் கம்பன் அழகாகப் பயன்படுத்திச் சென்றுள்ள தனைக் காணமுடிகிறது. தெலுங்கு, கன்னடம் முதலான மொழிகளில் வழங்கும் சொற்கள் இவற்றில் சிலவாம்.

சீதையின் திருமணத்தின் பொருட்டு மிதிலை மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்ற தசரதனின் படைவீரர்களை வருணிக்கும் போது,

**தோள் மிடைந்தன, தரணம் மிடைந்தென;**
**வாள் மிடைந்தன, வான்மின் மிடைந்தென;**
**தாள் மிடைந்தன, தம்மி மிடைந்தன;**
**ஆள் மிடைந்தன, ஆளி மிடைந்தன**
**(கம்பராமாயணம், பாலகாண்டம் : 29)**

என, 'தம்மி' என்ற தெலுங்கு (Telugu) மொழிச்சொல்லைத் தாமரையைக் குறிப்பிடப் பயன்படுத்தியுள்ளமையைக் காணமுடிகிறது. 'இராவணன் மந்திரப்படலத்தில்', 'அக்கட' என்ற கன்னடச் (Kannada) சொல்லை,

**திக்கயம் வலி, இல; தேவர் மெல்லியர்;**
**முக்கணான் கயிலையும் முரண் இன்றாயது;**
**மக்களும் குரங்குமே வலியர் ஆம் எனின்,**
**அக்கட இராவணற்கு அமைந்த ஆற்றலே!**
**(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 32)**

என, 'வியக்கத்தக்கது' என்னும் பொருளில் கம்பன்கையாண்டுள்ளதனைக் காணமுடிகிறது.

**1.2.6. வடமொழிச் சொற்களைக் கையாளுதல்**

வடமொழிக்கலப்பினால் தமிழின் மொழி நடை மேலும் அழகுபெற்றது. "வடமொழிக் கலப்பினாலே தனித் தமிழனுடைய ஒலித்தன்மை நெகிழ்ச்சியுற்றது. தமிழ்மொழியின் ஒலி, வேற்றுமொழியின் ஒலி யோடு இயைந்து செல்ல முயன்று, தானும் சிறிது வேறுபட்டு, வேற்றொலியையும் சிறிது வேறுபடுத்தி, இரண்டும் நெருங்கி ஒன்று பட்டன. இவ்வொன்றுபட்ட நிலையைக் கலவை உலோகத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். உலோகங்கள் தனித்திருக்கும் நிலையில் அத்தனையாகப் பயன்படுத்துவதில்லை. ஆனால் பிறஉலோகங்களோடு கலந்துநிற்கும் கலவைநிலையில் பல புதுத்தன்மைகளைப் பெற்று பல கருவிகளைச் செய்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இதைப்போன்றே தனிநிலையில் தமிழ் முன்னையிலும் சிறந்ததொரு கருவியாக மாறிற்று....." என வடமொழிக்கலப்பினால் தமிழ்மொழி அடைந்த நன்மைகளைப் பற்றிப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை குறிப்பிடுவது இவ்விடத்தில் கருதத்தக்கதாகும். (வையாபுரிப் பிள்ளை, எஸ். கம்பன்காவியம், ப. *106*).

ஆரியப்பண்பாடு மற்றும் வடமொழி நூலுணர்ச்சி மிகுதிப்பாடு ஆகிய காரணங்களினால் வடமொழிச் சொற்கள் மிகுதியாகத் தமிழில் புகத்தொடங்கின. கம்பன், தொல்காப்பியரின் கருத்தினை உள்வாங்கி வடசொற்களுக்குரிய சிறப்பெழுத்துக்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தால் அமைந்த சொற்களைக் காவியத்தின் பல்வேறிடங்களிலும்பொருத்தமுற அமைத்துக் கொண்டான்.

இதனால் ஓசையையும் இனிமையையும் கலந்து புதிய ஒரு சுவையைக் கம்பராமாயண மொழிநடை காட்டியதெனலாம்.

**1.2.7. புதிய சொல்லாக்க முயற்சி**

கம்பராமாயணத்தில் பல்வேறு இடங்களிலும் அதுவரை இல்லாத பல்வேறு புதிய சொல்லாக்க முயற்சிகளைக் கம்பன் செய்ய முனைந்துள்ளமையினைக் காணமுடிகிறது.

வான் சுடர்ச் சோதி வெள்ளம் வந்து இடை வயங்க, நோக்கி
மீன் சுடர் விண்ணும் மண்ணும் விரிந்த போர் அரக்கர் என்னும்
கான் சுடர் முளைத்த கற்பின் கனலியைக் கண்ணின் கண்டாள்
(கம்பராமாயணம், ஆரணியகாண்டம் : 58)

இங்கே சீதையைக் கம்பன் 'கற்பின்கனலி' என்னும் புதிய சொல்லாட்சியால் குறிப்பிடுகின்றான்.

மிதிலைக்காட்சிப்படலத்தில் சீதையை வருணிக்கும் கம்பன்,

| | | | |
|---|---|---|---|
| தேவபாஷை | - | தேவபாடை | (கம்பராமாயணம், பாயிரம்;10) |
| வஷிட்டன் | - | வசிட்டன் | (கம்பராமாயணம், பாலகாண்டம்; 76) |
| விஷிட்டன் | - | விசிட்டன் | (கம்பராமாயணம், பாலகாண்டம் ; 76) |
| ஜோதி | - | சோதி | (கம்பராமாயணம், பாலகாண்டம் ; 103) |
| கௌஸல்யா | - | கோசலை | (கம்பராமாயணம், பாலகாண்டம் ; 103) |
| ராமா | - | இராமன் | (கம்பராமாயணம், பாலகாண்டம் ; 117) |
| லோஹமாதா | - | உலகின்மாதா | (கம்பராமாயணம், ஆரணியகாண்டம் ; 9) |
| ஜானகி | - | சானகி | (கம்பராமாயணம், யுத்தகாண்டம் ; 11) |
| புஷ்பக விமானம் | - | புட்பக விமானம் | (கம்பராமாயணம், சுந்தரகாண்டம் ; 43) |
| விபீஷணா | - | வீடணன் | (கம்பராமாயணம், சுந்தரகாண்டம் ; 110) |
| அஷ்டமூர்த்தி | - | அட்டமூர்த்தி | (கம்பராமாயணம், கிட்கிந்தாகாண்டம் ; 40) |

இச்சொல்லாக்க முயற்சிகள், குறித்த செய்யுட்களுக்கு வனப்பை வழங்குவனவாகவும், பொருட் செறிவை மிகுவிப்பவையாகவும் அமைந்து காணப்படுகின்றன.

சூர்ப்பனகைப்படலத்தில், இராமன்மேல் ஆசை கொண்டு அவனோடு சூர்ப்பனகை உரையாடல் செய்யும் போது, சூர்ப்பனகை காணுமாறு வந்த சீதையைக் கம்பன் வருமாறு காட்டுகிறான்.

ஊன் சுட உணங்கு பேழ் வாய் உணர்வுஇலி, உருவில் நாறும்

கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவை எல்லாம்
வெல்லும் வெல்லும் என்ன மதர்க்கும் விழி கொண்டாள்;
சொல்லும் தன்மைத்து அன்று அது; குன்றும்; சுவரும்; திண்
கல்லும் புல்லும், கண்டு உருக, பெண்கனி நின்றாள்
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 32)

எனச் சீதையைப் 'பெண்கனி' என்ற சொல்லாட்சி கொண்டு குறிப்பிடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் 'சூர்ப்பனகைப்படலம்,' 'முதற் போர்புரிப்படலம்' முதலான படலங் களில் 'துமித்த' என்ற புதிய சொல்லாட்சி கொண்டு துண்டுபடுத்தப்பட்ட நிலையைக் குறிப் பிடுகிறார்.

கொலை துமித்து உயர் கொடுங் கதிர் வாளின், அக்
கொடியாள்
முலை துமித்து, உயர் மூக்கினை நீக்கிய மூத்தம்,
மலை துமித்தென, இராவணன் மணியுடை மகுடத்
தலை துமித்தற்கு நாள் கொண்டது, ஒத்தது,
ஓர்தன்மை

(கம்பராமாயணம், ஆரணியகாண்டம் : 96)

மேல்வரும் செய்யுள், இராவணனின் தலை களைத் துணித்தற் பொருட்டு நன்னாள் கொண்ட தன்மையினை வருணிப்பதாக உள்ளது.

யுத்தகாண்டத்திலே இலக்குவனுக்கும் இராவணனுடைய அரக்கர் சேனைக் குமி டையில் நடைபெற்ற போரில் அரக்கர் சேனை கண்ட பாரிய சேதத்தினைக் கம்பன் வருமாறு காட்டுகிறான்.

தேர் எலாம் துமிந்த மாவின் திறம் எலாம் துமிந்த
செங் கண்
கார் எலாம் துமிந்த வீரர் கழல் எலாம்துமிந்த கண்டத்
தார் எலாம் துமிந்த நின்ற தனுஎலாம் துமிந்த தம்தம்
போர் எலாம் துமிந்து கொண்ட புகழ்எலாம்
துமிந்தபோல

(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 150)

மேற்படி பாடலில் அரக்கர் சேனையின் தேர், குதிரைகளின் வலிமை, யானைகளின் வலிமை, அரக்கவீரர்களின் வீரக்கழல்கள், கழுத்து மாலைகள், விற்கள், போர்ஆற்றல், அதுவரை ஈட்டி வைத்திருந்த புகழ் எல் லாம் துண்டுதுண்டானமையைக் குறிக்கக் கம்பன் 'துமிந்த' என்ற சொல்லைக் கையாண்டுள்ளதனைப் பார்க்கமுடிகிறது. மேலும் சில இடங்களில் 'அற்ற' என்ற சொல்லாட்சியினையும் (கம்பராமாயணம், யுத்த காண்டம் : 148) இதே பொருளில் கம்பன் கையாண்டுள்ளமை குறிக்கத்தக்கதாகும்.

### 1.2.8. சொற்களைத் திரித்து அமைத்தல்

செய்யுள்களில் பொருளுக்கேற்றவாறு அதில் வந்தமையும் சொற்களைத் திரித்து அமைப்பதும் ஒருவகைச் சொற்கையாட்சித் திறனாகக் காணப்படுகிறது.

மீட்சிப்படலத்தில் இராமன் பதினான்கு ஆண்டுகாலம் வனவாசம் முடித்து நாட்டுக்குத் திரும்பி வரவேண்டிய நாள் இன்றுதான் என சோதிடர் பரதனுக்குச் செய்தி சொல்ல, அதனைக் கேட்ட பரதன் தன்னை மறந்து வீழ்தலைச் சித்திரிக்கும்போது,

என்ற போதத்து, இராமன் வனத்திடைச்
சென்ற போதத்தது அவ் உரை, செல்வத்தை
வென்ற போதத்த வீரனும் வீழ்ந்தனன்,
கொன்ற போதத்து உயிர்ப்புக் குறைந்துளான்
(கம்பராமாயணம், யுத்தகாண்டம் : 210)

என 'போது' என்ற சொல்லை மேற்படி செய்யுளில் 'போதத்து' எனத்திரித்துக்கையாண் டிருப்பதனைக் காணமுடிகிறது.

### 1.2.9. சிலேடைகளை அமைத்தல்

சிலேடை இருவகைப்படும். சொற்களைப் பிரிக்காமல் அச்சொற்களுக்கு இரு பொருள் அமைத்துச் சொல்வது செம்மொழிச்சிலேடை ஆகும். சொற்களைப் பிரிக்கின்ற நிலையில் இருபொருள் அமைவது பிரிமொழிச்சிலேடை எனப்படும். கம்பராமாயணத்தில் பெரும் பாலும் செம்மொழிச்சிலேடைகளே பயின்றுள் ளதனைக் காணமுடிகிறது.

இராமனைக் கண்ட சீதை அவன்மேல் காதல் கொண்டு அதனால் துன்பமுற்றுத் தனது நிலையைக் கடலை நோக்கிக் கூறுகின்ற நிலையைக் கம்பன் வருமாறு சிலேடை யமைத்துக் காட்டுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே வளை சோர, எழுந்து, விழுந்து,
அடல் ஏய் மதனன் சரம் அஞ்சினையோ?
உடல் ஒய்வுற, நாளும், உறங்கலையால்!
கடலே! உரை! நீயும், ஓர் கன்னகொலாம்?
(கம்பராமாயணம், பாலகாண்டம் : 11)

மேற்படி செய்யுளில் கடலுக்கு வளை சோர்தலானது அதன் வெண்மையான சங்குகள் கடலுக்கு வெளிப்புறத்தே சிந்துதலையும், எழுந்துவிழுதல் என்பது அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து மடங்கிக் கீழே வீழ்தலையும், உடல் ஒய்வுறுதல் என்பது கடலின் உடம்பாகிய நீர் தள்ளாடுதலையும், உறங்காமை என்பது இரவுபகல் என்னாது அலைகள் ஆர்ப்பரித்து இருத்தலையும் குறித்து நிற்கிறது. மறுபுறத்தில் சீதைக்கு வளைசோர்தல் என்பது, அவள் கையிலுள்ள வளையல்கள் உடல் மெலிதலால் கழன்று வீழ்தலையும் எழுந்து வீழுதல் என்பது எழமுயன்று அதுமுடியாமல்கீழேவீழ்தலையும், உடல் ஒய்வுறுதல் என்பது உடம்பில் வலிமை ஒழிதலையும், உறங்காமை என்பது காதல் துன்பமிகுதியால் இரவு முழுவதும் உறக்கம் கெடுதலையும் குறித்துநிற்கிறது.

**முடிவுரை**

கம்பராமாயணத்தின் செய்யுட்கள் பலவும் கம்பனின் சொல்ஆட்சித்திறனைப் புலப்படுத்துவனவாக அமைந்துள்ளதனை நோக்க முடிகிறது. சொற்கள் தனியே நிற்கும் நிலையில் அவற்றுக்கான முக்கியத்துவம் குறைவாகவே காணப்படும். ஆயினும் இச்சொற்கள் செய்யுள்வடிவத்துக்குள் பொருட்புலப்பாட்டுக்கு ஏற்ப பொருத்தமான இடத்தில் வந்தமையும்போது அவற்றுக்குத் தனிமதிப்பு வந்துவிடும். கவிஞரின் உணர்ச்சிக்கும் அதைக் கற்பவரின் உணர்ச்சிக்குமிடையில் சொற்களும், சொற்பொருளும், ஒலிநயமும் அமைந்துள்ளன. செய்யுளின் உயிர்ப்பே அதன் சொற்களில்தான் பெரிதும் தங்கியுள்ளது. இந்த விடயம் குறித்த பூரண அறிவைக் கம்பன் கொண்டிருந்தான் எனக்கருதமுடியும். சொற்கையாட்சிநிலையில் பல்வேறு உத்திகளைக் கையாண்டுள்ளான் இந்த உத்திகள் கம்பனைப் கவிஞர்களிடமிருந்து வேறுபடுத்திப் பார்க்க வைப்பவனாக உள்ளன. காப்பியக்கட்டமைப்பொன்றில் மொழிநடைக்கான முக்கியத்துவத்தைக் கம்பன் தெளிவாக உணர்ந்ததன் வெளிப்பாடாகவே அவனது சொல்வளம், சொல்தேர்வு, சொற்கையாட்சி முதலானவை அமைந்து காணப்படுகின்றன. தமிழுக்கு இயல்பாக அமைந்த நேரிய பெருமித நடையோடு சொற்கள் கம்பராமாயணச் செய்யுட்களில் பொருத்தமாக வந்தமையும் திறன் வியக்கத்தக்கதாக உள்ளது. கம்பனது சொற்கையாட்சித்திறன், தெளிவு, சுருக்கம், ஓசை, இனிமை, அழகு, சுவை முதலானவற்றை ஒருசேர வாசகனிடத்துக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக உள்ளது எனலாம்.

**துணைநூல் விபரப்பட்டியல்**


1. கம்பராமாயணம், பதிப்பாசிரியர்கள் அ.ச.ஞானசம்பந்தன்; தெ. ஞானசுந்தரம், கங்கை புத்தகநிலையம், சென்னை, மே, *2002*.
2. கிருட்டிணமாச்சாரி, சொ. இரா., கம்பரது கவிதைநடை (சென்னைப் பல்கலைக்கழக முனைவர்பட்ட ஆய்வேடு), பதிப்பிக்கப்படாதது, அரசினர் ஆடவர் கல்லூரி, கும்பகோணம், *1987*.
3. சீனிச்சாமி, து., தமிழில் காப்பியக்கொள்கை, (இரண்டாம் பகுதி), தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், *1944*.
4. சுப்பிரமணியன், ச. வே., இளங்கோவும் கம்பனும், உலகத்தமிழ்க் கல்வி இயக்கம், சென்னை, *1986*.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சுப்பிரமணியன், ச. வே., கம்பன் இலக்கிய உத்திகள், மெய்யம்மை பதிப்பகம், காரைக்குடி, 1982.
6. ஞானசம்பந்தன், அ. ச., கம்பன் - புதியபார்வை, கம்பன்கழகம், சென்னை, 1984.
7. மாணிக்கம், வ. சுப., கம்பர், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1974.
8. மாணிக்கம், வ. சுப., காப்பியப்பார்வை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990.
9. வையாபுரிப்பிள்ளை, எஸ்., கம்பன்காவியம், தமிழ்ப் புத்தககாலயம், சென்னை, 1957.
10. வையாபுரிப்பிள்ளை, எஸ்., காவியகாலம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1962.
11. ஜகந்நாதன், கி. வா., தமிழ்க்காப்பியங்கள், அமுதநிலையம், சென்னை, 1955.
12. Aiyar, V. V. S., Kamba Ramayana : A study, Bharatiya Vidyabhavan, Bombay, 1965.
13. Clark, John., History of Epic Poetry, Macmillan, London, 1964.
14. Dakshayani, K. V., The metres in Kambaramayanam, Annamalai University, Annamalai Nagar, 1979.
15. Eliot, T. S., The use of poetry and the use of Criticism, Oxford, 1948.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் பற்றிய ஆய்வு

சிதம்பரநாதன் உதயகுமார் ; யேசுகுமார் கலைப்பிரியா

**ஆய்வுச் சுருக்கம்**

மட்டக்களப்பு மாவட்டமானது 14 பிரதேச செயலக பிரிவுகளையும் 345 கிராம சேவகர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மொத்த மீனவ சனத்தொகை 25726 ஆகும். இங்கு மொத்தமாக 20,726 மீனவ குடும்பங்கள் காணப்படுகின்றனர் (District Fishrs office - Batticalao 2014.). இவ்வாய்விற்கான தரவுகளும் தகவல்களும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலகங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. தரவுகள் பண்புசார் மற்றும் அளவுசார் முறைகளினூடாகப் பெறப்பட்டுள்ளன. சேகரிக்கப்பட்ட தரவுகள் புள்ளிவிபரவியல் முறையினைக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வு முடிவுகள் தொகுத்தறி முறையினைப் பிரதானமாகவும் உய்த்தறி முறையினைத் துணையாகவும் கொண்டு பெறப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்ட மக்கள் விவசாயத்திற்கு அடுத்த படியாக மீன்பிடித்துறையினையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். இம்மீன்பிடித் துறையானது இப்பிரதேச மக்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றுகின்றது. அந்த வகையில் இம் மீனவர்களின் மீன்பிடி உற்பத்தியானது இம்மாவட்ட மக்களின் பொருளாதாரத்தில் பெரும் பங்காற்றுகின்றது. ஆனாலும் பெரும்பாலான மீனவர்கள் சந்தைப்படுத் தலில் ஏற்படுகின்ற பிரச்சினை காரணமாக பாரிய இழப்புகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வின் பிரதான நோக்கமானது மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுகின்ற மீன்பிடி உற்பத்தியாளர்கள் சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கண்டறிவதாகும்.

**திறவுச் சொற்கள் :** சந்தைப்படுத்தல், விலைப்போட்டி, நிரம்பல், கேள்வி, வறுமை

## 1.0 அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டமானது 14 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. மேலும் இம்மாவட்டமானது 346 கிராம சேவக பிரிவுகளையும் 876 கிராமங்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

இப்பகுதி மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடிக்கைத்தொழிலையே மேற்கொள்கின்றனர். இம் மாவட்ட மீனவர்கள் முறைப்படியாக மீனை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதில் அதிகமான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் இம் மீனவர்கள் குறைந்த வருமானத்தையே பெற்றுக் கொள்கின்றனர். ஆகவே இதனை ஒரு ஆய்வாக மேற்கொண்டு இதற்கான காரணத்தை வெளிக்கொண்டு வரும் அவசியத்தினால் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வின் மூலம் பெறப்படும் தகவல்களானவை இப்பகுதி மீனவர்களின் மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளை உயர் மட்டத்திற்குக் கொண்டு செல்லப்படுவதன் மூலம் அவர்களின் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு வாய்ப்புண்டு.

## 2.0 ஆய்வுப் பிரச்சினை

ஆய்வுப் பிரதேசத்தில் காலம் காலமாக நிலவி வரும் கடற்றொழில் மற்றும் நன்னீர் மீன்பிடி சமூகத்தின் வாழ்வாதார பிரச்சினைகள் மீன்பிடி அளவு மட்டத்துடனும் அவற்றின் சந்தைப்படுத்தலிலும் தங்கி இருப்பதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றோடுள்ள பிரச்சினைகளை எவ்வாறு இனம் காண்பது என்பதும் அவற்றுக்கான தீர்வுகளை வழிமொழிவதுமே முக்கிய ஆய்வுப் பிரச்சினையாக அமைகின்றது. இம் மாவட்ட மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற மீனவர்கள் மீன் உற்பத்திக்கான சந்தைப்படுத்தலில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதனால் தொடர்ந்தும் இம் மீனவர்கள் குறைந்தளவு வருமானத்தையே பெற்றுக்கொள்ள வேண்டிய நிலையே ஏற்படுகின்றது. இவ்வாறு குறைந்த வருமானத்தை ஏற்படுத்தும் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது.

**2.1 ஆய்வின் நோக்கம்**

பின்வரும் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

1. மீன்பிடி உற்பத்தியின் தற்போதைய சந்தைப்படுத்தல் நிலைமை பற்றி அறிதல்.
2. சந்தைப்படுத்தலில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் எவ்வாறு குறைந்த வருமானத்திற்குக் காரணமாக இருக்கின்றது என்பதை அறிதல்.
3. இம் மீன்பிடி உற்பத்தியின் சந்தைப் படுத்தலின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

பிருந்தா, பமிலா, டியுரா(2004)ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரையில் இலங்கை வடமாகாணத்தின் கடல் வலயப் பின்னணியானது பௌதிக, சமூகப் பொருளாதார அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தின் பொருளாதார நடவடிக்கையில் மீன்பிடிக் கைத்தொழில் ஆற்றி வரும் பங்களிப்பு அதன் வளர்ச்சிப் போக்கும் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் பதனிடலும் போக்குவரத்து மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளும் இனங்காணப்பட்டுள்ளன. இவர்களது ஆய்வின் சிபாரிசு முன்மொழிவாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளின் விரிவாக்கம் மேலும் மூலதனவாக்கம் பற்றிய கரிசனை ஆகியன முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜயுப். எஸ் (2005) அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அம்பாறை மாவட்ட மீன்பிடிக் கைத்தொழிலின் போக்கு மீன்பிடி முறைகள்மீனவசமூகஅமைப்புபோன்ற அம்சங்கள் குறித்து நோக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் மீனவ சமூகத்தின் வறுமை பற்றிக் கூடிய கவனம் செலுத்தபட்டுள்ளது. சுரண்டல் மற்றும் தங்கியிருப்பின் நியமங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

Alan Post (2010) அவர்களின் ஆய்வில் மீன்பிடிக்கைத்தொழிலின் பிரச்சினைகளும் அதற்கான நிறுவன ஏற்பாடுகளும் பற்றிக் கலந்துரையாடப்பட்டுள்ளது. மேலும் வர்த்தக ரீதியாக மீன்பிடிக் கைத்தொழிலை மேற் கொள்வதில் காணப்படக்கூடிய தடைகளாக மீன் வளங்களை விஞ்ஞான முறையில் இனங்காண்பது, நிலையான மீன் நிரம்பலை நிச்சயிப்பது, நஸ்ட ஈட்டு முறைகள், மீன் உற்பத்தி, கட்டுப்பாடற்ற மீன்பிடி முறைமைகள் ஆகியன குறித்துக் காட்டப்பட்டுள்ளன. ஆய்வுச்சிபாரிசுகளாக தனியார்துறையூடாகச் சந்தைப்படுத்துதல், வசதிகளை விருத்தி செய்தல், மீன் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த் துதல், மீன் வளங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை மற்றும் கொள்கைகளை ஏற்படுத்துதல் என்பன முன் வைக்கப் பட்டுள்ளன.

**3.0 ஆய்வு முறைமை**

ஆய்வின் நம்பகத்தன்மையானது அவ்வாய்விற்கெனத் திரட்டப்படும் தகவல்களிலேயே தங்கியுள்ளது. இவ்வாய்வில் முதலாம் மற்றும் இரண்டாம் தர தரவு மூலங்கள் பயன்படுத்தப்படுகிறது. முதலாந்தர தரவு சேகரிப்பின்போது வினாக்கொத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக்கெனத் தரவுகள் மீன்பிடி உற்பத்தியாளர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலமும் நேர் காணல் மூலமும் திரட்டப்பட்டது.

இரண்டாம் தரவு சேகரிப்பின்போது மாவட்ட மீன்பிடி அலுவலக (மட்டக்களப்பு) அறிக்கை, மத்திய வங்கி ஆண்டறிக்கை, இணையத்தளங்கள் என்பன பயன்படுத் தப்பட்டுள்ளன.

**3.1 மாதிரி எடுப்பும் மாதிரி அளவும்**

ஆய்வின் சனத்தொகையினைப் பிரதிபலிப்பதாக மாதிரி எடுப்பானது அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்ட மீனவர்களின் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக 150 மீன்பிடி உற்பத்தியாளர்கள் மாதிரியாகக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாய்வுப் பகுதியில் 25726 மீனவர்கள் மீன்பிடி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் விகிதாசார அடிப்படையில் அதாவது தெரிவு செய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள மொத்த மீனவர்களின் மொத்த எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு விகிதாசாரத்தின் அடிப்படையில் 150 மீனவர்கள் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டன.

**3.2 மாதிரிப் பரம்பல்**

தெரிவு செய்யப்பட்ட மாதிரியானது விகிதா சார அடிப்படையில் 150 மாதிரி மீனவர்களும் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டு தகவல் சேகரிக்கப்பட்டது. அம் மாதிரி பரம்பல் பின்வருமாறு அமையும்.

**அட்டவணை 5.**
**ஆள் எண்ணிக்கையடிப்படையில் மீன்பிடித் தொழில்கள்**

| இல | பிரதேச செயலக பிரிவு | மொத்த மீன்பிடி உற்பத்தி யாளர்கள் | மாதிரி எடுப்பு | சத வீதம் (%) |
|---|---|---|---|---|
| 1. | வாகரை வடக்கு, மத்தி, தெற்கு | 146 | 09 | 06 |
| 2. | வாழைச்சேனை மேற்கு, மத்தி, கிழக்கு, தெற்கு | 1142 | 72 | 48 |
| 3. | செங்கலடி | 629 | 35 | 23 |
| 4. | மண்முனை வடக்கு I, வடக்கு II | 146 | 09 | 06 |
| 5. | மண்முனைப் பற்று வடக்கு I, வடக்கு II | 402 | 25 | 17 |
| மொத்தம் | | 2365 | 150 | 100 |

(மூலம்: மீன்பிடித் திணைக்களக் கையேடு -மட்டக்களப்பு, புள்ளிவிபர ஏடு (2014), மட்டக்களப்பு கச்சேரி)

**3.3 தரவு முன்வைப்பும் பகுப்பாய்வும்**

சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து ஆய்வுப் பிரச்சினைக்கு அவசியமான தகவல்கள் அதாவது இடையம், இடை மற்றும் விலகல் போன்ற பெறுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நவீனத்துவமான Microsoft Excel மற்றும் Statistical Package for Social Science (SPSS) 11.0 எனும் வடிவமும் பயன்படுத்தப்பட்டது. மேற்படி முறைகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறப்படும் முடிவுகளானது அட்டவணை (Tables), வரைபுகள் (Charts), புள்ளிவிபரங்கள் (Statistics) போன்ற பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4 தரவு மதிப்பீடு

வினாக்கொத்தில் கேட்கப்பட்ட வினாக் களானவை ஐந்து அளவுத்திட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்தது. அவையாவன;

**அளவுத்திட்டம்** (Scale)

**அளவீடு**

1. உறுதியாக உடன்படவில்லை (1)
2. உடன்படவில்லை (2)
3. உடன்படவுமில்லை மறுக்கவுமில்லை (3)
4. உடன்படுகிறேன் (4)
5. உறுதியாக உடன்படுகிறேன் (5)

தரவுகள் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட முடிவுகள் பின்வரும் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 5.2

| வீச்சு | தீர்மானம் |
|---|---|
| $1 \leq D_1 < 2.5$ | ஏற்றுக்கொள்ளப்படவில்லை |
| $2.5 \leq D_1 < 3.5$ | ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| $3.5 \leq D_1 \leq 5$ | உறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது |

### 4.0 ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரை யாடலும்

### 4.1 பொருள்மீதான விலைத் தளம்பல்:

விலைத்தளம்பல்கள் மீன்பிடி உற்பத்திகளின் சந்தைப்படுத்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என வினவப்பட்டபோது 62 வீதமானவர்கள் உடன்படுவதாகவும், 32 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை எனவும் தெரிவித்தனர். இதன் இடை 3.78 ஆகவும் காணப்படுகிறது. அனேகமானவர்களின் கருத்தின்படி அடிக்கடி ஏற்படும் விலைத்தளம்பல் சந்தைப்படுத்தலில் பாரிய பிரச்சினையாக இருக்கிறதென்று கூறுகின்றனர்.

அனேகமானவர்களின் கருத்தின்படி அடிக்கடி ஏற்படும் விலைத்தளம்பல்களைக் கட்டுப்படுத்துவதில் அரசினுடைய பங்களிப்புக் குறைவாகக் காணப்படுவது சந்தைப்படுத்தலில் பிரச்சினையை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர். இத்தகைய குறைந்த மட்டப் பங்களிப்பிற்கு இடை 3.96 ஆகவும் காணப்பட்டது.

விலைத்தளம்பலில் குறைந்த மட்ட தகவற் கிடைப்பனவு கணிசமானளவு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என நீர் கருதுகிறீரா என்பதற்கு 18 வீதமானவர்கள் உடன்படவில்லை. 58 வீதமானவர்கள் தாம் உடன்படுவதாகத் தெரிவித்த அதேவேளை இதன் இடை 3.35 ஆகவும் காணப்பட்டது.

### 4.2 இடைத்தரகர்

இடைத்தரகர் ஆதிக்கம் உமது பிரதேசத்தில் கணிசமாகக் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. அத்துடன் 55 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். இடைத்தரகர் ஆதிக்கம் தொடர்பான கூற்றுக்கு இடை 3.61 ஆகவும் காணப்பட்டது. இதிலிருந்து இடைத்தரகர்களின் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுவதால் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினையை மீன்பிடி உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குவதாகக் கருதுகின்றனர்.

இடைத்தரகர்கள் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் மீன் உற்பத்திகளின் விலைகளில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 21 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. 54 வீதமானவர்கள் உடன்பட்டார்கள். இடைத்தரகர் விலையின் மீது கொண்டுள்ள ஆதிக்கம் தொடர்பான கருத்திற்கு இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

### 4.3 வெளியூர் மீன்களின் சந்தைப் போட்டி

குறித்த இம் மாவட்டத்தில் பிடிக்கப்படும் மீன்களின் விற்பனைக்குப் போட்டியாக வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டங்களிலிருந்து வருகின்ற மீன் வகைகள் உமது பிரதேசத்திற்கு எடுத்து வரப்படுகின்றது என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் இக்கூற்றுடன் உடன் படவில்லை. 65 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். எனவே வெளி இடங்களில் இருந்து வருகின்ற மீன்களின் தொகை காணப்படுகின்றது. இதற்கு இடை 3.54 ஆகவும் காணப்பட்டது. இம் மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்களின் மூலமாக விலைமட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது எனக் கூறப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 66 வீதமானவர்கள் உடன்பட்டனர். விலைமட்ட வீழ்ச்சிக்கான இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

இம் மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்பிடி உற்பத்திகளின் மூலமாக உள்ளூரிலேயே போட்டி அதிகரித்துள்ளது எனும் கூற்றுக்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. மற்றும் 51 வீதமானவர்கள் இக்கருத்திற்கு உடன்படுவதாகத் தெரிவித்தனர். உள்ளூர் போட்டித்தாக்கத்திற்கான இடை 3.49 ஆகவும் காணப்பட்டது.

**4.4 சந்தைத் தகவல் கிடைப்பனவு:**

போதுமான சந்தைத்தகவல்கள் கிடைக்கப் பெறுவதில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 69 வீதமானவர்கள் உடன் படுவதாகவும், இதன் இடை 3.46 ஆகவும் காணப்பட்டது. அரசினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் பங்களிப்பு குறைந்த மட்டத்திலுள்ளதற்கு 69 வீதமானவர்கள் உறுதியாக உடன்படுவதாகத் தெரிவித்தனர்.

குறைந்த மட்டத் தகவற் கிடைப்பனவு காரணமாக உமது இடைத்தரகர் ஆதிக்கம் உமது பிரதேசத்தில் கணிசமாகக் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கிறீரா என வினவப்பட்டபோது 20 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. அத்துடன் 55 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். இடைத்தரகர் ஆதிக்கம் தொடர்பான கூற்றுக்கு இடை 3.61 ஆகவும் காணப்பட்டது. இதிலிருந்து இடைத் தரகர்களின் ஆதிக்கம் இப்பிரதேசத்தில் அதிகமாகக் காணப்படுவதால் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினையை மீனவர்கள் எதிர்நோக்குவதாகக் கூறப்படுகின்றது.

இடைத்தரகர்கள் குறித்த ஆய்வுப் பிரதேசத்தில் மீன்களின் விலைகளில் கணிசமான தாக்கத்தைக் கொண்டுள்ளனர் என நீர் கருதுகிறீரா எனக் கேட்கப்பட்டதற்கு 21 வீதமானவர்கள் இதற்கு உடன்படவில்லை. 54 வீதமானவர்கள் உடன்பட்டார்கள். இடைத்தரகர் விலையின் மீது கொண்டுள்ள ஆதிக்கம் தொடர்பான கருத்திற்கு இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

**4.5 வெளியூர் பொருட்களின் போட்டி:**

குறித்த இவ் ஆய்வுப் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் அதே வகையான பொருட்கள் வெளியூர்களிலிருந்து உமது பிரதேசத்திற்கு எடுத்து வரப்படுகின்றது என நீர் கருதுகின்றீரா எனக் கேட்கப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் இக்கூற்றுடன் உடன்படவில்லை. 65 வீதமானவர்கள் இதற்கு உடன்படுவதாகவும் தெரிவித்தனர். வெளியூர் மீன்பிடி பொருட் கிடைப்பனவிற்கு இடை 3.54 ஆகவும் காணப்பட்டது.

இம்மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன் உற்பத்திகளின் மூலமாக விலைமட்டத்தில் வீழ்ச்சி ஏற்படுகின்றது எனக் கூறப்பட்டதற்கு 20 வீதமானவர்கள் உடன்படவில்லை. 66 வீதமானவர்கள் உடன்பட்டனர். விலை மட்ட வீழ்ச்சிக்கான இடை 3.51 ஆகவும் காணப்பட்டது.

இம்மாவட்டத்திற்கு வெளியிடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன் உற்பத்திகளின் மூலமாக உள்ளூரிலேயே போட்டி அதிகரித்துள்ளது எனும் கூற்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 வீதமானவர்கள் உடன்படவில்லை. மற்றும் 51 வீதமானவர்கள் இக்கருத்திற்கு உடன்படுவதாகத் தெரிவித்தனர். உள்ளூர் போட்டித்தாக்கத்திற்கான இடை 3.49 ஆகவும் காணப்பட்டது.

**4.6 பொருளின் தன்மை:**

54 வீதமான உற்பத்தியாளர்கள் தம்முடைய பொருட்கள் நியம தரம் மற்றும் நியம அளவுகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.76 ஆகவும் காணப்பட்டது. 56 வீதமான மீன்பிடி உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன்களில் காணப்படுகின்ற தர வேறுபாடுகள் காரணமாக விற்பனை வீழ்ச்சியடைகின்றது என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.84 ஆகவும் காணப்பட்டது. 58 வீதமான மீன் உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன் உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்யக்கூடியதாக அமையவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.83 ஆகவும் காணப் பட்டது.

**4.7 போக்குவரத்து வசதிகள்:**

54 வீதமான உற்பத்தியாளர்கள் போக்குவரத்து செலவுகளானது தமது உற்பத்திகளின் மீதான விற்பனை வருமானத்தையும் இலாபத்தினையும் வீழ்ச்சியடையச் செய்கின்றது என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். 69 வீதமான மீன்பிடி உற்பத்தியாளர்கள் தம்முடைய பொருட்களுக்கான போக்குவரத்தில் பாதுகாப்பு குறைவாகவும் சிக்கலானதாகவும் மீன்உற்பத்திகளினை கொண்டுசெல்ல உகந்ததாக போக்குவரத்து வசதி காணப்படவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்தனர். 72 வீதமான மீனவ உற்பத்தியாளர்கள் தம்முடைய மீன் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு அவசியமான போக்குவரத்து வசதிகள் காணப்படவில்லை. என்னும் கருத்தை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்தனர். இதன் இடை 3.83 ஆகவும் காணப்பட்டது.

| வீச்சு | தீர்மானம் | மீடிறன் | வீதம் (%) |
|---|---|---|---|
| $1 \leq D_1 < 2.5$ | ஏற்றுக்கொள் ளப்படவில்லை | 43 | 29 |
| $2.5 \leq D_1 < 3.5$ | ஏற்றுக்கொள் ளப்பட்டது | 31 | 21 |
| $3.5 \leq D_1 \leq 5$ | உறுதியாக ஏற்றுக்கொள் ளப்பட்டது | 76 | 51 |
| மொத்தம் | | 150 | 100 |

**அட்டவணை 6.2 ஆய்வின் தரவுகளின் முழுமொத்த முடிவு**

**5.0 முடிவுரை**

**பொருள் விலை தளம்பல்:**

மீன் சந்தைப்படுத்தலின் போது விலைத் தளம்பலின் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன. அதாவது வாகரைக் கிராமத்தை எடுத்துக்கொண்டால் இங்கு மீனின் விலைத்தளம்பலுக்கு காரணம் இடைத்தரகர்கள் நியமிக்கின்ற விலைவாசியே ஆகும். உத்தரவாத விலையின்மையால் விலைத்தளம்பல் காரணமாக குறைவான விலைக்குக் கூட சந்தைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றமையானது இப்பிரதேச மீனவர்களை நட்டமடையச் செய்கின்றது. தமது பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமை மீனவர்களை மனமுடையச் செய்வதால் அவர்களால் கூடியளவு மீன் உற்பத்திகளை மேற்கொண்டு சந்தையைக் கைப்பற்ற முடியாதுள்ளது.

**5.1 இடைத்தரகர்கள்:**

சந்தைப்படுத்தலில் இடைத்தரகர்களின் ஆதிக்கம் தவிர்க்கமுடியாததாகவுள்ளது. பேரம்பேசி விற்கும் ஆற்றல் குறைவின் காரணமாக இடைத்தரகர்கள் கேட்கும் விலைக்கே ஓரளவு நெருங்கி வந்து மீனைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கின்றனர். சந்தையில் மீன்களின் விலை எவ்வளவாகக் காணப்படுகின்றது என்று அறிந்து அதற்கேற்ப மீனை வழங்கலாம் என மீனவர்கள் சிந்திப்பதில்லை. இதனால் அவர்கள் அடையும் இலாபத்தைவிடக் கூடுதலாகவே மீன்பிடிக்கான உற்பத்திச் செலவு அமைவதைக் காணலாம். இவ்வாறான பிரச்சினைகள் எழக் காரணம் அவர்களது சந்தைப்படுத்தல் பற்றிய அறிவின்மையே ஆகும்.

**5.2 வெளியூர் மீன்களின் சந்தைப்போட்டி:**

விலைத்தளம்பல் ஏற்படுவதற்கு வெளியூரிலிருந்து வருகின்ற மீன்களின் வருகையானது பிரதான காரணமாக உள்ளது. வேறு இடங்களில் இருந்து கொண்டுவரப்படும் மீன்கள் ஆய்வுப்பகுதிகளின் சந்தைகளுக்கு வருவதனால் உள்ளூர் மீன்பிடியின் கேள்வியில் சடுதியாக வீழ்ச்சி ஏற்பட்டுவருகின்றது என்றே நாம் கூறவேண்டும். குறிப்பாக திருகோணமலை, யாழ்ப்பாணம் மற்றும் கல்முனை போன்ற பகுதிகளில் இருந்து வரும் மீன்வகைகள் ஆய்வுப்பிரதேச சந்தைக்குள் ஊடுருவதனால் உள்ளூர் மீன்பிடியின் விலையில் தளம்பல் ஏற்படுவதை உணரலாம்.

**7.2 போதிய ஆலோசனைகள் இல்லாமை:**

இங்கு உள்ள மீன்பிடியாளர்கள் தமக்கு சந்தை நிலைமை தொடர்பாகவோ, சந்தை விலைகள் தொடர்பாகவோ, இடைத் தரகர் தொடர்பாகவோ அத்துடன் வாடிக்கையாளர் தொடர்பாகவோ தகவல் எதுவும் கிடைப்பதில்லை. Fisheries offfice காணப்படுகின்ற போதிலும் அதன் ஆலோசனைச் சேவைகளானது மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது என்பது முடிவுகளிலிருந்து தெளிவாகின்றது.

**5.3 மீன்களின் தன்மை:**

இப்பகுதி மீனவர்களின் மீன்கள் நியம தரம் மற்றும் அளவுகளைக் கொண்டுள்ளது. இப் பொருட்களுக்கான சந்தையில் வெவ்வேறு இடங்களில் இருந்து வரும் மீன்கள் இப்பிரதேச மீன்களைக் காட்டிலும் தரம் வேறுபட்டு காணப்படுகிறது. எனவே போட்டிப் பொருட்களுடன் ஒப்பிடும் போது இப்பகுதி மீன்களின் தரம் வேறுபட்டு இருப்பதால் விற்பனை வீழ்ச்சி ஏற்படுகின்றது.

**5.4 போக்குவரத்து வசதிகள்:**

மக்களின் தினசரிப் போக்குவரத்திற்கு பெரிதும் உதவி வரும் போக்குவரத்து சேவைகள் பிராந்திய போக்குவரத்து பஸ் சேவையும் தனியார் சேவையுமாகும். போக்குவரத்து சேவைகள் சீரானதா இல்லாததால் மீன்பிடியாளர்களின் மீன்களை சந்தைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. இதனால் மீனவர்கள் நட்டமடைகின்றனர். பஸ் சேவையில் பொதுமக்களுடனேயே மீன்களையும் ஏற்றிச் செல்லவேண்டியுள்ளமையினால் மீன்கள் மிதிபட்டு நசிந்து போகின்றன. இவ்வாறு நசிபடும் மீன்களை குறைந்த விலைக்கே விற்கவேண்டிய நிலை காணப்படுகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1. கதிரேசன் ரூ ராதா, அங்காடியியல் (2004). பிரசன்னா பப்ளிகேசன் பொன்னையா தெரு திருவல்லிக்கேணி, சென்னை 600005. பக்கம் (A1 - A.M.12)
2. க. ரகுராகவன் இரா பத்பத்ரஞ்சன், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (1998). கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடு. பக்கம் (1- 119)
3. யெகத் பண்டாரநாயக, சந்தைப்படுத்தல் (2002). தேசிய கல்வி நிறுவகம். இலங்கை.
4. பிலிப் கொட்லர், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் (2001) (10 ஆவது பதிப்பு) இந்தியா பிரிண்டிஸ் கேள் பிறைவற் லிமிட்டட்
5. லெஸ்வி றோயர் (1999), சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், பியர்ஸ்சன் எடுகேஷன். இந்தியா.
6. புள்ளிவிபரக்கையேடு 2000 - 2014, கச்சேரி. மட்டக்களப்பு
7. மத்திய வங்கி ஆண்டறிக்கை (2005 - 2013)
8. மீன்பிடி திணைக்களம். Fisheries office Report - 2014 அறிக்கை
9. சாரதா மனோகரன் (2010) உலகின் மீன்வளம் இன்னும் 40 வருடங்கள் தானா? தினகரன் 9 2010
10. ஐயூப். எஸ் (2005), "obstacles to Overcome Poverty among fishing Society", சமூக விஞ்ஞானங்கள் துறை, ஒலுவில் - இலங்கை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தில் நுண் காலநிலை வேறுபாடுகள்

நா. பிரதீபராஜா

**ஆய்வுச் சுருக்கம்:**

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது வேறான புவியியல் பண்புகளைக் கொண்ட வடமாகாணத்தின் நுண்காலநிலை வேறுபாடுகளை அறிவது எதிர்காலஅபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு இன்றியமையாதது ஆகும். வடமாகாண நுண் காலநிலை வேறுபாட்டை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வுக்கு வட மாகாணத்தின் வேறுபட்ட நிலையங்களில் அளவீடு செய்யப்பட்ட வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு சராசரி நியம விலகல் மற்றும் நியமமாக்கப்பட்ட படிவு வீழ்ச்சி குறிகாட்டி முறைகளை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்ட முடிவுகள் புவியியல் தகவல் தொழிநுட்ப முறையைப் பயன்படுத்தி (தலைமுறை 10.1) பரவலாக்கல் படங்கள் பெறப்பட்டன. வடமாகாணத்தின் மேற்குப்பகுதி வெப்பநிலை சராசரியை விட 0.85$^{0}$C உயர்வாகவும் கிழக்குப்பகுதி வெப்பநிலை வடமாகாண சராசரியை விட 0.32 $^{0}$C குறைவாக காணப்படும் அதேவேளை தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்று காலத்தில் வடமாகாணம் முழுவதும் 0.75$^{0}$C வெப்பநிலை உயர்வாகக் காணப்படுகின்றது. கிழக்குப் பகுதி மழைவீழ்ச்சியானது மேற்குப்பகுதியை விட 160mm உயர்வாகக் காணப்படுகின்ற அதேவேளை வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்திலும் இரண்டாவது இடைப்பருவ காலத்திலும் வடமாகாணமானது மழைவீழ்ச்சியின் 88% இனைப் பெறுகின்றது. இத்தகைய நுண்காலநிலை வேறுபாடுகள் இடம் மற்றும் காலம் சார்ந்து காணப்படுவதால் அவை அவ்வப் பிரதேச வானிலை மற்றும் காலநிலையில் வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதால் பிரதேச அபிவிருத்தித் திட்டமிடலில் பல சவால்களைத் தோற்றுவிக்கின்றன.

**திறவுச் சொற்கள் :** நுண்காலநிலை, வெப்பநிலை, மழைவீழ்ச்சி, வடமாகாணம் மற்றும் பிரதேச அபிவிருத்தி

**அறிமுகம் (Introduction)**

காலநிலை தொடர்பான விடயங்கள் இன்று அனைத்து சமூகத்தினராலும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றன. 20 ஆம் நூற்றாண்டுக்கு முன்பான காலங்களில் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான விடயங்கள் அதனுடன் தொடர்புடையவர்களாலும் ஒரு குறிப்பிட்ட வகையினரால் மட்டுமே பேசப்பட்ட விடயமாகக் காணப்பட்டது. ஆனால் இன்று இணையத்தளப் பாவனை யாளர்களின் அதிகரிப்பு மற்றும் சமூக வலைத்தளங்களின் வளர்ச்சி போன்றன அனைத்துத் தரப்பு மக்களையும் வானிலை காலநிலை போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதற்குத் தூண்டியுள்ளன. இதனால் வானிலை, காலநிலை பற்றிய ஆய்வுகளும் அதிகரித்து வருகின்றன. இந்த அடிப்படையில் இவ்வாய்வு மாகாண நுண்காலநிலை வேறுபாடுகளை ஆராய்கின்றது.

வடமாகாணம் இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வேறான புவியியல் பண்புகளுடன் காணப்படுகின்றது (Balasundrampillai, 2014). வடமாகாணத்தின் மூன்று பக்கங்களிலும் காணப்படுகின்ற சமுத்திரப் பரப்புக்கள் (கிழக்கே வங்காளக் கடல், மேற்கே அரபிக் கடல், வடக்கே பாக்கு நீரிணை) பெரிய நீர்ப்பரப்புகள் ஆதலால் அவை வடமாகாணத்தின் வானிலை மற்றும் காலநிலையில் அதிகளவு செல்வாக்குச் செலுத்துகின்றன (Piratheeparajah, 2010). அதுபோல் வடமாகாணத்தில் உள்ள ஐந்து கடனீரேரிகளும் 1500 க்கு மேற்பட்ட பெரிய மற்றும் நடுத்தர குளங்களும், வட மாகாணத்தின் மொத்த நிலப்பரப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28% க்கு பரந்திருக்கின்ற காடுகளும் வட மாகாணத்தின் இடம் மற்றும் காலம் சார்ந்த வகையில் வானிலை மற்றும் காலநிலையைக் கட்டுப்படுத்துகின்றன. இதனால் வட மாகாணத்தின் நுண்காலநிலையில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனை ஆராய்வதன் மூலம் இப்பிரதேசத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வினைத்திறனுடனும் நிலைத்திருக்கக்கூடிய வகையிலும் மேற்கொள்ள முடியும். முதல்நிலைப் பொருளாதார நடவடிக்கைகளை (விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி) பிரதானமாகக் கொண்ட வடமாகாணத்தின் நுண்காலநிலை வேறுபாடுகள் பற்றிய இவ்வாய்வு இப்பிரதேசத்தின் எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவும் என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.

### ஆய்வின் நோக்கங்கள் (Objectives of the Research )

இவ்வாய்வானது வடமாகாணத்தின் நுண்காலநிலை வேறுபாடுகளைப் பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் ஆராய்கின்றது.

1. வடமாகாணத்தின் மாதாந்த வெப்பநிலை வேறுபாடுகளை இட மற்றும் காலரீதியாக ஆராய்தல்.
2. வடமாகாணத்தின் பருவ ரீதியான வெப்பநிலை வேறுபாடுகளை
   அ. வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காலம்
   ஆ. முதலாவது இடைப்பருவ காலம்
   இ. தென்மேற் பருவக் காற்றுக் காலம்
   ஈ. இரண்டாவது இடைப்பருவ காலம் என ஆராய்தல்.
3. வடமாகாண மழைவீழ்ச்சி வேறுபாடுகளை இட மற்றும் கால ரீதியாக அறிந்து கொள்ளல் என்ற நோக்கங்களுக்கு அமைவாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தரவுகளும் தரவுப் பகுப்பாய்வும் (Data and Methods)

வடக்கு மாகாண நுண்காலநிலை வேறுபாடுகள் என்னும் இவ்வாய்வுக்குப் பின்வரும் தரவுகள் பெறப்பட்டன. நாளாந்தச் சராசரி வெப்பநிலையானது திருநெல்வேலி, வவுனியா மற்றும் மன்னார் நிலையங்களில் இருந்தும் மாதச் சராசரி வெப்பநிலை தொடர்பான தரவுகள் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற நிலையங்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. வடமாகாணத்தின்ஆண்டுச் சராசரி வெப்பநிலைத் தரவுகள் குடத்தனை, மந்திகை ,வல்வெட்டித்துறை, அச்சுவேலி, திருநெல்வேலி, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், சுன்னாகம், புங்குடுதீவு, வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, பளை, பரந்தன், இரணைமடு, அக்கராயன்குளம், பூநகரி, வன்னேரிக்குளம், அம்பலப்பெருமாள் குளம், தண்ணீரூற்று, கணுக்கேணி, முல்லைத்தீவு, மாங்குளம், வவுனிக்குளம், பல்லவராயன்கட்டு, மன்னார், முருங்கன், நெடுங்கேணி, கனகராயன்குளம், ஓமந்தை, வெங்கலச்செட்டி குளம், ஈரற்பெரியகுளம், சேமமடு, தலைமன்னார், வவுனியா மற்றும் சிலாவத்துறை போன்ற இடங்களுக்கு பெறப்பட்டது. மேலும் மழைவீழ்ச்சி தொடர்பான தரவுகள் மேற்குறிப்பிட்ட நிலையங்களில் இருந்தே பெறப்பட்டது. இதனை விட மழைவீழ்ச்சித் தரவுகள் சில குளங்கள்ரீதியாக நீர்ப்பாசனத்திணைக்களத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது.

மழைவீழ்ச்சித் தரவுகளில் நாளாந்த மழைவீழ்ச்சித் தரவுகள், மாதாந்த மழைவீழ்ச்சித் தரவுகள் மற்றும் மழைநாட்கள் என்ற வகையில் பெறப்பட்டன. இதனைவிடக் காற்றின் வேகம், ஈரப்பதன், வளிமண்டல அமுக்கம் மற்றும் சூரியக் கதிர்வீச்சு அளவு போன்ற தரவுகள் வடமாகாணத்தின் திருநெல்வேலி, வவுனியா மற்றும் மன்னார் போன்ற இடங்களுக்கே காணப்படுகின்றன.

தரவுப் பகுப்பாய்வுகளுக்காக வானிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலைத் தரவுகள் விபரணப் புள்ளி விபரப் பகுப்பாய்வு முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக சராசரி நியம விலகல் முறை (Standard Deviation) மற்றும் நியமமாக்கப் பட்ட படிவுவீழ்ச்சி குறிகாட்டி (Standardized Precipitation Index - SPI) பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகக் கடந்த 35 வருட கால தரவுகள் சராசரி நியம விலகல் முறை மற்றும் நியம மாக்கப் பட்ட படிவுவீழ்ச்சி குறிகாட்டி மூலம் ஒவ்வொரு நிலையங்களுக்கும் கணிப் பிடப்பட்டுள்ளது. நியமமாக்கப்பட்ட படிவு வீழ்ச்சி குறிகாட்டி 03 மாதம், 06 மாதம், 09 மாதம் மற்றும் 12 மாத இடைவெளிகளுக்கு கணிப்பிடப்பட்டன. இடம்சார்ந்த வகையில் முடிவுகளைப் படமாக்குவதற்கே நியமமாக்கப் பட்ட படிவுவீழ்ச்சி குறிகாட்டி பெரிதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவான மாகாண மற்றும் மாவட்டச் சராசரி நியம விலகல் கணிப்பீடும் அவ்வப் பிரதேச சராசரி நியம விலகல் கணிப்பீடும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலமே ஒவ்வொரு பிரதேச நுண்காலநிலை வேறுபாடுகளும் கணிப்பிடப்பட்டன. கணிப்பிடப்பட்ட நியம விலகல் முடிவுகள் காலம் மற்றும் இடம் சார்ந்த போக்கின் அடிப்படையில் கணிப்பீடு செய்வதற்காக தனித்தனியான முறைகள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

சராசரி நியம விலகலின் அடிப்படையில் பெறப்பட்ட முடிவுகள் அட்டவணைகள் மற்றும் படங்கள் மூலம் காலரீதியான வேறுபாடுகளும் புவியியல் தகவல் தொழில்நுட்ப முறை (Geographical Information System) மூலம் வடமாகாண நுண்காலநிலை வேறுபாடுகள் இடம் சார்ந்த அடிப்படையில் படமாக்கப்பட்டன. இதற்காக மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை அளவிடப்பட்ட நிலையங்களில் அகல நெடுங்கோட்டுத் தரவுகள் கையடக்க பூகோள இடநிர்ணய முறை (Global Positioning System) மூலம் பெறப்பட்டு ஆதார வரைபடத்தில் குறிப்பிடப்பட்டு சராசரி நியம விலகல் முறையில் கணிப்பீடு செய்யப்பட்ட நுண்காலநிலை முடிவுகள் அவ்வவ் நிலையங்களுடன் இணைத்து டிஜிற்றல் முறையில் படமாக்கப்பட்டது. இதன் பின்னர் பரம்பல் அடிப்படை படத்தினைப் பெறுவதற்காக (Interpolation Map) புவியியல் தகவல் தொழிநுட்ப முறை Krigging முறை மூலம் பரவலாக்கல் படம் பெறப்பட்டு இடரீதியான நுண்காலநிலை வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறு வடமாகாண நுண்காலநிலை பற்றிய பகுப்பாய்வு மேற் கொள்ளப்பட்டது.

### ஆய்வின் முடிவுகள் (Result)

வடமாகாணத்தின் நுண்காலநிலை வேறுபாடுகளை இடம் மற்றும் காலம் சார்ந்த ரீதியில் அறிந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு பின்வரும் முடிவுகளைத் தன்னுள்ளே கொண்டுள்ளது.

### வெப்பநிலையின் இடம் மற்றும் காலம் சார்ந்த வேறுபாடுகள்
(Spatial and Temporal Variations of Temperature)

வடமாகாணத்தின் 1995 தொடக்கம் 2015 வரையான முப்பது ஆண்டுக்கான சராசரி வெப்பநிலை 28.4$^0$C ஆகும். எனினும் இவ்வெப்பநிலை இடம் மற்றும் காலரீதியான அடிப்படையில் வேறு பட்டுக் காணப்படுகின்றது. குறிப்பாக வடமாகாணத்தின் மேற்குப் பகுதியில் மாதாந்த மற்றும் ஆண்டுச் சராசரி வெப்பநிலையில் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றது. இதுபோன்று பருவ ரீதியாகவும் இந்த வெப்ப நிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றது. ஆண்டுச் சராசரி வெப்பநிலை ஒவ்வொரு பிரதேசத்திலும் வேறுபட்டுக் காணப் படுகின்றது. பின்வரும் அட்டவணை இதனைக் குறிப்பிடுகின்றது. (அட்டவணை - 01)

### மழைவீழ்ச்சியின் இடம் மற்றும் காலம் சார்ந்த வேறுபாடுகள்
( Spatial and Temporal Variations of Rainfall)

வடமாகாணத்தின் சராசரி மழைவீழ்ச்சி 1230 mm ஆயினும் நுண்காலநிலை அடிப் படையில் பிரதேசத்திற்குப் பிரதேசம், காலத்துக்குக் காலம் வேறுபட்ட அளவில் காணப்படுகின்றது. வட மாகாணத்தின் மேற்குப் பகுதிப் பிரதேசங்களுடன் ஒப்பிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 01: வடமாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களுக்கான ஆண்டுச் சராசரி வெப்பநிலை (1972 - 2016)

| நிலையங்கள் | ஆண்டுச்சராசரி வெப்பநிலை (செல்சியசில் ) | நிலையங்கள் | ஆண்டுச்சராசரி வெப்பநிலை (செல்சியசில் ) |
|---|---|---|---|
| அக்கராயன் குளம் | 27.5 | நயினாதீவு | 27.9 |
| அகத்தி முறிப்பு | 27.9 | நெடுங்கேணி | 28.0 |
| அம்பலப்பெருமாள் | 27.5 | பரந்தன் | 28.4 |
| சாவகச்சேரி | 27.6 | நாகபடுவான் | 29.0 |
| செட்டிக்குளம் | 28.1 | பாவற்குளம் | 27.9 |
| நெடுந்தீவு | 28.8 | பருத்தித்துறை | 28.1 |
| ஆனையிறவு | 28.6 | பூவரசங்குளம் | 28.4 |
| இரணைமடு | 27.6 | தண்ணிமுறிப்பு | 28 |
| இயக்கச்சி | 28.0 | வவுனியா | 28.2 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 27.6 | வவுனிக்குளம் | 28.3 |
| திருநெல்வேலி பண்ணை | 27.6 | வேப்பங்குளம் | 28.2 |
| கணுக்கேணி | 28.0 | முல்லைத்தீவு | 28.2 |
| கறுக்காய் குளம் | 28.9 | முருங்கன் | 28.8 |
| ஊர்காவற்றுறை | 29.3 | முத்தையன்கட்டு | 28.7 |
| கிளிநொச்சி | 28.1 | மதவாச்சி | 28.3 |
| குடத்தனை | 27.9 | மடுப்பூங்கா | 28.3 |
| மாங்குளம் | 28.4 | மன்னார் | 29.1 |
| முல்லைத்தீவு | 28.5 | முருங்கன் | 28.8 |
| முத்தையன்கட்டு | 27.7 | மிருசுவில் | 28.3 |

Source : Department of Meteorology, Colombo, 2016




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை - 2 : வடமாகாணத்தின் மாவட்டச் சராசரி வெப்பநிலைகள் (1972 -2016)


| மாவட்டங்கள் | ஆண்டுச்சராசரி வெப்பநிலை செல்சியசில் | வருட வெப்பவீச்சு செல்சியசில் | நாளாந்த வெப்பவீச்சு செல்சியசில் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 27.8 | 1.5 - 2.3 | 3.5-6.4 |
| கிளிநொச்சி | 27.7 | 1.7 - 3.1 | 3.8-6.2 |
| மன்னார் | 28.2 | 2.9 - 4.2 | 3.9-6.7 |
| முல்லைத்தீவு | 27.9 | 1.4 - 3.7 | 3.8-6.3 |
| வவுனியா | 27.6 | 1.2 - 3.6 | 3.8-6.3 |


Source : Department of Meteorology, Colombo, 2016


**Figure1.1. Annual Average Temperature of Selected Places in Northern Province of Sri Lanka**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போது கிழக்குப் பகுதி பிரதேசங்கள் சற்றுக் கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் 170 mm என்ற அளவில் மழைவீழ்ச்சி வேறுபாடு இடத்துக்கு இடம் காணப்படுகின்றது. முதலாவது இடைப் பருவ காலத்தில் பிரதேசங்களுக்கு இடையிலான வேறுபாடு 45 mm ஆகவும் இரண்டாவது இடைப்பருவ காலத்தில் 85 mm ஆகவும் காணப்படுகின்றது. இத்தகைய வேறுபாடு அவ்வப் பிரதேச விவசாய மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். நுண்காலநிலை அடிப்படையில் காணப்படும் இத்தகைய வேறுபாடு அவ்வப் பிரதேசம் சார்ந்துள்ள நீர்வள முகாமைத்துவத்திலும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.


**அட்டவணை - 3 : வடமாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட நிலையங்களின் வருடாந்த மழைவீழ்ச்சி (1972 -2016)**


| நிலையங்கள் | ஆண்டு மழைவீழ்ச்சி (மில்லி மீற்றரில்) | நிலையங்கள் | ஆண்டு மழைவீழ்ச்சி (மில்லி மீற்றரில்) |
|---|---|---|---|
| அக்கராயன் குளம் | 1110 | நயினாதீவு | 1105 |
| அகத்தி முறிப்பு | 1125 | நெடுங்கேணி | 1208 |
| அம்பலப்பெருமாள் | 1130 | பரந்தன் | 1112 |
| சாவகச்சேரி | 1090 | நாகபடுவான் (கரியாலை) | 1020 |
| செட்டிக்குளம் | 1210 | பாவற்குளம் | 1210 |
| நெடுந்தீவு | 840 | பருத்தித்துறை | 1200 |
| ஆனையிறவு | 922 | பூவரசங்குளம் | 1215 |
| இரணைமடு | 1210 | தண்ணிமுறிப்பு | 1183 |
| இயக்கச்சி | 989 | வவுனியா | 1217 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 1128 | வவுனிக்குளம் | 1194 |
| திருநெல்வேலி பண்ணை | 1240 | வேப்பங்குளம் | 1215 |
| காங்கேசன்துறை | 1210 | குடத்தனை | 1200 |
| கணுக்கேணி | 1200 | மடுப்பூங்கா | 980 |
| கறுக்காய் குளம் | 992 | மாங்குளம் | 1089 |
| பளை | 925 | மன்னார் | 975 |
| கிளிநொச்சி | 1015 | மிருசுவில் | 1150 |
| முல்லைத்தீவு | 1120 | முருங்கன் | 928 |
| முத்தையன்கட்டு | 1110 | உருத்திரபுரம் | 1160 |


Source : Department of Meteorology, Colombo, 2016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Source: Department of Meteorology, Colombo, 2016




Source: Department of Meteorology, Colombo, 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை (Conclusion)

வடமாகாணத்தின் நுண்காலநிலையைப் பொறுத்தவரை வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சியில் இடம்சார்ந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன. வடமாகாணத்தின் மழைவீழ்ச்சியைப் பொறுத்தவரை கிழக்குக் கரை மற்றும் மத்தியநிலம் சார்ந்து சற்று அதிகமாகவும் மேற்கே ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவும் காணப்படுகின்றது. வட மகாகாண சராசரி மழை நாட்கள் 46 ஆகும். மழை நாட்களைப் பொறுத்தவரை பிரதேசம் சார்ந்து வேறுபாடுகள் காணப்பட்டாலும் தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு மற்றும் முத்தையன்கட்டுப் பகுதியில் வட மாகாணச் சராசரி நாளுடன் ஒப்பிடும் போது 14 நாட்கள் கூடுதலாகவும், முருங்கன், மன்னார், கறுக்கய்த் தீவு, பல்லவராயன்கட்டு சார்ந்து சராசரி 11 நாட்கள் குறைவாகவும் காணப்படுகின்றது.

வெப்பநிலையைப் பொறுத்து மேற்குப் பகுதி சார்ந்து வெப்பநிலை 0.85°C அதிகமாகவும், கிழக்குப் பகுதியில் 0.46°C காணப்படுகின்றது. எனினும் தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் வடமாகாணம் முழுவதும் வெப்ப நிலைச் சராசரி ஏனைய பருவங்களை விட 0.62 °C உயர்வாகவும், வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் வெப்பநிலை 0.39°C குறைவாகவும் காணப்படுகின்றது. இத்தகைய வேறுபாடுகள் இடம் சார்ந்த அடிப்படையில் சராசரியில் 2.0° C இனை விட குறைவாகவே காணப்படுகின்றன. எனினும் நுண்காலநிலை நோக்கில் இது சற்று உயர்வானது. பிரதேசங்களுக்கு இடையிலான இத்தகைய வேறுபாடுகள் அவ்வப் பிரதேச நுண்காலநிலையில் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும்.

வடமாகாணம் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வேறான புவியியல் பண்பு கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றது. வடமாகாணத்தின் இடம்சார் தன்மைகளுடன் ஒப்பிடும்போது அமையப்பெற்றுள்ளவானிலை அவதான நிலையங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். மழைவீழ்ச்சி அளவீட்டு அவதான நிலையங்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே அமைவு பெற்றுள்ளன. இதனைவிட சமுத்திர வளி அவதானிப்பு நிலையங்கள் எவையும் அமைவு பெறவில்லை. எனவே இதன்மூலம் மிகச்சிறிய மட்டத்திலான நுண்காலநிலை வேறுபாடுகளை அவற்றின் அனைத்து மூலக்கூறுகளையும் உள்ளடக்கி அறிய முடியவில்லை.

நுண்காலநிலை பற்றிய ஆய்வுகள் அவ்வவ் பிரதேச அனைத்து வகை அபிவிருத்தி திட்டங்களுக்கும் அடிப்படையானவையாகும். அந்தவகையில் மிகக் கூடிய அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டிய தேவையுள்ள வடமாகாணத்தின் நுண்கால நிலை பற்றிய இவ்வாய்வு எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு இம் சார்ந்து, நுண்காலநிலை வேறுபாடுகளை விளக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. காலநிலைப் போக்கை அதன் வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளாத அபிவிருத்தித் திட்டங்கள் நிலைத்து நின்று பயனைத் தராது என்பது உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள் (References)


1. Balasundarampillai, P., 2014 ''Central Place in the Northern Province'', Northern Provincial Council Jaffna.
2. Piratheeparajah, N., 2010, ''Increasing Temperature in the Jaffna District of Sri Lanka'', Paper presented at 3rd National Geographic Conference, University of Ruhunu, Matara.
3. Reports: Data and Statements of National Statistical Department, Colombo, Sri Lanka, 1972 - 2014.
4. Reports: Data and Statements of Department of Meteorology, 1972 - 2014, Department of Meteorology, Colombo.
5. Statistical Hand Books, 1990 - 2013, North Eastern Provincial Council & Northern Provincial Council, Northern Province, Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்காப்பியமும் பாணினீயமும் எழுத்தியல் பற்றிய ஓர் ஒப்பியல் ஆய்வு

ச. பத்மநாபன்

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியப் பண்பாட்டு மரவில் தமிழ் மொழியும் சம்ஸ்கிருதமொழியும் தனித்துவம் மிக்க செவ்வியல் மரபுகளுடன் விளங்குகின்றன. இந்நிலையில் தமிழ்மொழி தென்மொழி என்றும் அழைக்கப்படும் தனித்துவத்துடன் விளங்குகின்றன. இம்மரபில் இவ்விரு மொழிகளுக்குமான மொழியியல் அந்தஸ்தில் திராவிட மொழிக் குடும்பத்தினையும், ஆரிய மொழிக் குடும்பத்தினையும் மூலத் தன்மையாகக் கொண்டமையை உணர முடிகின்றது. இம்மரபில் இந்தோ - ஆரியமரபில் சம்ஸ்கிருதமொழியின் மரபு மேலோங்கிச் செல்வதை மொழியியற் பார்வையில் நோக்க முடிகின்றது. இவ்வகையில் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் என்பது தொல்காப்பியம், சம்ஸ்கிருத மொழியின் முதல் இலக்கண நூல் பாணினீயம் என்பதும் எழுத்தியல் நிலையில் எத்தகைய கருத்துக்களைத் தம்முட் கையாண்டுள்ளன என்பதையும், இவ்விரு இலக்கண நூல்களும் அவ்வவ் மொழிக்குரிய தனித்துவத்துடன் விளங்கும் மேன்மை உயர் நிலையின் ஓர் ஒத்தநோக்குடைய சிந்தனையாக அமைவதனை நோக்க முடிகின்றது. மொழி என்றும் நிலையில் பேசப்படும் தன்மையும், ஒலியியல் முறையிலேயே அவ்வெழுத்துக்கள் முக்கியத்துவம் பெறுவதனையும் காண முடிகின்றது.

**திறவுச் சொல் :-** சூத்திரம், அக்ஷரம், லிபி, மாத்திரை, பாஷா

## அறிமுகம்

தமிழ் மொழியின் இலக்கணத்தின் முதனூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். இந்நூலின் அசிரியர் தொல்காப்பியர் என்பர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. சம்ஸ்கிருத மொழியின் இலக்கணத்தின் முதனூலாக விளங்குவது பாணினீயம் ஆகும். இந்நூலின் ஆசிரியர் பாணினி ஆவார். இந்நூல் எட்டு அத்தியாயங்களைக் கொண்டமைந்தமையால் அஷ்டாத்யாயீ என்றும் பாணினியால் இயற்றப்பட்டதால் பாணினீயம் என்றும் அழைக்கப்படும். இந் நூலில் எழுத்து, சொல், பற்றி மட்டுமே கூறப்படுகின்றன. பொருள், அணி, யாப்பு என்பன தனித்தனியாக இடம் பெறுவதும் சுட்டிக்காட்டத்தக்கது. தமிழ் மொழி இலக்கண மரபு மூவியல்புகளை உடையது என்பதும், சம்ஸ்கிருத மொழி இலக்கண இயல்பு, ஐந்து இலக்கண மரபுகளை உடையது என்பதும் மரபாகும். இவ்விரு மொழிகளுக்குமுரிய இலக்கண நூல்களில் எழுத்தியல் பற்றிப் பேசும் விடயங்கள் ஓர் ஒப்பியல் நோக்குடையதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## தொல்காப்பிய எழுத்துக்கள்

தமிழின் மொழி வடிவத்தில் ஒலி வடிவமான எழுத்துக்களின் தோற்றங்கள் பேசப்படுகின்றன. எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. அதன் வழி எழுத்தி யல் முதற்சூத்திரம்,

**எழுத்தெனப்படுப**
**அகரமுதல**
**னகர விறுவாய் முப்பஃதென்ப**
**சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடேய (தொ. எழுத்து - 01)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கூறுகின்றது. அவற்றுள் சார்ந்து வருபவை எவை என்பன?

**அவை தாங்**

**குற்றிய லிகரங் குற்றிய லுகர**

**மாய்தமென்ற**

**முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன**

**(தொ. எழுத்து - 02)**

என்று விளக்குகையில் குற்றிலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவும் முப்ப தெழுத்தோடு சேர்ந்து வரும் வழக்குடையதாக சுட்டுகின்றது.

**உயிரெழுத்து**

உயிரெழுத்துக்கள் அ முதல் ஔ வரையாக பன்னிரெண்டு எழுத்துக்கள் உயிர் எனப்படும் (தொ. எழுத்து - 03 - 08)மெய்யெழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் முதல் ன ஈறாக முப்பது ஆகும். (தொ. எழுத்து - 09)

**உயிர்ப்பாகுபாடு**

உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டும் குற்றெழுத்து, நெட்டெழுத்து என வகுக்கப்ப டுகின்றது. (தொ. எழுத்து - 03 ,04) அவற்றின் வழி குற்றெழுத்துக்களாக / அ, இ, உ, எ, ஒ எனும் ஐந்து எழுத்துக்களும் குற்றெழுத்துக்கள் (குறில் எழுத்துக்களில்) எனப்படுகின்றன. (தொ. எழுத்து - 03 )ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு எழுத்துக் களும் நெட்டெழுத்து எனப்படுகின்றன (தொ. எழுத்து - 04). ஒலி அளவுகள் இவ்வெழுத்துக்களில் ஒலி அளவு டைய மாத்திரை ஆகும். மாத்திரை என்பது,

**கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை**

**நுண்ணுதி னுணர்ந்தோர் கண்டவாறே (தொ. எழுத்து - 07)**

எனப்படுகிறது.

இந்நிலையில் குற்றுயிர்கள் ஒரு மாத்திரை அளவையும் (தொ. எழுத்து - 03)

பெறும் நெட்டுயிர்கள் இரண்டு மாத்திரை அளவையும்(தொ. எழுத்து - 04)

பெறுகின்றன. இவை அளபெடையேறும் தன்மையில் மூன்று அல்லது நான்கு மாத்திரை அளவையும்(தொ. எழுத்து - 05)

பெறுகின்றன.

**உயிர் மெய்யெழுத்துக்கள்**

உயிரெழுத்து பன்னிரெண்டும், மெய் ழுெத்து பதினெட்டுமே முப்பது உயிர் மெய் எழுத்துக்கள் என்பதன் வழி உயிர் எழுத்துக் கள் பன்னிரெண்டை நோக்கினோம். மெய்யெழுத் துக்கள் பதினெட்டு என்பனவற்றையும் அவற்றின் பிறப்பு, பாகுபாடு, மாத்திரை அளவு என்பனவற்றையும் நோக்குவோம்.

**னகார விறுவாய்ப்**

**பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப** (தொ. எழுத்து - 09)

அவற்றுள் மெய்யெழுத்துக்கள் வல்லெ ழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்றாக வகுக்கப்படுகின்றன. அதன் வழி

**வல்லெழுத் தென்ப க ச ட த ப ற** (தொ. எழுத்து - 19) என்றும்

**மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன** (தொ. எழுத்து - 20) என்றும்

**இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள** (தொ. எழுத்து - 21) என்றும் கொள்ளப்படுகின்றது.

**ஒலியளவு**

மெய்யெழுத்திற்கான ஒலியளவு அரை மாத்திரை ஆகும் என்பதனை,

**மெய்யினளவே யரையென மொழிப** (தொ. எழுத்து - 11) எனக் கூறுகின்றது. எனினும், உயிர் மெய்யெழுத்து வரும் போது அவை உயிர் கொள்ளும் மாத்திரை அளவினையே கொள்ளுகின்றன. அதனை,

**மெய்யோ டியையினு முயிரிய றிரியா** (தொ. எழுத்து - 10 எனக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுத்துக்களின் பிறப்பு**

தொல்காப்பியர் காற்றானது எங்கிருந்து எவ்வாறு தோன்றி எழுத்துக்களைத் தோற்று விக்கின்றது என்பதனை மிகத் தெளிவுறக் கூறுகின்றார். இந்நிலையில்,

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**

**தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலை இப்**

**பல்லு மிதழு நாவு மூக்கு**

**மண்ணமு முளப்பட வெண்முறை நிலையி**

**னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி**

**யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்**

**பிறப்பி னாக்கம் வேறுவே றியல**

**திறப்படத் தெரியுங் காட்சி யான**(தொ. எழுத்து - 83) எனக் கூறுகின்றது.

இந்நிலையில் இதன் பொருளாக, தமி ழெழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றவையாங் கூறுமிடத்து கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதானனென்றும் காற்று, தலையின் கண்ணும் மிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும், நாவும், மூக்கும், அண்ணமுமன்ற ஐந்துடனே அக்காற்று நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங்கூட எட்டாகிய முறைமையை தன்மையோடு கூடி உறுப்புக்களோடு ஒன்றுற்று அமைய அவ்வெழுத்துக்களது தோற்றரவு வேறு வேறு புலப்பட வழங்குதலையுடைய, அதனை அறிவான் ஆராய்ந்து அவற்றின் வழியிலே மனம்பட அப்பிறப்பு வேறுபாடுகளை யெல்லாம் கூறுபட விளங்கும் என்றவாறு. (தொ. எழுத்து - பக். 100,101)

என நச்சினார்க்கினியார் உரையாசிரியர் தெளிவுபடுஸதகின்றார்.

தொப்புழின் வழி தோன்றிய உதான வாயுவே ஒலியடைய எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றது. என்பதனூடாக உயிர் மெய் எழுத்துக்கள் எங்ஙனம் தேன்றுகின்றன. என்பதனை நோக்குவோம்.

**உயிர் எழுத்தின் பிறப்பு**

**அவ்வழி**

**பன்னீ ருயிருந் தந்நிலை திரியா**

**மிடற்றுப் பிறந்த வளியி னிசைச்கும்**(தொ. எழுத்து - 84)

எனப் பொதுவாகக் கூறும் தன்மையிலிருந்து அ, ஆ(தொ. எழுத்து - 85), இ, ஈ, எ, ஏ, ஐ(தொ. எழுத்து - 86), உ, ஊ, ஒ, ஓ, ஔ(தொ. எழுத்து - 87) எனும் எழுத்துக்கள் முறையே அங்காந்து கூறும் முயற்சி அண்பல்லும் நுனிநாவிளிம்பும் உறவும் இதழ் குவித்துக் கூறவும் பிறந்தனவாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாறு உயிர் எழுத்துக் களின் பிறப்பு கூறப்படுகின்றது.

**மெய்யெழுத்தின் பிறப்பு**

க முதல் ன வரையிலான மெய்யெழுத் துக்களுள்;

**க, ங - முதல் நா முதல் அண்ணம்**

(தொ. எழுத்து - 89)

**ச, ஞ - இடை நா இடை அண்ணம்**

(தொ. எழுத்து - 90)

**ட, ண - நுனி நா நுனி அண்ணம்**

(தொ. எழுத்து - 91)

**த, ந - அண்ணத்தைச் சேர்ந்த பல்லின தடியாகிய இடத்தில் நாவினது நுனி பரந்து சென்று தன் வடிவு மிகவும் உறும்படி சேரல்**

(தொ. எழுத்து - 93)

**ற, ன - நானுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்டுதல்**

(தொ. எழுத்து - 94)

**ர, ழ - நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்டுதல்**

(தொ. எழுத்து - 95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ல, ள - நா மேனோக்கிச் சென்று**
**தன் விளிம்பு**
**அண்பல்லினடியில்**
**உற அவ்விடத்து**

**அவ்வண்ணத்தை அந்நாத்**
**நீண்டலவும் அவ்வண்ணத்தை**
**நாதடவ 'ள' வும் தோன்றும்**

(தொ. எழுத்து - 96)

**ப, ம - மேலிதழும் கீழிதழும் தம்மிற் கூடல்**

(தொ. எழுத்து - 97)

**வ - பல்லும் கீழிதழும்**

(தொ. எழுத்து - 98)

**ய - அண்ணத்தை அணைத்து வருட** (தொ. எழுத்து - 99)

இவ்வெழுத்துக்கள் தோன்றும் விதியை தொல்காப்பியம் எழுத்ததிகார பிறப்பியல் தெளிவுபடுத்தும். அதேவேளை மெல்லெழுத்துக்கள் ஆறும் (ங, ஞ, ண, ந, ம, ன) தமது பிறப்பிற்கு மூக்கின் வளியும் உண்டென்று(தொ. எழுத்து - 100) தெளிவுபடுத்துவது குறிப்பிடத்தக்கது.

**ஆய்தம் - ஃ நெஞ்சு வளியால் பிறந்தது**

(தொ. எழுத்து - 101)என்பர்.

மேலும் வேதங்களின் ஒலியின் தோற்றுவாய் பற்றி தாம் கூறாது நின்றதையும்(தொ. எழுத்து - 102)

தொல்காப்பியர் தெளிவுபடுத்துகின்றார்.

இவ்வாறாக தமிழ் எழுத்துக்களின் ஒலிவடிவம் தோன்றுமாற்றைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துவது மனம் கொள்ளத்தக்கது.

**பாணினீய எழுத்துக்கள்**

சம்ஸ்கிருத இலக்கணமரபில் பாணினீயின் மாஹேஸ்வர சூத்திரங்களே சம்ஸ்கிருத எழுத்துக்கள் பற்றிய மிகச் சாரமான விடயமாகும். இம் மாஹேஸ்வர சூத்திரம் நடராஜப்பெருமான் நடனமாடும் வேளையில் தமது வலக்கையில் ஏந்திய உடுக்கை பதினான்கு தடைவைகள் ஒலித்தார். அவ்வொலியிருந்து பிறந்தவையே பதினான்கு சூத்திரங்கள் ஆகும்.

**(மாஹேஸ்வர சூத்திரங்கள் நிருத்தா**
**வசானே நடராஜராஜோ நநாடக்காம்**
**நவபஞ் சவாரம் உத்தர்து காம**
**சனகாதிசித்தைர் விமர்சயந்தி ஏதத்**
**சிவசூத்ரஜாலம்)**

அவை சிவனிடமிருந்து பிறந்தமை காரணமாக மாஹேஸ்வர சூத்திரங்கள் எனப் படுகின்றன.

பாணினீய சிக்ஷா உடலிலிருந்து எழும் காற்று மார்பு, கழுத்து, தலை இவற்றின் வழியாகப் பல்வேறு இடங்களில் மாறுபட்டு வாயிற்சென்று அங்குள்ள நாக்கு, அண்ணம், பல், உதடு இவற்றால் மாறுபட்டும் மூக்கிற் சென்றும் வெளி வருகின்றது. எனச் சுட்டுகின்றது. இக்கருத்து தொல்காப்பியக் கருத்துக்கு ஒத்ததன்மையது.

**எழுத்துக்களின் வகை**

சம்ஸ்கிருத எழுத்துக்களும் உயிர், மெய் என்றேபாகுபடுத்தப்படுகின்றன. அவை ஸ்வரம் உன உயிர் எழுத்தையும், வ்யஞ்ஜனம் என மெய்யெழுத்தையும் சுட்டுகின்றன. இலக்கண சூத்திர அடிப்படையில் உயிர் எழுத்துக்கள் 'அச்' என்றும், மெய்யெழுத்துக்கள் 'ஹல்' என்றும் அழைக்கப்படுகின்றன. (வடமொழி வரலாறு ப, 30)

உயிர் எழுத்துக்கள் வாய் முழுவதும் திறக்க உருவாகும் எழுத்துக்கள் என்றும், மெய் யெழுத்துக்கள் வாய் முழுவதும் மூடப்படவோ சிறிது மூடப்பட்டு சிறிது திறக்கப்படவோ உருவாகும் எழுத்துக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன(வடமொழி வரலாறு ப, 32, 33)

. இதற்கு மேலாக பிற உதவியின்றி ஒலிப்பது 'ஸ்வரம்' என்றும், பிற உதவியால் வெளிப்படுத்தப்படுவது 'வ்யஞ்ஜனம்' என்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது (வடமொழி வரலாறு ப, 32 - 33)

**உயிர் எழுத்துக்கள்**

சம்ஸ்கிருத மொழியில் உயிர் எழுத்துக்கள் பதினான்கு ஆகும். அதன் வழி உயிர் எழுத்துக்கள் தனியுயிர், சந்தியுயிர், மெய்யுயிர் என மூன்று வகைப்படும்(வடமொழி வரலாறு ப, 33 -34) இவை குறில், நெடில் என இருவகைப்படும் (வடமொழி வரலாறு ப, 34)

உயிர் எழுத்துக்களுள் 9 உயிர்களே முக்கியத்துவமுடையன. அவை பற்றியே மாஹேஸ்வர சூத்திரம் உணர்த்துகின்றது (மாஹஸ்வர சூத்திரம் 'அச்'). இவ்வொன்பது எழுத்துக்களும் நாசிகத்தோடு இணையும் போது 18 வகையான வடிவம் பெறுவதாகப் பாணிணி சுட்டுகின்றார் (பாணினீ சூத்திரம் - 1.1.8).

இவற்றுள் குற்றுயிர்களாக அ, (a), இ, (i), உ, (u), எ (e), ஒ (o), ஔ (au) என்பன சுட்டப்படுகின்றன.

இவை இயற்கையுயிர்கள் (Natural vowels) எனப்படுகின்றன(வடமொழி வரலாறு ப, 35)

நெட்டுயிர்களாக ஆ (ã), ஈ (), ஊ (ú),ஏ (e), ஓ (õ) என்பன சுட்டப்படுகின்றன.

இவற்றின் வழி உயிர்கள் பிறக்கும் இடங்களாகச் சுட்டுகையில், பிராதிசாக்யத்தில்

**அ, ஆ** - கழுத்தினும்

**இ, ஈ, ஏ, ஐ** - இடையண்ணம்
இடைநாவும் நெருங்குமிடம்

**உ, ஊ, ஓ, ஔ** - குவிந்த இதழ்

எனும் இடங்களில் எனச் சுட்டப்படுகின்றன (வடமொழி வரலாறு ப, 38)

பாணிணீய சிகைஷயில் பிறப்பிடங்களாக

**ஏ, ஐ** - கண்டதாலு

**ஓ, ஔ** - கண்டடோஷ்டம்

எனவும் சுட்டப்படுகின்றது (வடமொழி வரலாறு ப, 38).

**உயிர் பாகுபாடு**

சம்ஸ்கிருத மொழியில் உயிர் எழுத்துக்கள் தனியுனிர், சந்தியுயிர், மெய்யுயிர் எனக் கண்டோம். இலக்கணப்பாகுபாட்டில் அவற்றைச் சாதாரண உயிர், குணஉயிர், விருத்தியுயிர் எனப் பாகுபடுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒலியளவுகள்**

இலக்கணப் பாகுபாட்டில் கண்ணிமைப் பொழுது அல்லது கைநொடிப்பொழுதையே மாத்திரை அளவென்பர். இம்மாத்திரை அளவே ஒலிக்கான அளவு. இதில் சாதாரண உயிர்களுக்கு ஒரு மாத்திரையும் நெட்டுயிர்களுக்கு இரண்டு மாத்திரையும் குறிக்கப்படுகின்றது. 'ப்லுதம்' எனும் நிலையில் 3 அல்லது 4 மாத்திரை அளவைத் தூரத்தில் உள்ளோரைக் கூப்பிடுகையில் ஏற்படும் என்பர்(வடமொழி வரலாறு ப, 39)

**மெய்யெழுத்து**

சம்ஸ்கிருத மொழியில் மெய்யெழுத்துக்கள் 'ஹல்' எனச் சுட்டப்படுகின்றன. அதன் வழி மெய்யெழுத்துக்கள் 33 ஆகும். அவை பிறக்கும் இடம்கொண்டு பாகுபாடு செய்வது மரபு எனினும் அவற்றை ஐந்து வகையாகவும் வகைப்படுத்தி இலக்கண நூலில் கூறுவார்(வடமொழி வரலாறு ப, 39). இதற்கு ஏற்ப பாணிணீசூத்திரம் தெளிவுபடுத்துகின்றது (பாணினீ சூத்திரம் 1.1.9). இப் பாணினிசூத்திர உரையாசிரியர் சுட்டுகையில் உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு தோன்றின என்பதனை சாரப்படக் கூறுவர். அச்சாரத்தின் விபரத்தினை, கீழ்காணும் அட்டவணை மூலம் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் (அட்டவணை 1 - லகுசித்தாந்த கௌமுதீ - ப. 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## * वर्णोद्भवस्थानकोष्ठकम्—

| वर्णाः | अ क ख ग घ ङ ह : | इ च छ ज झ ञ य श | ऋ ट ठ ड ढ ण र ष | ऌ त थ द ध न ल स | उ प फ ब भ म ᳵप ᳶफ | ञ म ङ ण न ं | ए ऐ | ओ औ | व | ᳲक ᳲख |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| स्थानानि | कण्ठः | तालु | मूर्धा | दन्ताः | ओष्ठौ | नासिका | कं·ता· | कं·ओ· | दं·ओ· | जि·मू· |

அட்டவணை - 2

## * आभ्यन्तरबाह्यप्रयत्नज्ञानार्थकं कोष्ठकम्—

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| आभ्यन्तर-प्रयत्नाः | स्पृष्टाः | | | | | ईषत्स्पृष्टाः | ईषद्विवृताः | | विवृताः | संवृताः |
| संज्ञाः | स्पर्शाः | | | | | अन्तःस्थाः | ऊष्माणः | | स्वराः | |
| वर्णाः | क च ट त प | ख छ ठ थ फ | ग ज ड द ब | ङ ञ ण न म | घ झ ढ ध भ | य व र ल | श ष स | ह | अ इ उ ऋ ऌ ए ओ ऐ औ | ह्रस्वोऽकारःप्रयोगे |
| बाह्यप्रयत्नाः | अ·प्रा·म·प्रा· विवाराः श्वासाः अघोषाः | | अल्पप्राणाः संवाराः नादाः घोषाः | | म· प्रा· संवाराः नादाः घोषाः | अ·प्रा· संवाराः नादाः घोषाः | म· प्रा· विवाराः श्वासाः अघोषाः | म· सं· ना· घो· | उदातानुदात्तस्व-रिताः | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒப்பீடு**

பாணிணீ, தொல்காப்பியம் எனும் இரு இலக்கணங்களையும் ஒப்புநோக்குகையில் இவை இரண்டும் எழுத்துக்களை ஒலியின் வடிவமாகவே கொள்ளுகின்றன. ஒலியின் அளவியல் முறை மாத்திரை அளவேயாகும். உயிர்எழுத்து சம்ஸ்கிருதத்தில்14 உம், தமிழில்12 உம் கொள்ளப்படுகின்றன. எனினும் எழுத்தியல் முறையில் எழுத்துக்கள் வேறுபடுகின்றன. மெய்யெழுத்துக்கள் தமிழ்மொழியில் 18 இருக்க இன் சம்ஸ்கிருத்தில் 33 ஆகின்றன. அவை பல்வேறு ஒலியழுத்தத் திறன்களைக் கொண்டு விளங்குகின்றமை பாணிணீ மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுவது மனம் கொள்ளத்தக்கது. ஒலியின் பிறப்பிடம் பற்றி பாணிணீ ஆசிரியர் தொல்காப்பிய ஆசிரியர் ஆகிய இருவருக்குமிடையில் ஒத்த தன்மைகள் காணப்படுவது மனம் கொள்ளத்தக்கது. ஒலி வடிவ எழுத்துக்களின் மாறுபாடுகள் சம்ஸ்கிருத மொழியில் மிக நுட்பமாக பேசப்படுவதால் அவை ஒன்று சேர்கின்ற சந்தர்ப்பங்களில் ஒலிகளுக்கான மோதல்களோ தனித்துவம் மிக்கனவாக அமைகின்றன. (அட்டவணை 2 - லகுசித்தாந்த கௌமுதீ - ப. 19)

**நிறைவுரை**

பாணிணீ கி. மு 4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும், தொல்காப்பியம் கி. மு 2 ஆம் நூற்றாண்டைச்சார்ந்ததாகவும் கொள்ளப்படும் முதனிலை இலக்கண நூல்கள் ஆகும். இவை ஒலி நிலையிலேயே எழுத்துக்களை அறிமுகம் செய்கின்றன. அவ்வொலிகளின் பிறப்பிடம், வடிவம் கொடுக்க முடியாத ஒலி வடிவம், தனித்துவம் மிக்க ஒலிவடிவம் எனத் தற்காலப் பாகுபாட்டு வடிவங்களிலிருந்து தம்மை மாறுபடுத்தி அடையாளப்படுத்தி நிற்பதனையும் கட்டுக்கோப்புடைய இலக்கண நூல்கள் ஒன்றுபட்ட சிந்தனையில் எழுத்துக்களின் தோற்றுவார்களைக் கூறி நிற்பதனையும் அவை ஒவ்வொரு மொழிக்குமுரிய தனித்துவமிக்க மொழியியல் சார் தனித்துவமாகவும் அம்மொழிக்குரிய சீரிய சிந்தனைகளின் கட்டமைக்கப்பட்ட இலக்கண வடிவமாகவும் காண முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

**மூலநூல்கள்**

1. **சித்தாந்த கௌமுதீ, (1927),**

   பட்டோஜி தீக்ஷிதர் உரையுடன் பாலமனோகரமா, சென்னை பாகம் - I

2. **லகு சித்தாந்த கௌமுதீ, (1997),**

   வரதாச்சாரியார், கீதாபிரஸ், கொரக்பூர்

3. **தொல்காப்பியம், (1952),**

   எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியார் உரை, கணேசையர் பதிப்பு, ஈழ கேசரி பதிப்பகம் சுன்னாகம்.

**ஏனையவை**

சுப்பிரமணிய சாஸ்திரி, P. S, (1950) வடமொழி வரலாறு, அண்ணாமலை நகர், அண்ணாமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நோக்கில்
# இந்துப் பண்பாட்டு மரபில் அறுவைச் சிகிச்சை முறைகள்

ச. முகுந்தன்

**ஆய்வுச்சுருக்கம்**

இந்து மருத்துவவியலானது ஆயுர் வேதம், சித்தமருத்துவம் என இருபெருஞ் செல்நெறிகளினூடாக வளர்ச்சி பெற்ற அறிவுப்புலமாகும். ஆயுர்வேதமானது அதர்வவேதத்தின் கிளையாகவும் உபவேதங்களில் ஒன்றாகவும் மேற்கிளம்பி ஆத்திரேயர் மரபு, தன்வந்திரிமரபு என இரண்டு பிரதானமான சிந்தனைப் பள்ளிகளினூடாக வளர்ச்சி பெற்றது. நிலவியல் ரீதியாக இது வடஇந்தியாவை மையப்படுத்தித் தோற்றம் பெற்றதாகக் திகழ்கின்றது.

தென்நாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் சித்தர்களால் வெளிப்படுத்தப்பட்ட மருத்துவப்பனுவல்களை மூலங்களாகக் கொண்டு சித்தவைத்திய மரபு வளர்ச்சி பெற்றது. எவ்வாறாயினும் பழந்தமிழ் இலக்கியங்களினூடாகவும் பல்லவ, சோழ அரசர்களின் சாசனச்சான்றுகளினூடாகவும் மருத்துவக்கலை பற்றி பல்வேறு தகவல்களை அறியமுடிகிறது. இந்து மருத்துவவியலின் முக்கிய கிளைப்புலமாக அறுவைச்சிகிச்சையியலைக் குறிப்பிடலாம். அறுவைச்சிகிச்சையியல் பற்றிச் சிறப்பாக அறிய உதவும் காலத்தால் முற்பட்ட பனுவலாக சுஸ்ருதசம்ஹிதை விளங்குகிறது. இது தன்வந்திரி மரபுக்குரிய ஆயுர்வேதப் பனுவலாகும். குடற் சத்திரசிச்சை, சிறுநீரகக்கல்அறுவைச்சிகிச்சை, கண்புரை அகற்றல் அறுவைச்சிகிச்சை உள்ளிட்ட சிக்கலான அறுவைச்சிகிச்சை முறைகள் பற்றியும் அவற்றுக்குத் துணை செய்யும் பல்வகைக் கருவிகள் பற்றியும் சுஸ்ருதசம்ஹிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறுவைச்சிகிச்சைக்கென மயக்கமருந்து கொடுத்தல், அட்டை விடுதல் மற்றும் இறந்த மனித உடலத்தினைக் கொண்டு மனித உடற் கூற்றியல் பற்றிக் கற்றுணர்தல் எனப் பல்வேறு விடயங்கள் அறுவைச்சிகிச்சை தொடர்பில் இப்பனுவலில் எடுத்தாளப்பட்டுள்ளன.

சித்தவைத்திய மரபில் அகத்தியர் தொன்மத்தினை அடியொற்றி அறுவைச்சிகிச்சை முறைகள் பயின்று வந்துள்ளன. மகப்பேற்றுவைச் சிகிச்சை, கண் காசத்திற்கான சத்திர சிகிச்சை, மூளையில் ஏற்படும் கட்டிகளுக்கான அறுவைச் சிகிச்சை என அறுவைச்சிகிச்சை பற்றிய கருத்தியல்கள் சித்தவைத்திய மரபில் இழையோடியுள்ளன. சத்திரசிகிச்சைக்குப் பயன்படுத்தக்கூடிய பலவகையான ஆயுதங்கள் பற்றியும் சித்த வைத்தியப் பனுவல்களில் கருத்துரைப்பட்டுள்ளது. மேலும் அறுவைச்சிகிச்சையின் பின்னர் ஏற்படக்கூடிய ஏற்புவலி முதலிய பக்கவிளைவுகள் பற்றிய விழிப்புணர்வையும் அக்கால வைத்தியர்கள் அறிந்துணர்ந்து செயற்பட்டிருந்தமையினையும் அறிய முடிகிறது.

**திறவுச்சொற்கள்:** அறுவைச் சிகிச்சை, ஆயுர்வேதம், சித்தமருத்துவம், தன்வந்திரி மரபு, சுஸ்ருதசம்ஹிதை, சல்யதந்திரா

## அறிமுகம்

இந்து நாகரிகம் எனும் பாடநெறியினை சமயபாடமாக மட்டும் அடையாளப் படுத்துகின்ற ஒற்றைப் பரிமாணப்போக்கு இன்று பொதுவெளியில் காணப்படுவதனை அறியமுடிகின்றது. குறித்த ஒரு பண்பாட்டுக் குழுமத்துக்கு இருக்க வேண்டிய வரலாறு, கலை, இலக்கியம், தத்துவம், அரசியல், சட்டம், அறிவியல், சமயம், சமூகம் வழக்காறுகள் முதலிய இன்னோரன்ன பரிமாணங்கள் அனைத்தும் இந்துநாகரிகப்புலத்துள் செழுமையாக வளர்ச்சி பெற்றுள்ளன. இவை தொடர்பானஉயர்நிலைக்கற்கைளுக்கும்ஆய்வுகளுக்கும் அவசியமான அவ்வவ்துறைசார் மூலப்பனுவல்களும் இந்துப்பண்பாட்டுப் புலத்தில் கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலந்தொட்டே எழுச்சிபெற்று வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து அறிவியல் என்ற கற்கைப் புலமானது இன்று உலகளாவிய நிலையில் கவனத்தையீர்க்கின்ற ஓர் ஆய்வுப்புலமாக மாறியுள்ளது. கணிதம், வானியல், மருத்துவம், இரசாயனவியல் போன்ற நியம அறிவியற் றுறைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இந்துக்கள் கொண்டிருந்த மேலாண்மை அண்மைக்கால ஆய்வுகள் பலவற்றின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலந்தொட்டு இந்து அறிவியற்புலத்தில் அறுவைச்சிகிச்சை பெற்றிருந்த முக்கியத்துவத் தினை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

உலகின் தொன்மையான நாகரிகங்களுக் கிடையில் அறுவைச்சிகிச்சையின் பயில் நிலை பற்றிய வரலாற்றியல் ஆய்வுகள் மற்றும் பண்பாட்டிடை ஆய்வுகள் மேற் கொள்வோருக்கு இந்துநாகரிகத்தின் புறந் தள்ள முடியாத மற்றொரு அறிவியற் பரிமாணத்தினைப் பதிவுசெய்ய முயல்வதே இக்கட்டுரையின் அடிப்படை எத்தனமாகும்.

இவ்வாய்வில் விவரண ஆய்வு முறையியல் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் வரலாற்றியல் அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவசியமான நிலைகளில் தரவுகள் உள்ளடக்கப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்துநாகரிக மூலங்களில் காலத்தால் முற்பட்டதாக அமைகின்ற இலக்கியமூலங் களான வேதங்களில் மருத்துவம் பற்றிய விடயங்கள் காணப்படினும் ''சத்திர சிகிச்சை" தொடர்பில் சிறப்பான குறிப்புக்கள் இனங்காணப்படவில்லை. எனினும் அதர்வவேதத்தில் மனித உடற்கூற்றியல் குருதிச் சுற்றோட்டம் ஆகியவை பற்றிய சில விவரணப் பகுதிகள் உள்ளன.

அதர்வவேதத்தின் கிளையாக அமையப் பெற்ற ஆயுர்வேதமரபானது கி.மு 800 க்குப் பின்பு ஆத்திரேயர், தன்வந்திரி மரபு என இருவகைச் சிந்தனாகூடங்களாக வளர்ச்சி கண்டது. இவற்றுள் தன்வந்திரியால் ஆயுர்வேதம் எட்டுப் பிரிவுகளாக வகுக்கப்பட்டதென்று அறியமுடிகிறது.

1. காயச்சிகிச்சை (பொது மருத்துவம்)
2. பாலசிகிச்சை (குழந்தை சிகிச்சை)
3. கிரகசிகிச்சை (மனநலமருத்துவம்)
4. சாலாக்யதந்திரா (கண், காது, மூக்கு, தொண்டை)
5. சல்யதந்திரா (அறுவைச்சிகிச்சை)
6. விஷதந்திரா (விடமுறிவு)
7. இரசாயனதந்திரா (மூப்பியல் மருத்துவம்)
8. வாஜிகரணதந்திரா (ஆண் மலடு, கருவளச்சிகிக்சை)

ஆயுர்வேத மரபில் அறுவைச் சிகிச்சையினை ''சல்யக்கிரியை'' என அழைப்பதற்கான ஏதுவாகவும் இது அமைந்தது. எவ்வாறாயினும் அறுவைச்சிகிச்சை தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதன் பயில்நிலைகளை செய்முறை விளக்கங்களுடன் எடுத்துரைக்கும் ஆயுர்வேதப் பனுவலாக சுஸ்ருதசம்ஹிதையே விளங்குகிறது.

**சுஸ்ருதசம்ஹிதை**

இந்து அறிவியல் மரபில் அறுவைச்சிகிச் சையின் தந்தை எனச் சிறப்பிக்கப்படுபவர் சுஸ்ருதர் ஆவார். இவர் விஸ்வாமித்திரரின் சீடர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். 9Mukhopadhyaya, G., 1929:572)

பிந்திய வேதகாலத்துக்குரியதாகக் கருதப்படும் இவருடைய பனுவலாகிய சுஸ்ருதசம்ஹிதை கி.மு 1000 அளவில் இயற்றப்பட்டிருக்கலாம் என்பதே அநேக ஆய்வாளர்களின் ஊகமாகும்.

"Late Vedic hymns ascribed to susruta suggested tha the must have flourished during the latter part of the vedic age, which would place him around 1000 BCE"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்து ஆயுர்வேத மருத்துவக் கலையின் பிதாமகராக மதிக்கப்படும் தன்வந்திரி பகவானின் சீடராகவும் இவரைக் கருதுவாருளர் (Sharma, P.V., 1983:24) .

184 அத்தியாயங்களில் 1120 நோய்கள் பற்றிக் குறிப்பிடும் சுஸ்ருதசம்ஹிதை அவற்றிற்கான மருந்துகளாக 700 விதமான மூலிகைகளையும் 64 விதமான கனியுப்புச் சேர்மானங்களையும் அடையாளப்படுத்தியுள்ளது. மேலும் 57 விதமான மருந்துகளை விலங்குகளின் மூலம் பெறப்படும் சேர்மானங்களிலிருந்து பெறமுடியும் என்பதையும் சுஸ்ருதசம்ஹிதை வெளிப்படுத்தியுள்ளது (Dwivedi,G, Deivedi,s., Sushruta the Clinican - Teacher Par Excellence (http/)

இப்பனுவலானது சூத்திரஸ்தானம், நிதானஸ்தானம், சரீரஸ்தானம், கல்பஸ்தானம், சிகிச்சாஸ்தானம், உத்தரஸ்தானம் என ஆறு பகுதிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் உத்தரஸ்தானம் பிற்சேர்க்கையாகும். இவற்றுள் அறுவைச்சிகிச்சை பற்றி மிகவிரிவாகப் பேசுகின்ற பகுதியாக சூத்திரஸ்தானம் திகழ்கிறது. இது 46 அத்தியாயங்களைக் கொண்டதாகும்.

இப்பகுதியில் அறுவைச்சிகிச்சை தொடர்பில் மேல்வரும் தலைப்புகளில் சுஸ்ருதரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சேத்ய - வெட்டி எடுத்தல்

லேக்ய - தோலைக் கீறுதல்

வேத்ய - துளையிடுதல்

இஸ்ய - ஆராய்தல்

அஹ்ர்ய (Ahrya) - பிடுங்கி எடுத்தல்

வஸ்ரய - அசுத்தங்களை வெளியேற்றல்

சிவ்ய - தையலிடுதல்

சத்திர சிகிச்சையினை முறைப்படி பயிலுவதற்காக இறந்த உடலமொன்றைத்தயார் செய்வதற்கான படிமுறைகளில் தொடங்கி சிறுநீரகக்கல் அகற்றல், குடற்சத்திரசிகிச்சை, கண்புரை அகற்றல் வழிமுறைகளையும் அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள், ஆளணி முகாமைத்துவம், மயக்கமருந்தூட்டல் முதலிய இன்னோரன்ன விடயங்களையும் மிகத் தீர்க்கமாக எடுத்துரைத்துள்ள பனுவலாகச் சுஸ்ருதசம்ஹிதை திகழ்கிறது. கெட்ட ரத்தத்தினை வெளியேற்றுவதற்காக அட்டைகளைக் கடிக்கவிடும் உத்தியினையும் சுஸ்ருதசம்ஹிதை அறிமுகப்படுத்தியுள்ளது.

**குடற் சத்திரசிகிச்சை**

குடற் சத்திரசிகிச்சை முறைகளில் பெருங்குடல் அடைப்புக்கான சத்திரசிகிச்சை தொடர்பில் சுஸ்ருதசம்ஹிதையில் குறிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

எண்ணெய்க்குழம்புகள் தடவி உருவி நோயாளிக்கு வயிற்றில் ஒத்தடம் கொடுத்த பின்னர் நோயாளியின் நாபிக் கமலத்திலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் உரோமக்கற்றையின் இடதுபுறமாக நான்கு அகலத்தில் துளையிடவேண்டும். இதனூடாகக் குடலை வெளியே எடுத்துப் பரிசோதித்தல் பற்றியும் அக்குடலில் தடைகளை ஏற்படுத்தி இருக்கக்கூடிய சிறு கல், மண் முதலிய கழிவுப்பொருட்களை அகற்றிய பின்னர் குடலுக்குத் தேன் மற்றும் வெண்ணெய் ஆகியவற்றைப் பூசுதல் பற்றியும் சுஸ்ருதசம்ஹிதை விபரித்துள்ளது. குடலை மீண்டும் அத்துவாரத்தினூடாக இருந்த இடத்தில் மீண்டும் வைத்தலும் வயிற்றில் ஏற்பட்ட வெளிக்காயத்துக்குத் தையல் போடுதல் தொடர்பாகவும் சுஸ்ருதர் மேலும் விபரித்துள்ளார்.

(Susrutha SamhithaCikitsasthanam, 14.17)

परिस्राविण्यवमेव शल्यमुद्धृत्यान्त्रस्रावान् संशोध्य तच्छिद्रमान्त्रं समाधाय कालपिपीलिकाभिर्दंशयेत् दष्टे च तासां कायानपहरेन्न शिरांसि. ततः पूर्ववत् सीव्येत्, सन्धानं च यथोक्तं कारयेत् यष्टीमधुकमिश्रया च कृष्णमृदाऽवलिप्य बन्धेनोपचरेत् ततो निवातमागारं प्रवेश्याचारिकमुपदिशेत् वासयेच्चैनं तैलद्रोण्यां सर्पिर्द्रोण्यां वा पयोवृत्तिमिति ॥

Parisrāviṇyapyevameva śalyamuddhṛtyāntrasrāvān saṁśodhya tacchidramāntraṁ samādhāya kālapipīlikābhirdaṁśayet daṣṭe ca tāsām kāyānapaharenna śirāṁsi, tataḥ pūrvavat sīvyet, sandhānam ca yathoktaṁ kārayet yaṣṭīmadhukamiśrayā ca kṛṣṇamrudā'valipya bandhenopacaret tato nivātamāgāram praveśyācārikamupadiśet vāsayeccainaṁ tailadroṇyāṁ sarpirdroṇyāṁ vā payovṛttimiti ॥



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய குடற்சத்திர கிசிச்சையின்போது மிக நுண்மையான சேதன இடுக்கிகள் பயன்படுத்தப்படுவது மட்டுமன்றி அவை பொருத்தித் தைக்கப்பட்ட குடலின் மேற் பரப்பிலேயே விடப்படுகின்றன. அப்புறப் படுத்தப்படுவதில்லை. மேலும் கிழிக்கப்பட்ட குடல் மீளப் பொருத்தப்படுகின்ற பொருத்துக்களில் விடமற்ற கறுத்த எறும்பு களைக் கடிக்கவிடுதல் தொடர்பிலும் சுஸ்ருதசம்ஹிதை குறிப்பிட்டுள்ளது. இது சற்று வினோதமான முறையாக உள்ளது. குடற்பொருத்தில் கடிக்கவிடப்பட்ட எறும் புகள் அவை கடித்தநிலையில் உடற்பகுதி மட்டும் அகற்றப்படுகின்றன. அவற்றின் சேர்ந்த தலைப்பகுதி அகற்றப்படுவதில்லை. குடலின் வெட்டுண்ட முனைகளை சற்று நேரத்துக்கு rigormortis ஆனது ஒரே நிலையில் வைத்திருப்பதற்காக சேதன நுண்இடுக்கிகள் அதிலேயே விடப்பட்டன. நவீன குடற்சத் திரசிகிச்சையான Catgut சத்திரசிகிச்சை போல அன்றி எறும்புகளின் தலைகளும் இடுக்கிகளும் சேதனப் பொருட்களாக இருப்பதனால் அவை காலப்போக்கில் சமிபாட் டுக்கு உள்ளாகி விடுகின்றன.

குடற் சத்திரசிகிச்சையில் போடப் படும் புறக்காயத்துக்கான கட்டில் அதி மதுரத்துடன் சேர்ந்த கரியமண் கலவை* பயன்படுத்தப்படுகிறது. அதிமதுரம் பயன் படுத்தப்படுவதனால் இக்கட்டினை "பிபிலிக சிவனம்" (Pipilika Sivanam) என்பர்.

சத்திரசிகிச்சையின் பின்னர் நோயாளி குறித்த நேரம்வரையில் காற்றுப்புகமுடியாத அறையில் தங்கவைக்கப்படுவர். இங்கே தலைப்பகுதி மட்டும் வெளித்தெரியுமாறும் ஏனைய பாகங்களை காற்றுப்புக முடி யாதவாறு வைத்திருக்கவும் ஏற்றபடி அமைக்கப்பட்ட அறைகள் அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். இத்தகைய அறைகளுக்குள் நோயாளி எண்ணெய் அல்லது வெண்ணெய் நிரப்பிய தொட்டிக்குள் மருத்து வரால் தீர்மானிக்கப்படும் காலம் வரையில் வைத்திருக்கப்பட்டார். அவருக்குப் பால் மட் டுமே உணவாக அருந்தக் கொடுக்கப் பட்டது.

IBID

**காயங்களைத் தைத்தல்** (Suturing)

புராதன இந்திய அரசவம்சங்கள் அடிக்கடி போர்களில் ஈடுபட்டு வந்த மையால் யுத்த ரணங்களுக்கான சிகிச்சை முறைகளில் தையல்போடுதல் மிகுந்த முக்கியத்துவத்தினைப் பெற்றிருந்தது. சுஸ்ருதசம்ஹிதையும் இதுபற்றி விரிவாகக் கருத்துரைத்துள்ளது. முர்வா கொடியிலிருந்து பெறப்படும் நார்கள், அஸ்மாந்தகப் புல்லின் தும்பு, மற்றும் குறித்த நோயாளியின் தசைநார் ஆகியவை புறக்காயங்களைத் தைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இழைகளில் முக்கிய மானவையாகும். மேலும் சணல், பட்டிழை, தலைமயிர், மூலிகைச் செடியான Coccvlus Cordifolius இன் தும்பிழை, நூல் ஆகியனவும் காயங்களிற்கான சுற்றுத்தையல் போடுவதற்கு உபயோகிக்க உகந்தவை என சுஸ்ருதசம்ஹிதை குறிப்பிடுகிறது. (Susrutha SamhithaCikitsasthanam, 25.02-22)

**சிறுநீர்ப்பையில் கல் அகற்றல் சத்திரசிகிச்சை** (Bladder Stone Removal Surgery)

ஆயுர்வேத வைத்திய மரபில் "சிறுநீரகக்கல்" என்பது பொதுவாக உள்ளெடுக்கப்படுகின்ற மருந்துகளின் மூலமாகக் கரைக்கப்படுகின்ற ஒன்றாக அறியப்பட்டு வந்துள்ளது. சித்த வைத்திய மரபிலும் இந்நடைமுறையே காணப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும் இந்திய சுதேசிய வைத்திய மரபில் சிறுநீரகக்கல் அகற்றலுக்கான சத்திரசிகிச்சை தொடர்பில் கருத்துக்களை முன்வைத்துள்ள முதனூல் என்கிற பெருமை சுஸ்ருதசம்ஹிதைக்கே உரியதாகும். மேலும் "Catheter" என ஆங்கில மருத்துவத்தில் சுட்டப்படுகின்ற செயற்கையாகச் சிறுநீர் வெளியேற்றும் குழாய்கள், விரிவாக்கிகள் தொடர்பிலும் இப்பனுவலில் குறிப்புக்கள் உண்டு (Das, S., *1983:581*).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுஸ்ருதசம்ஹிதையின் சிகிச்சாஸ்தானத்தின் 7ஆவது அத்தியாயத்தின் 33ஆவது பத்தியிலே சிறுநீர்ப்பைக் கல் அகற்றல் தொடர்பிலான விவரணப்பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

(Susrutha SamhithaCikitsasthanam, 7.33)

स्वस्तिकयन्त्राणि – अष्टादशाङ्गुलप्रमाणानि,
सिंहव्याघ्रवृकतरक्ष्वृक्षद्वीपिमार्जारशृगालमृगैर्वारुककाककङ्ककुरर-
चाषभासशशघात्युलूकचिल्लिश्येनगृध्रक्रौञ्चभृङ्गराजाञ्जलि-
कर्णावभञ्जननन्दिमुखमुखानि, मसूराकृतिभिः कीलैरवबद्धानि,
मूलेऽङ्कुशवदावृत्तवाराङ्गाणि, अस्थिविदष्टशल्योद्धरणार्थमुपदिश्यन्ते ॥

Svastikayantrāṇi - aṣṭādaśāṅgulapramāṇāni,
siṁhavyāghravṛkatarakṣvṛkṣadvīpimārjāraśṛgāla
mṛgairvārukakākakaṅkakuraracāṣabhāsaśaśaghāt
yulūkacilliśyenagṛdhrakrauñcabhṛṅgarājā-
ñjalikarṇāvabhañjananandimukhamukhāni,
masūrākṛtibhiḥ kīlairavabhaddhāni,
mūle'ṅkuśa-vadāvṛttavārāṅgāṇi,
asthividaṣṭaśalyoddharaṇārthamupadiśyante ॥

அதன்பின் ஒரு பருக்கையளவுக்கு மட்டும் இடம்விட்டு இடது பக்கத்தில் ஊசியினைச் செலுத்துங்கள். சத்திரசிகிச்சைக்கு வசதியாகச் சிலர் சலப்பைக் கல்லின் அளவுக்கு இடத்தினை விட்டு வலது பக்கத்தில் கத்தியினைச் செலுத்தச் சொல்கிறார்கள். கல்லானது உடையாமலும், துணிக்கைகள் சிதறுண்டு போகாமலும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். ஒரு சிறு துணிக்கையானது உள்ளே தவறவிடப்பட்டாலும் இது மறுபடியும் வளர்ந்துவிடும். எனவே ஒரு வளைந்த இடுக்கியினைக் கொண்டு அதனை முற்றாக அகற்றவும்.

பெண்கள் விடயத்தைப் பொறுத்தவரையில் சலப்பைக்கு கீழே அதற்கு அண்மையிலேயே கருப்பை அமைந்திருக்கிறது. எனவே அவர்களைப் பொறுத்தவரையில் கத்தியினை மாத்திரம் சலப்பையின் மேல்பகுதிமீது வைக்கவும். இல்லாவிடின் அவர்களுடைய சலப்பையில் காயம் ஏற்பட்டுவிடும் அல்லவா.

சலப்பைக்கல் அகற்றலுக்கான சத்திர சிகிச்சையினால் ஏற்படக்கூடிய காயத்தினைத் தவிர வேறு எந்தச் சிறு சீறல்கூட சலப்பையில் ஏற்படக்கூடாது. சலக்குழாயில் இருமுறை துவாரங்கள் இடப்பட நேர்ந்தால் நோயாளியால் இச்சிறுநீர்ப்பைக் கல் தொடர்பான பிரச்சினைகளில் இருந்து ஒருபோதும் விடுதலை பெற இயலாது.

**சத்திரசிகிச்சையில் உடற்கூற்றியல் பற்றிய அறிவும் - பயிற்சியும்**

திறமையும் ஆழ்ந்த கல்வியறிவும் கொண்ட சத்திரசிகிச்சையாளராக உருவாவதற்கான அடிப்படை அறிவானது மனித உடற்கூற்றியல் பற்றியநுட்பங்களைப் புரிந்து கொள்வதிலேயே தங்கியுள்ளது என்பதனைப் புராதன ஆயுர்வேத விற்பன்னர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இந்து நீதிசாஸ்திரங்கள் இறந்த உடலை ஊறு செய்வதனை விலக்கியிருந்த போதிலும் சத்திரசிகிச்சைக்கான பரிசோதனை முன்னறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொள்வதற்காக மனித உடல்களைப் பயன்படுத்துவது இன்றியமையாதது என்பதனை சுஸ்ருதர் வலியுறுத்தியிருந்தார். சுஸ்ருதசம்ஹிதையில் இடம்பெறும் பத்து அத்தியாயங்கள் மனித உடற்கூற்றியல் தொடர்பிலும் அதற்கான செய்முறைப் பரிசோதனைகள் பற்றியும் விவரித்துள்ளன. (Chattopadhyaya, D. P, 1933:24)

குறித்த செயற்பாடுகளுக்காகப் பொருத்தமான மனித உடலத்தினைத் தேர்வு செய்யும் முறை தொடர்பில் சுஸ்ருதசம்ஹிதை மேல்வருமாறு விவரித்துள்ளது. "வெட்டிப் பரிசோதனை செய்யும் நோக்கங்களுக்காகத் தேர்வு செய்யப்படும் மனித உடலம் எல்லா உடற்பாகங்களையும் கொண்டதாக அமைந்திருக்க வேண்டும். விஷமூட்டப்பட்டோ அன்றி நீண்டகால வியாதியின் காரணமாகவோ குறித்த நபர் இறந்திருக்கக்கூடாது. அவர் நூறு வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். இந்த உடலின் குடல்களில் இருந்த அழுக்குகள் அகற்றப்பட்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு இறந்த உடலத்தினை குசப்புல், சணல்நாரிழைகள், முருஜா பட்டைகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றினால் பொதிசெய்து ஒரு கூட்டுக்குள்ளே இடப்பட்டு மிக மெதுவாக ஓடுகின்ற ஒரு ஆற்றுக்குள்ளே வெளிச்சம் இல்லாத ஒரு பகுதியில் இயல்பாகச் சிதையவிட வேண்டும். ஏழு இரவுகள் கழிந்தபின்னர் குறித்த உடலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிலிருந்து வெளியே எடுக்கப்பட்டு "உசிரா" (ஒரு வகைத் தாவரத்தின் மறுமணம் கமழும் வேர்ப்பகுதி), மூங்கில், பல்வஜ்ஜ எனப்படும் ஒருவகைத் தடித்தபுல் அல்லது தலைமுடி இவற்றில் யாதாயினம் ஒன்றினால் பக்குவமாகக் கூறுசெய்யப்படல் வேண்டும். இவ்வாறு கூறு செய்யப்பட்டுத் தொகுதிகளாக அவை கற்றலுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்." உடற்கூற்றியல் பற்றிய அறிவினை நன்கு கற்றுணர்ந்த பின்னர் இம்மாதிரியாகத் தேர்வுசெய்யப்பட்ட தேகங்களிலேயே சத்திரசிகிச்சைக்கான கருவிகளைப் பிரயோகித்து வெட்டுக்களையும், கீறல்களையும் ஏற்படுத்தவும் அவற்றைத் தைத்துக்கொள்ளவும் மாணவர்கள் முயற்சி செய்யவேண்டும் என சுஸ்ருதசம்ஹிதை குறிப்பிடுகிறது.

இதற்கும் ஓர் பிராரம்பப் பயிற்சியாக இறந்த மனித உடலங்களில் சத்திரசிகிச்சைக் கருவிகளைப் பிரயோகிக்கப் பழகுவதற்கு முன்னதாக புடோல், கெக்கரி, புஷ்பஹால போன்ற காய்கறிகளினை உடலமாகக் கருதிப் பயிற்சி பெறவேண்டும் என சுஸ்ருதர் குறிப்பிட்டுள்ளமையும் நோக்கற்பாலது.

**அறுவைச்சிகிச்சைக்கான உபகரணங்கள்**

புராதன இந்திய அறுவைச்சிகிச்சை முறைமைகளில் அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படும் கருவிகளின் பயில்நிலை மிக முன்னேற்றகரமானதாகும். குறிப்பாக சத்திரசிகிச்சை ஊடுருவிகள் (Surgical Probes) நுண்பாகத்தில் கூர்மழுக்கப்பட்ட (Blunt Surgical Instruments) மற்றும் சத்திரசிகிச்சைக்கான இடுக்கிகள் (Forcesps) ஆகியவை இவ்வகையில் குறிப்பிடற்பாலன.

**சத்திரசிகிச்சை ஊடுருவிகள்** (Surgical Probes)

சிறுகட்டிகளை அகற்றுதல், பிளக்கப்பட்ட இரணப்பகுதியினுள் மருந்தினைப் பூசுதல், சூட்டுச்சிகிச்சைக்கு உதவுதல், இரணங்களைத் துப்பரவு செய்தல், உணவுக்குழாய் மற்றும் சிறுநீர்ப்பாதை ஆகியவற்றின் தடைகளை அகற்றுதல் போன்ற தேவைகளுக்கு உதவும் வகையிலான ஊடுருவிகள் தொடர்பில் அறிய முடிகிறது.

மண்புழு, சர்ப்பத்தின் தலை, அம்பின் அடிப்பாகம் மற்றும் வினாக்குறி வடிவத்திலான ஊடுருவிகள் பல அக்காலத்தில் சத்திரசிகிச்சை நிபுணர்களால் அறுவைச்சிகிச்சைகளின் போது பயன்படுத்தப்பட்டன. இவை உடலுக்குள் ஊடுருவித் தொழிற்படுதல், ஒழுங்கு செய்தல், நகர்த்துதல், மற்றும் பிடுங்கி யெடுத்தல் ஆகிய செயற்பாடுகளுக்குப் பயன்பட்டிருந்தமையினை அறியமுடிகிறது.

சில விசேடமான தேவைகளுக்காக விசேடமான வடிவத்தில் அமைக்கப்பட்ட ஊடுருவிகள் பயன்படுத்தப்பட்டன. அந்த வகையில் சிறுநீர்ப்பாதையினைச் சுத்தம் செய்வதற்காக மல்லிகைப் பூந்தண்டின் சுற்றளவுள்ள ஊடுருவி பயன்பாட்டிலிருந்தது. மூக்கிலிருக்கும் சிறுகட்டியினை அகற்று வதற்குப் பிளவுபட்ட இடுப்பெலும்பின் வடிவத்திலான கூர்மையான முனைகளைக் கொண்ட ஒரு ஊடுருவி பயன்படுத்தப்பட்டது.

உணவுக்குழாய்க்குள் சிக்கிக்கொண்ட முள் போன்ற தடைகளை வெளியே எடுப்பதற்காகத் தானியங்களின் அளவிலான முனையைக் கொண்டு சற்றே முன்புறமாக வளைந்திருக்கும் ஊடுருவிகள் பயன்படுத்தப்பட்டன. மருந்துப் பொருட்களைப் பூசுவதற்கென குழியான கரண்டி போன்ற வடிவமுடைய ஊடுருவிகள் மற்றும் உரல்வடிவிலான ஊடுருவிகள் என்பனவும் பயில்நிலையிலருந்தன.

தொற்றகற்றலுக்கான சிலவகையான அறுவைச்சிகிச்சைகளின்போது சூடு போடுதல் (cauterization) நடைமுறையும் பின்பற் றப்பட்டது. இதற்குத்துணைசெய்யும்விதத்தில் மூன்று வகையான ஈட்டி முனைகொண்ட ஊடுருவிகள் பயன்படுத்தப் பட்டன.

**வெட்டுவதற்கும் துளைப்பதற்குமான கருவிகள்**

சத்திரசிகிச்சையில் தேகத்தை வெட்டுதல், கிழித்தல் பிரதானமான நடைமுறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படவிருக்கும் அறுவைச் சிகிச்சைக்குப் பொருத்தமான நோயாளியின் தேகத்தினைக் கீறுவதற்காக இருபது வகையான வெட்டும் கருவிகளை சுஸ்ருதசம்ஹிதை பட்டியற்படுத்தியுள்ளது.

1. மண்டலாக்ரா
 -வட்டமான முகப்புக்கொண்டது
2. கர பத்திர
 - ஏட்டுச்சுவடி போன்ற வடிவம்
3. விருதி பத்ர
 - சவரக்கத்தி வடிவம்
4. நுகர சஸ்திர
 - நகம் போன்ற வடிவம்
5. முத்திரிகா சஸ்திர
 - மோதிர வடிவம் கொண்ட கத்தி
6. ஊத்பல பத்ர சஸ்திர
 - தாமரை இலையின் வடிவம் கொண்டது
7. அர்த்தஹர சஸ்திர
 - ஒருபக்கம் மட்டும் கூர்மையுடையது
8. சூசி (Suci)
 - ஊசி வடிவம்
9. ருஷபத்ர
 - கோரைப்புல் வடிவம்
10. அத்தி முக
 - அத்தி பறவையின் அலகு போன்றது
11. சஹராரிமுக
 - சஹராரி பறவையின் அலகு போன்றது
12. அந்தர் முக
 - உள்வளைந்தது
13. திரிகுர்சக
 - திரிசூல வடிவம்
14. குடாரிக
 - கோடரி வடிவம்
15. விர்ஹி முக
 - அரிசிமுக வடிவம்
16. ஆர
 - சக்கர ஆரைக்கல் போன்ற வடிவம்
17. வேற்றச பத்ரஹ
 - பிரம்பு வடிவம்
18. பாதிஷா
 - கொழுக்கி போன்றது
19. தந்த-சங்கு
 - பல்முனை போன்றது / சங்கு வடிவம்
20. இஷானி
 - ஊடுருவி

(HelaineSelin, RoddamNarasimha, 2007:26)

**இரணங்களைத் தைப்பதற்கான ஊசிகள்**

குறைந்த தசைகள் அல்லது தசைப் பிடிப்புக்குறைவான இடங்களில் வட்டமான இரண்டு விரற்கடை அகலமான ஊசிகளும், தசைப்பிடிப்பான இடங்களில் மூன்றுவிரல் அகலமான முக்கோண வடிவ ஊசிகளும் சுஸ்ருதசம்ஹிதையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மார்ம உறுப்பு, விதைப்பகுதி மற்றும் அடிவயிற்றுப்பகுதிகளுக்கு வில் போல வளைந்த ஊசியே பொருத்தமானது என சுஸ்ருதசம்ஹிதையின் சூத்திரஸ்தானத்தின் 25ஆம் அத்தியாயத்தில் இடம்பெறும் 23ஆம், 24ஆம் சுலோகங்கள் குறிப்பிட்டுள்ளன.

**சத்திரசிகிச்சைக் கருவிகள் - இடுக்கிகள் (Forceps)**

சத்திரசிகிச்சையின்போது பயன்படுத்தப்படும் பதினைந்தும் மேற்பட்ட இடுக்கிகளின் வகைகள் பற்றியும் புராதன இந்துக்கள் அறிந்திருந்தனர். இவற்றின் தோற்றத்தைக் கொண்டு அவை பல்வேறு மிருகங்கள் மற்றும் பறவைகளின் பெயர்களால் சுட்டப்பட்டன.

ரிக்ஷா யந்திர
- கரடிமுகத் தோற்றம் கொண்டவை
சிம்ஹ யந்திர
- சிங்கமுகத் தோற்றம் கொண்டவை
வியாக்ரஹ யந்திர
- புலிமுகத் தோற்றம் கொண்டவை
விர்க யந்திர
- ஓநாய்முகத் தோற்றம் கொண்டவை
துவிபி யந்திர
- வேங்கைமுகத் தோற்றம் கொண்டவை
துர்கஷ யந்திர
- கழுதைப் புலி முகத் தோற்றம் கொண்டவை
சிறகல யந்திர
- நரி முகத் தோற்றம் கொண்டவை
ம்ருக யந்திர
- மான் முகத் தோற்றம் கொண்டவை
சஷ்கதா யந்திர
- கழுகுமுகத் தோற்றம் கொண்டவை
மாசா யந்திர
- சேவல்முகத் தோற்றம் கொண்டவை
கிரௌஞ்ச யந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீர்க்குருவிமுகத் தோற்றம் கொண்டவை உல்க யந்திரா
- ஆந்தை முகத் தோற்றம் கொண்டவை காக யந்திரா
- காகமுகத் தோற்றம் கொண்டவை என்பன அவற்றுள் சிலவாகும்.

(Susrutha Samhitha Cikitsasthanam)

**கண்புரை அகற்றற் சத்திரசிகிச்சை**
(Extra Capsular Cataract Surgery)

ततः सव्ये पार्श्वे सेवनीं यवमात्रेण मुक्त्वाऽवचारयेच्छस्त्रमश्मरीप्रमाणं दक्षिणतो वा क्रियासौकर्यहेतोरित्येके, यथा सा न भिद्यते चूर्ण्यते वा तथा प्रयतेत, चूर्णमल्पमप्यवस्थितं हि पुनः परिवृद्धिमेति तस्मात् समस्तामग्रवक्त्रेणाददीत ॥

Tataḥ savye pārśve sevanīṁ yavamātreṇa muktvāऽvacārayecchastramaśmarīpramāṇaṁ dakṣiṇato vā kriyāsaukaryahetorityeke, yathā sā na bhidyate cūrṇyate vā tathā prayateta, cūrṇamalpamapyavasthitaṁ hi punaḥ parivṛddhimeti tasmāt samastāmagravaktreṇādadīta ॥

கண்புரை அகற்றலுக்கான சத்திரசிகிச்சை பற்றிய தெளிவான விவரணம் சுஸ்ருதசம்ஹிதை யிலே காணப்படுகிறது. கண்புரை அறுவைச் சிகிச்சை பற்றி உலகளாவிய நிலையில் காணப்படுகின்ற குறிப்புக்களில் தொன்மையும் செம்மையும் வாய்ந்ததாக இதனையே கருத முடிகிறது எனப் பேராசிரியர் G.D.Singhal தனது நூலில் குறிப்பிடுகிறார். இது தொடர்பில் சுஸ்ருதசம்ஹிதையில் காணப்படுகின்ற மூல ப்பகுதியினை G.D.Singhal தனது நூலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். அதன் தமிழ் வடிவம் மேல்வருமாறு அமையும்.

In neither too hot too cold a weather.... (Singhal G.D.B, 1981:15)

அதிக வெப்பமோ அல்லது அதிக குளிரோ இல்லாத ஒரு காலநிலை நிலவுகின்ற தருணத்தில் நோயாளி எண்ணெய்க்குளியல் மற்றும் மனச்சாந்தப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட வேண்டும். அதன்பின் நோயாளியினை ஓர் இடத்தில் உட்காரவைத்து, அவர் தமது மூக்கின் நுனியினைத் தொடர்ந்து நோக்கு மாறு கேட்கப்படவேண்டும். இதன் பின்னர் புத்திசாதுரியமுள்ள சத்திரசிகிச்சை நிபுணர், பார்லி அரிசியின் வடிவத்தினைக் கொண்ட “சலாகா” என்ற கருவியைத் தமது வலதுகைப் பெருவிரல், நடுவிரல் மற்றும் சுட்டுவிரல் ஆகியவற்றால் பிடித்துக்கொண்டு கண்களைத் திறந்து நம்பிக்கையோடு விழிவெண்படலத்திலிருந்து கண்ணிலுள்ள வெண்பகுதியின் இரு பகுதிகளையும் தவிர்த்து Temporal Can thus ஐ நோக்கிக் கண்ணில் துளையிடவேண்டும்.

இத்துளையிடலானது நரம்புகளின் வலை யமைப்பினைப் பாதுகாக்கும் விதத்தில் அதிக உயரமாகவோ அல்லது அதிகம் தாழ் வாகவோ அல்லது ஓரங்களிலோ மேற் கொள்ளப்படக்கூடாது. பின்னர் அது இயற் கையான orifice ஐ நோக்கித் திசைதிருப் பப்படவேண்டும். சத்திரசிகிச்சையாளர் நோயாளியின் இடது கண்ணில் தமது வலது கையாலும் வலது கண்ணில் இடது கையாலும் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். துளையிடல் சரியானபடி நடைபெற்றிருந்தால் அதற்கு அடையாளமாக ஒரு நுண் ஒலி கிளம்புவதோடு கண்ணிலிருந்து ஒரு துளி திரவமும் வெளியேறும். இதன் பின்னர் சலாகாவைத் தொடர்ந்து அந்நிலையிலேயே ஸ்திரமாகப் பிடித்தபடியிருக்க குறித்த கண்ணினுள் தாய்ப்பாலின் சில துளிகள் விடப்படுதல் வேண்டும். “வட்டா” எனப்படும் பச்சிலைகளால் வெளிப்புறத்தில் ஒத்தடம் கொடுக்கப்படுதல் வேண்டும். இதன் பின்னர் கண்மணியானது (Lense) சலாகாவின் நுனியி னால் துளையிடப்பட்டு சுரண்டப்பட்டதன் பின்னர் அதனுள் தேங்கியிருக்கும் கபத்தினை வெளியேற்றுவதற்காக நோயாளி எதிர்ப்பக்க நாசித்துளையைப் (சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட கண்ணிற்கு) பொத்தியபடி வேகமாகத் தனது மூக்கினைச் சிந்தவைக்கச் சொல்லப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்புரையகற்றல் மட்டுமன்றி Trichiasis எனப்படும் கண்நோய்க்கான சத்திரசிகிச்சை மற்றும் Blepharitis எனப்படும் கண்ணில் ஏற்படும்கிருமிக்கிரந்திவீக்கத்திற்கானசிகிச்சை முறைகள் பற்றியும் சுஸ்ருதசம்ஹிதையில் குறிப்புக்களுண்டு.

**பழந்தமிழ் இலக்கியங்களில் சத்திரசிகிச்சை பற்றிய குறிப்புகள்**

வீரயுகப்பாடல்களில் போரியல் சார்ந்த பின்புலத்தில் சத்திரசிகிச்சையுடன் தொடர்புடைய பல விடயங்களை அவதானிக்க முடிகிறது. வீரர்களுக்கு ஏற்பட்ட விழுப்புண்கள் அவற்றின் வடிவங்கள், விழுப்புண்களைத் தைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஊசிவகைகள், காயங்களை ஆற்றப் பயன்படுத்தப்படும் மூலிகைகள் பற்றிய விடயங்கள் ஆங்காங்கே இவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"பதுவாய் போகிய துதிவாய் எஃகமொடு

பஞ்சியும் களையாப் புண்ணர்"

(புறநானூறு 353:15-16)

என்கிறபுறநானூற்றுவரிகளில்ஆயுதங்களால் கிழிபட்டு உண்டான இரணத்தின்மேலாக பஞ்சினை வைத்து மருந்திடும் முறைமை இனங்காட்டப்பட்டுள்ளது. போரிலே பட்ட விழுப்புண்ணை ஊசியினால் தைக்கும் சிகிச்சை முறைமை பற்றிப் பதிற்றுப்பத்தின் மேல்வரும் பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

"மீன்தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்

சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி

நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்"

(பதிற் 5:2:1-3)

குறித்த விழுப்புண்ணைத் தைப்பதற்காக வெள்ளியினால் செய்யப்பட்டிருந்த ஊசியினைப் பயன்படுத்தியிருந்தமை இவ் வடிகளின் மூலம் இனங்காட்டப்பட்டுள்ளது.

நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்காக நீரில் பாய்ந்து மறுகணத்தில் நீரைவிட்டு மேலே பறந்து செல்லும் சிரல் பறவையினைப் போல நெடிய வெள்ளூசியானது அக்காயத்தினுள் புகுந்து வெளியே வருவதனை இப்பாடலடிகள் சுட்டி நிற்கின்றன.

அக்காலத்தில் வேல், ஈட்டி முதலிய கூரிய இரும்பாயுதங்கள் ஏற்படுத்துகின்ற போர்க் காயங்களில் உலோக நஞ்சு கலப்பதற்கும் அதன் மூலமாக ஏற்படும் உலோக நஞ்சுத் தன்மையால் (Tetanus Toxoid) உடலுக்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுப்பதற்கு அத்திப் பாலைப் பயன்படுத்தியிருந்தமையினை அறிய முடிகிறது. உலோக நஞ்சை முறிக்கும் மருந்தாக மட்டுமன்றி, புண் ஆறியபின் அதன் 'வடு' தேகத்தில் இருந்து மறையவும் தோலின் நிறத்தினை இயல்புநிலைக்குள்ளாக்கவும் "அத்திப்பாலை"ப் பயன்படுத்தினர் என்பதனைப் புறநாற்றினூடாக அறிய முடிவதாக முனைவர் இர. வாசுதேவன் தனது தமிழில் மருத்துவ இலக்கியங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (வாசுதேவன், இர., 2006:31).

உடலிலே தோன்றுகின்ற கட்டிகள், கழலைகள் போன்றவற்றை சத்திரசிகிச்சை மூலம் அகற்றி அந்த இடத்தில் சூடுபோடுவதனூடாகத் தொற்றகற்றும் நடைமுறையும் பழந்தமிழ் நாட்டில் வழக்கிலிருந்தமையினை குலசேகர ஆழ்வார் மற்றும் கம்பர் ஆகியோரின் பாடல்களின் மூலமாக அறிய முடிகிறது.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்

மாளாத காதல் நோயாளன் போல்"

(குலசேகராழ்வார் பாடல், 691 -2)

"உடலிடைத் தோன்றற் றொன்றை அறுத்து அதன் உதிரம் ஊற்றிச் சுடலுறச் சுட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாசனச் சான்றுகள்**

பல்லவ, சோழப் பேரரசுகள் உருவான காலகட்டங்களில் அரசர்கள் இடையுறாது போர்களில் ஈடுபட்டிருந்தமையினால் "சத்திர சிகிச்சை" அக்காலமருத்துவசாலைகளில்முக்கிய இடம்பெற்றிருந்தமை இயல்பானதாகும். சத்திரசிகிக்சை செய்யவல்ல விற்பன்னர்களை "சல்லியக்கிரியை செய்வோன்" என அக்காலக் கல்வெட்டுக்கள் குறிப்பிட்டன. "சல்ய தந்திரா" என்பது ஆயுர்வேதத்தின் எட்டுவகைப் பிரிவுகளில் ஒன்றான அறுவைச்சிகிச்சையினைக் குறிக்கும் கலைச் சொல் லாகும். அறுவைச்சிகிச்சைக்கு ஒத்தாசை புரிபவரைப் பரியாரம் செய்வோன் என்றும் தாதிகளை மருந்திடும் பெண்கள் எனவும்' அறுவைச்சிகிச்சைக் கூடத்தைத் தொற்றகற்றி சுத்தம் செய்பவரை "ஈரங்கொல்லி" எனவும் சோழர்காலச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. *(1ஆம் இராஜேந்திர சோழனின் 3 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு).*

சத்திரசிகிச்சை நடைமுறையில் வைத்திய ருக்குப் பக்கபலமாக நாவித சமூகத்தினைச் சேர்ந்த விற்பன்னர்களும் உதவிபுரிந்தனர். "பரியாரி" என்ற சொற்பதம் இவ்வகையில் இன்றும் தமிழ்வழக்கில் நாவிதர்களைக் குறிக்கும் வகையில் வழங்குவதும் கவனிக்கற் பாலது. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சிற்பி "இராஜராஜன் பெருந்தச்சன்" என்ற பட்டத்தைப்பெற்றுக் கொண்டமையைப் போல சத்திரசிகிச்சைகளில் துறைதோய்ந்த அரண்மனை ஆஸ்தான நாவிதன் "இராஜராஜப் பெருநாவிதன்" என விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டான், வாசுதேவன் இர., *2006:167).*

**சித்தவைத்திய மூலங்களில் சத்திரசிகிச்சை**

இந்துப்பண்பாட்டுவரலாற்றில்சித்தர்களின் பனுவல்களை, அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற அறிவுப்புலமே சித்த வைத்தியமாகும். தென்னாட்டில் அகத்தியர் மரபு, திருமூலர் மரபு என வழங்கும் பதினெண் சித்தர் களின் சிந்தனைத் துலங்கல்களாக அறியப் பட்ட சித்தமருத்துவப் பனுவல்களே இங்கே முதல்நிலை மூலங்களாகக் கருதப்படுகின்றன.

சித்த வைத்தியத்தில் அறுவைச் சிகிச்சை யானது அசுரமருத்துவம்/ராஜச மருத்துவம் என அழைக்கப்பட்டது. சூடுபோடுதல், அட்டைவிடுதல், சலாகை போடுதல், இரத்தம் வாங்குதல், கழலை வெட்டுதல், கொம்பு கட்டுதல் முதலிய செயன்முறைகள் இப்பிரி வினுள் அடக்கம்.

**சத்திரசிகிச்சை மரபில் "அகத்தியர்" - தொன்மம்.**

தமிழ்நாட்டில் மொழி - இலக்கணம், சமயம் ஆகியவற்றைப் போலவே மருத்துவத்திலும் அகத்தியர் தொன்மம் முக்கிய வகிபங்கினைப் பெற்றுள்ளது. குறிப்பாக அறுவைச்சிகிச்சையினைப் பொறுத்தவரையில் "தாரணாக்கியர்" என்ற சங்கப்புலவரின் கபாலத்தினுள் இருந்த சிறிய தேரையொன்றினை வெளியே எடுத்த சம்பவம் அகத்தியர் வழிகாட்டலில் அவர் சீடரான தேரையரின் உதவியுடன் நிகழ்ந்ததாக ஐதீகம். ஆயினும் வரலாற்றியல் நோக்கிலான கால ஆராய்ச்சியில் தேரையரின் காலம் மிகவும் பிற்பட்டதாகும். (விஜயநகர நாயக்கர் காலம்) எவ்வாறாயினும் குறித்த ஐதீகத்தினூடாக அறுவைச்சிசிச்சை பற்றிய சில அம்சங்கள் இனங்காட்டப்பட்டுள்ளன. அவையாவன:

1. அகத்தியர் தன்சீடரான தேரையர் பின்தொடர அறுவைச்சிகிச்சைக்கான கருவிகள் அடங்கிய பெட்டியுடன் வருகை தந்தமை.

2. கபாலத்துள் இருந்த தேரையினை "புவனம்" என அழைக்கப்பட்ட அறுவைச்சிகிச்சை உபகரணத்தினைக் கையாண்டு வெளியே எடுக்க முற்பட்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. குறித்த முயற்சியில் அகத்தியரைத் தடுத்த அவர் சீடர் "புவனத்தை" கையாண்டால் மூளையின் நுண்நரம்புகள் சிதைவுற வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டமை.

4. குறித்த சீடரே தனது யுத்தியினால் தேரையை வெளியே எடுத்தமை.

இதனாலே அவர் தேரையர் என அழைக்கப்பட்டமை.

இங்கே தேரை என்பது தவளையை ஒத்த சிறிய ஜந்தாக அன்றித் தேரை வடிவிலான கட்டி/கழலை என மறுவாசிப்புச் செய்வதற்கும் இடமுண்டு. "நீண்டகாலத் தலைவலிக்குக் காரணமான கட்டியினைக் கபாலத்தைப் பிழந்து அறுவைச்சிகிச்சை செய்தல் என்ற எண்ணக்கருவின் பயில்நிலையை சித்தமருத்துவ வரலாற்றில் இத்தொன்மம் பதிவு செய்துள்ளதாகக் கருதலாம். சித்த மருத்துவ வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான பனுவல்கள் அகத்தியர் மற்றும் தேரையரின் பெயரில் காலத்துக்குக்காலம் வெளிவந்துள்ளமையும் நோக்கற்பாலது. இவற்றுள் அறுவைச்சிகிச்சை தொடர்பில் "அகத்தியர் சஸ்திராயுத விதி" என்ற பனுவல் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

இப்பனுவலில் அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படுகின்ற 26 ஆயுதங்கள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

"கத்தி சத்திரம் கவின் குறும்பி வாங்கியும்
முக்கவா தன்னுடன் முள்ளுவாங்கியும்
ஆழிக்கோலும் அடுத்த பிறையுடன்
தத்தரிக்கையுடன் பகரை வாங்கியும்
முச்சலாகையொடு முனிமொழியோட்டு
செப்புக்கீழையும் சீரிய சலாகையும்
வட்டகைதன்னுடன் வளர்பஞ்சமுகமும்
செப்புச்சலாகையும் கொம்பும் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச்சலாகையும்
சயாக்கோலும் கண்கத்தி தண்டும்
இவையிவை ஆயுதம் இருபத்தாறும்
சிவனவன் அருளால் திகழ் சத்திராயுதமே"

இவற்றுள் "சஸ்திரம்" (சத்திரம்) என்னும் ஆயுதமே பிரதானமானது. ஆறங்குல நீளமும் ஆறுகளஞ்சு நிறையும் (33 கிராம்) வேப்பிலை போன்ற வடிவமைப்பும் கொண்ட இது உடலில் தோன்றிய கட்டி, பிளவைப் போன்றவற்றினை அறுக்கப் பயன்பட்டதாக அறியமுடிகிறது." சத்திரசிகிச்சை" என்ற பெயர் அறுவைச்சிகிச்சைக்கு வழங்கியதற்கான காரணமும் இதனாலேயாகும்.

சித்தர்களால் சத்திரசிகிச்சையின் தன்மைக்கேற்றவாறு அநேக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும் அவற்றின் அடிப்படை 26 வகையிலடங்குகின்றன. என **History of Medical and spiritual Sciences of Siddhas of Tamil Nadu** என்ற நூலில் Dr. P. கார்த்திகேயன் குறிப்பிடுகிறார்.

(https://books.google.lk/books? isbn= 9352065522)

"Siddhas devised many Surgical instruments for Various life saving remedies. Basically they were of 26 kinds"

1. Mandalakkiram - மண்டலாகிரம்
2. Viruththi - விருத்தி
3. Urpalam - உர்பலம்
4. Maruvukai - மருவுகை
5. Kodari - கோடரி
6. Soosi - சூசி (ஊசி)
7. Kurumbi Vaangi - குறும்பி வாங்கி
8. Ondod - ஒன்டோடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. Kapathiram - கபத்திரம்
10. Panapathiram - பாணபத்திரம்
11. Thuvimugan - துவிமுகம்
12. Vindakanni - விண்டகண்ணி
13. Vithanchari - விதன்சரி
14. Virigi - விர்கி
15. Vedhapathiram - வேடபத்திரம்
16. Thoondil - தூண்டில்
17. Veenai - வீணை
18. Angusam - அங்குசம்
19. Prasodhi - ப்ரசோடி
20. Sodhi - சோடி
21. Niraitharai - நிறைதாரை
22. Kandathathiri - கண்டதத்திரி
23. Koorchaneelpadicham - கூர்சனீலபடிசம்
24. Anguli Saasthiram - அங்குலிசஸ்திரம்
25. Andharmugam - அந்தர்முகம்
26. Asaimugam - அசைமுகம்

இக்கருவிகளின் பயில்நிலை பற்றிய தெளிவான விளக்கங்கள் இல்லையாயினும் சில வகையான சந்தர்ப்பங்களில் இவற்றின் கையாளுகை பற்றிச் சித்தர் பனுவல்களில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சதைத் துண்டுகளை வெட்டவேண்டி சில சந்தர்ப்பங்களில் மண்டலாக்கிரம் என்ற கருவி பயன்படுத்தப்பட்டது. நோய்க்கிருமியின் தாக்கத்தினால் அல்லது வேறேதாவது காரணத்தினால் வீக்கமடையும் என்புகளின் மேற்பகுதியினைத் தூய்மைப்படுத்துவற்காக "பத்திரம்" எனப்படும் விசேட வகை அலகுக் கத்தி பயன்படுத்தப்பட்டது. தோலை வெட்டுவதற்காக கத்திரி பயன்படுத்தப்பட்டது.

புண்கள் உள்ள இடங்களிலிருந்து இறந்த திசுக்களை அகற்றிக் கிருமித்தாக்கம் உள்ள இடங்களினைத் தூய்மைப்படுத்துவதற்கு சூசி எனப்படும் ஒருவகை ஊசிமுகக் கருவி பயன்பட்டது. நாட்பட்டுப் புரையோடிப் போன ஆழமான புண்களினைச் சுத்தப்படுத்துவதற்கான விசேட கருவிகளையும் சித்தமருத்துவர்கள் கையாண்டனர். செப்புக் குழாய் என அழைக்கப்பட்ட இக்கருவி செம்பினால் ஆனது. அல்லது எருதுக் கொம்பினைக் குடைந்து செப்புத் தகடு போர்த்தும் பயன்படுத்தப்பட்டது. குறித்த செப்புக்குழாயினுள் மருந்தினை வார்த்து அதன் கூர்ப்பகுதியினைப் புண்களின் வாயினுள் நுழைத்து மருந்தினைக் காயத்துள் சுவறவிடுவர்.

**மூளையில் ஏற்படும் இரத்தக்கட்டிகளை அகற்றல்**

மூளையில் இரத்தக் குழாய்கள் அடைபட்டு மூளையின் ஒரு பகுதிக்கான இரத்த ஓட்டம் தடைப்படும்போது "Hemorrhagic Stroke" எனப்படும் மூளைப்பாதிப்பு நிலை ஏற்படும். இத்தகைய ஒரு நிலையில் மூளையில் ஏற்படும் இரத்தக் கசிவால் மூளைக்குள் ஏற்படும் இரத்தக்கட்டிகளை அகற்றுவதற்கு "குடோரி" எனப்படும் அறுவைச்சிகிச்சைக்கருவி பயன்பட்டது.

**மகப்பேற்று - கருப்பை சத்திரசிகிச்சை**

தாயின் கருப்பையினுள் குழந்தை நிலை மாறியிருத்தல், இறந்து போயிருத்தல் முதலான சிக்கலான சந்தர்ப்பங்களில் சித்த வைத்தியமரபில் குறடு, உதசர்ருசி, சித்திகத்தரி, அங்குசம் ஆகிய நான்கு கருவிகளைக் கொண்டு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இவை தாயின் யோனித்துவாரத்தினூடாகச் செலுத்தப்படும் வெவ்வேறு வகையான வடிவங்கள் கொண்ட இடுக்கிகளாகும்.

**கண் சத்திரசிசிச்சை**

சித்தவைத்திய மரபில் கண்காசம் எனப்படும் glaucoma நோய்க்கான சத்திரசிகிச்சை பற்றியும் சித்தவைத்தியப் பனுவல்களில் குறிப்புக்களுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களில் உண்டாகும் 96 வகையான நோய்களில் 8 வகையான கண்காசங்கள் உள்ளதாக சித்தவைத்தியப் பனுவல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள் குணப்படுத் தக்கூடிய 3 வகையான காசங்களாக நீலகாசம், மந்தாகாசம், வர்ணாகாசம் ஆகியவற்றில் பித்தகாசம் அதிகரிக்கும்போது (பித்தாகாசம் குணப்படுத்த முடியாதது) சத்திரசிகிச்சை தேவைப்படுகிறது. பித்தாகாசத்தின் ஆரம்ப நிலைகளில் ஒரு மெல்லிய திரவப்படலம் (Sclera) கண்ணின் வெண்பகுதியில் படர ஆரம்பிக்கும் பின் மெல்ல மெல்ல விழிவெண்படலத்தின் (Cornea) ஊடாகப் பரவுவதால் பார்வைத் திறன் சிறிது சிறிதாக மங்கலடைய ஆரம்பிக்கும். நோயாளிக்குத் தொடர்ச்சியான தலைவலி, புருவப்பகுதியில் வலி ஆகியவற்றோடு வர்ண வேறுபாடுகளைப் பிரித்துணர இயலாமை, கண்ணில் அழுக்குகள் சேர்தல், கண்ணில் தொடர்ச்சியான நீரோட்டம் ஆகியவை காணப்படும்.

பித்தகாசமானது கண்மணியின் ஓரத்தில் வெள்ளை நிறமான ஒரு கொப்பளம் போலத் தோன்றும். கண்ணைக் கசக்கும்பொழுது இக்கொப்புளம் சப்பையாகிப் பின் கண்ணை மீண்டும் திறக்கும்பொழுது மறுபடியும் கொப்புளவடிவம் பெறுவதுடன் அதற்குள் திரவம் நிறைந்திருப்பதும் அவதானிக்கப் படக்கூடியதாக இருக்கும்.

இக்கட்டத்தில் கொப்பளத்தின் மேலே சலாகை எனப்படும் கருவிகள் மூலம் மிக நுண்மையாகத் துவாரம் இடப்படுகிறது. இதனை உர்பலம் என்றும் அழைப்பர். இது ஒரு வகைக் கத்தியாகும். இதன் அடிப்பகுதியில் நூல்சுற்றப்பட்டிருக்கும். இச்சத்திரசிகிச்சை முடிந்த பின்னர் மஞ்சள் நீர் தெளிக்கப்பட்ட பஞ்சினை வெளிக்கண்ணில் வைத்துக் கட்டுப்போடப்படும். குறித்த சத்திரசிகிச்சை அவதானமாகச் செய்யப்படாதுவிடின் பாதிக்கப்பட்ட கண்ணில் வைக்கோல் போன்று வேர்கள் கிளம்பி ரணமாவதுடன் கண்பார்வையும் இழக்கப்பட வேண்டிய நிலை உருவாகும் எனச் சித்தவைத்தியப் பனுவல்கள் எச்சரித்துள்ளன. குறிப்பாக அகஸ்தியர் சத்திராயுத விதி மற்றும் நாகமுனிவர் நயனவிதி 200 ஆகியவற்றில் இது பற்றிய கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

(https://books.google.lk/books?isbn= 9352065522

History of Medical and spiritual Sciences of Siddhas of Tamil Nadu)

**அறியப்படாத சத்திரசிகிச்சைகள்**

சித்தமருத்துவத்தில் முள்ளந்தண்டுப்பகுதி மற்றும் "இராஜபிளவை" என அழைக்கப்படும் புற்றுநோய்ப்புண்கள் / கழலைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய சிக்கலான சத்திரசிகிக்சைகள் பற்றிப் பரகசியமான குறிப்புக்களை அறியமுடியாதுள்ளது. எனினும் சித்தர் பனுவல்களினூடாக அறியக் கிடக்கின்ற சத்திரசிகிச்சைக் கருவிகள் பல இவற்றுடன் தொடர்புடையன என்பதனைப் பல ஆய்வாளர்கள் உறுதிசெய்துள்ளனர். எடுத்துக்காட்டாக "விடான்சரி" எனப்படும் ஒருவித Scalp blade ஆனது முதுகெலும்புடன் தொடர்புடைய சத்திரசிகிச்சையில் பயன்பட்டதாகக் கருதுவர். மேலும் "விண்டகண்ணி" எனப்படும் மூன்று அலகு களையுடைய கருவியினைப் புற்றுநோய்க்கான சத்திரசிகிச்சைகளில் பயன்படுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

**தொற்றுநீக்கம் - ஏற்புவலி பற்றிய விழிப்புணர்வு**

சத்திரசிகிச்சைகளின் பின்னர் ஏற்படக் கூடிய தொற்றுக்கள் மற்றும் ஏற்புவலி தொடர்பான விழிப்புணர்வு சித்த மருத்துவ மரபில் இருந்துள்ளது. இதற்கான முற்காப்பு நடவடிக்கையாக உயர்தர உருக்கிலான சத்திரசிகிச்சைக் கருவிகளைச் சித்தர்கள் பயன்படுத்தியிருப்பதுடன் அவை கொதிநீரில் சுத்திகரிக்கப்பட்டு மூலிகை எண்ணெய் தடவப்பட்ட பின்னரே உடலுள் பிரயோகிக்கப்பட்டன. மேலும் அவை பயன்படுத்தப்படாத சந்தர்ப்பங்களில் மிகுந்த அவதானத்துடன் பொதிசெய்யப்பட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணப்படுகின்றன. தொழில்நுட்ப ரகசியங்களையும் சித்தமருத்துவ விற்பன்னர்கள் தம்மிடையே கொண்டிருந்தனர்.

**நிறைவாக**

இந்து அறிவியற் புலத்தில் மருத்துவவியலின் செல்நெறியினை ஆயுர்வேத மரபு, சித்த வைத்திய மரபு என இரண்டு பிரதா னமான தளங்களில் நோக்க இயலும். தோற்ற நிலையினடிப்படையில் வடஇந்தியா தென்னிந்தியா (சிறப்பாகத் தமிழ்நாடு) என நிலவியல் வேறுபாடுகளை இவை கொண்டிருப்பினும் வளர்ச்சிப்போக்கில் இவற்றிடையே இடைவினைகள் நிகழ்ந் தேறின.

அவைதிக மதங்களினாலும் இந்தியாவில் மருத்துவக்கலை வளமூட்டப்பட்டதை மறுக்கமுடியாது. ஆயினும் இந்திய மருத்துவவியலின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அதன் முக்கிய மடைமாற்றங்கள் யாவிலும் இந்துப் பண்பாட்டுரிமையினை மறைக்க முயல்வதும் “சமயச்சார்பின்மை” என்ற போர்வைக்குள் இந்து நாகரிகத்தின் அடையாளங்களைப் புதைக்க முயல்வதும் ஒரு வகை வரலாற்று இருட்டடிப்பேயாகும்.

அந்த வகையில் அதர்வவேதத்தில் ஆரம்பித்து ஆத்திரேயர் மரபு, தன்வந்திரி மரபு என இரண்டு பிரதான சிந்தனா கூடங்களாக வளர்ச்சி பெற்ற இந்து மருத்துவவியலை முற்று முழுதாக வைதிக மரபின் தத்துப்பிள்ளை என்று கருதுவதும் தவறான கண்ணோட்டமாகும். ஏனெனில் வைதிகப் புரோகிதரால் தீட்டெனக் கருதப்பட்ட பிரேத பரிசோதனை உள்ளிட்ட பல விடயங்களை சுஸ்ருதசம்ஹிதை, சரகசம்ஹிதை, அஷ்டாங்க ஹ்ருதயசம்ஹிதை உள்ளிட்ட இந்து மருத்துவ சாஸ்திரங்கள் விதந்துரைத்து நடைமுறைப்படுத்தின. அதர்வ வேதத்தைக்கூட ஆரம்பநிலையில் வைதிக மரபு அங்கீகரிக்கவில்லை என்பதும் இங்கே நினைவிற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

இதன் பின்னணியில் இந்து மருத்துவவியலின் முக்கிய கூறுகளில் ஒன்றாகிய “அறுவைச்சிகிச்சை பற்றிய சிந்தனைகள் இக்கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ளன. உடற்கூற்றியலைக் கற்றல், கற்றவிடயங்களை செயன்முறைப் பரிசோதனை செய்தலுக்காக இறந்த மனித உடலங்களைத் தயார்செய்தல், குடற் சத்திரசிகிச்சை, சிறுநீர்ப்பையில் கல் அகற்றல் சத்திரசிகிச்சை, கண்புரை அகற் றற் சத்திரசிகிச்சை போன்ற சிக்கலான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளல், வெளிப்புற இரணங்களைத் தைத்தல் ஆகியவற்றுடன் சத்திரசிகிச்சைக்குப் பயன்படும் பல்வேறு உபகரணங்கள் தொடர்பான விபரங்களும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவ மரபில் அறுவைச்சிகிச்சை பற்றிய பாடநூல்எனப்பலராலும்மதிக்கப்படும் சுஸ்ருதசம்ஹிதையே இதற்கான முக்கிய உசாவுகையாகத் திகழ்கிறது.

அறுவைச்சிகிச்சையின் பரிமாணங்கள் தமிழ்நாட்டில் வாழும் இந்துக்களுக்குப் பரிச்சயமானவை என்பதனை வெளிக்கொணரும் வகையில் பழந்தமிழ் இலக்கியங்கள், தமிழக வரலாற்றுச் சாசனங்கள் ஆகியவற்றில் அறுவைச் சிகிச்சை தொடர்பில் இடம்பெறும் குறிப்புக்களும் அடையாளங் காட்டப்பட்டுள்ளன.

சித்தவைத்திய மரபில் இழையோடிள்ள அறுவைச்சிகிச்சை பற்றிய கருத்தியல்களும் இனங்கண்டு விபரிக்கப்பட்டுள்ளன. சித்தவைத்திய மரபில் அகத்தியர் சஸ்திராயுதவிதி என்கிற பனுவலே அறுவைச்சிகிச்சை தொடர்பில் அதிக முக்கியத்துவமுடையதாக விளங்குகிறது. இதனடிப்படையில் சித்தவைத்திய மரபில் சத்திரசிகிச்சைக்குப் பயன்படும் ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. மூளையில் ஏற்படும் இரத்தக் கட்டிகளை அகற்றுதல், மகப்பேற்று சத்திரசிகிச்சை, கண்காச சத்திரசிகிச்சை ஆகியவற்றுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜபிளவை, கழலைகள் என்பவற்றைச் சீர்செய்வதற்கான சத்திரசிகிச்சை முயற்சிகள் பற்றியும் சித்த வைத்திய மரபின் பின்னணியில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**Bibliography**


1. **Caraka. Samhita** (English translation from Sanskrit); (1949)vol - 1,, Shree Gulabkunverba Ayurvedic Society, India
2. Chattopadhyaya, D.P., (1993), **Science and Society in Ancient India.**; Research India Publications., Calcatta.
3. Das, S. (1983), **Susruta of India, The Pioneer in the treatment of Urethral structure,** SurgGynecol Obstet.
4. HelaineSelin and RoddamNarasimha, (2007), **Encyclopaedia of Classical Indian Sciences,** University press, Hyderabad.
5. Sarma, Priyavrata, (1970), **Caraka - Cintana.** Varanasi; Chowkhamba Vidyabhawan.
6. Singhal, G.D., (1981) **Ancient Indian Surgery; Ophthalmic and otorhinolary ngologicalconsiderations,** Varanasi, India, Banaras Hindu University Press.
7. வாசுதேவன், இர., *(2006)*, **தமிழில் மருத்துவ இலக்கியங்கள் - ஓர் ஆய்வு,** பூங்கொடி பதிப்பகம், சென்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CINTANAI**

The Journal of the Faculty of Arts,
University of Jaffna.

## Contents

01. The United National Party in the Contemporary politics of Sri Lanka : Prospects and Challenges for reemergece.
**- K.T. Ganesalingam**

02. The Palmyrah Production and Commercial activities during the Dutch rule (1658 - 1796 A.D.) in the Northern Sri Lanka : Some observations.
**- K. Arunthavarajah**

03. Density of the Tamil Diaspora and foreign remitance of Sri Lanka with Special reference to North & East.
**- V.P.Sivanathan; S. Surejini**

04. Temple Property manifested by Thoompu Records: Thambalagamam Adhikkonanaatheswaram as the major base of temple settlements in the Northeast of Sri Lanka
**- S. Krishnarajah**

05. The present state of the results of Students of Tamil Medium of Grade - 5 Scholarship Examination, G.C.E Ordinary Level Examination and G.C.E Advanced Level Examination and remedial activities in the Northern Province
**- R. Jeyaluxmi ; P. Rajeswaran**

06. Syntactical Skills of Kambar : Kind and Grandeur.
**- K. Vishagaruban**

07. A study of Marketing problems of Batticaloa Distric fishermen.
**- S. Uthayakumar ; J. Kalaippriya**

08. Micro Climatic Variations in the Northern Province.
**- N. Piratheeparajah**

09. Tholkappaiam and paanieam : A Comparative study of Orthography
**- S. Pathamanaban**

10. Surgical treatment methods in Hindu Cultural Heritage : A Historical Perspective
**- S. Muhunthan**

ISSN 2478-1061

9 772478 106003

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org